www.padippakam.com

இதழ் 39 ஏப்ரல் - ஜுன் 2012

# காலம்

ISSN-1715-4030

ரூ.60 (இந்தியா மட்டும்)

- அப்பு • ஜெயமோகன் • றஞ்சி • செ.டானியல் ஜீவா
- சச்சிதானந்தன் சுகிர்தராஜா • சிறீஸ்கந்தன்
- நரசய்யா • ஹெச்.ஜி.ரசூல் • என்.கே.மகாலிங்கம்
- அ.முத்துலிங்கம் • இரா.மணிமேகலை • பொ.வேல்சாமி
- மணி வேலுப்பிள்ளை • மு.புஷ்பராஜன் • ரஃபேல்
- பேராசிரியர் மா.சின்னத்தம்பி • ஜெயபிரபா
- யமுனா ராஜேந்திரன் • தமிழவன் • எஸ்.ராமகிருஷ்ணன்
- தேவகாந்தன் • இளங்கோடிசே • பா.செயப்பிரகாசம்



படிப்பகம்

www.padippakam.com





**கவலை அற்ற**
**நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...**

சிறந்த ஆலோசனைகளுக்கு எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்

- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drug Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- Life Insurance Products
- RRSP'S & Investments
- RESP – Education Saving Plan
- Final Expense Products
  *(Through Funeral Homes)*

**Mega Financial Group**

416 293 5559 • 416 666 1120
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON

INDUSTRIAL ALLIANCE · UL Mutual · Assumption Life · Equitable Life of Canada · Desjardins · Canada Life · RBC Insurance · Unity Life of Canada · Transamerica Life Canada · Manulife Financial · Empire Life · Sun Life Financial

www.padippakam.com


# காலம்

இதழ் 39 ஏப்ரல் - மே - ஜூன் 2012

**ஆசிரியர்**
செல்வம்

**ஆலோசனைக் குழு**
என்.கே.மகாலிங்கம்
செழியன்

**தயாரிப்பும் வடிவமைப்பும்**
பிரபாகரன்

**அட்டை புகைப்படம்**
புதுவை இளவேனில்

**தொடர்பு முகவரி**

Selvam Arulanantham
Editor - Kaalam
16 Hampstead Court Markam
ONT L3R 3S7
Canada
Email: kalam@tamilbook.com
Phone: +14167311752

Dhalavai Sundaram
Coordinator - Tamil Nadu
MIG 329 - 5th Cross St
3rd Main Road
Mogappair Eri Scheme
Chennai - 600037
India
Email: kaalammagazine@gmail.com
Phone: +91 95436 16642

Printed at
Jyothi Press
Triplicane, Chennai - 600 005

சந்தா
(தபால் செலவு உட்பட)

**இந்தியா**
ஓராண்டு சந்தா: 240 ரூபாய்
இரண்டாண்டு சந்தா: 450 ரூபாய்
ஐந்தாண்டு சந்தா: 1000 ரூபாய்
ஆயுள் சந்தா: 4000 ரூபாய்

**பிற நாடுகள்**
ஓராண்டு சந்தா: 800 ரூபாய்
இரண்டாண்டு சந்தா: 1500 ரூபாய்
ஐந்தாண்டு சந்தா: 3700 ரூபாய்
ஆயுள் சந்தா: 10000 ரூபாய்

சந்தா செலுத்த விரும்புபவர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளவும்.
மின்னஞ்சல்: kaalammagazine@gmail.com
தொலைபேசி: 95436 16642

ஒருவேளை இதழ் இடையில் நின்றுபோனால், மீதி சந்தாத் தொகை திருப்பித் தரப்படும் என உறுதியளிக்கிறோம்.


# உள்ளே...


2 வன்னி யுத்தம்: இறுதி தினங்கள் - அப்பு

10 எஸ்.பொன்னுத்துரை - ஜெயமோகன்

14 போரும் பெண்களும் - றஞ்சி

16 கவிதை - செ.டானியல் ஜீவா

17 தாயிடம் மகன் கேட்க, சொல்லத் தவறிய காரியங்கள் - சச்சிதானந்தன் சுகிர்தராஜா

21 எங்கள் வீட்டுப் புளியமரம் - சிறீஸ்கந்தன்

22 சிட்டியும் சிவபாதசுந்தரமும் - நரசய்யா

25 கவிதை - ஹெச்.ஜி.ரசூல்

26 சிறுகதை - என்.கே.மகாலிங்கம்

30 வரலாறு கவனிக்க வேண்டிய சந்திப்பு - அ.முத்துலிங்கம்

33 கவிதை - இரா.மணிமேகலை

34 தொல்காப்பியப் பதிப்புரைகளும் ஆதிக்கச் சாதிகளின் அடையாள அரசியலும் - பொ.வேல்சாமி

40 எரொட்டொட்டஸ் சித்திரிக்கும் பொலிகுதிரை தந்த அரியணை - மணிவேலுப்பிள்ளை

45 கவிதை - மு.புஷ்பராஜன்

46 இடதுசாரி மெய்யியலின் தற்காலக் கதாநாயகன் - ரஃபேல்

52 நேர்காணல் - பேராசிரியர் மா.சின்னத்தம்பி

59 கவிதை - ஜெயபிரபா

60 எம்.ஜி.ஆர். என்னும் மாபெரும் விருட்சம் - யமுனா ராஜேந்திரன்

65 நாம் கட்டமைக்க வேண்டிய தமிழடையாள இலக்கிய விமரிசனம் - தமிழவன்

70 நதி வழி நடந்தேன் - எஸ்.ராமகிருஷ்ணன்

72 அரசியல், சமூக எதிர்ப்பு நிலைகளின் இன்னொரு முகம் - தேவகாந்தன்

75 பூனையின் மேசை - இளங்கோடிசே

78 இது என்ன காலம் எனப் பேசும் ஆவணம் - பா.செயப்பிரகாசம்

www.padippakam.com




# வன்னி யுத்தம்: இறுதி தினங்கள்

## ஓர் நேரடி அனுபவம்

**அப்பு**

சென்ற இதழ் தொடர்ச்சி...

நேரமோ காலை எட்டு முப்பதைக் கடந்து கொண்டிருந்தது. எமது பதுங்கு குழி வாசலில் நின்று தொலைத்தொடர்பு சாதனத்தில் உரையாடிய போராளிகள் அவ்விடத்தை விட்டுப் போய் சிறிது நேரம் தான் ஆகியிருந்தது. அமைதியாய் கிடந்த சூழலின் அமைதியை திடீரெனக் கலைத்தவாறு சண்டை ஆரம்பமானது. நாம் படுத்திருந்த இடத்திற்கு மேற்குப் புறமாக இருந்த நந்திக் கடல் பக்கமாக ஆரம்பமான சமர் படிப்படியாக நான்கு திசைகளிலும் பரவியது. மேற்கே நந்திக் கடல் பக்கமிருந்தும் கிழக்கே கடலில் இருந்தும் வடக்கே முள்ளிவாய்க்கால் பக்கமிருந்தும் தெற்கே முல்லைத்தீவுப் பக்கமிருந்தும் இராணுவம் தனது தாக்குதலை வட்டுவாகல் நோக்கித் தீவிரமாக மேற்கொண்டது. விடுதலைப் புலிகளும் தமது எதிர்த் தாக்குதலைத் தீவிரமாக மேற்கொண்டனர். 17.05.2009 காலை எட்டு முப்பது மணியளவில் ஆரம்பமான சண்டை பிற்பகல் நான்கு மணியாகியும் முடிவுக்கு வராமல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. நாமிருந்த பதுங்குக்குழி வாசல் பக்கமாக இருந்த கொட்டிலுக்குப் போடப்பட்ட தகரங்கள் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டுப் கொண்டிருந்தன. நாமிருந்த பதுங்குக் குழியின் மண் மூட்டைகள் யாவும் துப்பாக்கிக் குண்டுகளால் கிழிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. நாமிருவரும் பதுங்குக் குழிக்குள் எமது முடிவு என்னவாகும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாதவர்களாய் திணறிக் கொண்டிருந்தோம். மரண பயம் எமக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை. அந்தச் சூழலை எதிர்கொண்டு, என்னவிதப்பட்டும் என் துணைவியை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டுமென்ற வெறியுடன் நானும்; என்னைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற வெறியுடன் என் துணைவியும் அப் பதுங்குக் குழிக்குள் இருந்தோம். திடீரென எமது பதுங்குக் குழி வாசலுக்கு நேரே ஓர் எறிகணை வீழ்ந்து வெடித்தது.



என் கண்களில் பயங்கரமான எரிவு ஏற்பட்டது. என் துணைவியும், "ஐயோ என்ர கண்ணுக்க ஏதோ விழுந்திட்டுதுங்கோ" எனக் கதறினாள். நான் கண்களை வெட்டி வெட்டி கண்ணீரால் கண்களைக் கழுவும்படி என் துணைவிக்குக் கூறினேன். அவ்வாறே நானும் செய்தேன். சிறிது நேரத்தில் எமது கண்களில் எரிவு குணமானது. துப்பாக்கிக் குண்டுகள் நாலா புறமும் எமது கொட்டிலையும் பதுங்கு குழியையும் தாக்கிக் கொண்டிருந்தன. எனது இடது முழங்காலுக்குக் கீழ்ப் பக்கமாக ஓர் மிகச் சிறிய குண்டுச் சிதறல் தாக்கியது. அதே போல் எனது துணைவியின் கண் இமைக்கு மேலேயும் தாக்கியது. உடனே என் துணைவியின் கண் இமைக்கு மேலே தாக்கிய குண்டுச் சிதறலை வெளியே எடுத்தேன். அது ஒரு மிகச் சிறிய குண்டுச் சிதறலாய் இருந்தது. காயம் எதுவும் ஏற்படவில்லை. நாம் இருவரும் பதுங்குக் குழியின் ஒரு மூலைக்குள் படுத்துக் கிடந்தோம்.

நேரமோ இரவு பத்து மணியைக் கடந்து கொண்டிருந்தது. காலை எட்டு முப்பது மணியளவில் ஆரம்பமான சண்டை இடைவிடாது தொடர்ந்து கொண்டிருந்தது. குண்டுச் சத்தங்களால் நாம் இருவரும் படுத்துக் கிடந்த பதுங்குக் குழி நிலம் அதிர்ந்து கொண்டிருந்தது. எமது பதுங்கு குழிக்கு மேலே போடப்பட்டிருந்த மண் மூட்டைகள் துப்பாக்கிக் குண்டுகளால் கிழிக்கப்பட்டு, மேலே அடுக்கப்பட்டிருந்த பனை மர இடைவெளியால், இடைக்கிடை எமது பதுங்குக் குழிக்குள் மணல் கொட்டப்பட்டுக் கொண்டிருந்தன. எந்த வேளையும் குண்டுத் தாக்குதலால் நாம் இறந்து போகலாம் என்ற நிலையிலேயே நாம் அந்தப் பதுங்கு குளிக்குள் இருந்தோம். இரவு பதினொரு மணியளவில் எறிகணை ஒன்று சீறிக்கொண்டு வந்து



படிப்பகம்

www.padippakam.com

எமது கொட்டிலுக்கு முன்னால் வீழ்ந்து வெடித்தது.

எறிகணை வெடித்ததும் எமது கொட்டிலுக்கு முன்னால் இருந்த தரப்பாள் கொட்டில் எரியத் தொடங்கியது. நெருப்பு வெளிச்சத்தால் நாமிருந்த பதுங்குக் குழியின் உட்புறமெங்கும் பகல் போல் வெளிச்சம் பரவியது. எமது பதுங்குக் குழி இருக்கும் கொட்டில் தகரத்தால் போடப்பட்டதால் எமது கொட்டில் எரிவதற்கான வாய்ப்பு குறைவாகவே இருந்தது. வெடிச்சத்தங்களுக்கு மத்தியில் நான் மெதுவாக எட்டிப் பார்த்தேன். எமது பதுங்குக் குழிக்கு அருகே நின்ற ஒரு உந்துருளி எரிந்து கொண்டிருந்ததால் அந்த நெருப்பு எமது பதுங்குக் குழிக்கு மேல் போடப்பட்டிருந்த தரப்பாளில் பற்றிக் கொண்டிருந்தது. இப்போது எமது பதுங்குக் குழி முற்றாக எரிந்து போகும் சூழல் உருவாகிக் கொண்டிருந்தது. எனது துணைவியோ மிகுந்த அச்சத்திற்குள்ளானார். இதிலிருந்து தப்புவதற்கு ஏதாவது வழி உண்டாவென நான் ஆராய்ந்த போது எமக்கு முன்னால் நாம் குடிப்பதற்காக காலையில் எடுத்து வைத்த தண்ணீர்ப் பானை என் கண்ணில் பட்டது. உடனே, நான் பக்கத்தில் இருந்த தேனீர்க் கோப்பையால் பானைக்குள் இருந்த நீரை அள்ளி உந்துருளியில் பற்றியுள்ள நெருப்பை அணைக்குமாறு என் துணைவியிடம் கூறினேன். என் துணைவி நான் சொன்னது போல் செய்தாள். நான் கைந்து தடவை நீரை அள்ளி ஊற்றியதும் உந்துருளியை எரித்துக் கொண்டிருந்த நெருப்பு அணைந்தது. ஆனால், எமது கொட்டிலுக்கு முன்னால் உயிரற்றுக் கிடந்த மனித உடல் எரிந்து கொண்டிருந்தது. அந்த நெருப்பால் ஆபத்தெதுவுமில்லையென நான் கருதியமையால் அதை அப்படியே எரிய விட்டுவிட்டோம். சண்டை தொடர்ந்துகொண்டே இருந்தது. நாமும் நித்திரையின்றி பதுங்குக் குழிக்குள் படுத்திருந்தோம்.

எமக்கு நித்திரையின்றிக் கழிந்த அந்த பயங்கரமான இரவுப் பொழுது புலரத் தொடங்கியது. மயாணம் போல் காட்சி தரும் எமது சுற்றாடலை ஆதவன் மிகுந்த சோகத்துடன் அணைத்துக் கொண்டான். 17.05.2009 காலை எட்டு முப்பது மணியளவில் ஆரம்பமான சண்டை 18.05.2009 காலை ஏழு மணியளவில் முடிவுக்கு வந்தது. வட்டுவாகல் பகுதி இப்போது மயாண அமைதிக்குள் மூழ்கிக் கிடந்தது. நேரத்தைப் பார்த்தேன். காலை ஏழு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. மூன்று நான்கு நாட்களாகச் சாப்பாடெதுவும் இல்லாததால் உடல் மிகவும் பலவீனமாய் இருப்பது போல் இருந்தது. உடனே, அங்கிருந்த அரிசியையும் பருப்பையும் ஒன்றாகப் போட்டு பதுங்குக் குழிக்குள் அடுப்பை மூட்டி எனது துணைவி சமையல் செய்தாள். அதை இருவரும் சாப்பிட்டோம். சாப்பாடில்லாமல் எமது வயிறு சுருங்கி இருந்ததால் பெரிதாகச் சாப்பிட முடியவில்லை. கொஞ்சமாகச் சாப்பிட்டு விட்டு அப் பதுங்குக் குழிக்குள் இருந்தோம். நேரம் எட்டு முப்பதைத் தாண்டிக் கொண்டிருந்தது. வெளியில் எவ்வித சத்தமும் இருக்கவில்லை.

யுத்தம் மீண்டும் ஆரம்பிப்பதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. நாம் தொடர்ந்து அப் பதுங்குக் குழிக்குள் இருப்பது சில சமயம் ஆபத்தாக முடியும் எனக் கருதிய நான் என் துணைவியையும் அழைத்துக்கொண்டு வெளியே வந்தேன். அப்பகுதியெங்கும் நெருப்பினால் கருக்கப்பட்டுக் கிடந்தது. நேற்றுக் காலை நாம் வரும்போது நூற்றுக்கணக்கான போராளிகளும் ஒரு சில பொது மக்களும் அப்பகுதிகளிலே நடமாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால், இன்று மனித சஞ்சாரம் எதுவுமற்ற பாழி வெளியாய் அப் பிரதேசம் மயானம் போல் காட்சி தந்து கொண்டிருந்தது.

மரணப் பொறிக்குள் சிக்கிக் கிடந்தபோதும் பெரிதாக அச்சம்கொள்ளாத எமக்கு



தற்போதைய சூழல் பெரும் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மிகுந்த அச்சத்திற்குள்ளான என் துணைவி அண்ணா அக்கா என உரத்துக் குரல் கொடுத்தாள். பதிலுக்கு எந்த ஒரு மனிதக் குரலும் கேட்கவில்லை. நாமிருந்த பதுங்கு குழிக்குப் பக்கத்தில் ஓர் சிறிய வீதி இருந்த போதும் அந்த வீதியால் போக முடியாத அளவுக்கு உந்துருளிகளும் துவிச் சக்கர வண்டிகளும் எரிந்து சிதறிக் கிடந்தன. எனவே, நாம் இருவரும் வீதிக்குக் கிழக்கே சற்று தூரம் நகர்ந்து பின் வடக்கு நோக்கி நகர ஆரம்பித்தோம். சற்று தூரம் சென்றதும் மூன்று இளம் யுவதிகளும் ஓர் இளைஞனுமாக நான்கு பேர் வழியிலே இருந்தார்கள். மனித சஞ்சாரமே அற்றுப் போயிருந்த அந்த சூனிய வெளியில் அந்த நான்கு பேரைக் கண்டதும் மனதுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

அவர்கள் அருகே சென்று பார்த்த போது அதிலிருந்து மூன்று பெண் பிள்ளைகளும் நாமிருந்த மெட்டிக்ஸிலிருந்து எம்முடன் வெளியேறிய பிள்ளைகளாக இருந்தார்கள். அவர்களுடன் ஓர் பத்தொன்பது வயது மதிக்கத்தக்க இளைஞனும் இருந்தான். இருபது வயது மதிக்கத்தக்க அந்த இரண்டு பெண் பிள்ளைகளும் காலிலே பலத்த காயங்களுக்குள்ளாகி நடக்க முடியாத நிலையில் இருந்தார்கள். பதினைந்து வயது மதிக்கத்தக்க அந்தச் சிறுமி காயங்கள் எதுவுமின்றி இருந்தாள். பத்தொன்பது வயது மதிக்கத்தக்க அந்த இளைஞன் தோள் மூட்டிலும் கையிலும் காயம்பட்டிருந்தான். அந்த இளைஞன் அருகே சென்ற நான் ஏன் இந்த இடத்தில் இருக்கிறீர்களென விசாரித்தேன். ஆமிக்காறர் தம்மைக் கண்டு அங்கேயே தம்மை இருக்குமாறு கூறிவிட்டு முன்னே தெற்குப் பக்கமாய் போயிருக்கிறார்களெனக் கூறினான். அவனது கூற்றிலிருந்து இராணுவத்தின் பிடிக்குள் நாம் வந்துவிட்டோம் என்பது எனக்குத் தெரிந்தது. அத்துடன் அங்கிருக்கும் நான்கு பேரும் காயப்பட்ட போராளிகள் என்பதும் வெளிப்படையாய்த் தெரிந்தது. அவர்களுடன் சேர்ந்திருந்து ஆமியிடம் பிடிபடுவது எமக்குப் பல சிக்கல்களைக் கொண்டு வரலாம் என என் மனதுக்குப் பட்டது. இந்தச் சிக்கலை எப்படிச் சமாளிப்பதென நான் எண்ணியவாறு நிமிர்ந்த போது எமக்கு முன்னால் ஓர் இருபத்தைந்து மீற்றர் தூரத்தில் சிவில் உடுப்புடன் நின்ற ஓர் இராணுவ வீரன் எனது துணைவியை வரும்படி கைகாட்டியழைத்தான்.

ஆமியைக் கண்டதும் கடந்த நான்கைந்து நாட்களாக அனுபவித்த துயரத்திற்கு இரண்டிலொரு முடிவு வந்துவிட்டதென மனம் எண்ணிக் கொண்டாலும் எனது



படிப்பகம்

www.padippakam.com



துணைவியை மட்டும் தனியே அழைத்தது என் மனதிலே சற்று அச்சத்தை ஏற்படுத்தியது. ஆனாலும், ஓரளவு சிங்களம் பேசத் தெரிந்த என் துணைவி அந்த இராணுவ வீரனை தனது நியாயத்தின் பக்கம் வென்றெடுப்பாள் என்ற நம்பிக்கை எனக்கிருந்ததால் என் துணைவியை அந்த இராணுவ வீரனிடம் அனுப்பி வைத்தேன். எனது துணைவியும் அந்த இராணுவ வீரனும் உரையாடுவதை நான் அச்சத்துடன் அவதானித்துக் கொண்டிருந்தேன். ஆரம்பத்தில் இறுக்கமாக இருந்த அந்த இராணுவ வீரனின் முகம் படிப்படியாக ஓர் சாந்தமான நிலைக்கு மாறி வருவதைக் கண்ட நான் பிறரோடு பழகும் என் துணைவியின் உயர் பண்பை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் அந்த இராணுவ வீரன் என்னை மட்டும் தன்னிடம் அழைத்து வரும்படி என் துணைவியை அனுப்பி வைத்தான். என்னிடம் வந்த என் துணைவி அந்த இராணுவ வீரன் நின்ற இடத்துக்கு அழைத்துச் செல்ல சிறிது நேரம் பிடித்தது. ஆமை போல் நகர்ந்து அவனிடம் நான் சென்றதும்..., மாத்தையாவுக்குச் சிங்களம் தெரியுமாவென என் துணைவியிடம் கேட்டான். அதற்கு என் துணைவி சிங்களம் தெரியாதெனக் கூறினாள். உடனே, பக்கத்தில் உள்ள தரப்பாள் கொட்டிலுக்குள் என்னையும் என் துணைவியையும் இருக்குமாறு கூறிவிட்டுச் சென்றான். அந்த வீரன் எங்கே செல்கின்றானென அவதானித்த போது, அந்த இராணுவ வீரன் எம்மை இருக்கும்படி கூறிய தரப்பாள் கொட்டிலில் இருந்து ஓர் பதினைந்து இருபது மீற்றர் தூரத்தில் இராணுவம் ஓர் தற்காலிக முகாம் அடித்திருந்தது தெரிந்தது. அந்த முகாமிலே மேலும் சில இராணுவ வீரர்கள் நின்றார்கள்.

மேற்கூறப்பட்ட முகாமுக்குச் சென்ற அந்த இராணுவ வீரன் இரண்டு தேனீருடனும் பிஸ்கட் உடனும் எம்மை நோக்கி வந்தான். தேனீரையும் பிஸ்கற்றையும் பெற்றுக்கொண்ட என் துணைவி தூரத்திலே இருந்த அந்த நான்கு இளம் பிள்ளைகளையும் கூப்பிடும்படி அந்த இராணுவ வீரனை அன்புடனும் பணிவுடனும் வேண்டினாள். என் துணைவியை ஓர் சிறிய புன்னகையுடன் பார்த்த அந்த இராணுவ வீரன் அவர்களையும் நாமிருந்த தரப்பாள் கொட்டிலுக்குள் கூப்பிட்டான். பக்கத்தில் இருந்த தரப்பாள் கொட்டில்களிற்குள் இருந்த பாயையும் சேலைகளையும் எடுத்துக் கொண்டு வந்து அந்தத் தரப்பாள் கொட்டிலிற்குள் போட்டு எங்கள் அனைவரையும் அதில் இருக்கச் செய்துவிட்டு அந்தப் பிள்ளைகளுக்கும் தேனீரும் பிஸ்கற்றும் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதும் இன்னொரு இராணுவ வீரன் எம் அருகே வந்தான். அந்த வீரன் சுமார் இருவது வயது மதிக்கத்தக்க தோற்றம் கொண்டவனாய் இருந்தான். அத்துடன் தமிழும் பேசினான். எம்முடன் மிகவும் இரக்கத்துடன் நடந்துகொண்டான். என் துணைவியுடன் அன்ரி அன்ரி என மிக அன்பாகப் பேசினான். கடைசி வரை ஏன் நிண்டனீங்கள் எனவும் நான் எப்படிக் காயப்பட்டேன் எனவும் மிகுந்த கருணையுடன் விசாரித்தான். அங்கிள் சிகரட் பத்திறவரா என என் துணைவியைக் கேட்டான். என் துணைவி "ஆம்" எனக் கூறியதும், நான்கு சிகரட்டும் ஒரு தீப்பெட்டியும் எனக்குத் தந்தான். எம்மை ஒன்றுக்கும் பயப்பட வேண்டாமென அந்த இராணுவ வீரன் ஆறுதல் கூறிவிட்டுச் சென்றான்.

நேரம் பதினோரு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. மேலும், மூன்று இராணுவ வீரர்கள் எம்மை நோக்கி வந்தார்கள். அந்த மூவரும் மது போதையில் இருந்தார்கள். அவர்கள் வரும்போது நான் சிகரட் பிடித்துக் கொண்டிருந்தேன். அதைக் கண்ட ஒரு இராணுவ வீரன் தமக்கு முன்னால் என்னை சிகரட் பிடிக்கக் கூடாதென மிரட்டினான். அவ்வாறு அவன் மிரட்டும்போது அவன் வாயில் சிகரட் இருந்தது. அவனது அந்த மிரட்டல் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. என்னை விட வயதில் சிறியவனான நீ சிகரட் பிடிக்கும் போது நான் ஏன் சிகரட் பிடிக்கக் கூடாதென நான் சிகரட் பிடித்தவாறே அவனைக் ஆங்கிலத்தில் கேட்டேன். நான் கூறியது அவனுக்கு புரியாவிட்டாலும் என் முக பாவனையிலிருந்து நான் தன்னை எதிர்க்கிறேன் என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் ஏனைய இராணுவ வீரர்களைப் பார்த்து இவங்கள் அனைவரும் புலிகள் இவங்களை சுட வேண்டுமெனக் கூறினான். உடனே, அந்த மூன்று இராணுவ வீரர்களும் எம்மை முறாய்த்து விட்டு சிவில் உடையுடன் நின்ற இராணுவ வீரனிடம் போனார்கள்.

சிவில் உடையுடன் நின்ற இராணுவ வீரனுடன் எம்மை காட்டிக் காட்டி ஏதோ கதைத்தார்கள். அந்த மூன்று இராணுவ வீரர்களினதும் சீருடைப் பையில் சாராயப் போத்தல் இருந்தது. என்ன நடக்கப் போகின்றது என்பதை அறியாதவனாய் நான் இருந்தேன். சிறிது நேரம் சிவில் உடையில் நின்ற அந்த இராணுவ வீரனுடன் உரையாடி விட்டு அந்த நான்கு இராணுவ வீரர்களும் எமை நோக்கி வந்தார்கள். அந்த மூவரது முகங்ளிலும் கொலை வெறி தாண்டவமாடியது. சிவில் உடை அணிந்திருந்த இராணுவ வீரன் எனது துணைவியைப் பார்த்து ஏனைய நான்கு இளம் பிள்ளைகளும் யாரென கோவத்துடன் கேட்டான். அவர்கள் யாரென்பது எமக்குத் தெரியாதென என் துணைவி கூறினாள். இல்லை நீ பொய் சொல்கிறாய் அவர்கள் நாலு பேரும் புலிகள்தானே என அந்த இராணுவ வீரன் மிரட்டினான். அதற்கு என் துணைவி, அந்த நான்கு பேரும் யாரென உண்மையிலேயே எமக்குத் தெரியாதென பயந்து போய் கூறினாள். இல்லை நீ பொய் சொல்கிறாய் அவங்கள் புலிகள் அவங்கடை அம்மாவும் அப்பாவும் தான் நீங்கள். நீங்க எல்லாமே புலிப் பயங்கரவாதிகள். உங்களை நாங்கள் சுடப் போறம் எனக் கூறியவாறு அந்த நான்கு இராணுவ வீரர்களும் தமது துப்பாக்கிகளை எமை நோக்கி நீட்டினார்கள். உண்மையிலேயே அவர்கள் எம்மை சுடப் போகிறார்கள் என நான் எண்ணிக்கொண்டேன். என் துணைவி மிகுந்த அச்சத்துக்குள்ளாகி என்னை அணைத்துக் கொண்டாள். கொலை வெறியுடன் எமை நோக்கி துப்பாக்கியை நீட்டியவர்கள் திடீரெனத் துப்பாக்கியை கீழே விட்டுவிட்டு 'சலூட்' பண்ணியவாறு நின்றார்கள். ஏன் இப்படிச் செய்கிறார்களென எண்ணிய நான் திரும்பிப் பார்த்தேன் அப்போது கம்பீரமான தோற்றத்தைக் கொண்ட ஒரு இராணுவ வீரன் ஏழு இராணுவ வீரர்களுடன் தெற்குப் பக்கமிருந்து நாமிருக்கும் இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் தான் அவர்களது பொறுப்பாளர் என்பதை



படிப்பகம்

www.padippakam.com

நான் உணர்ந்து கொண்டேன.

அந்த இராணுவ வீரர்கள் எம்மருகே வந்ததும் பொறுப்பாளர் போல் காணப் பட்ட வீரன், என்ன பிரச்சனையென அங்கு நின்றவர்களைக் கேட்டான். அவர்கள் பிரச் சினையை அந்தப் பொறுப்பாளருக்குக் கூறி யதும் அவர் எம்மைப் பார்த்து தமிழில் பேசினார். அந்த நான்கு இளையோரையும் சுட்டிக்காட்டி, “அவர்களை உங்களுக்குத் தெரியுமா” எனச் சாதாரணமாகக் கேட் டார்.

“அவர்கள் யாரென எங்களுக்குத் தெரி யாது வரும்போது தான் வழியில் சந் தித்தோம்” என நான் கூறினேன். ஏற்கெ னவே அந்த நான்கு பேரையும் அந்தப் பொறுப்பாளர் கண்டிருந்ததால் நான் கூறி யதை அவர் நம்பினார் என்பது அவரது முகபாவத்திலிருந்து எனக்குத் தெரிந்தது.

“இவ்வளவு நாளும் நீங்கள் ஏன் எங் களிடம் வராமல் இருந்தீர்கள்” என இரண் டாவது கேள்வியைக் கேட்டார்.

“நான் காயப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருந்தேன். ஆனபடியால் தான் எம்மால் உங்களிடம் வரமுடியவில்லை” என நான் கூறினேன்.

“உண்மையைச் சொல்லுங்கள், அவர்கள் நான்கு பேரும் புலிகள் தானே” என அந்தப் பொறுப்பாளர் என்னிடம் கேட்டார்.

“அப்படி என்னால் சொல்ல முடியாது. சிலவேளை அவர்கள் சாதாரண சிவிலி யன்களாகவும் இருக்கலாம்” என நான் கூறினேன்.

“சிவிலியன்ஸ் என்றால் பெற்றோர்கள் இல்லாமல் எப்படித் தனிய வரமுடியும்” என அந்தப் பொறுப்பாளர் என்னைக் கேட்டார்.

“எத்தனையோ பெற்றோர்கள் காயப் பட்ட தமது பிள்ளைகளை கொண்டு செல்ல முடியாமல் தமது பிள்ளைகளை இராணுவம் காப்பாற்றும் என்ற நம்பிக் கையில் அப்படியே விட்டு விட்டு தமது ஏனைய பிள்ளைகளைக் காப்பாற்ற உங்க ளிடம் சரணடைந்துள்ளார்கள். அந்த அப் பாவிப் பெற்றோர்கள் உங்கள் மீது வைத்த நம்பிக்கையை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்” என நான் கூறினேன்.

“சரி நான் உங்களை பெரிய துரையிடம் அனுப்பி வைக்கிறேன். அவர் என்ன முடி வெடுக்கின்றாரோ அதுதான் நடக்கும்” என அந்தப் பொறுப்பாளர் எனக்குக் கூறி னார்.

பெரிய துரையிடம் எப்போது அனுப்பு வீர்களென என நான் கேட்டேன்.

“வாகனங்கள் யாவும் சரணடைந்த மக் களை ஏற்றிக்கொண்டு வவனியா போய் விட்டது. தற்சமயம் எம்மிடம் வாகனம் எதுவும் இல்லை. வாகனம் கிடைத்ததும் எம்மை பெரியதுரையிடம் அனுப்பி வைப் பேன்” எனக் கூறிய அந்த இராணுவ வீரன் அங்கிருந்த ஏனைய வீரர்களுக்கு சில பணிப்புரைகளை வழங்கிவிட்டு அங்கி ருந்து புறப்பட்டார்.

அவர் புறப்பட்டுச் சென்றதும் ஏற்கெ னவே எம்முடன் தமிழில் அன்பாக உரையாடிய இராணுவ வீரன் எம்ம ருகே வந்தான். என் துணைவியைப் பார்த்து, “நீங்கள் பயப்படாதையுங்கோ. பெரியதுரை நல்லவர். அவரிடம் நீங்கள் உங்கள் பிரச்சினையை சொல்லுங்கோ. அவர் நிச்சயம் உங்களுக்கு உதவுவார்” எனக் கூறிவிட்டுச் சென்றான்!

சிறிது நேரத்தில் மதியச் சாப்பாடு எமக்கு வந்தது. நான்கைந்து மாதங்களிற்குப் பின் நல்ல கறி சோற்றை அன்று தான் நாம் முதல் முதலாக பார்த்தோம். நாவிலே நீர் ஊறியது. என் துணைவி எனக்குக் குழைத்துத் தந்தாள். நான் ஆவலுடன் சாப்பிட்டேன். என் துணைவியும் சாப் பிட்டாள். பல நாட்கள் பட்டினி கிடந் ததால் சாப்பிட்டதும் எமக்கு களைப்பாய் இருந்தது. எல்லோரும் அந்தத் தரப்பாள் கொட்டிலுக்குள் படுத்துக்கொண்டோம்.

மதியம் ஒன்று முப்பது மணியிருக் கும்; திடீரென எங்களை நோக்கி, அப் படியே படுத்துக் கிடக்குமாறு சிவில் உடையில் இருந்த இராணுவ வீரன் கட் டளையிட்டான். நாம் அப்படியே அசை யாது கிடந்தோம். எல்லோரும் வரிசை யாக நின்று மேல் நோக்கி துப்பாக்கி யால் சுடத் தொடங்கினர். ஓர் இரண்டு நிமிடங்கள் வரை தொடர்ந்து சுட்டுக் கொண்டிருந்தவர்கள், எம் அருகே வந்து, “உங்கடை சாமி பிரபாகரன் மரணம்” என மகிழ்ச்சியுடன் கூறினார்கள். “அண் ணையை உவங்கள் மயிரத்தான் சுடுவாங் கள்” என எனக்குப் பக்கத்தில் படுத்துக் கிடந்த இளைஞன், எனக்கு மட்டும் கேட்கும்படி மிக இரகசியமாகக் கூறி னான். நான் எதுவும் பேசாமல் படுத்துக் கிடந்தேன்.

நேற்றைய தினம், நாம் வரும் போது ஏராளமான போராளிகளைக் கண்டோம். அவர்கள் ஒரு நாள் பூராவும் இராணுவத் துடன் மோதினார்கள். ஆனால், இன்று வட்டுவாகல் முழுமையாக இராணுவத் தால் கைப்பற்றப்பட்டு இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் கள். ஆனால், ஒரு போராளியைக் கூட அவர்கள் உயிரோடு பிடித்ததாகத் தெரிய வில்லை. அப்படியானால் அந்தப் போரா ளிகளுக்கு என்ன நடந்திருக்கும் எனச் சிந்தித்தவாறு நான் அப்படியே தூங்கி விட்டேன்.

பிற்பகல் நான்கு மணியளவில் வாக னம் வந்து விட்டதாகக் கூறி நாங்கள் அனைவரும் நித்திரையிலிருந்து எழுப்பப் பட்டோம். உடுக்கின்ற சரத்துக்குள் இரண்டு தடியைப் போட்டு எங்கள் நால்வரையும் ஒவ்வொருவராக தூக்கிச் சென்று வாகனத்தில் ஏற்றினார்கள். எனது துணைவியும் அந்தப் பதினைந்து வயதுச் சிறுமியும் வாகனத்தில் ஏற்றப்பட்டார்கள். மதியம் மது போதையில் நின்ற அந்த மூன்று இராணுவ வீரர்களிற்கும் போதை தெளிந்திருந்த போதும் இன வெறி அவர் களது கண்ணில் தெரிந்தது. எம்மை முறாய்த்துக் கொண்டு நின்றார்கள். எம்மை உயிருடன் அவ்விடத்தை விட்டு அனுப்புவது அவர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பது அவர்களது முகத் திலிலே தெரிந்தது. எம்முடன் அன்பாகத் தமிழில் பேசிய இராணுவ வீரன் மகிழ்ச் சியுடன் எமக்கு விடை தந்தான். சிவில் உடையில் நின்ற இராணுவ வீரனோ எந்த விதமான உணர்வுகளுமின்றி தனது வேலையில் மூழ்கியிருந்தான். எம்மை ஏற் றிய வாகனம் அவ்விடத்திலிருந்து புறப் பட்டது.

அங்கிருந்து புறப்பட்ட எமது வாகனம் ஒரு கொஞ்சத் தூரம் சென்றதும் நிறுத் தப்பட்டது. சாரதியும் இன்னொரு இரா ணுவ வீரனும் வாகனத்தை விட்டு இறங்கி பக்கத்திலிருந்த தரப்பாள் கொட்டிலுக்குள்





படிப்பகம்

www.padippakam.com

இருந்த ஓர் எண்பது வயது மதிக்கத்தக்க அம்மாவையும் எண்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஐயாவையும் பக்குவமாகத் தூக்கி வாகனத்தில் ஏற்றினார்கள். அவர்களை ஏற்றியதும் வாகனம் மீண்டும் புறப்பட்டது.

ஒரு பற்றைக் காட்டு வழியே வாகனம் போய்க் கொண்டிருந்தது. ஓர் அரை மணித்தியாலம் வரை ஓடிய வாகனம் அழகான முறையில் தகரத்தால் போடப்பட்டிருந்த கொட்டிலுக்கு; இல்லை இல்லை அதைக் கொட்டில் என்று சொல்ல முடியாது; வீடென்று தான் சொல்ல வேண்டும்; அந்த அழகான வீட்டிற்கு முன்னால் நின்ற ஒரு மரத்தின் கீழ் வாகனம் நிறுத்தப்பட்டது. வாகனத்தை விட்டு இறங்கிய சாரதி அந்த அழகான வீட்டுக்குள் சென்றான்.

எமது வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும் இடம் எந்த இடம் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஏனெனில், நடந்து முடிந்த கொடூர யுத்தத்தால் சூழல் தலைகீழாக மாறியிருந்தது. பெரும்பாலும் ஆனந்தபுரமாக இருக்கலாமென நான் எண்ணிக்கொண்டு எமது வாகனம் நின்ற இடத்தைப் பார்த்தேன். அங்கே மேலும் இரண்டு தகரக் கொட்டகைகள் போடப்பட்டிருந்தன. அத்து



டன் இன்னொரு தகரக் கொட்டகையை இராணுவ வீரர்கள் போட்டுக் கொண்டிருந்தார்கள். இன்னும் பல இராணுவ வீரர்கள் வெற்றிக் களிப்புடன் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். பல நாட்களாக முகம் கழுவாமல், தலை சீவாமல், அழுக்கேறிய ஆடையுடன் அந்த வாகனத்திற்குள் இருந்த எம்மை, ஏதோ மிருகக் காட்சிச் சாலையில் மிருகங்களைப் பார்ப்பது போல், எமது வாகனத்தருகே இராணுவ வீரர்கள் வந்து வந்து பார்த்தார்கள். எம்முடன் இருந்த நான்கு இளம் பிள்ளைகளையும் காட்டிக் காட்டி தமக்குள் ஏதோ கதைத் துச் சிரித்தார்கள். எனக்கு மிகுந்த அவமானமாக இருந்தது. ஆனால், என்ன செய்வது? இப்போது நாம் தோற்றுச் சரிந்து விட்டோம். எதிர்காலத்தில் தமிழர்கள் புதிய அரசியல் சிந்தனையுடனும் புதிய நம்பிக்கைகளுடனும் இத்தோல்வியிலிருந்து மீண்டெழும்பும் வரை இந்த அவமதிப்புக்களை பொறுமையுடன் ஏற்றுத்தானாக வேண்டும் என நான் எண்ணிக்கொண்டு பேசாமல் இருந்தேன்.

எமது வாகனம் நின்ற இடத்திற்கு சற்றுத் தூரத்தில் இருந்த அந்த அழகான வீட்டிற்குள் சென்ற எமது வாகனச் சாரதி வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து ஓர் ஐம்பது வயது மதிக்கத்தக்க திடகாத்திரமான உடலமைப்பைக் கொண்ட ஒருவர் சிவில் உடையுடன் அவ்வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தார். அவரைக் கண்டதும் ஏற்கெனவே இராணுவ வீரர்களால் கூறப்பட்ட பெரிய துரை அவர்தான் என்பதை நான் ஊகித்துக் கொண்டேன்.

தனது மெய்க்காப்பாளருடன் வெளியே வந்த அந்தப் பெரிய துரை எமது வாகனத்தருகே வந்து எம்மையெல்லாம் உன்னிப்பாகப் பார்த்தார். எமது வாகனத்திற்குள்ளிருந்த இளையோர்கள் நான்கு பேரையும் ஒவ்வொருத்தராக காட்டி, "இது புலி, இது புலி" எனக் கூறினார். இறுதியில் எம்மிடம் வந்து இவர்கள் என இழுத்த போது நாங்கள் புலிகள் இல்லையென ஆங்கிலத்தில் கூறினேன். உடனே அவர், "அப்படியானால் நீங்கள் யார்?" என என்னைக் கேட்டார்.

"நாங்கள் சாதாரண பொதுமக்கள்" என நான் கூறினேன்.

"பொதுமக்கள் அனைவரும் நேற்றே எம்மிடம் சரணடைந்து விட்டார்கள்" என அவர் என்னைப் பார்த்துக் கூறினார்.

காயத்திற்குள்ளாகி நடக்க முடியாமல் இருந்தமையால் எம்மால் வர முடியாமல் போய்விட்டதென நான் அனைவருக்கும் கூறினேன்.

"புலிகள் தமிழீழம் கேட்டதால் தான் உங்களுக்கெல்லாம் இந்த நிலை வந்தது என்பது இப்போது புரிகிறதா?" என அவர் என்னைப் பார்த்து ஒருவிதமாகக் கேட்டார்.

"மன்னிக்க வேணும், புலிகள் தமிழீழம் கேட்பதற்கு சிறீலங்கா அரசின் இனவாதப் போக்குத்தான் காரணம்" என நான் கொஞ்சம் பணிவாகக் கூறினேன்.

"அப்படியானால் எமது சிறிய நாட்டைப் பிரிப்பது சரியெனச் சொல்கிறீரா?" என நிதானமாகவே அவர் என்னைக் கேட்டார்.

"பிரிவினைவாதம் சரியென்று நான் சொல்லவில்லை. தமிழ் மக்களையும் இந்த நாட்டு பிரைஜைகளாக இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் நான் சொல்கிறேன்" என நான் கூறினேன்.

"என்ன இருந்தாலும் புலிகளையும் அவர்களது செயற்பாடுகளையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. புலிகளை நாங்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டோம்" எனக் கூறிய அவர் அந்த நான்கு இளையோர்களையும் காட்டி, "இவர்கள் புலிகள் தானே" என என்னைக் கேட்டார்.

"அவர்களைப் புலிகள்தான் என என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. சில வேளை புலிகளாக இருக்கலாம்" என நான் கூறினேன்.

"அவர்கள் புலிகள்தான்" என உறுதியாகக் கூறிய அவர், "யாருடைய சாவுக்குக் காரணமான புலிப் பயங்கரவதிகளை அழிப்பதுதான் எங்களுக்குத் தரப்பட்ட கடமை" என அவர் கூறினார்.

"பயங்கரவாதம் பற்றியோ தமிழீழம் பற்றியோ எதுவுமே அறியாதவர்கள்தான் இவர்கள்; சிலவேளை கட்டாய ஆளெடுப்பில் புலிகளோடு இணைக்கப்பட்டவர்களாகக் கூட இவர்கள் இருக்கலாம். உயிர்வாழும் ஆசையுடன் உங்களிடம் சரணடையும் இவர்களை, உங்கள் பிள்ளைகளை நீங்கள் மன்னிப்பது போல் மன்னித்து, அவர்களை வாழ வைப்பது தான் பௌத்த தர்மம்" என மிகுந்த பணிவுடன் அவருக்கு நான் கூறிவிட்டு, அவரது முகத்தை அவதானித்தேன்.

அவரது முகத்தில் எந்தவிதமான உணர்வுகளையும் என்னால் பார்க்க முடியவில்லை. என்னுடைய வேண்டுகோளிற்கு அந்த அதிகாரி பதில் சொல்வதற்கு முன்னரே சாரதி எமது வாகனத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அந்த அதிகாரியும் எதுவுமே பேசாமல் எமது வாகனத்தைப் பார்த்தபடி நின்றார். வாகனத்தில் எம்மை எங்கே கொண்டு போகின்றார்கள் என்பதை நான் ஊகிக்க முடியாமல் குழம்பிக் கொண்டிருந்தேன். வாகனம் ஊர் காட்டுப் பாதையால் போய்க்கொண்டிருந்தது. காட்டில் உள்ள பகுதிக்குள் சென்றதும் ஒரு மரத்தின் கீழ் வாகனத்தை நிறுத்தி விட்டு சாரதி எங்கோ சென்றுவிட்டான். எமது வாகனம் நிறுத்தப்பட்ட இடத்திற்குத் தெற்குப் பக்கமாக வாகனத்திற்கு அருகே ஓர் புதை குழி தோண்டப்பட்டிருந்தது. அந்தப் பெரிய துரை என்னுடன் கதைப்பதற்கு முன்பே எம்மை சுடும்படி உத்தரவு கொடுத்து விட்டார் என்ற உண்மை அந்தப் புதை குழியைப் பார்த்த பின்புதான் எனக்கு விளங்கியது. நாம் புதைக்கப்பட இருக்கும் அந்தப் புதை குழியை என் கண்களால் ஆராய்ந்தேன். ஏழு எட்டுப் பேரை புதைக்கக்கூடிய அளவில் அந்தப் புதை குளி வெட்டப்பட்டிருந்தது.

சோஹண விஜய வீராவின் ஆயுதக் கிளர்ச்சி நடைபெற்ற காலத்தில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை கொன்று புதைத்தவர்கள் தமிழீழ கிளர்ச்சியாளர்களெனக் கருதப்படும் எம்மை சும்மா விடுவார்களா? இன்னும் சில நிமிடங்களில் நாம் மரணிக்கப் போவது உறுதியாகி விட்டது. இந்த உண்மையை அறிந்துகொள்ளாத அந்த இளம் பிள்ளைகள் நால்வரும் தாம் தப்பிவிட்டோம் என்ற எண்ணத்தில் தமக்குள் கதைத்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். என் அருகே இருந்த என் துணைவியின் இதயத்தில் சந்தேகம் தோன்றிவிட்டது. என்னைப் பார்த்து, "என்னங்கோ, எங்களைச் சுடப் போறாங்களோ?" என எனக்கு மட்டும் கேட்கும்படி இரகசியமாகக் கேட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

உடனே நான், "சீ... சீ..." என என் துணைவியின் கூற்றை மறுத்து, "அப்படிச் சுட்டாலும் எங்கள் இருவரையும் சேர்த்துத் தானே சுடுவாங்கள். அது நல்லது தானே" என என் துணைவிக்கு மட்டும் கேட்கும்படி கூறி, என் துணைவியின் மரணப் பயத்தைப் போக்க முயன்றேன்.

என் துணைவி தன் முகத்தை என் தோளிலே புதைத்துக்கொண்டாள். இவளது கண்ணீரால் என் தோள்மூட்டு நனைந்து கொண்டிருந்தது. நானோ என் துணைவியை நினைத்து மனதுக்குள் மௌனமாக அழுது கொண்டிருந்தேன்.

சிறிது நேரத்தில் சாரதி வந்து மீண்டும் வாகனத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். திரும்பவும் எங்களை எங்கே கொண்டு செல்கிறான் என நான் குழம்பிக் கொண்டிருந்த போது, அந்த துரையின் வீட்டிற்கு முன்னால் ஏற்கெனவே நின்ற இடத்தில் எமது வாகனம் வந்து நின்றது. அந்த அழகான வீட்டிற்குள் இருந்து பெரிய துரை வெளியே வந்தார். என் அருகே வந்த அவர், " நாங்களும் மனிதர்கள் தான். எங்களுக்கும் குடும்பம் இருக்கு. பிள்ளைகள் இருக்கிறார்கள். அன்பு பாசம் எல்லாமே இருக்கு. பிரபாகரன் தன்னுடைய தலைமைக்காக ஏழைத் தமிழர்களை இங்கு பலியாக்கினார். அதே போலத்தான் அங்கேயும் நடக்குது. நீங்கள் பயப்படாதேயுங்கோ. உங்களை நான் எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் வவனியா அனுப்பி வைப்பேன்" எனக் கூறினார். நான் எனது நிலையை அவருக்குத் தெரிவித்தேன்.

"All the best" என எனக்கு கைலாகு கொடுத்துவிட்டு அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டார். அவர் சென்றதும் எங்கள் எல்லோருக்கும் கொத்து றொட்டியும் கொக்கோ கோலாவும் தந்தார்கள். நாங்கள் எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் வாகனம் புறப்பட ஆயத்தமானது. அப்போது, புதுக்குடியிருப்புக் காட்டுப் பக்கமாக துப்பாக்கிச் சத்தங்களும் அதைத் தொடர்ந்து எறிகணைச் சத்தங்களும் கேட்க ஆரம்பித்தன. பெரிய துரை எம்மை நோக்கி வந்து, "உங்கடை ஆக்கள் மீண்டும் சுடத் தொடங்கி விட்டாங்கள். இப்போது உங்களை அனுப்ப முடியாது" எனக் கூறி விட்டு உள்ளே போனார். சண்டை மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. இராணுவ வீரர்கள் எவரையும் வெளியே காண முடியவில்லை. நாங்கள் அனைவரும் வாகனத்துக்கு உள்ளே அப்படியே இருந்தோம். சண்டை தொடர்ந்துகொண்டே இருந்தது.

ஏன் இந்தச் சண்டை என்பதை என்னால் சரியாக ஊகிக்க முடியவில்லை. 17.05.2009 உடன் வன்னி முழுவதையும் இராணுவம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது. அதன் பின்பு 18.05.2009 இரவு ஏழு மணிக்கு இந்தச் சண்டை தொடங்கப் பட்டுள்ளது. அதுவும் விடுதலைப் புலிகளாலேயே தொடங்கப் பட்டுள்ளது என்பதை பெரிய துரை எமக்குக் கூறியதன் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது. அப்படியானால் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட வன்னியை மீண்டும் தம்மால் கைப்பற்ற முடியுமென புலிகள் நம்புகிறார்களா? நிச்சயமாக புலிகள் ஒரு போதும் அப்படி நம்பமாட்டார்கள். அவ்வாறெனில் ஏன் இந்தச் சண்டை?

ஒன்றில் எஞ்சிய புலிகள் பின்வாங்குவதற்காக மறிப்புச் சமரை ஆரம்பித்திருக்க வேண்டும். அல்லது விடுதலைப் புலிகளின், 'இறுதி வரை போராடி மடிவதென்ற' கோட்பாட்டின்படி மடிவதற்காக இந்தச் சண்டையை புலிகள் ஆரம்பித்திருக்கவேண்டும் என நான் எண்ணிக்கொண்டேன். மெடிக்சில் நாம் இருந்த போது 16.05.2009 காலை நான் இறுதியாகச் சந்தித்த செல்வம் என்ற எனது நண்பர் எனக்குக் கூறிய விடயம் ஒன்று அப்போது தான் என் ஞாபகத்திற்கு வந்தது. 15.05.2009 அன்று விடுதலைப் புலிகளின் தலைமை சில முக்கிய உறுப்பினர்களை அழைத்து இரகசியமாக ஒரு கூட்டம் வைத்ததாகவும் அக் கூட்டத்திலே தாம் சண்டையை நிறுத்திவிட்டு பின்வாங்கப் போவதாகவும் தம்முடன் வர விரும்புபவர்கள் வரலாமெனவும் இராணுவத்திடம் சரணடைய விரும்புபவர்கள் போகலாம் எனக் கூறியதாகவும் சொன்னார். அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல விரும்பிய போராளிகளிற்கு விடுதலைப்புலிகள் பணம் கொடுத்து அனுப்பியதாகவும் சொன்னார். மேற்கூறப்பட்ட அவரது கூற்றின் படி இப்போது நடக்கும் இந்தச் சண்டை பின்வாங்குவதற்கான சண்டையென்றே நான் நினைத்தேன். உண்மை எது என்பதை வரலாறு தான் இனி எமக்கு சொல்ல வேண்டும்.





படிப்பகம்

www.padippakam.com

கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மேலாக நடந்த சண்டை படிப்படியாக ஓய்ந்து சத்தங்கள் நின்று சூழல் அமைதியானது. சண்டை நின்றதும் பெரிய துரை வந்து அங்கிருந்த எம்மை அனுப்பி வைத்தார். அங்கிருந்து புறப்பட்ட எமது வாகனம் மேடு பள்ளங்கள் நிறைந்த பாதையால் போய்க் கொண்டிருந்து. இரவானதால் வாகனம் போய்க் கொண்டிருக்கும் பாதை எது என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. எங்கும் யுத்தத்தின் அடையாளங்கள் தெரிந்தன. தமிழ் மக்கள் தேடிய சொத்துக்கள் யாவும் நிர்மூலமாக்கப்பட்டுக் கிடந்தன. பாதை சீரற்றுக் கிடந்தமையால் வாகனம் மிக மோசமாகக் குலுங்கியது. இதனால் எனது கால் தாங்க முடியாத வேதனையைத் தந்து கொண்டிருந்து. ஓர் இருபது இருபத்தைந்து நிமிடங்கள் வரை வாகனம் ஓடியிருக்கும். எமக்கு முன்னால் தூரத்தே பெரிய மின்சார வெளிச்சம் தெரிந்தது. சிறீலங்கா இராணுவத்தின் முகாம்கள் எப்பவுமே இரவு நேரத்தில் மின் ஒளி பாச்சப்பட்டிருப்பது வழமை என்பதனால் மின்சார வெளிச்சம் தெரிந்த இடம் இராணுவ முகாமாக இருக்குமென நான் எண்ணிக்கொண்டேன். வாகனம் அந்த இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது தான் தெருக்கரையில் கிடத்தப்பட்ட கிட்டத்தட்ட முப்பது பேர் வரையான இராணுவ வீரர்களின் உயிரற்ற உடல்கள் வரிசையாக வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

அவர்கள் எப்போது இறந்தார்கள் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. அத்தோடு எமது வாகனம் இப்போது எந்த இடத்தில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. உடல்கள் அடுக்கப்பட்டிருந்த இடத்தை எமது வாகனம் நெருங்கியதும் இரண்டு இராணுவ வீரர்கள் எமது வாகனத்தை மறித்தார்கள். உடனே எமது சாரதி வாகனத்தை நிறுத்தினார். வீதிக்கு இடது பக்கமாக அடுக்கி வைத்திருந்த உடல்களைப் பார்த்தேன். இரத்தக் காயங்களுடன் அந்தச் சடலங்கள் கிடந்தன. புதுக்குடியிருப்பில் சற்று நேரத்திற்கு முன் நடந்த சண்டையில் கொல்லப்பட்டவர்கள் போல் தெரிந்தது. எமது வாகனத்துக்கு அருகே நின்ற இராணுவ வீரர்கள் கொலை வெறியுடன் எம்மைப் பார்த்துப் பார்த்து தமக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். வாகனத்தை மறித்த இராணுவ வீரர்கள் இருவரும் எமது வாகனச் சாரதியுடன் ஏதோ விவாதம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன கதைக்கிறார்கள் என்பதை அவதானிக்கும்படி என் துணைவியிடம் கூறினேன். அவர்கள் வேகமாவும் கோவமாகவும் விவாதித்துக் கொண்டிருந்தமையால் அவர்களது உரையாடலை முழுமையாக விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால், எங்கள் சம்பந்தமாகத்தான் விவாதிக்கிறார்கள் என்பது தெரிந்தது. நான் அவர்களது சைகைகளை அவதானித்தேன்.

வாகனத்தை இடைமறித்த இராணுவ வீரர்கள் எம்மை இறக்கும்படி கேட்கிறார்கள் என்பதும் அதற்கு எமது வாகனச் சாரதி மறுக்கிறார் என்பதும் ஓரளவு தெளிவாகத் தெரிந்தது. சிறிது நேரத்தில் எமது வாகனச் சாரதி அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே வாகனத்தை எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். அந்த இடத்திலே நின்ற இராணுவ வீரர்கள் எங்களைப் பார்த்து ஏதோ கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சத் தூரம் சென்றதும் ஓர் இராணுவ முகாமுக்கு முன்னால் எமது வாகனம் நிறுத்தப்பட்டது. முகாமுக்குள்ளே சென்ற சாரதி சிறிது நேரத்தில் ஓர் பெரிய மினி பஸ் சுடன் வந்தார். அந்த மினி பஸ்சில் நாங்கள் அனைவரும் ஏற்றப்பட்டோம். சிறிது நேரத்தில் அந்த மினி பஸ் அங்கிருந்து புறப்பட்டது. அங்கிருந்து புறப்பட்ட மினி பஸ் ஓர் பாடசாலையில் செயற்பட்டுக் கொண்டிருந்த இராணுவ வைத்திய



சாலையில் நிறுத்தப்பட்டது. அது ஒரு முதலுதவி நிலையமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. அந்தப் பாடசாலை மண்டபத்துக்குள் ஓர் இருபது கட்டில்கள் வரை அடுக்கப்பட்டிருந்தது. ஆனால், ஒரு சிலர் மட்டுமே காயப்பட்டவர்களாக அங்கிருந்தார்கள். அவர்களும் முதலுதவி செய்யப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். வாகனத்திலிருந்து இறக்கப்பட்ட நாமும் அந்த கட்டில்களிலே படுக்க வைக்கப்பட்டோம். எனது சாரம் கிளிந்து தும்பாகி இருந்ததால் எனக்கொரு புதிய சாரம் தரப்பட்டது. அத்துடன் எனது காலை நேராக்கி இரண்டு பக்கமும் மட்டை வைத்துக் கட்டப்பட்டது. எனக்கு முதலுதவி செய்த அந்த இராணுவ வீரன் எனது காதுக்குள் குனிந்து, "பிரபாகரன் மாத்தயா இறந்து விட்டாரா?" எனக் கொச்சைத் தமிழில் இரகசியமாகக் கேட்டான். எனக்குச் சரியாகத் தெரியவில்லையென நான் கூறினேன். உடனே அந்த இராணுவ வீரன், "உங்களுக்கு நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?" என என்னைக் கேட்டான். அதற்கு நான் எனது கால் வேதனையைக் குறைக்க மருந்து தந்தால், அதுவே பெரிய உதவியாய் இருக்குமெனக் கூறினேன். உடனே, அந்த இராணுவ வீரன் இரண்டு குளிசையைக் கொண்டு வந்து எனது வாய்க்குள்ளே போட்டுத் தண்ணீரும் தந்தான். நான் விழுங்கியதும் மேலும் இரு இராணுவ வீரர்களின் உதவியுடன் என்னைப் பக்குவமாகத் தூக்கி வந்து எமது பஸ்சுக்குள் படுக்க வைத்தார்கள்.

ஏனையவர்களும் அவ்வாறே எமது பஸ்சுக்குள் ஏற்றப்பட்டதும் அங்கிருந்து எமது பஸ் புறப்பட்டது. அந்த இராணுவ வீரர்களின் அன்பான பராமரிப்பைக் கண்டவர்கள் 'கல்லுக்குள்ளும் ஈரமா' என்றே நினைத்தார்கள். ஆனால், நான் அப்படி எண்ணவில்லை. சிங்கள மக்களோடு நான் நெருங்கிப் பழகாவிட்டாலும் ஒரு சில சிங்கள நண்பர்களோடு மிக நெருக்கமாக பழகியிருந்தேன். அவர்கள் மூலமாக சிங்கள மக்களின் உணர்வுகளை ஓரளவு புரிந்து கொண்டவன் என்ற வகையில், 'கல்லுக்குள் ஈரமா' என்ற கேள்வியை என்னால் கேட்க முடியவில்லை. ஈரங்கள் கல்லாக்கப்பட்டன என்பதே எனது அபிப்பிராயமாக இருந்தது. பெரும்பான்மையான சிங்கள மக்கள் எப்பவுமே இனவாதிகளாக இருக்கவில்லை. தமிழர்களைத் தமது எதிரிகளாகக் கருதவுமில்லை. சிங்கள மேட்டுக்குடியினர் தமது பதவிகளையும் அப் பதவியால் கிடைக்கும் உயர் ஆடம்பர வாழ்வையும் பாதுகாப்பதற்காக அப்பாவி மக்கள் மத்தியிலே இனவாத நஞ்சை ஊட்டி வளர்த்தார்கள். இப்போதும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, சிங்கள மக்களின் இதயங்கள்



படிப்பகம்

www.padippakam.com

எப்பவுமே கல்லாக இருக்கவில்லை. ஈரமான அவர்களது இதயங்கள் அதிகார ஆசைகொண்ட இன வெறியர்களால் கல்லாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை. இந்த உண்மையை தமிழ்ப் போராளிகள் புரிந்துகொண்டு சிங்கள மக்கள் மத்தியில் தமது போராட்டத்துக்கான நியாயத்தை முன் வைக்காமல் போனதே உயர் அர்ப்பணத்துடன் கூடிய ஆயுதப் போராட்டம் தோல்வியடைய அடிப்படைக் காரணமாய் இருந்தது என்பதை எமது எதிர்கால சந்ததியாவது புரிந்துகொள்ள வேண்டுமென நான் சிந்தித்தவாறு பஸ்சிற்குள் படுத்துக் கிடந்தேன். கால் வேதனை சற்றுப் குறைந்தது போல் இருந்தது. ஓடிக்கொண்டிருந்த எமது வாகனம் ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டது. வாகனம் ஏன் நிறுத்தப்பட்டது? என்ன நடக்கிறது? என்பது பற்றிய எந்தச் சிந்தனையுமில்லாமல் படுத்துக் கிடந்த எனக்கு ஒரு சிகரட் பற்ற வேண்டும் போல் இருந்தது. எமது மினி பஸ்ஸின் பின்பக்க வாசலில் ஓர் பதினெட்டு வயது மதிக்கத்தக்க இராணுவ வீரன் நின்றான். அந்த வீரனிடம் சிகரட் பத்தலாமா என சைகை மூலம் நான் கேட்டேன். அதற்கு அந்த வீரன் பௌத்த ஆலயம் அங்கே இருப்பதாகவும் சிகரட் பத்தினால் பிரச்சினை பண்ணுவாங்கள் என்றும் கொச்சைத் தமிழில் கூறினான். நான் பேசாமல் படுத்திருந்தேன். வாகனம் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டதும் நான் கேட்காமலே அந்த இராணுவ வீரன் சிகரட்டும் நெருப்புப் பெட்டியும் தந்தான். நான் அந்த வீரனுக்கு நன்றி சொல்லி விட்டு சிகரட்டைப் பத்தினேன். தமிழ் மக்களது பகுதியில் பௌத்த ஆலயம் வரத் தொடங்கி விட்டது. இனிச் சிங்களக் குடியேற்றமும் விரைவில் வரும் என எண்ணியவாறு அப்படியே நித்திரைக்குள் ஆழ்ந்து விட்டேன்.

காலை நான் கண் விழித்தபோது எமது வாகனம் ஓமந்தையில் நின்றது. எமது வாகனம் மட்டுமன்றி ஏராளமான வாகனங்கள் ஓமந்தையில் அடுக்காக நின்றன. வன்னியில் இறுதிவரை இருந்த தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் அங்கே நின்றார்கள். அங்கு தெருவோரங்களில் நிற்கும் மரங்களுக்குக் கீழ் அடுப்பு மூட்டி சிலர் தேனீர் தயாரித்துக் குடித்துக் கொண்டு இருந்ததுடன் பக்கத்தில் நிற்பவர்களுக்கும் தேனீர் வழங்கினார்கள். வன்னித் தமிழ் மக்கள் இவ்வளவு பெரிய துன்பத்திற்கு உள்ளாகி தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து நிற்கும் இன்றைய இந்த அவலமான சூழலிலும் வன்னி மக்களின் விருந்தோம்பல் பண்பு அப்படியே அவர்களிடம் இருப்பதைக் கண்ட என் உள்ளம் ஏதோ ஓர் உணர்வுக்குள்ளாகி வாழ வேண்டும் என்ற நம்பிக்கையை எனக்குள் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அந்த மக்களை நான் நேசித்தமைக்காகவும் அந்த மக்களுக்காக என் வாழ்நாளை நான் அர்ப்பணித்தமைக்காகவும் எனக்குள் நான் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

என் நேசத்துக்குரிய அந்த மக்களைக் கொண்டு வந்த ஒவ்வொரு பஸ்ஸிற்குப் பக்கத்திலும் ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள் நின்று அந்த பஸ்ஸில் பயணம் செய்த மக்களுக்கு காலை உணவாகக் கடலை வழங்கிக் கொண்டிருந்தார்கள். மக்கள் அனைவரும் அந்தக் கடலையை வாங்க வரிசையில் நின்று முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். வன்னியிலே தமது சொந்த நிலங்களிலே கடுமையாக உழைத்து கௌரவமாக வாழ்ந்து கொண்டிருந்த எமது மக்கள்... உழைப்பிற்கான இலக்கணத்தை உருவாக்கிய எமது மக்கள்... இன்று கையறு நிலையில் ஒரு வேளை உணவுக்காக கையேந்தி நிற்கும் நிலைமையை பார்த்த போது எனது இதயம் வலித்தது.

தமது கடுமையான உழைப்பின் மூலம் நெல்லை உற்பத்தி செய்து அதை யாழ் மக்களுக்கும் வவனியா மக்களுக்கும் வழங்கிக் கொண்டிருந்த அந்த மக்களுக்கு இன்று ஒரு வேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் நிலையை உருவாக்கியவர்கள் யார்? தமது வீரம் மிக்க போராட்டத்தின் மூலம் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு பெரும் பலத்தையும் நம்பிக்கையையும் கொடுத்துக் கொண்டிருந்த அந்த மக்களின் இன்றைய இந்த அவலமான நிலைக்குக் காரணமாய் இருந்த உயர் மத்திய தர வர்க்கத்தின் மீதும் பெரும் அரச அதிகாரிகள் மீதும் தாங்க முடியாத வெறுப்பு எனக்கு ஏற்பட்டது. சுயநலத்தின் மொத்த உருவங்களாய் விளங்கும் மேற்கூறிய வர்க்கத்தினர் தமது சின்னச் சின்ன ஆசைகளை நிறைவு செய்வதற்காக ஏராளமான உழைக்கும் மக்களை பெரும் அவலத்திற்குள் தள்ளியுள்ளார்கள். இந்த மோசமான செயலுக்காக இந்த வர்க்கத்தினரும் அவர்களது அரசியல் சித்தாந்தங்களும் என்றோ ஓர் நாள் பதில் சொல்லித்தான் தீர வேண்டும். எந்த நேரமும் வண்டி தான் ஓடத்தில் ஏறும் என்றில்லை; என்றோ ஒரு நாள் ஓடமும் வண்டியில் ஏறித்தான் தீரும். இந்த வரலாற்று நியதியை எவராலும் மாற்ற முடியாது. மேட்டுக் குடியினரின் அதிகாரத்துவம் என்றோ ஒரு நாள் இந்த உலகத்தில் வீழ்ச்சி அடைந்தே தீரும். அதற்குச் சாட்சியாக அமெரிக்காவின் பொருளாதாரம் இப்போது சேடம் இழுக்கத் தொடங்கி விட்டதென நான் எனக்குள் எண்ணிக்கொண்டேன்.

அப்போது எமது வாகனத்திற்குள் இருந்த காயக்காரர்களுக்கு ஓர் இராணுவ வீரன் கடலை வழங்கிக் கொண்டு வந்தான். அந்தக் கடலையை வாங்கி நான் சாப்பிட்டவாறு வெளியே பார்த்தபோது என்னிடம் படித்த ஒரு இளைஞன் என்னை கண்டு விட்டு எனை நோக்கி வந்தான். அவனது பெற்றோர் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். அவன் வன்னியில் ஆசிரியராக இருந்தமையால் வன்னிக்குள் தனியாகச் சிக்கிவிட்டான். இதனால் அந்த இளைஞன் மிகவும் பயந்து போயிருந்தான். தன்னை எங்கள் பிள்ளையெனக் கூறியும் எம்முடன் தன்னையும் கூட்டிச் செல்லுமாறும் என்னிடம் வேண்டினான். அவனைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. உண்மையிலேயே அவனது எதிர்கால நிலை ஒரு கேள்விக்குறியாகவே இருந்தது. எனக்கு ஏற்கெனவே சிகரட் தந்த இராணுவ வீரன் எமக்கு காவலாய் நின்று கொண்டிருந்தான். அந்த இராணுவ வீரனிடம் எனது துணைவி மூலமாக அந்த இளைஞனை எம்முடன் அழைத்துச் செல்ல அனுமதிக்க முடியுமாவெனக் கேட்டேன். அந்த இளைஞனின் அவலமான நிலையை அந்த இராணுவ வீரன் மனிதாபிமான அடிப்படையில் புரிந்துகொண்ட போதும் எமது கோரிக்கைக்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் அவனிடம் இருக்கவில்லை. எமது வாகனத்திற்கும் எமக்குப் பொறுப்பாளராய் எமது வாகனத்தை ஓட்டி வந்த இராணுவ வீரனே இருந்தான்.



அந்த இளைஞனின் விடயம் சம்பந்தமாக எமக்கு பொறுப்பாய் வந்த இராணுவ வீரனிடம் கேட்ட போது அவன் உறுதியாக மறுத்துவிட்டான். அவ்வாறு செயற்பட தனக்கு அதிகாரம் இல்லையெனவும் தமது பெரிய துரை தான் அது பற்றி முடிவு செய்ய முடியும் எனவும் கூறி விட்டு அவன் போய் விட்டான். இதனால் அந்த இளைஞனின் கோரிக்கையை என்னால் நிறைவு செய்ய முடியவில்லை. அந்த இளைஞன் நான் இந்த வரியை எழுதிக் கொண்டிருக்கும் போது இராணுவத்தின் தடுப்பு முகாமில் இருக்கின்றான் என்பதை நான் அறிந்துகொண்டேன். அவனது பெற்றோர் பண வசதி குறைந்தவர்கள் என்பதால் இதுவரை அந்த இளைஞனை வெளியே எடுக்க முடியவில்லை. அவனது இளமைக் கனவுகள் இராணுவத்தின் தடுப்பு முகாமில் கலைந்த கனவுகளாகவே போய்க் கொண்டிருக்கின்றது.

ஓவியங்கள்: புகழேந்தி

தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# எஸ்.பொன்னுத்துரை

## இயல்விருது 2011 சிறப்புரை

ஜெயமோகன்

இந்த மேடையிலும், அரங்கிலும் கூடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம். நண்பர்களே, இந்த அரங்கிலே ஈழம் உருவாக்கிய முதன்மையான படைப்பாளிகளில் ஒருவரான எஸ்.பொ. அவர்களை கௌரவிக்கும் முகமாக நாம் இங்கு கூடியிருக்கிறோம். எஸ்.பொ. அவர்களைப் பற்றிய என்னுடைய மதிப்பீடுகளையும் விமர்சனங்களையும் ஒரு நீண்ட பெரிய கட்டுரையாக நான் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். பிரசுரமாகியிருக்கிறது. இப்போது சில சொற்கள் மட்டும் அவரை வாழ்த்தும் முகமாக கூறலாம் என்று நினைக்கிறேன். நண்பர்களே, 2004இல் நாகர்கோவில் வட்டாரத்தில் சுனாமி தாக்கியபோது நானும் நாஞ்சில் நாடனும் இன்னும் சில நண்பர்களும் சுசீந்திரம் தேர்த் திருவிழா பார்ப்பதற்காகப் போய்ச் சேர்ந்திருந்தோம். அதற்கு ஒருநாள் முன்னாடி சுந்தர ராமசாமியின் பிறந்தநாள். அதையொட்டி நிறைய நண்பர்கள் வந்திருந்தார்கள். அவர்களும் என்னுடன் சேர்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது சுனாமி வந்தது என்ற தகவல் வானொலியில் சொல்கிறது என்று எங்களிடம் ஒருவர் சொன்னார். உடனே எங்களுக்குத் தோன்றியது கடற்கரைக்குச் சென்று அதைப் பார்க்கவேண்டுமென்றுதான். ஓடி வந்து ஆட்டோ ரிக்சா (Auto Rickshaw) கேட்டோம். அவன், 'வரமாட்டேன்' என்று சொன்னான். சரி, டாக்ஸியில் (call taxi) போயிடலாம் என்று டாக்ஸி கேட்கிறோம். அவனும் 'வரமாட்டேன்' என்று சொல்லிவிட்டான். சரி, நடந்தே கன்னியாகுமரிக்குப் போயிடலாம் என்று மெயின் ரோடுக்கு வருகிறோம். கன்னியாகுமரியிலிருந்து, ஆட்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரிக்கு யாரும் போகக் கூடாது, போலீஸ் தடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். திரும்பி வந்து சாலையில் நின்று கொண்டிருந்தபோது சு.ரா. பற்றிய ஆவணப் படம் எடுத்தவராகிய ரமணி என்பவர் கன்னியாகுமரியிலிருந்து ஆட்டோ ரிக்சாவில் வந்துகொண்டிருக்கிறார். அவரது கை ஒடிந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவரது மாமனார், மாமியார், குழந்தைகள் எல்லோரும் இறந்து போய்விட்டார்கள். அன்று மாலைதான் கிட்டத்தட்ட ஆறாயிரம் பேர் இறந்து போய்விட்ட தகவல் எங்களுக்குத் தெரிகிறது, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும். மனித மனதுடைய ஒரு அடிப்படையான அறியாமையை நான் அந்தச் சந்தர்ப்பத்தில் பார்க்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் இறந்தவர்கள் அதிகம். எட்டுமணிக்கு சுனாமி சென்னைக்கு வருகிறது. பத்தரை மணிக்கு நாகர்கோவிலுக்கு வருகிறது. எட்டரை மணிக்கு வந்த தகவல் உடனே இங்கே வந்து கிடைத்தது. உடனே மக்கள் அங்கு போனார்கள். அதன்பிறகு நாம் மறுநாள் சுனாமி எப்படியிருந்தது என்று பார்த்தேன். அது ஒரு பெரிய கொடுங்கனவு மாதிரியான ஒரு சந்தர்ப்பம், மனித உடல்களை, சேற்றோடு சேறாக கலந்து குப்பையாகிப்போன மனித உடல்களை, அள்ளிப் போன ஒரு தருணம். தொடர்ந்து சென்ற சில நாட்களில் சமீபத்தில் வந்த செய்திகளைப் பார்க்கும் போது இன்னொரு சுனாமிதான் என்னுடைய நினைவில் வருகிறது. ஈழ அவலம் என்ற ஒரு சுனாமி; திரையில் அலறக்கூடிய மக்களுடைய குழந்தைகளுடைய குரல்களை, மனிதர்களுடைய கண்ணீர் கலந்த அலறல்களை, கடவுளே என்ற அந்த அர்த்தமற்ற கதறல்களைக் கேட்கும் போது திருப்பித் திருப்பி இந்த சுனாமிதான் நினைவுக்கு வந்தது. அதையொட்டி நினைவுகள் குழம்பிக் கொண்டேயிருந்தன.

அப்போது நினைவுக்கு வந்த ஒரு விஷயம்; அந்தமானிலே 'மோக்கல்' என்ற ஒரு பழங்குடி இருக்கிறது. மொத்தமாக ஆயிரத்திற்குக் குறைவான பேர் மட்டுமே உள்ள ஒரு பழங்குடி. அவர்கள் தனியாக எந்தத் தீவிலும் வாழ்வதில்லை. படகில்லத்திலேதான் பெரும்பாலும் வாழ்கிறார்கள். ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவர்களும், மொங்கோலிய வம்சத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து உருவான ஒரு பழங்குடி அவர்கள். அப்படிப்பட்ட பழங்குடி உலகத்திலே ரொம்பக் குறைவு. அந்த மொழிக்குடும்பங்களுக்கு இடையேயான உறவைப் பற்றி ஆராய்வதற்கு மிகச் சிறந்த ஆவணமாகக் கருதப்படுவதும், ஆதாரமாகக் கருதப்படுவதும் அவர்களது மொழிதான். மிக அரிய மொழி என்று சொல்கிறார்கள். ஆயிரம் பேருக்குள்ளேதான் இந்த மொழியைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சுனாமி வந்து முடிந்தபின்பு முதல் 'ஹிந்து' (The Hindu) இல் வந்த செய்தி ஒரு இனம் முழுமையாக அழிந்தது; அந்த மொழி அழிந்தது; அவர்களுடைய பண்பாடு அழிந்தது; ஒருவர்கூட மிச்சமில்லை. மறுநாள் அந்தச் செய்தி போட்டார்கள்; ஆயிரம் பேரும் காணாமல் போயிருக்கிறார்கள். ஒரு நான்கு நாட்களுக்குப் பிறகு அடுத்த செய்தி வந்தது; இல்லை, ஆயிரம் பேரும் உயிரோடு இருக்கிறார்கள். ஆயிரம் பேருமே தப்பிவிட்டார்கள். எப்படித் தப்பினார்கள் என்றால் அவர்களுடைய குலத் தலைவராகிய 'சலே கனத்தா' என்ற ஒருவர் அவருக்கு அவருடைய மூதாதைகள் சொன்னார்கள்; இன்னும் கொஞ்ச நேரத்தில் சுனாமி வரப்போகிறது. எல்லோரும் மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள் என்று. அவரை பி.பி.சி. (BBC) பேட்டி எடுத்து வெளியிட்டது. அவர் சொல்கிறார்; எனக்குத் தோன்றியது, என் மூதாதையர்கள் சொன்னது. கடல் அலை என்பது மூதாதையர்கள்; அவர்களுடைய நாக்கு அது. ஒரு பசித்த மூதாதையன் வந்து எங்களையெல்லாம் சாப்பிடப் போகிறான் என்று எனக்குத் தோன்றியது. அதனால் சொன்னேன் என்கிறார். அவரைப் பற்றி விரிவான ஆய்வுகள் வந்தது. அந்த ஆய்வுகளிலிருந்து ஒரு தகவல் தெரிந்தது என்னவென்றால், அது ஒரு சாதாரணமான விசயமில்லை. அது ஒரு ஆழமான உள்ளுணர்வு. அந்த உள்ளுணர்வு தொடர்ந்து அலையை, கடலை, மீனை, பறவைகளை, மரங்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது. ஒரு இரண்டு மணிநேரப் பேட்டியிலே அவர் சுனாமிக்கு ஏறத்தாழ நான்கு மணிநேரத்துக்கு முன்னதாக என்ன என்ன விஷயங்கள் அங்கே நடந்தது என்று சொல்கிறார். மீன்கள் எப்படி திசை மாறின, அலைகளின் வடிவங்கள் எப்படி மாறின; நிறையத் தகவல்கள் சொல்கிறார். அந்த சுனாமிக்கான



படிப்பகம்

www.padippakam.com

முன்னேற்பாடுகள் நான்கு மணிநேரம் நடந்த பின்னாடிதான் சுனாமி வருகிறது; அதற்குள்ளே அவருக்கு அந்த உள்ளுணர்வு தெரிகிறது. நான் 'கொட்டில்பாலை' என்னும் இடத்திலே சுனாமிக்கான உதவிப் பணி புரிய சென்றபோது ஒன்று தெரிந்தது; அதிகமாக பெண்களும் குழந்தைகளுமே இறந்து போயிருக்கிறார்கள். குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு பெண்களால் ஓட முடியவில்லை. இரண்டாவது புடவை ஒரு பெரிய பிரச்சினை. ஆண்கள் பெரும்பாலும் லுங்கியைக் கழற்றிப் போட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டார்கள். அதேபோல கட்டிப் போட்டிருந்த எல்லா மிருகங்களும் இறந்துபோக கட்டிப் போடாத எந்த மிருகமும் இறக்கவில்லை; நாய்கள், எலிகள் என்று எல்லாமே ஒரு மணி நேரத்துக்கு முன்னரே மேடான பகுதிகளுக்குச் சென்றுவிட்டன.

ஒரு உள்ளுணர்வு இருக்கிறது. இயற்கையோடு மனிதனை தொடர்புபடுத்தக் கூடிய உள்ளுணர்வு. அந்த உள்ளுணர்வை சுத்தமாகத் தூய்மையாக வைத்துக் கொள்ளும்போது அதற்கான வழி அங்கே தெரிகிறது. எந்த சுனாமியிலும், எந்த அரசியல் சுனாமியிலும், போர் சுனாமியிலும் தப்பிக்கக் கூடிய, வாழக்கூடிய, வாழ வைக்கக்கூடிய உள்ளுணர்வு. எங்கள் எஸ்.பொ. அவர்களை ஒரு வகையான உள்ளுணர்வின் பாடகன் என்று சொல்வேன். ஒரு சமூகத்துடைய, ஈழ சமூகத்துடைய 'சலே கனத்தா' என்று அவரை சொல்வேன். ஒரு வம்சத்துடைய பிரக்ஞையுடைய காவலன். ஒரு ஐம்பது வருடம் ஈழ மண்ணை, ஈழ மனிதர்களை, ஈழ வாழ்க்கையை அவரறியாமலேயே அவர் கவனித்து வந்திருக்கிறார்; உள்ளுணர்வில் தேக்கி வந்திருக்கிறார். அந்த உள்ளுணர்வின் வெளிப்பாடாகத் தொடர்ந்து தமிழிலே அவர் பணியாற்றி வந்திருக்கிறார். தமிழிலக்கியத்திலே எப்போதும் இரண்டு வழி உண்டு; ஒன்று கருத்துக்களுடைய வழி, இரண்டு உள்ளுணர்வின் வழி. ஒரு தொடக்கத்தை வைத்து சொல்லப் போகிறோமென்றால் 'பிரதாப முதலியார் சரித்திரத்தை' எழுதிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களை கருத்துக்களுடைய வழி என்று சொல்லலாம். கருத்துப் பிரச்சாரம் தான் இலக்கியம் என்று நம்பினார்கள். சமூகத்தை மாற்றுவதற்காக எழுதினார்கள். புறவயத்தைப் பார்த்து எழுதினார்கள். சமூகத்தைப் பார்த்து, மக்களைப் பார்த்து தனக்குப் பட்டதை எழுதினார்கள்; அது ஒரு வழி.

இன்னொரு வழி இருக்கிறது. அது 'கமலாம்பாள் சரித்திரத்தை' எழுதிய ராஜமய்யருடைய வழி. அது தன்னைப் பார்த்து எழுதுவது. இந்த வெட்டத் திடலில் தானும் ஒருவன் என்று தன்னைக் கூர்ந்து தனக்குள்ளே பார்க்கப் பார்க்க இந்த மக்களையே பார்ப்பதுதான் என்று தெரிந்து எழுதுவது. உள்ளுணர்வை தீட்டி வைத்துக் கொண்டு உள்ளுணர்வை மட்டுமே வெளிப்படுத்துவது. அது ஒரு வழி. ஈழப் பாரம்பரியத்தை வைத்துப் பார்த்தால் இந்தக் கருத்துப் பிரச்சார வழியை, சமூக மாற்றத்துக்காக அரங்கில் கொள்ளவேண்டியதான வழியை, அந்த வழியை முன்வைத்த இரண்டு முக்கியமான சிந்தனையாளர்களை ஈழம் உருவாக்கியது; 'கைலாசபதி, சிவத்தம்பி.' அவர்களுடைய பாதிப்பு இலக்கியம் முழுக்க இருந்தது. ஈழத்தினுடைய பொதுவான போக்கு என்பதே கருத்துக்களை முன்வைப்பதே. ஈழத்தினுடைய பொதுவான எழுத்து என்பது எனக்குத் தெரிந்தவரை, நான் வாசித்தவரை மீண்டும் மீண்டும் மீண்டும் ஒரு கருத்தியல் புலத்தை உருவாக்குவதுதான்; அதற்குள் செயல்படுவதுதான். அதற்கு எதிராக, அதற்கு மாறாக செயற்பட ஒரு சின்ன, மென்மையான ஒரு நீரோடை போல ஒரு வழி இருந்தது. அதில் இரண்டு முக்கியமான பெயர்கள்; ஒன்று 'மு.தளையசிங்கம்,' இன்னொன்று 'எஸ்பொ' அவர்கள்.

கைலாசபதி, சிவத்தம்பி மரபு கருத்துப் பிரச்சாரம் சார்ந்து உருவாக்கிய ஒரு பெரும்போக்குக்கு எதிராக எஸ்.பொ. அவர்கள் தன்னை முன்வைத்தார் எனச் சொல்லலாம். தன்னுடைய உடலை, தன்னுடைய மனதை, தன்னுடைய ஆளுமையை முன்வைத்தார். எஸ்.பொ.வின் ஆளுமை என்பது ஆரம்பத்திலிருந்தே முழுக்க முழுக்க அவரது உள்ளுணர்வு சார்ந்தது. சுந்தர ராமசாமி 'ஜேஜே' பற்றிக் குறிப்பிட்டு ஒன்று சொல்லுவார், அவரது உள்ளுணர்வு இருட்டில் மிருகங்களின் கண்களைப் போன்றது. தானாக ஒளிவிடக் கூடியவை. அவற்றுக்கு வெளியிலிருந்து ஒளி தேவையில்லை. அதற்கு உள்ளேயிருந்தே ஒளிவரும். அப்படிப்பட்ட ஒளியோடு ஈழ இலக்கியத்தில் பயணம் செய்தவர் எஸ்.பொ. ஒருவகையில் உள்ளுணர்வு என்பது தர்க்கத்துடைய கட்டுப்பாட்டுக்குள் உள்ளதல்ல. எஸ்.பொ. அவர்களது கடிவாளத்தில் அவர் நின்றது கிடையாது. உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்;



அ.முத்துலிங்கம், ஜெயமோகன், எஸ்.பொன்னுத்துரை



படிப்பகம்

www.padippakam.com

'சடங்கு' நாவலிலே ஒரு இடம் வரும், "யாரது, ரயிலில தண்ணியடிச்சிட்டுப் போறது" என்று; "அது எஸ்.பொ. குடிச்சிட்டு விழுந்து கிடக்கிறான்" என்று ஒரு கதாபாத்திரம் சொல்லும். அவரைப் பற்றி அவரது சித்திரமே அதுதான். ஒரு கட்டற்ற மதயானையாக ஈழ இலக்கியத்தில் அவர் உலாவியிருந்தார். நல்லவற்றை இடித்திருக்கிறார்; கெட்டவற்றை இடித்திருக்கிறார். ஒரு அலையாக, ஒரு தன்னிச்சையான போக்காக அவரது பண்பு இருந்திருக்கிறது. அதற்கு நற்போக்கு என்று அவரே பெயரிட்டிருக்கிறார்; முற்போக்குக்கு எதிரான ஒரு மரபாக. இன்று பல வருடங்களுக்குப் பின்பு திரும்பிப் பார்க்கும்போது எஸ்.பொ. அவர்களின் மரபு அதே அளவு வீச்சத்துடன் ஈழ இலக்கியத்தில் தொடர்கிறதா, உள்ளுணர்வை மட்டுமே நம்பி எழுதக்கூடிய கட்டற்ற சுதந்திரங் கொண்ட படைப்பாளிகளின் வரிசை உருவாகியிருக்கிறதா என்று கேட்டால், வருத்தத்துடன் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. விதி விலக்குகள் இருக்கின்றன, ஆனால் போதுமான அளவுக்கு இல்லை. எதிர்காலத்தில் அப்படிப்பட்ட மரபு, அப்படிப்பட்ட ஒரு போக்கு ஈழ இலக்கியத்தில் உருவாகும் என்று நான் நினைக்கிறேன். அதற்காக இந்த மேடையிலே என் விருப்பத்தையும் ஆசையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர்களே, எஸ்.பொ. அவர்களைத் தமிழகம் உரிய அளவில் கவனிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், அவரைப்போன்ற இன்னும் மூதாதையர்களை நாங்கள் கவனிக்கவில்லை. தமிழகம் இன்றைக்கும் பிரபலங்களின் பின்னால்; அரசியல் அல்லது சினிமாவால் அடையாளப்படுத்தப்பட்ட பிரபலங்களுக்குப் பின்னால் போகக்கூடிய அமைப்பாலானதாக இருக்கிறது. கௌரவிக்கப்படாத மூதாதையர்கள் பற்றிய பெரிய பட்டியல் நம்மிடம் இருக்கிறது. ஒரு பெரிய அநீதியின் மேல்தான் ஒவ்வொரு தமிழ் எழுத்தாளனும் எழுத வருகிறான். என்னுடைய மூதாதையர் கவனிக்கப்படவில்லை, அவருடைய இலக்கியங்கள் படிக்கப்படவில்லை, அவர் மனமுருகி தனிமையில் இருக்கிறார்கள் என்ற உணர்வோடுதான் ஒரு இளம் எழுத்தாளனும் அங்கே படைக்க வருகிறான். தமிழில் அதற்கான வழிகள் எல்லாமே அடைத்துப்போன ஒரு காலகட்டத்திலேதான் 'இயல் விருது' இங்கே ஆரம்பிக்கப்பட்டது. நம்முடைய தமிழிலக்கியத்தின் பிதாமகன் என்று சொல்லக்கூடிய சுந்தர ராமசாமிக்கு அளிக்கப்பட்ட விருது இங்கு அளிக்கப்பட்டதுதான். தமிழிலக்கியத்தில் ஒரு ஐம்பது வருடம் அழகியலையும் உள்ளுணர்வையும் முன்வைத்த, முன்னோடி விமர்சகராகிய வெங்கட் சுவாமிநாதனுக்கு அளிக்கப்பட்ட விருது இங்கே அளிக்கப்பட்டதுதான். தமிழிலக்கியத்தில்



பெண்ணிய எழுத்தென்ற ஒன்றைத் தொடங்கிவைத்த அம்பைக்கு அளிக்கப்பட்ட விருது இங்கேதான் அளிக்கப்பட்டது. தொடர்ந்து கௌரவிக்கப்படாத முன்னோடிகளைக் கௌரவிக்கும் முகமாக, தமிழகம் செய்யத்தவறிய ஒரு விஷயத்தை செய்வதாக , இங்கே இயல் விருது தமிழ் இலக்கியத் தோட்டத்தால் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது. தமிழகத்தினுடைய எழுத்தாளர் அனைவரது சார்பிலும் லட்சக்கணக்கான வாசகர்கள் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது தமிழ் இலக்கியத் தோட்டம் தன்னுடைய பணிகளை விரிவுபடுத்தி எழுத ஆரம்பிக்கும், எழுத வரும் புது எழுத்தாளர்களை ஊக்குவிப்பதாக தனது அங்கீகாரத்தை அளிக்கிறது. அதுவும் மிக மரியாதைக்குரிய விஷயம். ஏனென்றால் இவர்களில் ஒருவர் ஏதாவது ஒரு விருதைப் பெற இன்னும் எத்தனையோ வருடங்கள் ஆகும். உதாரணமாக என் நண்பர் சு.வெங்கடேசன் அவர்கள் 'காவல் கோட்டம்' என்ற நாவலை எழுதியிருக்கிறார். அவரது முதல் படைப்பு; அந்த முதல் படைப்பே கடல் கடந்து இவ்வளவு முக்கியமான ஒரு அமைப்பின் முக்கியமான விருதைப் பெறுவது என்பது சாதாரணமான விஷயம் அல்ல. ஒரு பெரிய ஆசிர்வாதம் போல. எழுத்தாளனுக்கு தன் எழுத்து கவனிக்கப்படுகிறது, படிக்கப்படுகிறது என்பது அளிக்கக்கூடிய ஊக்கம் முக்கியமானது. இந்த மேடையில் அளிக்கப்பட்ட பிற விருதுகள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றன; ஏனென்றால் அனேகமாக எல்லா முக்கியமான விருதுகள் பெறுபவர்களும் ஏற்கனவே என்னால் அடையாளப்படுத்தப்பட்டவர்கள், என்னால் மதிக்கப்படுபவர்கள், பாராட்டி எழுதப்பட்டவர்கள். நண்பர் பொ. கருணாகரமூர்த்தி அவர்களுடைய ஆரம்பகால முதல் தொகுதிக்கு நான் முன்னுரை எழுதியிருக்கிறேன். அது 'ஒரு அகதி உருவாகும் நேரம்' என்று நினைக்கிறேன். அவருடைய படிப்புக்கள் மேல் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. ஈழ இலக்கியத்திலே ஒரு அசலான நகைச்சுவை உணர்வும் மிகச் சரளமான சித்திரிப்பு முறையும் கொண்ட முக்கியமான படைப்பாளி. நீண்ட இளைவெளி அவரிடத்திலே விழுந்தது. அந்த இடைவெளியிலிருந்து மீண்டு மிகுந்த வேகத்துடன் அவர் எழுதுவதற்கு இந்த விருது அவருக்கு மிகுந்த ஊக்கம் அளிக்கும் என்று நினைக்கிறேன். நண்பர் சு.வெங்கடேசனுடைய 'காவல் கோட்டம்' நாவல்; அது வெளிவந்த போதே தமிழிலக்கியத்தின் மிக முக்கியமான சாதனைப் படைப்பு என்று ஏறத்தாழ அறுபது எழுபது பக்கங்களுக்கு நீண்டதொரு கட்டுரையை எழுதியிருக்கிறேன். அவருக்கு அளிக்கப்பட்ட விருதுக்காக தமிழ் வாசகன் என்ற முறையில் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தியோடர் பாஸ்கரன் அவர்கள் தமிழிலே ஒரு துறை தொடங்கிவைத்த முன்னோடி. தமிழிலே 'சூழியல்' சார்ந்து எதுவுமே எழுதப்பட்டது கிடையாது. அதற்கான வார்த்தைகளே தமிழிலே இல்லை, மரபிலே இருந்திருக்கிறது. அந்த வார்த்தைகளை அவ்வளவற்றையும் மீட்டு எடுத்து ஒரு தனி மொழியை, ஒரு துறையைத் தொடக்கிவைத்த இலக்கிய முன்னோடி, ஒரு மிக முக்கியமான சாதனையாளர், தியோடர் பாஸ்கரன். அவருக்கு அளிக்கப்பட்ட விருது எனக்கு அளிக்கப்பட்ட விருது போல. அதற்காகவும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் துவரங்குறிச்சி என்ற சின்ன கிராமத்திலே சின்ன வீட்டில் ஒரு கட்டிலிலிருந்த நோயுற்ற இளைஞனாக நான் மனுஷ்யபுத்திரனைப் பார்த்தேன். அப்போதே அவர் மிக முக்கியமான கவிஞராக இருந்தார். இத்தனை வருடங்களில் என்னுடைய மனத்தினுடைய அந்தரங்கமான கவிஞராக, என்னுடைய கவிஞர் என்று நான் சொல்லக்கூடிய கவிஞராக எப்போதும் அவரை நான் கண்டுவருகிறேன். அவருடைய சமீபத்திய கவிதைகள் எல்லாம் மிகுந்த வீச்சத்துடன் வெளிவந்திருக்கின்றன. அதை அடையாளங்கண்டு பாராட்டியமைக்காக இலக்கியத் தோட்டத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் திருமாவளவன், இரண்டாயிரத்தில் அவருடைய தொகுதிகள் வந்தபோது நான் நடத்திக் கொண்டிருந்த 'சொல் புதிது' இதழில் இரண்டு பக்கங்களில் அவருடைய கவிதைகளை வெளியிட்டோம். அன்றிலிருந்து இன்றுவரைக்கும் நான் கவனிக்ககூடிய மதிக்கக்கூடிய முக்கியமான கவிஞராக அவர் இருக்கிறார். அனேகமாக அவருக்குக் கிடைக்ககூடிய முதல் விருது



படிப்பகம்

இதுவென்று நான் நினைக்கிறேன். அதுவும் மிகுந்த பாராட்டுக்குரியது. நான் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக கணையாழியிலிருந்தே கவனித்து வரக்கூடிய கட்டுரையாசிரியரான சச்சிதானந்தம் சுகிர்தராஜா அவர்களுக்கு இங்கே விருது அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பல வருடங்களுக்கு முன்பு "மருதம்" என்ற சிறிய இணைய இதழை நான் ஆரம்பித்தபோது அதற்கு எழுத்துருக்கள் தேவைப்பட்டன. முத்து நெடுமாறன் அவர்களைத் தொடர்பு கொண்டேன். எந்தவிதமான கட்டணமும் வாங்காமல் அந்த எழுத்துருக்களை எனக்கு அளித்துதவினார். ஒரு பதினைந்து வருடங்கள் நான் எழுதிய எல்லா எழுத்துக்களும் 'முரசு அஞ்சலில்' எழுதியவைதான். முரசு அஞ்சல் இல்லை என்றால் இணைய உலகில் வரவோ தட்டச்சில் எழுதவோ எனக்குப் பழக்கம் இல்லாமல் போயிருக்கலாம். எனது எழுத்தில் பெரும்பகுதி அவருடைய எழுத்துருவைப் பயன்படுத்தி எழுதியது. அவருக்கு நான் தனிப்பட்ட முறையில் நன்றி சொல்ல வேண்டும். இந்த மேடையை என்னுடைய வாழ்த்தைத் தெரிவிப்பதற்காக நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இலக்கியத் தோட்டம் விருதுகள் தமிழில் இன்று மிக முக்கியமான ஒரு நிகழ்வாக மாறிக் கொண்டிருக்கின்றது. இதனுடைய முக்கியத்துவம் அதனுடைய அமைப்பாளர்களுக்கு எந்தளவு தெரியுமென்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் இப்போதைக்குத் தமிழில் அளிக்கப்படும் விருதுகளில் ஒரு இலக்கிய வாசகன் பொருட்படுத்தக்கூடிய ஒரே விருதாக இது இருக்கிறது. ஆகவே தவறாக அளிக்கப்பட்டுவிட்டால் மிக முக்கியமான விமர்சனத்துக்குரிய விருதாகவும் இது இருக்கும், இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் நீங்கள் ஒரு மதிப்பீடை உருவாக்கி இருக்கிறீர்கள். சுந்தர ராமசாமி, வெங்கட் சுவாமிநாதன், என்று அந்தவொரு வரிசை இருக்கிறது. அந்த வரிசையில் ஒரு எழுத்தாளன் வந்து அமரும்போது அவனுக்கு அதற்கான தகுதி இருக்கவேண்டும். இன்றைக்கு எஸ். பொன்னுத்துரைக்கு அளிக்கப்படக்கூடிய இந்த விருதுக்குப் பிறகு அளிக்கப்படவிருப்பவருக்கு அந்தத் தகுதி இருக்கவேண்டும். அது ஒவ்வொருமுறையும் இன்னுமதிகமான பொறுப்பை உங்களுக்கு நீங்களே அளித்துக் கொள்கிறீர்கள் என்பதை இந்தக் கட்டத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். விருதுகள் என்பது திறந்து இருக்கவேண்டுமென்பது உண்மைதான். அது ஒருவகையில் ஜனநாயக பூர்வமாக இருக்கவேண்டும். ஆனால் கலை விசயத்தில் ஜனநாயகத்துக்கு பெரிய இடம் கிடையாது. மக்களிடம் பரவலாகக் கருத்துக்கேட்டு விருது கொடுப்பதென்றால் அவர்கள் ராஜேஷ் குமாருக்கு விருது கொடுக்கவேண்டும் என்றுதான் சொல்வார்கள். திருமாவளவன் கவிதைகளுக்கு விருது கொடுக்க வேண்டுமென்று சொல்பவர்கள் டொராண்டோவில் பத்துப் பதினைந்து பேர் தான் இருப்பார்கள். நான் ஊருக்குப் போய் விட்டால் அது ஒன்பதாகக் குறைந்துவிடும். ஆகவே அது ஒருவகையில் ஜனநாயகத்துக்கு எதிரான ஒரு விசயந்தான். ஆக நடுவர்கள் எப்போதும் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். தமிழகத்திலே ஒரு பல்கலைக்கழகத்திலே முப்பத்தைந்து வருடங்கள் பணியாற்றி ஒரு முறைகூட ஒரு நல்ல எழுத்தாளனை அடையாளப்படுத்தாத ஒருவரை இங்கே கூட்டிவந்து அவரை ஒரு நடுவராக அமர்த்துவதென்பது மிகத் தவறானது. அவர் திருப்பி அங்கே என்ன செய்தாரோ அதைத்தான் இங்கே செய்வார். நடுவராக வரக்கூடிய ஒருவர் ஏற்கெனவே தன்னுடைய இலக்கியத் தகுதியை, இலக்கிய ஆர்வத்தை, இலக்கியத்தில் தன்னுடைய அர்ப்பணிப்பை நிரூபித்தவராக இருக்க வேண்டும். இந்த ஒரு கோரிக்கையை மட்டும் இந்த மேடையில் சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

(கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் 18 ஜூன் 2011 அன்று எழுத்தாளர் எஸ்.பொ.வுக்கு இயல் விருது வழங்கியது. அந்தச் சமயத்தில் ஆற்றிய சிறப்புரை)




Tel: 416-292-6200
5200 Finch Ave. E, Suite 115, Toronto, ON M1S 4Z4
Email: sales@airlinktravel.ca - www.airlinktravel.ca
TICO

www.padippakam.com



# போரும் பெண்களும்

**றஞ்சி**

உலகெங்கும் மேலாதிக்க அரசுகளால் மனிதாபிமான போர் என்ற போர்வையில் நடாத்தப்படும் யுத்தப் படுகொலைகள் அனைத்தும் பெண்களையும் குழந்தைகளையுமே கூடுதலாக கொன்று குவித்து வந்துள்ளது. இங்கு ஆண்கள் பாதிக்கப்படவில்லை அல்லது போரில் இறக்கவில்லை என்பதல்ல. பல சந்தர்ப்பங்களில் தேசிய விடுதலைக்கான போரில் கூடுதலாக பலியாகுபவர்களில் ஒரு தரப்பினர் சமூகத்தில் சரிபாதியாக இருக்கும் பெண்கள்; இன்னொரு தரப்பினர் எதுவுமே அறியாத சிறுவர்கள். பல்வேறு காரணங்களால் நாம் இவர்களைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. உலகில் எங்கெல்லாம் போர் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் இந்த பலிகொள்ளல் நடந்தேறி விடுகிறது. ஆனால், இந்த இரு தரப்பினரும் சமூகத்தில் குரலற்றவர்களாக இருப்பதால் இவர்கள் பலி கொள்ளப்படும் சம்பவங்கள் பெருமளவில் வெளிவருவதில்லை. சிறுவர்களையும் பெண்களையும் பாதுகாக்க பல்வேறு அமைப்புகளும் பல்வேறு சாசனங்களும் உருவாக்கப்பட்டாலும் அவற்றால் இவர்களைப் பாதுகாக்க முடியாத நிலைமையே இன்றுவரை காணப்படுகிறது.

ஆனால் பெண்களின் எழுச்சி, சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்த விரும்பிய எல்லா தேசிய விடுதலைப் போராட்டங்களுடனும் ஜனநாயகப் போராட்டங்களுடனும் பின்னிப் பிணைந்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. ரஷ்சியப் புரட்சியில் பங்கேற்ற எண்ணற்ற பெண் போராளிகள்தான் உலகத்துக்குப் பெண்கள் சார்பாக புதியதொரு திசையை முதன் முதலாக காட்டினார்கள். போரில் படைத் தலைமை உட்பட அனைத்து நிலைகளிலும் ஆண்களுக்கு சமம் என்பதை நிரூபித்தார்கள். பின்னர், தொடர்ந்து பெண்களின் பிரச்சினைகளை வெளியுலகுக்கு எடுத்துக் கூற, அதற்காக போராட ஒரு தனி அமைப்பு தேவை என்பதையும் உலகப் பெண் அனைவருக்குமான ஒற்றுமை நிறுவப்பட வேண்டும் என்பதின் அவசியத்தையும் வலியுறுத்தியவர்கள், அவர்கள்.

போலந்தில் பிறந்த ரோசா லக்சம்பேர்க் ரஷ்சியப் புரட்சியில் பெரும் பங்கு வகித்தவர். போராட்டங்களை பெண்கள் தலைமை தாங்கி நடத்த முடியும் என்பதையும் உலகுக்கு நிரூபித்தவர்.

அதே போல் சீனப் புரட்சி மீண்டுமொரு முறை பெண்களின் பலம் என்னவென்று பறைசாற்றியது. ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீனப் பெண்களின் மீது நிகழ்த்திய பாலியல் வன்முறைக்கும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக சீனப் பெண்களுக்கு செய்த கொடுமைகளுக்கும் பதிலடியாக சீனப் புரட்சியில் பெண்களின் பங்கு பெரும் அளவாக இருந்தது. இதனைத் தொடர்ந்து கியூபப் புரட்சியில் பெண்கள் முக்கிய பொறுப்புக்களை வகித்தனர். 1945ஆம் ஆண்டு ஜப்பானிய வியட்நாமிலிருந்து பிரெஞ்ச் ஆட்சியாளர்ளை விரட்டியடிக்க அனைத்து பெண்கள் கெரில்லாப் படை உருவாக்கப்பட்டது. கிட்டதட்ட 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பிரெஞ்சுக்கு எதிரான எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை சிறுமைப் படுத்தி ஓட வைத்த வியட்நாம் பெண்களின் வீர வரலாறு போரில் பெண்களின் போராட்ட சக்தியை உலகுக்கு நிரூபித்துக் காட்டியது. அதே போல் மிகவும் பிற்போக்கான, வறுமையான நிலையிலிருந்த நிகரகுவாவின் போர் புரட்சியில் சாண்டினிஸ்டா பெண்களின் வீரம் எல்லா திசைகளிலும் வியப்பை ஏற்படுத்தியது. இதே போல் வியட்நாமின் நீளக் கூந்தல் படை என்ற பெண்கள் போராட்ட அமைப்பும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

உலக அளவில் பெண்கள் மீதான சக்தி வாய்ந்த ஒடுக்குமுறைக் கருவியாக பாலியல் வன்முறை காணப்படுகிறது. பாலியல் வக்கிரங்களை தீர்த்துக்கொள்வதற்கும்; பெண்களுக்கான உடலியல், உளவியல் ரீதியான தண்டனையாகவும்;போராடும்பெண்களை பீதிக்கு ஆளாக்கி போராட்டத்திலிருந்து அகற்றுவதற்காகவும்; இந்த வழிமுறையை போரில் ஈடுபடும் பெண்கள் மேல் ஆணாதிக்கம் நிலை நாட்டுகிறது. இக்கொடுமைகளை பெண்கள் எதிர்த்து நின்றாலும் பெண்களின் வகிபாகத்தைப் புறக்கணிக்கும் நிலை ஆணாதிக்க மனோபாவத்திலிருந்தே எழுகிறது. ஆனாலும், பெண்கள் மேலும் மேலும் கொலை செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டும்; சித்திரவதை உட்பட வீட்டுக் காவலில் வைக்கப்பட்டும் கூட தேசிய விடுதலைக்காக பெண்கள் கடுமையாக உழைப்பது அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது.



விடுதலைப்புலிகள் பெண்கள் பிரிவு



படிப்பகம்

www.padippakam.com

ஜான் கோவா மாகாணத்தைச் சேர்ந்த ட்ரையு ட்ரின் நுவாங் என்ற இளம் பெண் 'உ' என்ற வம்சத்தைச் சேர்ந்த நிலப்பிரபு வர்க்கத்தின் ஆட்சியை எதிர்த்து ஒரு போரையே தலைமையேற்று நடத்தினார். சுதந்திரத்தை மீண்டும் வெல்வேன் என்ற சபதத்துடன் தனது 21 வயதில் 30 போராட்டங்களை தலைமையேற்று நடத்தியிருந்தார்.

அதே போல் அல்ஜீரியத் தேசிய விடுதலைப் போரில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கெடுத்தனர். ஆயுதம் ஏந்தினர். அவ்வாறே ஈரான், பலஸ்தீனம், ஈராக், இலங்கை போன்ற நாடுகளில் நடைபெற்றுவரும் போர்களிலும் பெண்களின் பங்களிப்பு முக்கியமானது.

ஆனாலும், பெண்கள் என்ற ஒரே காரணத்திற்காக இந்தச் சமூகம் அவர்கள் மீது குற்றம் சுமத்துகிறது; கீழ்த்தரமாக பேசுகிறது. யார் மீது குற்றம் இழைக்கப்பட்டதோ அல்லது பாதிக்கப்பட்டார்களோ அவர்களே குற்றவாளிகளாக கருதப்படுவது சர்வசாதாரணம் ஆகி விடுகின்றது. இவையெல்லாம் ஆணாதிக்க வழி கலாசாரக் கட்டமைப்புள் வைத்து சாத்தியமாக்கப்படுகிறது.

போரில் பல சாதனைகளை படைத்த பெண்களின் வரலாறுகள் பல. ஆனாலும், பொதுவாக எத்தனையோ பெண் போராளிகளின் செயற்பாடுகள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில் நிலவும் வறட்டுக் கலாசாரத்தை பாதுகாக்கும் பதுமைகளாகவும் அந்தந்த விடுதலை இயக்கத்திற்குப் புதல்வர்களை அல்லது புதல்விகளை பெற்றுக்கொடுக்கும் தாய்மார்களாகவும் மாறிவிடுகிறார்கள். ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களுக்கு அவர்களது எதிர்காலம் குறித்து எத்தகைய சமூக உத்தரவாதமும் உருவாக்கப்பட்டு பேணப்படுவதில்லை. அமைப்பு சார்ந்த இறுதி சாதனை மட்டுமே வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது.

இதன் மூலம் பெண்களின் வகிபாத்திரம், போராட்டங்களில் பெண்களின் பொறுமையும் விடாதமுயற்சியும் கற்றுக்கொடுத்த பாடங்களில் இருந்து முழுமையான பயனை வருங்காலங்களில் பெற முடியாது போய்விடும்.

மேலும், பெண்களை இராணுவத்தில் அல்லது போராட்டத்தில் சேர்த்துப் பயிற்றுவித்தல், தாக்குதலில் பங்கெடுக்க அனுமதித்தல் போன்றவை எப்போதும் பெருமைக்குரிய விடயங்களாக கருதப்படும். இந்த ஆணாதிக்க சமூகத்தில் காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வாழ்ந்து வரும் பெண்கள், இராணுவ உடை அணிந்து களத்தில் எதிரிகளுடன் நேருக்குநேராக போரில் ஈடுபடுவதைத் காட்டி பெண்கள் முழுமையான விடுதலை அடைந்துவிட்டார்கள் எனக் கூறுவதும் நடந்தேறுகிறது. இதையே புலிகள் அமைப்பினரும் கைக்கொண்டனர். தேசிய விடுதலைப் போராட்டத்துடன் பெண்கள் தமது உரிமைகளுக்கான போராட்டத்தையும் இணைத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை அல்லது வழியேற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மாறாக பெண்கள் போராட்டத்தில் இணைந்துகொண்டதை இயக்கத் தலைமை தமது சாதனையின் அம்சமாக நிறுவ முற்பட்டது. இனவொடுக்கலுக்கு எதிரான போராட்டத்தில் தாம் ஆயுதத்தைக் கையிலெடுத்துக் களமாடுவது பெண்களின் கருத்து நிலையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது என்ற மாயைக்குள் போராளிப் பெண்கள் விடப்பட்டனர். பெண்கள் பற்றிய மனோபாவங்கள் பலவற்றை இந்தக் களமாடல் உடைத்தெறிந்தது உண்மை என்ற போதும், அது பெண்களின் சமூக அந்தஸ்தில் கூட மாற்றமெதையும் ஏற்படுத்தவில்லை.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் பெண்களின் அரசியல், அந்தஸ்து, அதிகாரம் என்ன?



ரோசா லக்சம்பர்க்

போராட்ட அமைப்புகளில் தீர்மானிக்கும் சக்திகளாக ஆண்களே இருந்தனர். இங்கு பெண்களுக்கான இடம் தவிர்க்கப்பட்டது. பெண்களுக்கு எதிரான ஆணாதிக்கம் அடிப்படையில் விடுதலை இயக்கங்களில் தொடர்ந்து நிலவி வருகின்றதை நாம் காணலாம்.

விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புகளில் இராணுவத்தின் பலத்தை அதிகரிப்பதற்கு பெண்கள் பயன்பட்டார்களே ஒழிய, பெண் விடுதலையிலும் சரி பால்வாத அடிப்படையிலும் சரி எந்த வித மாறுதல்களையும் இப்பெண்களினால் ஏற்படுத்த முடியவில்லை என்பது மிகக் கசப்பான உண்மையாகும்.

போர் முடிந்ததும் பெண்கள் இராணுவப் பணியிலும் சாதாரண நிலைக்கு தள்ளப்பட்டனர். இன்று அப்பெண்கள் சமூகத்தாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதுவே வியட்நாம் சீனா, நமீபியா, அல்ஜீரியா, மொசாம்பிகா, நிக்கரகுவா போன்ற நாடுகளிலும் இலங்கையிலும் நடைபெற்றுள்ளது. ஒரு சக ஜீவியாய் சமூகத்திற்காகப் போராடிய இந்தப் பெண்கள் மேற்சொன்ன நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

சமூகம் மீண்டும் அவர்களை தமது ஆண்நோக்கினுள் வீழ்த்துகிறது. பெண்களை உடல் உள ரீதியில் பாதிக்கும் இப்பிரச்சினையிலிருந்து அவர்கள் மீள்வதற்கு சமூக அமைப்புக்கள் முன்வரவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத் தேவைகளோடு மட்டும் குறுகிவிடாமல் சமூகத்தின் ஆணதிகாரக் கருத்தியலுக்கு எதிரான விடாப்பிடியான போராட்டங்களும் தேவை.

போர்க்களத்தில் பங்கு பற்றிய பெண்கள் தங்கள் அனுபவங்களையும்; இந்த அமைப்புகளுக்குள் செயற்பட்ட ஆணாதிக்கச் சிந்தனைகள், முறைமைகள் பற்றியும் முன்வந்து பேச வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த அனுபவங்கள் பேசப்பட வேண்டும் அவற்றிலிருந்து படிப்பனைகள் பெறப்பட வேண்டும்.



ஈராக் பெண் படை வீரர்கள்



படிப்பகம்

www.padippakam.com





# செ.டானியல் ஜீவா கவிதைகள்

**ஓவியம்: நெடுஞ்செழியன்**

**1. நான் கரையில் தனித்து விடப்பட்டவன்**

பனி கொட்டிக் கொண்டிருந்த
அதிகாலையில்
கொடுங் கனவோடு
கண் விழித்தேன்.

என்னைச் சுற்றி
பரவைக் கடலில் நிற்கும்
களங்கட்டி வலையில் கிடக்கும்
சூத்தப் பாம்பு போல்
வளைந்து சுருண்டு
நிகல்வாழ்வு



படிப்பகம்

www.padippakam.com

மறு கணம்
யாரோ என் பிடரியில்
தடவிய படி;
அது...?
அவள்தான் என்று
உணர்ந்தேன்.
காற்றில் அவள் கலந்திருந்தது
அப்போதுதான்
எனக்கு வெளிச்சது.

ஒரு பைத்தியம் பிடித்தலையும்
நிலவைப் போல்
சோம்பல் முறித்து
காமமும் கழிவிரக்கமும் கலந்து
என் உடல் முழுவதும் ஊர்ந்தாள்.

நிழல் அசைவது போல்
நிமிர்ந்து கிடந்தது வெளி
இருள் உடைந்து
சிதறிய துகள்களில்
அவள் கண்ணீர்.

என் உயிரைப் பிடுங்கியது
அவள் குரல்.
என் வலி மறுபடியும்
விழித்தது

இப்போதும் வழிந்தோடிய
நோவில்;
அவள் எனக்காக
சேர்த்து வைத்த
கனிவும் களிப்பும்
சிதறி ஓடியது

அவள் நதியா...?
நான் கரையில்
தனித்து விடப்பட்டவளா...?
அவளை நதியென்று சொல்லலாமா...?
ஏன் சொல்லக் கூடாது...
வெறும் உடலுக்குள்
எத்தனை உணர்வுகளின்
ஊற்றுக் கண்ணை
அவள் திறந்து வைத்தாள்.

**2. அறியாத்தனம்**

சொல்லு
வலியூறச் சொல்.
உன் சொல்லுக்குள் ஆயிரம்
அறியாத்தனம்

அப்படி பேசுவதிலும்
வலியில்லை என்கிறாய்
எப்படி உன்னால்
சொல்ல முடிகிறது...?
உன் வாழ்வுக்குள் எப்படி
நான் கண்டு கொள்ளப்படவில்லை

நம் முதல் சந்திப்பும்
அதன் தொடர்ச்சியும்
இல்லாமல் போக
நம் உறவில்
மெல்ல மெல்ல
கூனல் விழத் தொடங்கியது

விழி உயர்த்தி
விரல் நீட்டி நீ பேசும் போதே
நீ அந்நியன் ஆகியிருப்பாய்
ஆயினும் உன்அவமதிப்பில்
எந்த நியாயமுமில்லை

விழித்திருப்பவன் மீது
எரி குண்டு வீசுபவன் போல்
எப்படி மாறினாய்...?

எனக்குப் பிடித்ததை
நீ தரவில்லை
ஆனால் உனக்குப் பிடித்ததை
நான் தரவும்
நீ ஏற்றுக்கொள்ள மறுத்தாய்

கண்ணீரைக் குழைத்து
உனக்கு அனுப்பி வைக்கிறேன்...
சொட்டுக் கண்ணீரையாவது
சேர்த்து வை;
அதில் என் முகம் வீழ்ந்து கிடக்கும்

என் நினைவு வரும் போதெல்லாம்
தொட்டுணர்ந்து பார்
அது உப்பு நீராய் இருக்காது
மாறாக இரத்தமாயிருக்கும்

இழந்த துயரத்திலும்
இருக்கிற துயரத்திலும்
கண்ணீரோடு...
வெறுப்புணர்வே மிதியாய்

வானத் தோரணத்தையும்
வண்டு குந்தும் நிலத்தையும்
வெள்ளி தெறிக்கும்
கடல் நீரையையும்
விட்டுவந்த துயரை மீறியது
உன் நிராகரிப்பு
ஆயினும்
ஆழ் கடல் போக மறுக்கும்
சாதளையைப் போல்
இருக்கிறது
உன் நினைப்பு...



படிப்பகம்

www.padippakam.com



# தாயிடம் மகன் கேட்க, சொல்லத் தவறிய காரியங்கள்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**

அந்த மூன்று வார்த்தைகளுக்காக கொஞ்ச நாட்களாகக் காத்துக்கொண்டிருந்தேன். அதிக வெயிலும் குளிருமில்லாத ஒரு ஆங்கில மாசி மாத பின் மதிய நேரத்தில் தொலைபேசி மணியடித்தது. எடுத்தேன். ஆறாயிரம் மைகளுக்கப்பால் இருந்து எதிர்பார்த்த அந்த வார்த்தைகள் என் காதில் வந்து விழுந்தன: 'உங்கள் அம்மா போய்விட்டா'. இதைச் சொன்னவர் அம்மாவைப் பராமரித்த தாதி சாந்தா. இப்படியான வருத்தமான செய்தியைச் சொல்லுவது சாந்தாவுக்குப் புதிதல்ல. பல தடைவைகள் சூழ்நிலைக்குத் தகுந்தமாதிரி உங்கள் அப்பா/கணவர்/மனைவி என்று எத்தனையோ பேர்களுக்குத் துயரமூட்டும் தகவலைச் சொல்லியிருப்பார். அப்படி அடிக்கடி துன்புமிகு காரியங்களைத் தெரிவிப்பதினால் வரும் களைப்பு அவரின் குரலில் இருக்கவில்லை. கருசினையும் கவலையும் இருந்ததாக எனக்குப் பட்டது. அம்மாக்கு என்ன வயது என்று என்னிடம் கேட்டவர்களுக்கு அம்மாவுக்கும் கருணாநிதிக்கும் ஒரே வயது என்னு சொல்லுவேன். இருவரும் ஒரே ஆண்டில் தான் பிறந்தார்கள். இன்று கருணாநிதி இருக்கிறார். ஆனால் அம்மா இல்லை.

ஆழிப் பேரலைகள், சூறாவளிகள், மராடைப்புகள், தெரு விபத்துகள், ஏன் மஞ்சல்காமாலை கூட மற்றவர்களுத்தான் நடக்கும் காரியங்கள் என்றுதான் நாங்கள் நினைப்பதுண்டு. தனக்கு எந்த நேரத்திலும் முடிவு வரலாம் என்று தெறிந்திருந்தும் "Death is very likely to be the single best invention of life because death is life's change agent" என்று ஸ்டிவ் ஜாப்ஸ் அவருடைய கடைசியாக அற்றிய பல்கலைக்கழக உரை ஒன்றில் கூறியது போல் சாவை அறிவுத்திறம் சார்ந்த தத்துவமாகப் புரிந்து கொள்ளலாம். அல்லது நடந்து முடிந்த தன்னுடைய மனைவியின் மரணத்தை நினைத்துப் பார்த்து கவிஞர் வாலி போல் 'ஒரு காலைப் பொழுதில் என் மனைவி ஆக்கையை உதறினாள்' என்று அணிவளஞ்செறிந்த இலக்கியார்த்தமாக விளக்கம் கொடுக்கலாம். ஆனால் இறப்புச் செய்தியைக் கேட்கும் போது முக்கியமாக மரித்தவர் நமக்குப் பிரியமானவராயிருந்தால் அந்த செய்தி நம்மை உலுப்பியே விடுகிறது. என்னதான் தயாராக இருந்தாலும் வாழ்வின் நிச்சயங்களில் ஒன்றான மரணம் சம்பவிக்கும்போது ஒரு இருள் சூழ்ந்து கொள்கிறது. செய்தி கேட்டதும் நானும் கொஞ்சம் தளர்ந்து போனேன்.

அம்மாவைக் கடைசியாகப் பார்த்த போது அவர் கஷ்டப்படுவது நன்றாகவே தெரிந்தது. தனியாக, தானாகவே எல்லாவற்றையும் செய்த ஒரு சுதந்திர மனுஷிக்கு இப்பொது படுக்கையிலிருந்து எழும்புவதுகூட ஒருவரின் துணை வேண்டியிருந்ததைப் பார்க்க எனக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் கஷ்டமாக இருந்தது. இந்த வேதனைக்கு மரணந்தான் விமோசனம் என்று நினைத்தோம். இப்போது திரும்பி யோசிக்கும்போது நாம் வேண்டிய விடுதலை அம்மாவுக்கா அல்லது அவரின் நிலையைப் பார்க்க சகிக்கமுடியாத எங்களுக்கா என்று கேட்கத்தோன்றுகிறது

அம்மா இறந்த அன்று நானும் அம்மாவும் எத்தனை ஆண்டுகள் ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்ந்தோம் என்று நினைத்துப் பார்த்தேன். எண்ணிப் பார்த்தபொழுது ஏழு ஆண்டுகள்தான். ஆனால் இந்த ஏழு ஆண்டுகளும் தொடர்ச்சியானவை அல்ல. விட்டுவிட்டுதான் ஒன்றாக இருந்தோம். மிகுதி நாட்கள் விடுதி பாடசாலையிலும், வேலை நிமித்தமாக வெளிநாட்டில்தான் கழிந்தன. என்னுடன் இருந்தபோது நான் வாங்கிய புத்தகங்கள் எல்லாம் அம்மா வாசிப்பார். அவருடைய விமர்சன திறனை மூன்று வார்த்தைகளுக்குள் அடக்கி விடலாம்: 'பரவாயில்லை', 'சரியில்லை'. 'விளங்கவில்லை'. விளங்கவில்லை என்று சொன்ன எழுத்தாளர்கள்: மௌனி, ராமாமிர்தம். அம்மா மட்டுமல்ல எனக்கே இவர்களை உணருந்திறம் இல்லை.

அம்மாவின் இறுதி நாட்களில் Battle Hymn of the Tiger Mother என்ற Amy Chua எழுதிய புத்தகம் மிக தீவிரமாக அலசப்பட்டது. சர்ச்சையை எற்படுத்தியிருந்தது. தலைப்பைப் பார்த்து ஏதோ ஈழப் புலிகள் சம்பத்தப்பட்ட நூல் என்று நினைக்க வேண்டாம். மேற்கத்திய பெற்றோர் பிள்ளைகளை மிகச் செல்லமாக வளர்க்கிறார்கள், தண்டிப்பதில்லை. ஆகையினால்தான் அவர்கள் படிப்பில் முன்னே வருதில்லை. ஆனால் சீனத் தாய்மார் தங்கள் குழந்தைகளை மிகக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கிறார்கள். இந்த ஒழுங்குமுறையான வளர்ப்புதான் அவர்களை கெட்டித்தனமாக படிக்கவைக்கிறது என்று ஆமி சுவா இந்த நூலில் கூறியிருந்தார். அதுமட்டுமல்ல அவருடைய இரண்டு மகள்களுக்கும் படிக்கச் சொல்லி அவர் கொடுத்த தண்டனைகளையும் பட்டியல் படித்தியிருந்தார். ஆமி சுவா விவரித்த கடுகடுப்பான ஆசிய அம்மாவை என் அம்மாவில் நான் பார்க்கவில்லை. அம்மா எனக்கு நிறையச் சுதந்திரம் கொடுத்திருந்தார். நான் கல்லூரியில் படித்த நாட்களில் மற்ற மாணவர்களைப்போல் அதிகம் பிரகாசிக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் நான் மாணவனாக இருந்த நாட்களில் கல்லூரிகள் என்றால் இரண்டே இரண்டு கல்லூரிகள் தான். இந்த இரு கல்லூரிகளில் படித்தவர்கள் மற்ற கல்லூரிகளைக் கணக்கில் எடுப்பதில்லை. நான் சொல்லப்போகும் அந்த இரண்டு கல்லூரிகளின் பெயர்களைப் படித்து அக் கல்லூரிகள் பக்கமே தலை காட்டாதவர்கள் யாழ்ப்பாணத் தமிழருக்கே உரிதான பிரத்தியோகமான தூஷண வார்த்தைகளால் என்னை ஏசப்போகிறார்கள். ஒன்று பரிசுத்த யோவான் கல்லூரி மற்றது ஹாட்லி கல்லூரி. நான் ஹாட்லியில் படித்தேன். இந்தக் கல்லூரி கணிதத்திற்குப் பெயர் போனது. வடமராட்சி பனங்கொட்டைக்கும் கள்ளுக்கும் என்ன தெய்வீககடாட்சம் இருக்கிறதோ தெரியாது இங்கே படிப்பவர்கள் ஒவ்வொருத்தனும் கணித மேதை ராமானுஜத்தின் மரபணுவுடன் பிறந்தவர்கள். ஒரே பாடத்திட்டத்தின் கீழ் விஞ்ஞானமும் மானிடவியல் பாடங்களைக் கலந்து படித்துக் கொண்டிருந்த எங்களை வெள்ளை ஆடுகளையும் கறுத்த



படிப்பகம்

www.padippakam.com

ஆடுகளையும் பிரிந்தெடுக்கும் பரீட்சை ஒன்றை ஒரு கட்டத்தில் கல்லூரி முதல்வர் பூரணம்பிள்ளை நடத்துவார். பருத்தித் துறையில் அந்த நாட்களில் பிரபல ஆளுமை களுக்குச் சிலைகள் வைப்பது மிக குறைவு. அப்படி சிலை எடுக்கும் பழக்கமிருந்தால் பூரணம்பிள்ளைக்கு வடமராட்சி மக்கள் கட்டாயம் சிலை எடுத்திருப்பார்கள்.. அப்படி அந்த உயரத்தில் இருந்தார். அவர் வைத்த தேர்வு பரீட்சையில் நான் கள்ள ஆடாக கலை துறைக்குத் தள்ளப்பட்டேன். ஹாட்லி மாணவர்களிடையே இந்த செயல் ஆதாமையும் ஏவாளையும் ஏதோன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டதுக்குச் சமமாக கருதப்பட்டது. இது வாழ்நாள் முழுதும் ஒட்டியிருக்கும் ஒரு பெரிய கறை. எனக்கு நேர்ந்த இந்த கல்விசார் அவமானத்தை அம்மா பெரிதாக எடுக்க வில்லை. உனக்குச் சரி என்றால் எனக்குச் சரி மகன் என்று சொல்லிவிட்டா. குறிக் கணக்கியலுக்குப் பதிலாக கும்பகர்ணன் வதைபடலம் படித்தேன். கணிதவியல் பக்கம் போயிருந்தால் இன்றைக்கு வாளைச்சேனையில் வங்கி அதிகாரியாக வந்திருப்பேன் என்று நினைக்கிறேன்.

அம்மாவுக்கும் எனக்கும் ஒரு விஷயத்தில் தான் ஒரு சின்ன மனத்தாங்கல் வந்தது. ஒரு தாயுக்கும் மகனுக்கும் மனஸ்தாபம் வந்தால் ஒரு காரணந்தான் இருக்கும். நான் ஒரு பெண்ணை விரும்பியிருந்தேன். அம்மாவுக்கு அது பிடிக்கவில்லை. பெண்ணின் பெற்றொருக்கும் பிடிக்கவில்லை. இந்த வில்லங்கமான கட்டங்களிலிருந்து விடுபட யாழ்ப்பாணத்தில் மூன்று வழிகள் இருந்தன. ஒன்று பெண்ணுக்குக் கட்டாயத் திருமணம் செய்வது. இரண்டு பெண் கன்னிகா ஸ்திரியாவது. மூன்றாவது வசதி உள்ளவர் களாயிருந்தால் கண்ணுக்குத் தெரியாத ஊருக்குப் பெண்ணை படிக்க அனுப்பி விடுவது. மூன்றாவது வழியைத்தான் பெண்ணின் பெற்றோர் செய்தனர். அவரைக் கனடாவுக்கு அனுப்பிவிட்டார்கள். கொடி காமத்திலிருந்து கொழும்புக்குப் போவதே பெரும் பயணமாக கருதிய அந்த நாட்களில் கனடா புலவர் பாஷையில் கண்ணுக்குத் தெரியாத கானகம். கருவாடும், பினாட்டும் வாங்கக்கூடிய மங்கலான யாழ்ப்பாணமாக கனடா மாற இன்னும் பதினைந்து வருடங் கள் காத்திருக்கவேண்டியிருந்தது.

ஆப்பிரிக்கர்களிடையே ஒரு சொல் வழக்கு உண்டு. ஒரு முதியவர் இறந்து விட்டால் ஒரு நூலகமே அவருடன் புதைக்கப்பட்டுவிடுகிறது என்று. ஏனெனில் விடுபட்டுப்போன, மறந்த, மறைக்கப்பட்ட அந்த கிராமத்தின் சரித்திரத்தையும், கதை களையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள் ளலாம். எனக்கு அம்மாவிடம் கொஞ்சம் கேள்விகள் கேட்கவேண்டும் என்று நிறைய நாட்களாக மனதில் அவற்றைக் குறித்து வைத்திருந்தேன். இன்றைக்கு நாளைக்கு என்று தள்ளிப்போட்டுக்கொண்டதுக்குக் காரணம் எனக்கே உள்ளியல்பான சோம்பேறித் தனமட்டுமல்ல அம்மா இன்னும் உயிருடன் தானே இருக்கப்போகிறார் என்ற மந்த மான நம்பிக்கைதான். அம்மாவை நான் கடைசியாகப் பார்த்தபோது அவர் என் கேள்விகளுக்கு விடை சொல்லும் நிலையில் இல்லை. அம்மாவுடைய திருமண வாழ்வு சரியாக அமையவில்லை. சைவ தீட்சை பெற்ற ஒரு வேளாளப் பெண் அதே சாதி கிறிஸ்தவரை மணமுடித்திருந்தார். இது பேசிமுடித்த விவாகம்.. அவருக்கு வாய்த்த கணவர் ஒரு நல்ல குடிகாரர். மூன்று பிள்ளைகளையும் எக்கசக்கமான கடனை யும் வைத்துவிட்டுப் போய்விட்டார். கொஞ்சம் வசதியான குடும்பத்தில் வளர்த்த அம்மா அவமானத்தைத் தாங்க முடியாமல் எங்களையும் கூட்டிக் கொண்டு யாருமே தெரியாத இன்னுமொரு ஊருக்கும் வந்துவிட்டாள். அம்மாவும் அவருடைய அம்மாவுந்தான் தங்களுடைய சொந்த முயற்சியால் எங்களை ஆளாக்கினார்கள். இந்த இரண்டு பெண்களுக்கும் தைரியம் எங்கிருந்து வந்தது? இவர்களுக்கு உந்துகை தந்தது யார்? பெண்களாக இவர்களுக்கு நேர்ந்த சிக்கல்கள் என்ன? இவர்களுடைய முன்னுதாரணங்கள் யார்? இள வயதில் ஏற்பட்ட இழப்பை அம்மா எவ்வாறு சமாளித்துக் கொண்டார்? எந்த மனித செயல்பாட்டுக்கும் பின்னாலும் இருக்கும் கருத்தியல், அறிவியல் விதிகளைத் துருவித் துருவி மாணவர்களுக்குக் கற்பிக்கும் எனக்கு இந்த இரண்டு பெண்களும் எதனால் உந்தப்பட்டார்கள், இவர்களின் ஆக்க சக்தி எது என்பது உறுத்திக்கொண்டேயிருந்தது. ஒரு நாளைக்கு இந்த கேள்விகளை எல்லாம் அவரிடம் கேட்கவேண்டும் என்றிருந்தேன். இனிமேல் அது நடக்காது. விடை கிடைக்காததே எனக்கு அம்மாமீது மேலும் மரியாதையையும், வணக்கத்தையும் அதிகரித்திருக்கிறது.




அம்மாவின் மரண சடங்குக்குப் போகமுடியாத நிலையில் நான் இருந்தேன். அவைகளை என் சகோதரியும் அவருடைய கணவரும் கவனித்துக் கொண்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அம்மா இறந்த அன்று இரவு நான் அம்மா வுடன் சேர்ந்து செய்த காரியங்களில் ஒன்றைச் செய்தேன். அம்மாவுக்கு சினிமா பிடிக்கும். நான் அவரும் பல படங்கள் யாழ்ப்பாண திரைஅரங்குகளில் பார்த் திருக்கிறோம். பெரும்பாலும் இரவு இரண் டாவது காட்சியாகத்தான் இருக்கும். படம் முடிந்ததும் தனியாகவேதான் நடந்து மணிக்கூடு கோபுர தெருவிற்குப் பக்கத்திலிருந்த வீட்டுக்கு வந்திருக்கிறோம். போக்குவரத்துத் தடங்கள் செய்யும், சுற்றுப்புறத் தூய்மைக் கெடுக்கும் மூன்று சக்கரவண்டிகள் இன்னும் அறிமுகமாகவில்லை. அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் இரவிலும் சரி, பகலிலும் சரி ஒரு தொந்தரவும் இல்லாமல் நடமாடலாம். அன்றைய யாழ்ப்பாணத்தில் சிங்கங்கொடிகளும் இல்லை. புலிகளும் இல்லை. எங்களுக்கு ஆக்கினை தந்தது எலிகளும், நுளம்புகளும், கரப்பத்தான் பூச்சிகளுந்தான். இந்த பிராணிகள் குளிர் ஊட்டப்படாத அந்த திரையரங்குகளை ஆக்கிரமித்திருந்தன.. நானும் அம்மாவும் பார்த்த படங்களில் ஒன்று 'காத்தவராயன்'. இதன் லக்கமாக்கப்பட்ட ஒளித்தோற்ற வட்டு என்னிடம் இருந்து. போட்டுப் பார்த்தேன். சிவாஜியும் சாவித்திரியும் நடித்த படம். நான் சொல்லும் விஷயத்துக்கு இந்த இருவர்களும் முக்கியமல்ல. இந்த படத்தில் கண்ணாம்பாவும் இருக்கிறார். அந்த நாட்களில் சினிமா அம்மா என்றால் கண்ணாம்பாதான். வழமைபோல் கடைசி காட்சியில் கண்கலங்கி, காத்தவராயனின் தாயாக 'சித்திரவதைப்படும் என் மகனுக்காக சிந்தை இரங்கி மன்னியுங்கள் பிரபு' என்று யாரோ எழுதிய வசனங்களை உயர்ந்த குரலில் பொதிந்து தள்ளி உருகி நின்றார். என்னையும் உருகவைத்தார்.



இந்த திரைப்பட அம்மாக்கள் செய்த அநியாயமான காரியம் மூன்றுவிதமான அம்மாக்களை உருவாக்கியது. மகன், கணவனுக்காக உருகி உருகி தியாகம் செய்யும் அம்மா, அல்லது ஊரின் அக்கிரமங் களை எதிர்த்து தீப்பொறிக்க அடுக்கு மொழி வசனங்கள் அள்ளி எறியும் அம்மா அல்லது மருமகளை ஆக்கினைப் படுத்தும் அம்மா. உங்களுக்கே தெரியும் இந்த மாதிரி அம்மாக்கள் திரையில்தான் முடியும். நாம் தினமும் பார்க்கும் அம்மாக்கள் இப்படி இருப்பதில்லை. நிஜ அம்மாக்களுக்கு இந்த திரைத் தாய்கள் ஆதர்சங்கள் இல்லை. நாம் தினமும் பார்க்கும் அம்மாக்கள் இரண்டு விதமானவர்கள். வாழ்க்கை முன் நிறுத்துவைகளை சிரமமாகப் பார்ப்பவர்கள் அல்லது சிரத்தையுடன் எதிர் நோக்குகிறவர்கள்.. முன்னையவர்கள் வாழ்க்கையை ஒரு பாராங்கல் போல் ஒரு சுமையாகக் கருதுகிறவர்கள். பின்னை யவர்கள் சிரமங்களை நேர்த்தியாகவும், வாஞ்சையுடனும், பொறுப்புடனும், கருணையுடனும் செயல்படுத்துகிறவர்கள். ஒருவிதத்தில் இந்த இரு வகைப்பாடுகள் அம்மாக்களுக்கு மட்டும் அல்ல எல்லா ஆட்களுக்குமே பொருந்தும். பார்ப்பதற்கு அம்மா உயரத்தில் கண்ணாம்பா மாதிரி இருப்பார். அந்த தெலுங்கு நடிகை தோன்றும் கதாபாத்திரங்கள் போல் உதவாக்கரை வீராதிக்க வசனங்கள் பேசவில்லை. அவருக்கு நேர்ந்த அவமதிப்பு, இழப்புகள் பற்றி 'எது அநீதி', 'எது அதர்மம்', 'எது அக்கிரமம்' என்று அந்த காத்தவராயனின் தாய் போல் இரவல் வசனம் பேசி கண் ணில் நீர் பெருகி உணர்ச்சி வசமாக கத்த வில்லை. அதே போல் அம்மா அதீத செயல் கள் செய்யவில்லை. அம்மா தொற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை. கரும்பலகை அளவிலிருந்த கணினியை கைக்கடக்கமாக தீக்குச்சி பெட்டி போன்று கடுகத்தனையாக்கவிலை அவர் சாதித்தது எல்லாம் சாதாரண காரியங் களை இயல்பான அமைதியுடனும், கெட்டித்தனத்துடனும், ஒருவித பலனையும் எதிர்பார்க்காமல் செய்ததுதான். ஒற்றை பெற்றோர் (single parent) என்ன பதம் சமூகவியல் சொல்லாடலில் புகுத்தப்பட்ட முன்னமே தனியொரு தாயாக, சொந்த பலத்தினால் தன்னுடைய பிள்ளைகளை வளர்த்து பெரிவர்கள் ஆக்கினார் அது பெரிய காரியமல்லவா? சாதாரணமான கிரிகைகளைச் சரிவரச் செய்பவர்களைக் நாம் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

இப்படி எந்தவிதமான கைம்மாறுகளையும் எதிர்பாராமல் செயல்படும் அம்மாக்கள் நிறைய இருக்கிறார்கள். இவர்களுக் எல்லாம் நாங்கள் பகிரங்கமாக எங்கள் வணக்கத்தையும் வாழ்த்துதல்களையும் வார்த்தைகளால் தெரிவிப்பதில்லை. இந்த ஆசாரத்தை எங்கள் தமிழ் கலாச்சாரம் பழக்கப்படுத்தவில்லை. மேற்கத்தியர்போல் எதுக்கெடுத்தாலும், ஏன் கீழே விழுந்த தாளை எடுத்துக் கொடுத்தாலே நூறு தடவை நன்றி என்று சொல்லும் வழக்கம் தமிழர்களுக்கு இயல்பாக வருவதில்லை. கனவனாக, மகனாக, மகளாக, மருமகளாக, மருமகனான எங்கள் தாய்களுக்கு வாய் வழியாக வார்த்தைகளினால் நன்றி கூறுவது மிகக் குறைவு. நல்லெண்ணங்களை எங்கள் தேக மொழியினாலும், கண் பார்வையாலும், தொட்டுணர்வுகளாலும் சொல்லிவிடுகிறொம். நான் கடைசியாக அம்மாவிடமிருந்து பிரிவிடை பெற்றபோது இதுவரை எங்கள் இருவருக்குமிடையே நடக்காத ஒரு காரியம் நடந்தது. நான் எப்போதுமே செய்யாத ஒன்றைச் செய்தேன். படுக்கையில் இருந்த அம்மாவை குனிந்து முத்தம் கொடுத்தேன். அந்த பலவீனத்திலும் தூக்கமுடியாத கைகளைத் தூக்கி அவர் என்னை இறுக்கப் பிடித்துக் கொண்டார். பிறகு ஒவ்வொரு தடவையும் அவரிடம் இருந்து பிரியும்போது சொல்லும் வார்த்தைகளைச் சொன்னேன்: 'அப்ப சரி அம்மா.' அவரும் எப்போதும் சொல்லுவது போல் 'சரி மகன்' என்றார். இந்த கவித்துவமில்லாத வார்த்தைகள்தான் கடைசியாக அம்மாவும் நானும் நேருக்கு நேர் பேசிக்கொண்டது. பிறகு யோசித்த போது எவ்வளவோ செய்த அம்மாவுக்கு உபசார வார்த்தைகள் சொல்லியிருக்கலாமே என்று நினைத்தேன். அப்படி நான் என் உபகாரத்தை வார்த்தைசார் வழியாகச் சொல்லியிருந்தாலும் அவர் என்ன பதில் அளித்திருப்பார் என்றும் நினைத்துப் பார்தேன். நான் உத்தேசித்த இந்த வார்த்தைகளைப் படிக்கும் பெண்ணிய வாதிகள் கொஞ்சம் சீறுவார்கள். பெண் உடைமைகள் என்ன என்று தெரியாமலேயே அந்த கருத்துக்கோளின் முக்கிய தூணான தற்சார்பு அம்மாவிடம் நிறைய இருந்தது. அந்த புதிய ஏற்பாட்டு உவமையில் வரும் வேலையாட்கள் சொன்னதைத்தான் அம்மாவும் சொல்லியிருப்பார். இதை என் அம்மா மட்டும் அல்ல கருசினையுள்ள பல அம்மாக்களும் சொல்லுவார்கள். வேலையாட்கள் சொன்ன அந்த வார்த்தைகள்: 'நாங்கள் பிரயோசனமற்ற ஊழியக்காரர், செய்ய கடமைப்பட்டிருந்ததைத்தான் செய்தோம்'.



படிப்பகம்

www.padippakam.com

அனுபவம்

# எங்கள் வீட்டுப் புளியமரம்

சிறீஸ்கந்தன்

நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார்: "அடையாளம் என்றால் என்ன?"

பெரும் மானிட அழிவிலிருந்து ஒற்றுமையாக உயிர்த்தெழுந்து நமக்கென ஒரு நாட்டை உருவாக்கி, தம் மொழியைப் பாதுகாத்து, இன்று உலகப் பொருளாதாரத்தையே தமது கையில் வைத்திருக்கின்ற யூத இனத்தைச் சேர்ந்த ஒருவன் பெருமைப்பட்டுக்கொள்ள எது காரணமோ, அதுதான் அடையாளம் என்றேன்.

அவருக்குச் சரியாக விளங்கவில்லை.

வீட்டில் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண்டு பிள்ளைகளுக்கும் தமிழ் விளங்கும், ஆனால் பேச வராது என்று பெருமையாகச் சொல்பருக்கு நான் சொன்னது விளங்கச் சாத்தியமில்லைதான்.

"நாங்கள் எங்கள் அடையாளத்தை இழக்கக் கூடாது. அடையாளத்தை இழத்தல் மிகவும் வேதனையானது" என்று முடித்தேன்.

***

ஊரில் எங்கள் விளவிக்குள் ஏறத்தாழ எல்லா மரங்களும் இருந்தன. மா, வேம்பு, இலுப்பை, பனை, தென்னை, விளாத்தி, மற்றும் எமது கிணற்றைச் சுற்றி வாழை, பப்பாளி, கமுகு, செவ்விளநீர், எலுமிச்சை போன்ற மரங்களும் மேலும் முருங்கை, அனினமுன்னா என்றும் பிறகு அம்மா நட்ட பூங்கனியூகள் என்று வளைவு சோலையாக இருந்தது.

கண்டாக்கர் பரம்பரையால் அம்மாவுக்குச் சீதனமாக வழங்கப்பட்ட காணி செழிப்பான பூமி. எங்கள் மாமரம் ஒரு நாளும் காய்த்ததில்லை. மாம்பழமும் பலாப்பழமும் நாங்கள் வாங்கித் தான் சாப்பிட்டோம்.

இலுப்பை மாசியில் பூக்கும். சுற்று வட்டாரம் முழுவதும் இலுப்பம்பூ வாசம் கமகமக்கும். இலுப்பம் கொட்டைகளை எண்ணை ஆக்குவதற்கும் அரப்பு செய்வதற்குமென பொலுக்குச் செல்வார்கள். கோயில் வாகனம் செய்வதற்காக ஒரு ஆச்சாரியார் இலுப்பை மரத்தை விலைக்கு வாங்கினார்.

நாங்களை ஆனந்தமாக அமர்ந்து காற்று வாங்கும் வேப்ப மரம் தங்கச்சியின் வீட்டுக் கதவுகளாகவும், சட்டங்களாகவும் மாறின.

எங்களுக்கு ஒரு ஆச்சி இருந்தா. விநாயகம் ஆச்சி. எமது அப்பாவின் அம்மா, மார்புச் சட்டை அணியமாட்டா, நல்ல வடிவானவை. ஒரு நாள் எங்கள் கமுகு வெட்டி, இரண்டாகப் பிளந்து, பாடை செய்து ஆச்சியை அதில் படுக்க வைத்து, வேலியைப் பிரித்துக் கொண்டு தூக்கிப் போனார்கள். அப்போது எனக்குச் சின்ன வயசு.

செவ்விளநீர் மரம் குலை குலையாகக் காய்க்கும். அம்மன் வருத்தம் கோயில் திருவிழா என்று வந்து வெட்டிச் செல்வார்கள். நாங்கள் இளநீர் குடிப்பதற்கு ஒருநாளும் சந்தர்ப்பம் வரவில்லை.

நல்லதம்பி தினமும் காலையும் மாலையும் வந்து பனையில் கள்ளு சீவுவார். அப்பா கொழும்பிலிருந்து வரும் நாட்களில் அவருக்கு 2 போத்தல் கிடைக்கும். நாங் கள் எவ்வளவு கெஞ்சிக் கேட்டாலும் நல்லதம்பி தரமாட்டார். அக்கா தனது இரண்டாவது வீட்டைக் கட்டும் போது அந்த பனைமரத்தை தளத்துவிட்டா.

விளாத்தி மரத்தால் எங்களுக்கும் பின் வீட்டு சந்திரனுக்கும் அப்பவும் சண்டை தான். இரவோடு இரவாக வந்து எல்லாப் பழங்களையும் பொறுக்கி விடுவான். வயசு வந்து விளாந்து மரம் பட்டுப் போயிற்று.

இப்படி ஒவ்வொரு மரங்களுக்கும் கதைகள் இருந்தன. ஆனால் இவை எல்லா மரங்களுக்கும் மேலாக பேர்போன ஒரு மரம் இருந்தது. அதுதான் எங்கள் வீட்டுப் புளிய மரம்.

நல்லா விசாரித்துக் கிளைகளை பரப்பி எங்கள் வளைவின் ஒரு பரப்பை அரசோச்சி கம்பீரமாக நின்றது. நல்ல ருசியான புளியமரம்.

எங்கள் வீடு கண்டி வீதியையும் நாவலர் வீதியையும் இணைக்கும் நொத்தாரிஸ் ஒழுங்கையில் இருந்தது. கண்டி வீதியில் புங்கம்குளம் சந்திக்கு அருகே எங்கள் ஒழுங்கை ஆரம்பிக்கும்.

பெரும்பாலும் எல்லோராலும் புளி வீடு, புளிவளவு, புளிய மரத்தடி என்றே எங்கள் வீடும் வளவும் அழைக்கப்பட்டது.

இவ்வளவு ஏன், எங்கள் ஒழுங்கையைப் புளி ஒழுங்கை என்றே அழைத்தார்கள். நொத்தாரிஸ் ஒழுங்கை என்பது பலருக்குத் தெரியாமல் இருந்தது.

இருந்த எல்லா மரங்களுக்கும் இடையே இருந்த வெளியை மைதானமாக்கி கிழிக்கார், கால்பந்து, கிளித்தட்டு, கிட்டியடி என்று நாங்கள் விளையாடினோம். எங்கள் அணிக்குப் பெயர் புரியடி டீம். ஊரில் எல்லா அணிகளும் பயப்படும்படியாக பலமான ஒரு டீமாக இருந்தோம். எங்களில் சிலர் கல்லூரி அணிகளிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டோம்.

நாங்கள் ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தினோம். எங்கள் புளியடி கழக ஓட்டவீரரான கதிர்காமநாதனை பின்னாளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரசித்து பெற்ற மரதனோட்ட வீரராகத் திகழ்ந்தார்.

நாங்களை விளையாடிய பின்னர் தினமும் அந்தப் புளிய மரத்தின் அடியில் விரிந்து கிடந்த வேர்ப்பகுதியில் அமர்ந்து அரட்டை அடிப்போம். சில வேர்களில் நிலத்தை தொடுமாழ் போலிருந்த ஒரு பெரிய கிளையில் எல்லோரும் ஏறி அமர்ந்து கொண்டு ஊஞ்சல் போல் ஆடிக் கொண்டிருப்போம்.

அந்த விசாலமான புளியமரம் இரு வருடங்களுக்கு ஒருமுறை மட்டுமே காய்த்தது. காய்க்கும் காலங்களில் சிறிய காற்று அடித்தாலே கொல கொலவென்று பழங்கள் கீழே விழும். அந்த வருஷம் அம்மாவுக்குக் கொண்டாட்டம் தான். சாக்குச் சாக்காக புளியம் பழங்களை விற்பா. கோது உடைந்தும் விற்பனை நடக்கும். நல்ல வரும்படி.

புளிய மரத்தின் கிளைகள் வேலியைக் கடந்து ஒழுங்கையிலும் கிளைகள் பரப்பி இருந்ததால் ஏனைய வீட்டாருக்கும் கொண்டாட்டமாக இருந்தது.

அந்தப் புளியமரம் எங்களை பரம்பரையின் சாட்சியாகப் பல தசாப்தங்களையும் கடந்து நிமிர்ந்து நின்றிருந்தது.

தங்கச்சியின் வீட்டு அத்திவாரத்துக்கு நல்லதல்ல என்று எங்களை நினைவுகளைச் சுமந்த அந்தப் புளியமரத்தை விறகுக்காக வேரோடு வெட்டிச் சாய்த்தார்கள்.

***

அண்மையில் ஒருவர் எனது வீடு ஊரில் எங்கு இருக்கிறது என்று கேட்டார்.

"அந்தப் புங்கன்முளச் சந்திக்குப் பக்கத்தால் போகும் ஒழுங்கைக்குள் இருக்கிற புளி வளவுதான்" என்றேன்.

அவருக்கு வீடு பிடிபடவில்லை.

"ஒழுங்கியின் முதல் திருப்பத்திலை வரும் வீடு" என்று விளங்கப்படுத்தினேன்.

அவர் சற்று யோசித்து விட்டு "அப்ப அந்தச் 'சாராய' கனகர் வீட்டுக்கு முன் வீடோ" என்று திருப்பிக் கேட்டார்.

எனக்கும் பதில் சொல்ல வார்த்தைகள் வெளிவரவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது.

அடையாளத்தை இழப்பது உண்மையில் வேதனையானது தான்.



படிப்பகம்

www.padippakam.com



# இலக்கிய இரட்டையர்கள்

# சிட்டியும் சிவபாதசுந்தரமும்

**நரசய்யா**



துரதிருஷ்ட வசமாகத் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்குப் பெருஞ்சேவை செய்த சிலர் கண்டுகொள்ளப்படவேயில்லை! அவ்வகையில் இலக்கிய இரட்டையர்களாக அறியப்பட்ட சிட்டியையும் சிவபாத சுந்தரத்தையும் நாம் முழுமையாகத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் இன்றைய தமிழ் எழுத்தாளர்கள் பலருக்குக் கூட இவர்களைப் பற்றி அதிகம் தெரியாது! கொடுமை என்னவெனில் சிவபாதசுந்தரம் காலம் சென்றபோது தமிழ் பத்திரிகைகள் அவரைப் பற்றி எழுதவேயில்லை! ஹிந்து பத்திரிகையில் நான் எழுதிய கட்டுரையைத் தொடர்ந்து சில பத்திரிகைகள் இந்நிகழ்வை வெளியிட்டன! அதேபோல சிட்டி தமது 97வது வயதில் காலம் சென்றபோதும் தமிழ் எழுத்தாளர்கள் மிகச் சிலரே வந்திருந்தனர்!

லண்டனில் காலம் சென்ற சோ.சிவ பாதசுந்தரம் ஈழத்துத் தமிழறிஞர்களில் ஒருவர். 'வீரகேசரி' பத்திரிகையில் சிலகாலம் பணியாற்றியவர். வ. ரா. முதலில் வீரகேசரி யின் ஆசிரியராகப் பணியாற்ற, வ. உ. சிதம்பரனாரால் அனுப்பப்பட்டபோது, வ. ரா. தங்கியிருக்க கொழும்பு நகரில் தனது அறையில் இடமளித்தவர். 27-08-1912ல் யாழ்ப்பாணத்தில் பிறந்த சிவபாதசுந்தரம், அங்கு மத்தியக் கல்லூரியிலும், கொழும்பு சர்வகலாசாலைக் கல்லூரியிலும் சட்டக்கல்லூரியிலும் கல்வி கற்ற பின்னர், ஈழகேசரியில் பணி யாற்றியவர். வ. ரா.வைப் பற்றி சிவபாத சுந்தரம் பின்னர் குறிப்பிடுகையில் இவ்வாறு கூறினார். "சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, கொழும்பு செட்டி யார் தெருவில் ஒரு மாடி அறையில் என்னுடன் சௌந்திரராஜன் என்ற நண்பர் தங்கியிருந்தார். அவர் ஒரு நாள் வ.ரா.வை அழைத்து வந்து, 'இவர் எனது அம்மான்சேய். வீரகேசரிக்கு ஆசிரியராக வந்திருக்கிறார். இப்போதைக்குத் தங்குவதற்கு வசதியான இடம் கிடைக்கவில்லை. நம்மோடு தங்கலாமல்லவா?' என்று கேட் டார். ஏற்கெனவே வீரகேசரி எழுத்தாளர் குழுவுடன் பழகியிருந்த காரணத்தால் ஆசிரியராக வரப் போகிறவர் மணிக்கொடி ஆசிரியராகவிருந்த வ.ரா, தான் என்று தெரிந்திருந்தாலும் அதே வ.ரா, என்னோடு



படிப்பகம்

www.padippakam.com

ஒரே அறையில் வசிக்கப்போகிறார் என்றது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. சில நாட்களில் சௌந்திரம் ஊருக்குப் போய்விட்டதால் வ.ரா.வும் நானும் தான் தங்கியிருந்தோம்"

லண்டன் பி. பி. சி. யின் தமிழோசை நிகழ்ச்சியைத் தொடங்கியவரே சிவபாத சுந்தரம் தான்! பின்னர் இந்திய பிரஜை யாகச் சென்னையில் வாழ்ந்து வந்த போது 1988ல் லண்டனில் மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அவரது மகள் மஞ்சுபாஷிணியின் அழைப்பிற்கிணங்கி, அங்கு சென்று அங்கேயே தங்கி விட்டார். செல்லுமுன்பு, தமது வாழ்நாள் சேமிப்பான 3000 புத்தகங்களையும் சென்னையின் மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக அளித்துவிட்டார். லண்டனில் தனது குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்த சிவபாதசுந்தரம், 08-11-2000 அன்று அமரத்துவம் எய்தினார்.

ஒலிபரப்புக் கலையில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தமையால், சென்னை வானொலி நிலையம் இவரைத்தான், காமராஜர், அண்ணாதுரை போன்ற பிரமுகர்கள் மறைந்தபோது, நேரடி ஒலிபரப்பிற்காக அழைத்தது. இவர் தமிழ்த் தொண்டு சிறந்தது. இவர் எழுதிய தமிழ் நூல்கள், 'மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்' (1947), 'ஒலிபரப்புக்கலை' (1954), 'கௌதமபுத்தர்' அடிச்சுவட்டில் (இலங்கை சாகித்ய மண்டலப் பரிசு பெற்றது 1960), 'சேக்கிழார் அடிச்சுவட்டில்' (1978) முதலியவை ஆகும். தமிழ் எழுத்தாளர்களுடன் அவருக்கிருந்த நெருக்கமான தொடர்பு அவர் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட உதவியது. 1959ல் சென்னையில் நடந்த அனைத்திந்திய எழுத்தாளர் மகாநாட்டின் அமைப்பாளர்களில் ஒருவராகத் திறம்படச் செயலாற்றினார். இவரது துணைவியார், திருமதி ஞானதீபம், இவ்வருடம் பிப்ரவரி ஒன்றாம் தேதி லண்டனில் காலமானார்.


மனைவியுடன் சிட்டி

பெ. கோ. சுந்தரராஜன் என்ற இயற்பெயர் கொண்ட, சிட்டியின் வாழ்க்கை வரலாற்றை நான் சாதாரண மனிதன் என்ற தலைப்பில் எழுதி வெளியிட்டுள்ளேன். இத்தலைப்பு வந்ததே ஒரு சுவாரசியமான கதை! சிட்டி ஏப்ரல் 20, 1910 அன்று பிறந்தார். அது தமிழ் முறையில் சாதாரண என்ற பெயர் கொண்ட ஆண்டு. ஆகையால் சாதாரண மனிதன் ஆகிவிட்டார். அதற்கு ஒரு பின்புலம்: சென்னை வானொலி நிலையம் வ. ரா. வின் அறுபதாவது பிறந்தநாளன்று அவரைப் பேச அழைத்தது. அச்சொற்பொழிவுக்கு அவர் தந்திருந்த தலைப்பு 'எனது இரண்டாவது விரோதி' ஏனெனில் அவர் பிறந்த தமிழ் வருடப்பெயர் விரோதி! அறுபதாவது வயதில் மற்றொரு விரோதி வந்தமையால் அப்பெயர் தந்திருந்தார்! அதுதான் சாதாரண மனிதன் என்ற பெயர் சிட்டி வாழ்க்கை வரலாற்றிற்களிக்க உதவியது. சிட்டி பிறந்த அன்று தான் ஹேலிஸ் காமட் (சாதாரண வருஷத்துத் தூமகேது என்று பாரதியால் பாடப்பெற்ற) வால் நட்சத்திரம் தோன்றியது. ஆகையால் இந்நூலின் அட்டையில் அந்த தூமகேது படம் இடம் பெற்றுள்ளது.

சிட்டிக்கு சரித்திரத்தில் ஆர்வம் இருந்தது. பச்சையப்பா கல்லூரியில் அவர் படித்துக் கொண்டிருக்கையில் அக்கல்லூரியின் சரித்திரக் கழகத்தின் செயலாளராக இருந்தார். அப்போது அங்கு படித்துக் கொண்டிருந்த சி.என். அண்ணாதுரை அக்கழகத்தின் தலைவர்!

ஆரம்பகாலத்தில் ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருந்த சிட்டியின் முதல் கதை ஆங்கிலத்தில் அவரது 17 வது வயதிலேயே செங்கற்பட்டிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த 'த ஸ்டுடெண்ட்' என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. மணிக்கொடியால் ஈர்க்கப்பட்ட தமிழ் எழுத்தாளர்களில் சிட்டியும் ஒருவர். அங்கு தான் அவரது தமிழ் எழுத்துப் பிரவேசம். ஊக்கமளித்தவர் வ.ரா. பெரும் நகைச்சுவை எழுத்தாளராக தமிழுலகத்தில் அறியப்பட்டார்.

அப்போது நடந்த கதை தான் பாரதி மஹாகவியா இல்லையா என்ற பெரும் விவாதம். செப்டம்பர் மாதக் கணையாழி பத்திரிகையில் இவ்விவரத்தைப் பதிவு செய்துள்ளேன். காலம் தாழ்த்தியேயாயினும் எனக்கு வ.ரா. கொழும்பிலிருந்து கு.ப. ராஜகோபாலனுக்கு எழுதிய கடிதம் 4 பக்கங்களும் முழுமையாகக் கிடைத்தது. (அக் கடிதத்துப் பக்கங்களை இதனுடன் இணைத்துள்ளேன்)

அந்த விவரம் செப்டம்பர் மாதக் கணையாழி இதழில் என்னால் எழுதப் பட்டுள்ளதால் அதை நான் இங்கு விவரிக்க வில்லை. (சமீபத்தில் ஜெயமோகன் இந்த விவரத்தைக் குறித்து கட்டுரை எழுதியுள்ளதாகக் கேள்விப்பட்டேன். அதை நான் முழுமையாகப் படிக்க வில்லை. ஆகையால் அதைப் பற்றி கருத்து தெரிவிக்க இயலாது. ஆயினும் ஓரிடத்தில்



படிப்பகம்

www.padippakam.com

அக்கட்டுரையில் சிட்டியும் உணர்ச்சி வசப்பட்டு எழுதியதாக அவர் கூறியிருந்ததாகத் தெரிந்தது. சிட்டி எப்போதும் உணர்ச்சிவசப்படக்கூடியவர் அல்ல. கா.சிவத்தம்பியும் மார்க்சும் இணைந்து எழுதியுள்ள பாரதி - மறவி முதல் மகாகவி வரை என்ற நூலில் 1984 ல் எழுதப்பட்டது - இவ்வாறு கூறப்படுகிறது. "சுவையாக எழுதப்பட்ட இக்கட்டுரை (வ.ரா.வினது) வ.ராவின் எழுத்துத் திறமைக்குத்தான் சாட்சி பகர்ந்ததேயொழிய பாரதியின் இலக்கியத்திறம் பற்றிய விவாதம் திசை மாறிப் போய்விட்டது. கல்கியும் வ.ரா.வும் தத்தம் வாதத்திறமையை வெளிப்படுத்திக் கொள்ளவும் பத்திரிகைகளுக்குச் சூடான விடயங்கள் கிடைக்கவும் மட்டுமே பயன்படுத்தப்பட்ட இவ்விவாதத்தைச் சரியான திசையில் திருப்பிவிட்டவர் பெ.கோ. சுந்தரராஜனே. இவரது கட்டுரைகள் இரண்டு இச்சமயத்திற் பிரசுரமாயின. சீனிவாசனின் 'பம்பாய் ஸ்டாண்டார்டு' பத்திரிகையில் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு டிசம்பர் 11 ம் தேதி 'தினமணி' இதழிலும், டிசம்பர் 12ம் தேதி சுதேசமித்திரனில் வ.ரா.வின் கட்டுரையோடு சுந்தரராஜனின் இரண்டாவது கட்டுரையும் வெளிவந்தன." (நூலின் 107-108 பக்கங்கள்). சிட்டியின் கட்டுரை ஒரு சிறந்த ஆய்வுத் திறன் பெற்றதாக இருந்தது.

பாரதியை ஈழத்துத் தமிழர்கள் அவர் வாழ்ந்த காலத்திலேயே அறிந்திருந்தனர். தமிழ்நாட்டைவிட பாரதியை அதிகம் கொண்டாடியது ஈழம் தான். யாழ்ப்பாணத்துச் சாமியார் என்ற ஒருவருடன் பாரதி புதுச்சேரியில் பழகியிருந்தாலும் இருக்கலாம். ஆனால் முப்பதுகளின் ஆரம்ப நாட்களிலேயே யாழ்ப்பாணம் கல்வி அதிகாரியாக இருந்த சதாசிவ அய்யர் பாரதியைப் பற்றி எழுதி பாரதி கவிதைகளுடன் பள்ளிப் பாடங்களில் சேர்த்து விட்டார். இந்தச் சூழ்நிலையில் வ.ரா. கொழும்பு ரேடியோவிலும் பாரதியைப் பற்றிச் சொற்பொழிவாற்றி அவர் புகழ் பரப்பினார். ஆகையால் சிவபாதசுந்தரத்திற்கு வ. ரா, நட்பு கிடைத்தது ஒரு நல்ல நிகழ்வாகவே ஆயிற்று. சிவபாதசுந்தரம் சொல்வார்: "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்றபடி மணிக்கொடியின் ஆசிரியர் வ.ரா. கொழும்புக்கு வருமுன்னே இலங்கையிலிருந்த அந்தக் காலத்து இளம் எழுத்தாளர்களுக்கு மணிக்கொடி சஞ்சிகையின் இலக்கியக் கொள்கையிலும் எழுத்து நடையிலும் ஓர் ஈடுபாடு ஆரம்பித்துவிட்டது. நடைச்சித்திரம் என்று பின்னால் புத்தக ரூபமாக வந்த வ.ரா.வின் எழுத்து அவரைப் பற்றிய முற்போக்குக் கொள்கையை, சங்க இலக்கிய சம்பிரதாயத்தில் வளர்க்கப்பட்ட ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்தது. இலங்கையர்கோன், வைத்திலிங்கம் போன்ற எழுத்தாளர்கள் இந்தப் புதிய வேகத்தில் கவரப் பட்டார்கள். கு.ப.ரா.வும் புதுமைப் பித்தனும், சிட்டியும், பிச்சமூர்த்தியும் அறிமுகமாகி விட்டனர். இந்த வேகம்தான் பழைய மரபில் நடந்துகொண்டிருந்த யாழ்ப்பாணத்து ஈழகேசரியின் ஆசிரியப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டபோது மணிக்கொடி மரபைப் பின்பற்ற நேர்ந்ததும், நூற்றுக்கணக்கான புதிய எழுத்தாளர்கள் இலங்கையில் வளர உந்துதல் அளித்ததும் என்று சொல்ல வேண்டும்"

அந்தக் காலத்தில் இலங்கை மார்கெட்டை நம்பியே பல தமிழ்ப் பத்திரிகைகள் சென்னையில் பிரசுரிக்கப்பட்டன. ஆயிரம் பிரதிகளில் அறுநூறு பிரதிகள் இலங்கைக்கே அனுப்பப்பட்ட காலம் அது.

சிவபாதசுந்தரம் மேற்கொண்ட சில சிறந்த காரியங்களால் இன்று தமிழில் பல அரிய நூல்கள் லண்டன் நூலகத்திலிருந்து நகலெடுக்கப்பட்டு பதிக்கப்பட்டுள்ளன. அதிலொன்று ஆதியூர் அவதானி சரித்திரம். மற்றொன்று பிரணதார்த்தி ஹரன் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு திறனாய்வு. இவைகளையெல்லாம் சேர்த்து கண்டெடுத்த கருவூலம் என்ற பெயரில் ஒரு நூலாக சிட்டியின் முயற்சியால் கொணரப்பட்டது.

சிட்டியும் சிவபாதசுந்தரமும் சேர்ந்து தமிழுக்குச் செய்த மாபெரும் தொண்டு அவர்கள் எழுதிய தமிழில் சிறுகதைகள் மற்றும் தமிழ் நாவல்களின் நூறாண்டு விவரங்களும்தான். இவையிரண்டும் சிறந்த ஆய்வுநூல்கள். இவர்களது ஆய்வுகளைப் பற்றி அறிந்திருந்த மதுரைப் பல்கலைக் கழகம் இவர்களது உரைகளை அங்கு அரங்கேற்றி மகிழ்ந்தது.

ஆனால் இன்று தமிழகத்தில் இப் பெருமனிதர்கள் இருவரையும் எவரும் நினைவு கூர்வதாகத் தெரியவில்லை என்பது தான் மிகப் பெரிய துக்கமும் வேதனையும் தரும் விஷயம்!

**Kumar Sinnathamby, BSc**
Sales Representive

HOMELIFE
HIGHER STANDARDS

**Cell: (416) 576-4357**
Email:usinnathamby@trebnet.com



HomeLife GTA Realty Inc., Brokerage
1711 McCowan Rd., Suite # 206,
Toronto, ON. M1S 3Y3

**BUS: (416) 321-6969 Fax:(416) 321-6963**

Each office is independently owned and operated.



படிப்பகம்

www.padippakam.com



# இன்றைய ஜும்மா தொழுகையை நடத்தியது

ஹெச்.ஜி.ரசூல்





மிம்பர் படியேறி
குத்பா பிரசங்கம் செய்ய ஆரம்பித்தது
உமரின் வாள்
துல்லியமான அரபுமொழி உச்சரிப்பை
பிசகின்றி சொல்லியது
ஹவ்ளுநீரில் ஒளுவெடுத்து
பள்ளிவாசலுக்குள் நடந்து வந்தபோது அதனழகை
யாரும் முதலில் கவனிக்கவே இல்லை.
பத்று போர்க்களத்தையும்
உஹது வரலாற்றையும்
ஞாபகப் பிசகின்றி சொல்லி முடித்தபோது
தொழுகையாளிகளின் கண்களில்
ஈரம் தொற்றிக்கொண்டது
கையில்லாத காலில்லாத உமரின் வாள்
எப்படி தக்பீர் கட்டி
தொழுகை நடத்துமென்ற சந்தேகம்
எவருக்கும் வரவில்லை.
உமரின் வாள் தனது சொல்லாற்றலால்
ஜன்னத்துல் பிர்தவ்ஸ்
ஏழாம் சொர்க்கத்தை வரவழைத்துக் காட்டியது.
அடியார்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கான
ஹுருலீன்களை தேடிக் கொண்டிருந்தனர்
பள்ளிவாசலில் கூடியிருந்த
இறையடியார்கள் முன்பு
உமரின் வாள்
ஒரு விசித்திரத்தை செய்து காட்டியது
ரத்தம் வராமல்
பலரை அது வெட்டிப் போட்டது
வாளின் பின்னாலே நின்று தொழுதால்
வகாபி கூட்டத்தார்
சகாபி கூட்டத்தார் போல்
வாளின் கூட்டத்தாராய் ஆகிவிடுவோமென்ற
கவலையும் இல்லாமல் இல்லை.
குத்பா பிரசங்கம் நீண்டு சென்றபோது
திடீரென வாளுக்கு ஒன்றுக்கு முட்டியது.
சிறுநீர் கழிக்க வெளியே சென்றால்
டோலங் கட்டியா தண்ணியா
எதனால் குறியை சுத்தப்படுத்துவதென்ற
பிரச்சினை அதற்கு எழவில்லை.
ஈமானின் முக்கியத்துவம் பற்றி
வாள் பேசத் துவங்கியபோது
எதிரே சிலர் குறட்டைவிடத் துவங்கினர்.
இன்றைய ஜும்மா தொழுகையை
உமரின் வாள் நடத்தி முடித்தபோது
தொப்பி போட்டவர்களுக்கும்
தொப்பி போடாதவர்களுக்கும் இடையே
எந்த கலவரமும் நடக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு பஸ் பயணம்

## என்.கே.மகாலிங்கம்

காரைத் திருத்துவதற்காக கராஜில் விட்டிருந்தான். அதை எடுக்க வேண்டும். கராஜ் அவன் வீட்டிலிருந்து எட்டுக் கிலோ மீற்றர் தூரம். அதற்கு இரண்டு பஸ் எடுத்துப் போக வேண்டும். ஒரு சந்தியில் இறங்கி, இன்னொரு பஸ்ஸில் வடக்கு நோக்கிப் போக வேண்டும். இரண்டும் சேர்த்து அரை மணி நேரப் பயணம். நடந்துகூடப் போய் விடலாம். அதிக பட்சம் ஒரு மணி நேரம் எடுக்கும். ஆனால், அன்று கடும் வெயில். அத்துடன் சனிக்கிழமை. கராஜ்காரர் கராஜைப் பூட்டிவிட்டுப் போயும் விடலாம். அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லியிருந்தார்.

காரை எடுப்பதற்குக் கையில் காசில்லை. காசு எடுப்பதற்கு வங்கிக்குப் போக வேணும். வங்கியும் போகும் வழியில்தான் இருக்கிறது. அதற்கு நடந்து போவதற்குக் குறைந்தது இருபது நிமிடம் பிடிக்கும். மாலை நாலு மணி ஆகிவிட்டது. ஆனால், வெயில் எரித்துக் கொண்டிருந்தது. உடுப்பைப் போட்டுக்கொண்டு தொப்பியை அணிந்துகொண்டான். கொஞ்சமாவது மொட்டைத் தலையை வெயில் எரிக்காமல் அது பாதுகாக்கும் என்ற பாதுகாப்புணர்வு.

காரில் சென்றே பழகிவிட்டதால், இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின்னால் பஸ்ஸில் பயணம் செய்யப் போகிறான். அந்த நினைப்பு சிறிய சந்தோசத்தையும் கொடுத்தது. கனடாவில் பஸ் வசதியானது. ஒரு இருபது நிமிசத்துக்கு ஒரு தரம் எப்படியும் பஸ் வந்து விடும். வெயிலுக்கு, மழைக்கு, பனிக்கு, குளிருக்கு ஒதுங்க தரிப்பிடத்தில் கண்ணாடிக் கூண்டுகளால் அடைக்கப்பட்ட அடைப்பும் இருக்கிறது.

வேகமாக நடந்தான். வெயில் எரித்தது. அதனால் மர நிழல்களைத் தேடித் தேடி, அவற்றில் நடந்தான். மர நிழல்கள் எல்லா இடமும் இருக்கவில்லை. குறுக்குத் தெருக்களில் அங்கொன்றும் இங்கொன்றும் இருந்தன. அவையே அவனுக்கு ஒரு வித பாதுகாப்பைக் கொடுத்தன. அடுத்தது, அவன் அணிந்திருந்த தொப்பியின் அருமையும் அவனுக்கு விளங்கியது. அதைப் போட்டுக்கொண்டு வந்ததிற்காக தன் புத்திசாலித்தனத்தை மெச்சிக்கொள்ளவும் செய்தான். மர நிழல்கள் பெருந்தெருவுக்கு வந்தவுடன் கிடைக்கவில்லை. ஆகவே, வெயிலில் நடப்பது தவிர்க்க முடியாததாகியது.

வேகமாக நடந்தான். சந்தி வந்தது. சிவப்பு விளக்கு எரிந்ததால் அங்கே சில விநாடிகள் தரித்தான். மக்களின் போக்குவரத்தும்; பஸ், கார்களின் போக்குவரத்தும் வெயிலின் அகோரத்தைப் பற்றி நினைக்க விடவில்லை. பச்சை விளக்கு வந்தது. நடக்கலாம் என்று ஒளிப்பொட்டில் கை காட்டியது அடுத்த பக்கமிருந்து. நடந்தான். விரைவாகவே நடந்தான். அதற்கு வெயிலா நடைப் பழக்கமா அல்லது இரண்டும் காரணமா. எப்படியோ அடுத்த பக்கம் போன போதும் மறு பக்கம் சிவப்பு விளக்கு. அங்கும் நின்றான். நிற்பதும் நடப்பதும் பழக்கமாகிவிட்டது. இரண்டு தரிப்புகளுக்குள்ளேயே. பழக்கம் எத்தனை நல்ல விசயம் என்றும் நினைத்துக் கொண்டான்.

இப்பொழுது திரும்பவும் ஒரு ஐநூறு மீற்றர் நடக்க வேண்டும். இடையில் கடைகள், பல் வைத்திய கூடம், பணிமனைகள், திறப்பு வெட்டும் இடம், மீன் விற்கும் பெரிய கடை. அடுத்தது சந்தி. இங்கேயும் சிவப்பு விளக்கு. அடுத்த பக்கம். நின்றான். சில விநாடிகளே. திரும்பவும் நடந்தான். நடை இப்பொழுது வேகம் கூடியது போல உணர்ந்தான். தன் நினைவு அவனை விட்டுப் போவதில்லை. என்றுமே. நடக்கையில் கனவு காண்பது உண்டுதான். ஆனால், ஒரே குறியாகப் போகும் போது, எதற்காகப் போகிறோம் என்ற தன் நினைவு வந்துகொண்டு இருக்கும்.

வங்கிக்குப் போவதற்கு இன்னும் ஐம்பது மீற்றர் இருக்கும். நடக்கும்போதே எவ்வளவு பணம் எடுக்க வேணும்? எவ்வளவு பணம் வங்கியில் இருக்கும் என்ற கணக்குகள் கணக்குகளாகவும் கூட்டல் கழித்தல்களாகவும் வந்து கொண்டிருந்தன.

இன்று சனிக்கிழமை. வங்கி திறந்திருக்கிறது. உள்ளே போய் பணத்தை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. வங்கியின் உள்ளே முன் பக்கம் இருக்கும் றெல்லர் மெசினிலியே காசை எடுத்து விடலாம். இன்ரறக்ற் காசு அட்டையை எடுத்து அதை உள்ளே ஓட்டினான். அட்டை ஒன்று போகக் கூடிய அளவே துவாரம் இருந்தது. இரண்டு அட்டையை ஓட்ட முடியுமா என்ற எண்ணம் வந்தது. இல்லை. அட்டை உடனேயே சென்றும் விட்டது. கராஜிற்கு திருத்துவதற்கான கூலி நூற்றி நாற்பது; பஸ் ரிக்கற் வாங்க வேணும். அதற்கிடையில் மனைவி தனக்கும் ரிக்கற் வாங்கச் சொன்ன நினைவு வந்தது. அவர் பஸ்ஸில்தான் வேலையிலிருந்து வருவார். எல்லாவற்றுக்குமாக இருநூறு டொலர் எடுத்தான். இன்னும் மிச்சம் எவ்வளவு இருக்கும் என்பதைப் பார்ப்பதற்காக, றெல்லரில் தெரியும் றிசீற் வேணுமா பிறின்ற் பண்ண வேணுமா, வேண்டாமா என்பதற்கு வேண்டும் என்ற பொத்தானை அழுத்தினான். றிசீற் வந்தது. அதற்கிடையில் அட்டையை எடுக்கச் சொல்லி றெல்லர் சிணுங்கியது. அட்டையை எடுத்து பர்சில் செருகிக் கொண்டான். றிசீற்றை எடுத்து கணக்கைப் பார்த்தான். இன்னும் சில டொலர்கள் மிச்சம் இருந்தன.



படிப்பகம்

www.padippakam.com



ரிக்கற் வாங்க பக்கத்திலிருந்த கடைக்குப் போனான். அது ஒரு சூப்பர் மார்க்கெற். ஆனால், அதன் உள்ளேயுள்ள முன் பகுதியில் லொற்றோ ரிக்கற்றுக்கள் விற்கிறார்கள். ரிரிசி பஸ் ரிக்கற்றுக்களும் ரோக்கன்ஸ்களும் விற்கிறார்கள். உள்ளே போய் வளைந்து முன்னே வந்து லொற்றோ கடைக்கு வந்தான். மனைவிக்கு பத்து ரோக்கன் வாங்கினான். தனக்கு இரண்டு ரிக்கற் வாங்கினான். அதற்கான பணத்தைக் கொடுக்கும் போது மிச்சமாக ஏழு டொலரும் சில்லறையும் வந்தது. அவனுக்குப் பின்னே ஒருவர் மனைவியுடன் லொற்றோ ரிக்கற் வாங்க நின்றார். இன்று சனிக்கிழமை. லொற்றோ இழுக்கும் நாள். தானும் வாங்கினால் என்ன? எத்தனையோ வருடங்கள் வாங்கி இருக்கிறான். விழவே இல்லை. இன்று மட்டும் விழப் போகிறதா? காலையில் வீட்டில் பணம் சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டிருந்தது. வேலையிலிருந்து எப்பொழுது ஓய்வெடுக்கப் போவது என்று சில காலமாக நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான். பணம் இருந்தால் நாளையே வேலையை விட்டுவிடலாம். எல்லாவற்றையும் சிந்திப்பதற்கு காலம் நேரம் இதுவல்ல. பின்னால் ஒருவர் ரிக்கற் வாங்கக் காத்துக் கொண்டிருக்கிறார். இரண்டு ரிக்கற் தரும்படி விற்பனையாளனிடம் கேட்டான். ஐந்து டொலரைக் கொடுத்தான். சில்லறையையும் ரிக்கற்றையும் பர்சுக்குள் வைத்துக்கொண்டு கடையிலிருந்து புறப்பட்டான்.

பஸ் தரிப்பிடம் பிரதான தெருவில் இருந்தது. ஐம்பது மீற்றர் தூரம் நடக்க வேணும். போய் நின்றான். இரண்டு பஸ்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒரு இருநூறு மீற்றர் தூரத்தில் வந்து கொண்டிருந்தன. இரண்டில் ஒன்று தன் நேரத்தைத் தவற விட்டுள்ளது என்று நினைத்துக் கொண்டான். அவனைப் பொறுத்தளவில் பஸ் நேரம் பிந்தி வந்தது அவனுக்கு வசதியாகவே இருந்தது. வெயிலில் நிற்கத் தேவையில்லை. போகுமிடத்திற்கு விரைவாகவும் போய்விடலாம்.

பஸ்ஸில் ஏறி, ரிக்கற்றை சாரதியிடம் காட்டி விட்டு, ரிக்கற்றுக்கள் போடும் கண்ணாடிப் பெட்டிக்குள் போட்டான். சாரதி ஒரு கறுப்பர். இளைஞன். அவருக்கு முன்னால் ஒரு இளம் வெள்ளைக்காரப் பெண் நின்று கொண்டிருந்தாள். இருவரும் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தனர். கதைத்துக்கொண்டே சாரதி அவனுக்கு ற்றான்ஸ்பர் கொடுத்தார். வாங்கி வைத்துக்கொண்டான். அதில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்க்கவில்லை. பார்க்கவும் தெரியாது. மூக்குக் கண்ணாடியும் கொண்டு வரவில்லை, பார்ப்பதற்கு. பஸ் மாறி ஏறும்போது அது தேவைப்படும். அதைக் காட்டித்தான் ஏற வேண்டும். கவனமாக மடித்து கையில் வைத்துக் கொண்டான். இன்னொரு படி இருக்கும் என்ற நினைவில் வலது காலைத் தூக்கி வைத்தான். படியில்லாமல் கால் தொப்பென பஸ்ஸின் தரையில் தடாலென ஊன்றியது. நல்ல காலம். அவன் விழவில்லை. ஒரு திடுக்கிடல். அவ்வளவுதான். உள்ளே நடந்து சென்றான். இருப்பதற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக இடங்கள் இருந்தன. மூன்று பேர் இருக்கிற சீற்றில் ஒருவர், இரண்டு பேர் இருக்கும் இடத்தைப் பிடித்துக்கொண்டு இருந்தார். அதில் அவன் இருக்கவில்லை. இன்னும் கொஞ்சம் உள்ளே சென்றான். ஒரு இளம் பெண், தொலைபேசியில் சீரியஸாகப் பேசிக் கொண்டிருந்தாள். அவளையும் தாண்டிப் போனதில் அவளுக்குப் பின்னால் இருந்தது, இரட்டைச் சீற். அதில் அமர்ந்தான்.

வெயிலின் சூடு அவன் உடலை விட்டு ஓரளவு நீங்கியிருந்தது. பஸ்ஸின் உள்ளே ஏசி நன்றாக வேலை செய்தது போலும். ஆசுவாசமாக இருந்தது. தொப்பியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டான். தலையிலிருந்த ஈரத்தை இடது கையால் ஒற்றிக்கொண்டான். கை ஈரமாகியது. அதைக் களிசானில் துடைத்தான். நிம்மதியாக இருந்தது. பஸ் பயணம் நல்லதாகவே தோன்றியது. ஓய்வு பெற்றுவிட்டால் காரை விற்றுப் போட்டு பஸ்ஸிலேயே பிரயாணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டான். கடைகளுக்குப் போய் சாமான் வாங்கிக்கொண்டு வருவதுதான் கஸ்ரமாக இருக்கும். குளிர் காலத்தில் பஸ்ஸிற்காகக் காத்திருப்பதும் நடப்பதும் சிரமமாக இருக்கும். பரவாயில்லை. ஓய்வு பெறும்போது அவற்றைப் பார்த்துக்கொள்ளலாம். கையில் கவனமாக ற்றான்ஸ்பெரை



படிப்பகம்

www.padippakam.com

வைத்துக்கொண்டான்.

பஸ் லோறன்ஸ் தெரு நீளம் போய்க் கொண்டிருந்தது. இன்னும் அந்த இளம் வெள்ளைக்காரப் பெண், கறுப்புச் சாரதி யுடன் சல்லாபித்துக்கொண்டே இருந்தாள். இப்பொழுது அவள் தன் இரண்டு கால் களையும் தூக்கி சாரதிக்குப் பின்னால் இருந்த கண்ணாடி அடைப்பில் போட்டுக் கொண்டு, அந்தரத்தில் குண்டியை வைத் துக்கொண்டு இருந்தாள். அது அவளுக்கு இருக்க வசதியாக இருந்ததோ கதைக்க வசதியாக இருந்ததோ. இருந்தாள். சீரி யஸாக பேசிக்கொண்டே இருந்தாள். எங் காவது இன்றிரவு சந்திப்பதற்கு அவர் கள் நேரம் நியமிக்கிறார்கள் போலும் என்று நினைத்துக்கொண்டான். தனக்கு முன்னால் இருந்த பெண்ணும் இளைய வளே. வெள்ளைக்காரி அல்ல. இன்னும் தொலைபேசியை காதைப் பொத்தி இறுக்கி வைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருந் தாள். வலது கையாலும் பேசிக் கொள் வதுபோல அதை ஆட்டிக் கொண்டி ருந்தாள். அவளுடைய மார்புக் கச்சையின் மேல் துணி நாடாக்கள் கழுத்தடியில் இரண்டு பக்கமும் வெளியே தெரிந்தன.

பஸ் கென்னடிச் சந்திக்குப் பிறகு வளைவில் திரும்பியது. இப்பொழுது ஏன் என்று விளங்கியது. சப்வேயில் போகும் பயணிகளை இறக்கி விட்டு அங்கு நிற் கும் பயணிகளை ஏற்றிக்கொள்ளச் செல் கிறது.

திரும்பவும் பஸ் அடிக்கடி நின்று வெளிக்கிட்டுக் கொண்டிருந்தது. நிற்கா விட்டாலும் போய்க் கொண்டிருக்கும் இடங்களின் பெயர்களை அறிவித்துக் கொண்டிருந்தன. சாரதியா அறிவிக்கிறார் என்று கூர்ந்து கவனித்தபோது அது ஒரு பெண்ணின் குரல்.

அவன் இறங்க வேண்டிய மிட்லண்ட் சந்தி வந்தது. இறங்குவது முன்னாலா பின்னாலா? கொஞ்ச நேரம் திகைப்பு. ஏறுவது முன்னால்; இறங்குவது பின்னால்; இதுகூடத் தெரியாத பஸ் பயணியா என்று நினைத்துக் கொண்டான். எதற் கும் அனுபவம் தேவை போலும். பின் படிகளுக்கு அருகில் சென்று நின்று கொண்டான். பஸ் போய்க்கொண்டிருந்தது. மணியை அடிக்க மறந்து விட்டேன் என்று நினைத்து மணியை அடித்தான். பஸ் சந்தியில் நிற்பதாக இல்லை. சாரதியிடம் சொல்வதற்கு முன்னே சென்றான். சந்தி கழிந்துதான் பஸ் நிற்கும் என்று அவன் சொன்னான். பஸ்ஸில் பயணம் பண்ணி அனுபவம் இருக்க வேண்டும் என்று திரும் பவும் நினைத்துக் கொண்டான்.

இறங்கியதும் அடுத்த பஸ்ஸைப் பிடிப் பதற்காக சந்தியில் திரும்பி தெற்கு நோக்கிச் சென்றான். ஒரு ஐந்து மீற்றர் தூரம். பஸ் தரிப்பிடம். அதில் பஸ்ஸிற்காக இன்னும் இரண்டு பேர் காத்திருந்தார்கள். முன் பக்கம் ஒரு பையன். கண்ணாடிக்குப் பின் புறம் இன்னொருவர். அவர் கொஞ்சம் வயது போனவர். தமிழராகக் கூட இருக் கலாம். பல ஆயிரம் தமிழர்கள் இங்கு இருக்கிறார்கள். அதிலும் ஸ்காபரோவில் இன்னும் அதிகம். எல்லாத் தமிழரையும் ஒருவருக்கு ஒருவர் தெரிந்திருக்காது. 'உங் களைக் கண்ட மாதிரி இருக்கே?' என்று கேட்டால், 'உங்களை எனக்குத் தெரியாது. வேறு யாரையாவது போய்ப் பாரும்' என்று சொல்லி உரையாடலை முறித்துவிடக் கூடியவர்கள் இங்கு வந்து விட்டார்கள். ஆகவே, பேச்சுக் கொடுக்கப் பயந்து பஸ் ஸிற்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஐந்து நிமிசங்களுக்குள் பஸ் வந்தது.

முன்னின்றவர்களை ஏற விட்டு அவனும் முன் பக்கத்தால் ஏறிக்கொண்டான். பின் னுக்கு பயணிகள் சிலர் இறங்கிக் கொண் டிருந்தனர். அவனும் தன்னுடைய முறை வரும்போது சாரதியிடம் ற்றான்ஸ்பெ ரைக் கொடுத்து இருக்க இடம் தேடி னான். சாரதி ஒரு இந்தியர் அல்லது பாகிஸ்தானியர். அல்லது பங்களாதேசி. இருக்கப் போன அவர் அவனைக் கூப் பிட்டார். ற்றான்ஸ்பெர் இரண்டு மணித் தியாலத்திற்கு முன் எடுக்கப்பட்டுள்ளது. அது செல்லாது. ரிக்கற் வாங்கு என்று சொன்னார். அவர் என்ன சொல்கிறார் என்று முதலில் அவனுக்குப் புரியவில்லை. ற்றான்ஸ்பெரைக் காட்டிச் சாரதி சொன் னார்: 'அது இரண்டரை மணிக்கு எடுக் கப்பட்டிருக்கிறது.'

அவன் வீட்டை விட்டு வெளியே இறங்கியது நாலு மணிக்குப் பிறகு. நடந்து வங்கிக்குப் போய், கடைக்குப் போய், பஸ்ஸில் ஏறியபோது குறைந்தது நாலே முக்காலாவது இருக்கும். பத்து நிமிசப் பஸ் பயணம். ஐந்து நிமிசம் இந்த பஸ்ஸிற்காகக் காத்திருந்தான். எல் லாம் சேர்த்து அரை மணி நேரம். அப்ப டியிருக்க, சாரதி என்ன சொல்கிறான்? அவன் சொல்வது பொய்யில்லை. இவன் சொல்வதும் பொய்யில்லை. எங்கோ பிழை நடந்திருக்கிறது?

பஸ்ஸை எடுக்காமல் நிற்பாட்டி, 'காசு போடு அல்லது இறங்கு,' என்றான் சாரதி.

'நான் பொய் சொல்லவில்லை. உண் மையைத் தான் சொல்கிறேன்' என்றான் இவன். 'ற்றான்ஸ்பெர் பொய் சொல்ல வில்லை' என்றான் சாரதி.

'அப்படி என்றால் உன் சக சாரதி எனக்குப் பழைய ற்றான்ஸ்பெரைத் தந்தி ருக்கிறான்.'

'அது எனக்குத் தெரியாது. நீ காசு போடு அல்லது இறங்கு.'

'என்னால் இறங்க முடியாது. என்னைப் பொய்யன் என்று நீ சொல்லக் கூடாது.'

அவன் தன்னை நிரபராதி என்று சொல் லிக் கொண்டிருந்தான். 'நான் பொய்யே சொல்வதில்லை. அதுவும் போய் ஒரு இரண்டரை டொலருக்கு?'

அவன் நாணயம் அவனுக்குத் தெரியும்; அவனை அறிந்தவர்களுக்குத் தெரியும். தெரியாதவர்களிடம் போய் எப்படி தன் நாணயத்தை நிரூபிப்பது? அதுவும் அத் தனை பயணிகள் உள்ள பஸ்ஸில். இக்கட் டான நிலையில் அவன் நின்று கொண் டிருந்தான்.

அவனும் இறங்குவதாக இல்லை; தான் பொய் சொல்லாத நிலையில், இறங்கினால் பொய்யனாகி விடுவான் என்று தன்மான உணர்ச்சி அவனை நிமிர்ந்து வாதாடச் செய்தது. உண்மையில் அவன் போய்ச் சேர வேண்டிய கராஜ் அதிலிருந்து பத்து நிமிசத்தில் நடந்து போகக் கூடிய தூரம்தான். ஆனால், இங்கே தன் நாண யம் விலை போய்க் கொண்டிருப்பதை அவன் விரும்பவில்லை. ரிரிசி பஸ் பய ணங்களையும்; அவற்றில் வேலை செய் யும் தொழிலாளிகளுக்கும் பயணிகளுக் கும் நடைபெறும் பிரச்சினைகளையும் பத் திரிகை வாயிலாக அறிந்தவன்தான் அவ னும். ஆனால், அது தனக்கே நடக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவே இல்லை. 'பார்ப்போம், இந்தச் சாரதி தன்னை இறக்கி விடுவானா பொலிசைக் கூப்பிடுவானா பஸ்ஸை நிறுத்தி வைத்துக் கொண்டிருப்பானா?' என்ற வீம்பு அவனுக்கு வந்தது.

பஸ் வெளிக்கிட்டது.

சாரதி இந்தியக்காரனாக இருக்க வேண் டும். பிரச்சினைகளிலிருந்து தப்புவது அல் லது விலகுவதுதான் அவர்களுக்குரிய குணம். இமை வெட்டும் போட்டியில் முதல் இமை வெட்டுவது இந்தியனே. மனவுர மோதலில் முதலில் விட்டுக் கொடுப்பது எப்பவுமே இந்தியன்தான். உள அலசல்கள் மனதில் ஓடிக் கொண்டிருந்தன.


சாரதி நேர்மையானவன்; இவனும் நேர் மையானவன். சாரதி தன் கடமையைச் செய்கிறான். ஆனால், அவன் முன் ஏறிய பஸ்ஸின் சாரதி வெள்ளைக்காரப் பெண்ணுடனான சல்லாபத்தில் தனக்குப் பிழையான ற்றான்ஸ்பெரைக் கொடுத்தி ருக்கிறான் என்று நினைத்துக்கொண் டான். அதை எப்படி இவனுக்கு விளங் கப்படுத்துவது? உன்னுடைய ரிரிசி சாரதி தான் பிழையான ற்றான்ஸ்பரை எனக் குத் தந்தான் என்று சொன்னான். அவன் நம்பியிருக்க மாட்டான். இவன் சொன்ன தைப் போல அவனுக்கு முன்னும் பலர் சொல்லியிருக்கலாம். ஆனால், இவன் சொன்னது உண்மை. சத்தியம். எந்தக் கோயிலிலும் கற்பூரம் கொளுத்திச் சத்தியம் செய்யத் தயாராகவும் இருந்தான். சாரதி நம்புவானா?

மணியை அடித்து இறங்கிக் கொண் டான்.




படிப்பகம்

www.padippakam.com



**T. Jegatheesan**

Barrister, Solicitor & Notary Public (ont)




2620 Eglinton Ave. E
Suite 201
Scarborough
On MLK 2S3

Tel: 416 - 266 6154  Fax : 416 - 266 4677

படிப்பகம்

www.padippakam.com



# வரலாறு கவனிக்க வேண்டிய சந்திப்பு

**அ. முத்துலிங்கம்**

சில நாட்கள் ஆரம்பத்தில் இருந்தே எல்லாம் பிழைக்கும். என்ன செய்தாலும் பிழையான ஒன்றுதான் நடக்கும். தேவிபாரதியுடனான சந்திப்பு அந்த வகையைச் சேரும். சந்திப்புக்கு நாலு பேர் சேர்ந்து போவதாகத் தீர்மானித்தோம். செல்வம், வரன், டானியல் ஜீவா மற்றும் நான். இந்த நால்வரில் தேவிபாரதியுடன் முகப் பழக்கம் கொண்டவர் செல்வம்தான். என்னுடைய பழக்கம் மின்னஞ்சலோடு நின்றது. மற்ற இருவருக்கும் அதுவும் இல்லை.

தேவிபாரதி நியூயோர்க்கில் நடைபெறும் ஓர் எழுத்தாளர் பட்டறையில் கலந்து கொள்வதற்காக சென்னையில் இருந்து வந்திருந்தார். அவர் ஒரு மாதம் நிற்பார் என்றார்கள். ஆனால், அவரைச் சந்திப்பதென்றால் நாங்கள் பத்து மணி நேரம் பயணம் செய்து நியூயோர்க்குக்குப் போக வேண்டும். அல்லது அவர் கனடிய விசா எடுத்து எங்களைக் காண ரொறொன்ரோ வரவேண்டும்.

தேவிபாரதி, இந்தியா திரும்புவதற்கு முன்னர் நயாகரா அருவியைப் பார்ப்பதற்கு திட்டமிட்டிருந்தார். கனடாவையும் அமெரிக்காவையும் பிரிக்கும் எல்லையில் நீர்வீழ்ச்சி இருந்தது. அதை அமெரிக்கா பக்கத்தில் இருந்தும் பார்க்கலாம்; கனடாவிலிருந்தும் பார்க்கலாம். அவர் அமெரிக்க நீர்வீழ்ச்சியை காண அமெரிக்க எல்லைக்கு ஓர் இரவு வருவார். நாங்கள் அந்த நேரம் சந்தித்தால் வசதியாக இருக்கும்.

கனடா எல்லையை கடந்து அமெரிக்கா சென்று அவரைப் பார்ப்பது என்பது முடிவு. எடுத்தவுடன் அப்படி மனைவியிடம் உண்மையை உடைக்கக் கூடாது என்பது உலகத்தில் உள்ள எல்லாக் கணவர்களுக்கும் தெரியும். 'எங்கே புறப்படுகிறீர்கள்?' என்றார் மனைவி. 'சும்மா ஒரு நண்பரைப் பார்க்க?' 'சரி, நேரம் கடத்தாமல் வாருங்கள். யார் அந்த நண்பர்?' 'இந்தியாவிலிருந்து வந்திருக்கும் புகழ் பெற்ற எழுத்தாளர்; நீரும் வாரும்' என்றேன். ஓர் எழுத்தாளரைப் பார்ப்பதற்கு 1000 டொலர் கையிலே கொடுத்தாலும் வரமாட்டார் என்பது எனக்குத் தெரியும். 'அப்படியா? எப்ப திரும்புவீர்கள்?' 'எப்படியும் 10 மணிக்கு திரும்பி விடுவேன். எனக்குக் காத்திருக்க வேண்டாம். நீர் சாப்பிடும்.'

நாங்கள் இப்படி பேசியபோது பகல் இரண்டு மணி. 'பத்து மணியா? எங்கே சந்திக்கிறீர்கள்?' 'நயாகரா நீர் வீழ்ச்சியை பார்க்க அவர் வருவார். அங்கே சந்திக்கிறோம்.'

எந்த நீர்வீழ்ச்சி என்பதை அவர் கேட்கவில்லை, நானும் சொல்லவில்லை.

நான் ஞாபகமாக கொண்டு போக வேண்டிய சாமான்களை அடுக்கினேன். மனைவி சிற்றுண்டி வகைகளும் போத்தல் தண்ணீரும் எடுத்து வைத்தார். ஆனால், நான் பாஸ்போர்ட் எடுத்து வைத்ததை எப்படியோ கண்டுபிடித்து விட்டார். 'எதற்கு பாஸ்போர்ட்?' என்றார். 'இல்லை, சிலவேளை அவர் கனடாப் பக்க நயாகராவுக்கு வர முடியாவிட்டால் நாங்கள் அமெரிக்காவுக்குள் நுழைந்து அவரைப் பார்ப்போம்' என்றேன். முகத்தை ஆமையின் முகம்போல வைத்துக்கொண்டேன். அதிலே ஒன்றையும் கண்டுபிடிக்க முடியாது. என்னை ஊடுருவிப் பார்த்தார். 'சரி, வீட்டுத் திறப்பை ஞாபகமாக எடுத்துவையுங்கள். நான் தூங்கி விடுவேன். மறக்க வேண்டாம்' என்றார். நான் கண் மூடித் திறப்பதற்குள் சாவியை எடுத்து பையில் போட்டுக் கொண்டேன்.

வாகனத்தை ஓட்டுவதற்கு வரன் தேர்வு செய்யப்பட்டார். எங்கள் வேலை வாகனத்தின் எடையைக் கூட்டுவது ஒன்றுதான். இந்தப் பயணத்தில் ஒரேயொரு பிரச்சினை, தேவிபாரதிதான் எங்களை அழைக்கலாம்; நாங்கள் அவரை அழைக்க முடியாது. காரணம் அவரிடம் செல்போன் இல்லை. நயாகரா வந்த பிறகு பொதுத் தொலைபேசியிலோ வேறு யாருடையவோ இரவல் தொலைபேசியிலோ எங்களை அழைத்து தான் இருக்கும் இடத்தைச் சொல்வார். நாங்கள் அங்கு போய் அவரை சந்திப்போம். அதன் பிரகாரம் நாங்கள் கனடா எல்லையில் வந்து காத்து நின்றோம். ஐந்து மணிக்கு அவர் அழைப்பதாக ஏற்பாடு. ஆனால், ஐந்து மணி வந்து போய்விட்டது. அழைப்பு வரவில்லை. அமெரிக்காவுக்குள் நுழைந்து அவரை நயாகராவில் தேடுவோம் என முடிவு செய்தோம்.

அமெரிக்க குடிவரவு அதிகாரியிடம் கடவுச் சீட்டுகளை கொடுத்தோம். அவர் கூண்டு மிருகங்களைப் பார்ப்பதுபோல எங்களைக் கூர்ந்து பார்த்தார். 'எத்தனை நாள் தங்கப் போகிறீர்கள்?' நாங்கள், 'இரண்டு மணி நேரம்தான். அமெரிக்க நயாகராவை பார்த்துவிட்டு உடனேயே திரும்பி விடுவோம்' என்றோம். வாகனத்தின் கதவை திறந்து ஒவ்வொருவர் முகத்தையும் கடவுச்சீட்டு முகத்துடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். பின்னர் நாங்கள் ஆயுத வியாபாரிகள் இல்லை, பயங்கரவாதிகள் இல்லை, போதைபொருள் கடத்தல்காரர்கள் இல்லை, கொலைக்கு தேடப்படுபவர்கள் இல்லை என்பதை உறுதி செய்த பின்னர் அனுமதி தந்தார். நாங்கள் நாலுபேரும் எழுத்தாளர்கள் என்பது தெரிந்திருந்தால் அவருடைய முடிவு என்னவாகியிருக்குமோ தெரியாது.

தேவிபாரதியை காணவில்லை. ஆனால், நயாகரா நீர்வீழ்ச்சி சும்மாயிருந்தது. எனவே, அதைப் பார்த்தோம். கனடா நீர்வீழ்ச்சியுடன் ஒப்பிட்டபோது சின்னதாயிருந்தது; சரிபாதி கூட இல்லை. ஆகக் கிட்டத்தில் இருந்து பார்க்கக் கூடியதாக இருந்ததால் தடுப்புக் கம்பியை தாண்டி குதித்தால் தண்ணீரை தொட்டுவிடலாம். கனடா நீர்வீழ்ச்சியை 'குதிரை லாடம்' என வர்ணிப்பார்கள். அமெரிக்க நீர்வீழ்ச்சி பார்ப்பதற்கு வெண்கூந்தல் பெண் முடியை சீவி விரித்ததுபோல இருந்தது. தண்ணீர் எழும்பி வெண்நுரையாக மாறி விழும் அழகு மறக்கக்கூடிய காட்சி இல்லை. அதை வர்ணிப்பது தாஜ்மஹாலை தபால்தலையில் பார்த்துவிட்டு இந்தியாவை கற்பனை செய்வது போலத்தான். இன்னொன்று, கனடா நயாகரா நீர்வீழ்ச்சியின் சத்தம் ஓவென்று இரைச்சலாகக் கேட்கும். அதன் பக்கத்தில் நின்று ஒருவரோடு ஒருவர் பேசமுடியாது. பெரிய கிரிக்கட் மைதானத்தில் சச்சின் டெண்டுல்கர் சிக்ஸர் அடித்தால் எப்படி சத்தம் எழுமோ அப்படி தொடர்ந்து கேட்கும். ஆனால், அமெரிக்கப்பகுதி சுதா ரகுநாதன், நித்தியஸ்ரீ, அருணா சாய்ராம் எல்லோரும்



படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்து 'ப' ஸ்வரத்தைத் தொடர்ந்து பாடுவதுபோல அமைதியை தருவதுடன் மனதுக்கு இனம் விளங்காத மகிழ்ச்சியை கொடுத்தது. தற்காலிகமாக தேவிபாரதியை மறக்கவும் செய்தது. அந்தச் சூழ்நிலையும் அழகும் போதாது என்பதுபோல பாதியாக வெட்டிய சந்திரன் மேலே தொங்கியது.


தேவிபாரதியும் அங்கேதான் எங்கேயோ நின்றார். இரண்டு குழுவாகப் பிரிந்து அவரை தேடத் தொடங்கினோம். எப்படி அடையாளம் காண்பது என்றார் வரன். தொலைத்ததை தேடுவதுபோல ஒருவர் தோன்றுவார், அவர்தான் என்றார் இன்னொருவர். தேவிபாரதிக்குத் தெரிந்தது செல்வத்தின் செல்பேசி எண் மட்டுமே. கனடா செல்பேசிகளுக்கு ஒரு திறமை உண்டு. அமெரிக்க எல்லைக்குள் நுழைந்ததை எப்படியோ கண்டுபிடித்து சிலசமயம் வேலை செய்ய மறுத்துவிடும். ஒருவேளை தேவிபாரதி அழைத்து செல்பேசி மணி அடிக்காமல் அவர் திரும்பிவிட்டாரோ எனவும் நினைத்தோம். அவர் நியூயோர்க் மாநிலத்தில் கெண்ட் என்ற இடத்திலிருந்து ரயில் ஏறி பஃவலோ ஸ்டேசனில் இறங்கி நயாகராவுக்கு வருவதுதான் திட்டம். ஸ்டேசனிலேயே எங்களை எதிர்பார்த்து தங்கிவிட்டரோ என்றும் தெரியவில்லை. இரண்டு மணிநேரம் இப்படி ஓடிவிட்டது. நாலு தடவை மைதானத்தை சுற்றி விட்டோம். இனி முடியாது என்ற நிலை. குறுந்தொகையில் ஒரு பாடல் உண்டு, வெள்ளிவீதியார் எங்களுக்கென்று பாடியது போல. 'கால்கள் அலுத்தன, கண்கள் தேடித்தேடி மங்கின. வானத்து நட்சத்திரங்களையும் விட அதிகமாக இருந்தனர், மற்றவர்கள்.'

ஐந்தாவது தடவை சுற்றுவதா திரும்பி கனடாவுக்குப் போவதா என்று முடிவெடுக்க முடியாமல் திணறிய போது செல்வத்தின் ஃபோன், 'கிணுங் கிணுங்' என்று இனிமையாக ஒலித்தது. அழைத்தது தேவிபாரதிதான்.

நானும் செல்வமும் தேவிபாரதி குறிப்பிட்ட இடத்துக்குப் புறப்பட்டோம். மற்ற இருவரும் வேறு பக்கத்தில் இன்னும் தேடிக் கொண்டிருந்தார்கள். ஏழு மணி தாண்டிவிட்டதால் நிழல் மறையும் நேரம். வெள்ளைக்கார உருவங்கள் கூட அன்று தேவிபாரதியாகவே தெரிந்தன. ஒரு பத்து நிமிட நேரம் அலைந்திருப்போம். பொத்தான் பூட்டாத சாம்பல் நிற கோட்டு இரண்டு பக்கமும் விசிற, நீள்சதுர கண்ணாடி அணிந்த மெலிந்த உருவம் ஒன்று வேகமாக நடந்தது. தொலைந்ததை தேடும் நடை இல்லை. விட்டதை பிடிக்க ஓடும் நடை. கையிலே டென்னிஸ் விளையாட்டுக்காரர்கள் காவுவதுபோல நீளமான பை. அது தேவிபாரதியாக இருக்கலாம். நான் அவரைப் படத்தில் பார்த்தது மட்டுமே. கைகளைத் தூக்கி ஆட்டினேன். அவரும் ஆட்டினார். 'Dr.Livingstone, I presume' என்று 140 வருடங்களுக்கு முன்னர் ஸ்டான்லி ஆப்பிரிக்கக் காட்டில் சொன்னதுபோல நானும், 'தேவிபாரதி, அப்படித்தானே?' என்று கேட்டேன். சரித்திரப் பிரசித்திபெற்ற அந்தச் சந்திப்பு 50 மைல் கூட்டுத்தொகை வேகத்தில் நிகழ்ந்தது. நயாகரா ஓசை பஞ்சமத்தில் சூழ, காற்று வீச, அமெரிக்க சந்திரன் ஒளி தர கட்டிப் பிடித்துக்கொண்டோம்.

முதலில் தேநீர் அருந்தினோம். இரண்டு மணி நேரமாக அவரும் அங்கே தான் சுழன்று கொண்டிருந்தார். பலமுறை எங்கள் பாதைகள் ஒன்றை ஒன்று வெட்டிச் சென்றிருக்கலாம். அவரிடம் செல்பேசி இல்லை. அவர் பொதுத் தொலைபேசி கூண்டு ஒன்றைத் தேடி அலைந்திருக்கிறார். செல்பேசிகள் வந்த பிறகு பொதுத் தொலைபேசிகளுக்கு என்ன வேலை என்று அவைகள் அகற்றப்பட்டு விட்டன. சிலரிடம் செல்பேசியை கடன் கேட்டிருக்கிறார். கேட்டவர்கள் எல்லோருமே இந்திய முகம் கொண்டவர்கள். அவர்கள் உதவவில்லை. இறுதியில் ஒரு ஹொட்டலில் நுழைந்து அங்கேயிருந்து எங்களை அழைத்திருக்கிறார். தேவிபாரதி ஒரு தொலைபேசியை தேடிப்பிடிக்க இரண்டு மணி நேரம் எடுத்திருந்தாலும் அவர் அமெரிக்க வாழ்க்கைக்கு முற்றிலும் பழகிவிட்டார். இன்னும் ஒரு மாதம் தங்கியிருந்தாரானால் எங்களுக்கு கனடா திரும்பிப் போவதற்கு குறுக்குப் பாதை ஒன்று சொல்லித் தந்திருப்பார்.

இன்னும் பிரச்சினை முடிந்தபாடில்லை. தொலைந்துபோன இரண்டு நண்பர்களையும்தேடத் தொடங்கினோம். இருவரிடமும் செல்பேசி இருந்தது. ஆகவே, பிரச்சினை இருக்க முடியாது. ஆனால், வரன் தன் செல்பேசியை காருக்குள் வைத்து பூட்




அ.முத்துலிங்கம், டானியல் ஜீவா, தேவிபாரதி, வரன்



படிப்பகம்

டிவிட்டு வந்திருந்தார். புத்திஜீவிகள் அப்படித்தான் செய்வார்கள் என்று நல்ல புத்தகம் சொன்னது. டானியல் ஜீவா ஒரு கடுமையான கொள்கை வைத்திருந்தார். நான் நாலுதடவை செல்பேசியில் அழைத்தேன். செல்வம் ஐந்து தடவை அழைத்தார். பதில் இல்லை. பத்துக்கு மேல்தரம் டெலிபோனில் ஒருவர் அழைத்தால்தான் டானியல் ஜீவா செல்பேசியை வெளியே எடுப்பார். இது பின்னர்தான் எங்களுக்குத் தெரிய வந்தது. நாங்கள் ஐந்துபேரும் ஒன்று சேர்ந்தபோது இரவு மணி பத்தாகிவிட்டது. நான் வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுவேன் என்று மனைவிக்கு சொன்ன நேரம்.

ஆறுதலாக அமர்ந்து பேசுவதற்கு வசதியாக உணவகம் ஒன்றைத் தேடினோம். தேவிபாரதியும் நாங்களும் கூட்டாக 800 மைல் தூரம் பயணம்செய்து வந்து சந்தித்திருக்கிறோம். வீட்டுக்கு எடுத்துப்போவதற்கு ஏதாவது பேசவேண்டும் அல்லவா? தேவிபாரதி மிகவும் உற்சாகமாக இருந்தார். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவருக்கு தமிழ் பேச வாய்ப்புக் கிடைத்திருந்தது. தேவிபாரதி இரவு உணவைச் சாப்பிட்டபடி பேசத் தொடங்கினார்.



அ. முத்துலிங்கம், தேவிபாரதி, செல்வம்

எழுத்தாளர் பட்டறைக்கு பல நாடுகளில் இருந்து எழுத்தாளர்கள் வந்திருந்தார்கள். மிகவும் பயனுள்ள பட்டறை. அதைப்பற்றி விரிவான ஒரு கட்டுரை எழுதப் போவதாகச் சொன்னார். அத்துடன் இந்த இடைப்பட்ட காலத்தில் தான் ஒரு நாவல் எழுதி முடித்துவிட்டதாகக் கூறி எங்களை திகைக்க வைத்தார்.

'அவர் எப்படி எழுத்துத் துறைக்கு வந்தார்?' என்று கேட்டேன். அவருக்கு ஆதர்சம் என ஒருவரும் இல்லை. தானாகவே பயிற்சி எடுத்து முன்னுக்கு வந்தவர். அவருடைய சிறுகதைகள் சில என்னை வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றன. தேவிபாரதி ஆரம்பத்தில் இருந்து ஆரம்பித்தார். அவர் வாழ்நாளில் நடந்த சம்பவங்களை சுவாரஸ்யமாக வர்ணித்தார். இவற்றையெல்லாம் அவர் தன் சுயசரிதை நூலில் ஏற்கெனவே எழுதிவிட்டதால் ஒன்றிரண்டை மாத்திரம் இங்கே பதிவு செய்கின்றேன். மீதியை அவருடைய புத்தகம் வெளியாகும்போது படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

'என்னுடைய தாத்தா பெயர் குமரப்ப பண்டிதர். எங்கள் வம்சாவளியில் முதன் முதல் எழுதப் படிக்கத் தெரிந்தவர் அவர்தான். தாத்தாவின் அப்பா பெயர் வீரப்பன். அவர் பழையகோட்டை ஜமீன் தார் அரண்மனை நாவிதராகப் பணியாற்றினார். ஜமீன்தாரின் மகளை சங்கரண்டாம்பாளையம் ஜமீனுக்கு கட்டிக் கொடுத்திருந்தார்கள். மகளுக்கு பொங்கல் சீர் தந்தை வீட்டிலிருந்து கொடுத்து அனுப்ப வேண்டியது அந்தக் கால வழக்கம். அப்பொழுதெல்லாம் ரோடுகள் இல்லை; தூரம் 50 மைல் இருக்கும். நாவிதர்கள்தான் தலையில் சீர் காவவேண்டும். தாத்தாவின் தலையில் ஈர நாரினால் கட்டப்பட்ட விறகுச் சுமை இருந்தது. பாதி வழியில் நார் வெயிலுக்கு முறுகி அறுந்து விறகு கட்டைகள் சிதறிவிட்டன. அதை திருப்பிக் கட்டவேண்டுமென்றால் முறுகி அறுந்த நாரை மறுபடியும் தண்ணீரில் நனைக்க வேண்டும். அந்த வறண்ட பிரதேசத்தில் தண்ணீருக்கு எங்கே போவது. விறகுக் கட்டைகளை அப்படியே போட்டுவிட்டு காட்டுக்குள் ஓடி தப்பி சித்தர்களுடன் சேர்ந்து எழுதப் படிக்கவும் ஜோதிடம் கணிக்கவும் கற்றுக்கொண்டார். என்னுடைய தாத்தா பின்னர் பள்ளி ஆசிரியர் ஆனார். அவருடைய முன்னுதாரணமும் ஊக்குவிப்பும்தான் என்னை எழுத்து துறைக்கு இட்டு வந்தன.'

இவரிடம் சொந்தமாக பல காதல் கதைகள் இருந்தன. அவற்றையெல்லாம் சொன்னார். ஒரு கதை சுவாரஸ்யமானது. இவர் ஒரு பெண்ணைக் காதலித்தார். ஆனால், அந்தப் பெண் அவரைக் காதலித்தாரா என்பதை கடைசிவரை அறிய முடியவில்லை. இவருக்கு மணமான பின்னர் ஒருநாள் மனைவியுடன் முன்னாள் காதலியின் வீட்டுக்குச் சென்றார். காதலிக்கு இவர் மணமானது தெரியாது. உள்ளே போய் யாரோ ஒருவர் வந்திருப்பதாகக் கூறினார்கள். இவருடைய காதலி 'ஐக்' என்று சத்தமிட்டபடி ஓடி வந்து வெளியே பார்த்தபோது இவர் மனைவியுடன் நின்றார். காதலியின் முகம் வாடிவிட்டது. அந்தப் பெண் தன்னைக் காதலித்தாள் என்ற விசயம் அவருக்கு மணமுடித்த பின்னர்தான் தெரிய வருகிறது.

இப்படிப் பல கதைகள் பேசினோம். இன்னும் நிறைய கதைப்பதற்கு இருந்தது; ஆனால், நேரம் ஓடியது. அவர் மறுபடியும் நயாகராவை சுற்றிப் பார்த்துவிட்டு ரயில் ஏறப்போவதாகச் சொன்னார். நாங்கள் விடை பெற்றுக்கொண்டு திரும்பினோம்.

மைகேல் ஒண்டாச்சி, தன் புத்தகத்தில் சொல்கிறார்; டத்தூரா என்று ஒரு வெள்ளைப்பூ இருக்கிறதாம். அதைப் பறிக்கும்போது சிரித்தால் அன்று முழுக்க சிரிப்பார்களாம்; அழுதால் நாள் முழுவதும் அழுகைதானாம். நாங்கள் அப்படி ஒரு பூவை பிரச்சினை இருக்கும்போது பறித்தோமோ என்னவோ; பிரச்சினை முடியாத நாளாக அது இருந்தது. கனடா தொடங்கும் இடத்தை வந்து அடைந்தபோது பிரச்சினை மறுபடியும் முளைத்தது.

கனடா எங்கள் நாடு; படுத்திருந்த வீட்டு நாய் தலைதூக்கிப் பார்ப்பதுபோல அந்த வெள்ளைக்கார மாது, குடிவரவு அதிகாரி, மேசையிலிருந்த தலையை உயர்த்திப் பார்த்தார். எங்களை இன்முகத்துடன் வரவேற்பார் என்று நினைத்தோம். நடு இரவில் ஒரு வாகனத்தில் நாலு ஆண்கள் திரும்பியது அவருக்குப் பிடிக்கவில்லை. 'எதற்காக அமெரிக்கா போனீர்கள்?' என்று கேட்டார். நாங்கள் அமெரிக்க பக்க நீர்வீழ்ச்சியை பார்ப்பதற்கு போன உண்மையை சொன்னோம். அது பாதி உண்மைதான். நாங்கள் போனது ஒரு முக்கியமான தமிழ் எழுத்தாளரைச் சந்திப்பதற்கு. 'எத்தனை மணி நேரம் பார்த்தீர்கள்?' இது என்ன கேள்வி. நாங்கள் எத்தனை மணி நேரமும் நீர்வீழ்ச்சியை பார்க்கலாம். நீர்கொட்டுவது நிற்கும் வரை கூட பார்க்கலாம். அப்படிச் சொல்லவில்லை. முகத்தை ஆட்டுக் குட்டியின் முகம்போல வைத்துக் கொண்டு, 'நாலு மணி நேரம்' என்றோம். 'ஒரு நீர்வீழ்ச்சியை பார்க்க நாலு மணி நேரமா?' 'ஆளுக்கு ஒவ்வொரு மணித்தியாலமாகப் பார்த்தோம்.' அந்தப் பெண் கோபத்தை பல்லினால் கடித்துக்கொண்டு, இடது கையை நீட்டி அந்தப் பக்கம் போகச் சொல்லி

www.padippakam.com

சைகையில் காட்டினார். பின்னர் வேலைக் களைப்பில் தூங்கப் போய்விட்டார்.

இரண்டு திடகாத்திரமான ஆண்கள் சீருடையில் வந்தார்கள். வாகனத்தைவிட்டு இறங்கச் சொன்னார்கள். ஒருவர் எங்களை தனித் தனியாக விசாரிக்க ஆரம்பித்தார். மற்றவர் வாகனத்தை உதிரிப் பாகமாக விற்கப் புறப்பட்டவர் போல ஒவ்வொரு பகுதியாக பிரிக்கத் தொடங்கினார். ஆசனங்களை கழற்றி திருப்பி போட்டார்; என்ஜின் மூடியை தூக்கி ஆராய்ந்தார்; வாகனத்தின் கீழே குனிந்து பார்த்தார்; பின்பகுதியை திறந்து சோதித்தார்; வாகனத்தின் உள்புறத்துக்குள் பிரகாசமான ஒளியை பாய்ச்சி எதையோ தேடினார். மறுபடியும் அதே கேள்விகள். 'எதற்காக போனீர்கள்.' மறுபடியும் அதே பதில். 'கனடா நீர்வீழ்ச்சியை பார்த்தீர்களா?' 'இல்லை.' (அதை ஏற்கெனவே நூறு தடவை பார்த்து விட்டோம். அன்று பார்க்கவில்லை.)

அதிகாரிக்குப் புரிபடாத விசயம் என்னவென்றால்; நாலு ஆண்கள், நடுச்சாமம் கனடா நீர்வீழ்ச்சியை பார்க்காமல் அமெரிக்காவுள் நுழைந்து, அங்கே நீர்வீழ்ச்சியை பார்த்துவிட்டு திரும்புவது. ஏதாவது ஆயுதம் இருக்கிறதா? இல்லை. போதைப் பொருள்? இல்லை. எவ்வளவு பணம் கொண்டு வருகிறீர்கள்? பத்தாயிரம் டொலர்களுக்கு மேல் காசாக எடுத்துக் கொண்டு வர முடியாது. சட்ட விரோதம். நாங்கள் எங்களிடமிருந்த கூட்டுத்தொகை பணத்தை சொன்னபோது எங்களுக்கு வெட்கம் வந்துவிட்டது. கேட்ட அதிகாரிக்கு இன்னும் கூடுதலான வெட்கம். வேண்டா வெறுப்பாக எங்களுக்கு விடை கொடுத்தார். நாங்கள், நாலு தலைசிறந்த எழுத்தாளர்கள் கனடாவுக்குள் நுழைந்தோம். இத்தனை அவலத்திலும் ஓர் ஆதாயம் இருந்தது. இரண்டு வருடத்துக்கு முன்னர் செல்வம் தொலைத்துவிட்ட ஒரு புத்தகத்தை அதிகாரிகள் வாகனத்தின் ஆசனத்துக்கு கீழ் கண்டுபிடித்து கொடுத்தார்கள்.

நான் வீடு வந்து சேர்ந்தபோது இரவு இரண்டு மணி. எத்தனை பேர் தங்கள் வீடுகளை இரவு இரண்டு மணிக்கு பார்த்திருக்கிறார்கள்? எங்கள் வீட்டு வீதி இவ்வளவு அழகாகவும் அமைதியாகவும் இருந்து நான் கண்டதில்லை. வீதியிலே யாரோ பால் ஊற்றிவிட்டது போல வெள்ளையாக பளிச்சென்று இருந்தது. வீட்டுக்கு முன் இருந்த பூங்காவில் மரங்களின் இலைகள் பொன்னிறமாக மாறிவிட்டன. நயாகராவில் பார்த்த அதே சந்திரன் இங்கேயும் வந்து ஒளி வீசினான். வேட்டைக்கு போய்த் திரும்பும் பழங்காலத்து அரசனின் மனம்போல என் மனமும் வெற்றியிலும் மகிழ்ச்சியிலும் ததும்பியது.

கால்சட்டைப் பையில் இருந்து திறப்பை எடுத்து வீட்டுக் கதவைத் திறக்க முயன்றேன். முடியவில்லை. என்னுடைய திறப்பு; என்னுடைய கதவு. எவ்வளவு முயன்றும் இயலவில்லை. துவாரத்துக்குள் சாவி நுழைவதற்கே மறுத்தது. எந்த ஒரு வீட்டுக் கதவையும் கார் திறப்பு திறக்காது. புறப்படும் அவசரத்தில் தவறான சாவியை பையிலே எடுத்துப் போயிருக்கிறேன். என் வீட்டுக் கதவுக்கு முன் நின்றேன். அங்கே பஃவலோ ஸ்டேசனில் இந்த நேரம் தேவிபாரதியும் தனியாக நின்று கொண்டிருப்பார். அல்லது டென்னிஸ்காரர்களின் நீளப் பையை தூக்கியபடி நயாகராவில் சுழன்று கொண்டிருப்பார். அவருடைய ரயில் மூன்று மணிக்கு வரும். அவர் கெண்ட் ஸ்டேசனுக்கு போய்ச் சேர காலை பத்து மணியாகும்.

வீட்டு அழைப்பு மணியை அடித்தேன். உள்ளே ஒரு சத்தமும் இல்லை. மறுபடி மறுபடி அழைத்தேன். எவ்வளவு விரல் அழுத்தத்தை கூட்டினாலும் மணியின் சத்த அளவு கூடவில்லை. கைகளினால் கதவை ஓங்கி ஓங்கித் தட்டத் தொடங்கினேன். நம்பிக்கை தளர்ந்த நேரம் உள்ளே காலடியோசை கேட்டது. அமெரிக்க நயாகராவின் 'ப' ஸ்வர ஓசைகூட அவ்வளவு மகிழ்ச்சியை எனக்குள் எழுப்பவில்லை.

---



# இர.மணிமேகலை கவிதைகள்

ஓவியம்: நெடுஞ்செழியன்

## 1. உதிர்(க்கப்படு)தல்

கற்களால் உறுதி செய்யப்பட்ட
பிரம்மாண்டக் கோட்டை
துவார பாலகர்களென வாயில் காப்போர்
காக்கை குருவிகளின் சிறகொலி தொலைவில்
பெருஞ்சிற்பங்கள் தாங்கிய கோயிலொன்று
அதன் மூலைமுடுக்குகளின் சுவாசத்தில்
ரகசியங்கள் கசிந்த வண்ணம்
சிற்பிகள் உளிகளுடன் உறவாடி
சிலைகளை வடிக்க எத்தனிக்கிறார்கள்
கோயிலின் பேருரு அச்சுறுத்துகிறது
ஒரு கணத்தில் சிற்பங்கள் உயிர் பெற்றுவிட
அவற்றின் உயிர் சக்தி வற்றி உலர்ந்துபோகிறது
நாக கன்னிகை ஒன்றின் நடனத்தில்
உதிர்ந்த குல்மோகர் மலர்களும்
அதிர்ந்துபோய் கிளைக்குத் திரும்புகின்றன.

## 2. முடிச்சு

இரவு ஆக்கிரமித்திருக்கிறது
அடிவயிற்றின் மிரட்டலில் கண்கள் பிரக்ஞை கொள்ள
மெலிந்த குரலொன்றின் அலைபேசிச் சொற்கள்
மனக்கட்டை அவிழ்த்துச் செவிகளினுள் பாய்கின்றன
விடியலில் சூரியக் கதிர்களினூடாக
வேர்க்கடலைத் தோல்களென
வார்த்தைகள் மிதிபடுகின்றன அறையெங்கும்
இளமையைக் கிளறும் அதன் வீரியம்
மந்திரக்கோலொன்றில் கட்டுண்டு விடுகிறது
வெளியில் சுழல்கின்றன வார்த்தைகளின் ஜாலம்
கசங்கிய அந்த மாலைப்பொழுதின் முடிச்சுக்கள்
பிரிதலுக்கு அப்பாற்பட்டவை
பாதையொன்று சலனமற்று நீள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



# தொல்காப்பியப் பதிப்புரைகளும் ஆதிக்கச் சாதிகளின் அடையாள அரசியலும்

**பொ. வேல்சாமி**

சோழப் பேரரசு எழுச்சி பெற்ற ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலான காலத்தில் பெருவாரியான தமிழ் மக்கள் எழுத்தறிவற்ற 'தற்குறி'களாகத்தான் வாழ்ந்து வந்தனர். மனுநீதியைச் செயல்படுத்துவதுதான் அரசின் குறிக்கோள் என்று சோழப் பெருவேந்தர்கள் அனைவரும் தங்கள் மெய்க்கீர்த்திகளில் பெருமையுடன் குறிப்பிட்டுக் கொண்டதுடன் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுகலந்து வாழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களுக்குத் தனித்தனி குடியிருப்புக்களும் தனித்தனிச் சுடுகாடுகளும் உண்டாக்கிக் கொடுத்தனர். இந்த நிலை நூற்றாண்டு காலங்களாக மாற்றமடையாமல் இருக்க பின்னர் வந்த எல்லா வகையான ஆட்சியாளர்களும் உறுதியாக நின்றனர். இது தமிழ்ச் சமூகத்தில் பலவித மான விளைவுகளை ஏற்படுத்தியது. குறிப்பாக, பார்ப்பனர்களும் சூத்திர சாதிகளில் சுமார் நான்கு அல்லது ஐந்து சாதியினரும்தான் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறுபவர்கள் என்ற நிலைமை உருவானது. 16, 17ஆம் நூற்றாண்டில் கிறித்துவ மதப் பாதிரியார்கள் தமிழ்நாட்டிற்கு வரும் வரையில் ஒரு சிறு மாற்றம்கூட இந்த அமைப்பில் உருவாகவில்லை. எனவே, வடமொழிக் கல்வியும் தமிழ்நூல் கல்வியும் இந்த உயர்சாதிக் கூட்டத்தின் கையில்தான் இருந்தது. பொதுமக்கள் பேசிய தமிழுக்கும் இந்தக் கூட்டத்தின் தமிழுக்கும் இடையே இருந்த மிகப்பெரிய வேறுபாட்டைக் கண்ட பெஸ்கி என்ற வீரமாமுனிவர், 'செந்தமிழ்' என்று உயர்சாதியினர் மொழியையும் 'கொடுந்தமிழ்' என்று பெருவாரியான தமிழ் மக்கள் பேசிய மொழியையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதுபோன்ற ஒரு வரலாற்றுச் சூழலில் சி.வை.தாமோதரம்பிள்ளை, தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பதிப்புரையில் 1885இல் குறிப்பிடும் ஒரு செய்தியையும்; உ.வே.சா. 'என் சரித்திர'த்தில் குறிப்பிடும் ஒரு செய்தியையும் நாம் கவனமாக ஆராய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. சி.வை.தா. கூறுகிறார்: "இவ்வாறு பன்னீராயிர வருஷ காலத்தின் மேற்பட்ட நிலைபெற்றோங்கித் தமிழ்க்கோர் தனிச் சுடர்போல பிரகாசித்து வந்த தொல்காப்பியமுந், தற்காலத்து இலக்கணங் கற்போர் அனைவரும் அதன்வழித் தோன்றிய சிற்றிலக்கணங்களையே கற்று அம்மட்டோடு நிறுத்திவிடுவதால், எழுதுவாரும் படிப்பாரும் இன்றிப் பழம் பிரதிகள் எல்லாம் பாணவாய்ப்பட்டும் செல்லுக்கு இரையாகியும் சிதைவுபட்டுப் போக, யாவராயினும் ஒருவர் வாசிக்க விரும்பிய வழியும் கிடைப்பது அருமையாய்விட்டது. தமிழ் நாடு அனைத்திலும் உள்ள தொல்காப்பியப் பொருளதிகாரப் பிரதிகள் இப்போது இருபது இருபத்தைந்திற்கு மேற்படா. அவையும் மிக்க ஈனஸ்திதி அடைந்திருப்பதால் இன்னும் சில வருசத்திற்குள் இறந்துவிடுமென்று அஞ்சியே அதனை உலக உபகாரமாக அச்சிடலானேன்" என்கிறார்.

உ.வே.சா. என் சரித்திரத்தில் (பக். 532), சேலம் இராமசாமி முதலியார் "சீவக சிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா?" என்று கேட்டதாகவும் உடனே, "அவர் சொன்ன நூல்களை நான் படித்ததில்லை. என்னுடைய ஆசிரியரே படித்ததில்லை. புத்தகத்தைக் கூட நான் கண்ணால் பார்த்ததில்லை" என்ற எண்ணம் ஏற்பட்டதாகவும் நமக்குக் குறிப்பிடுகின்றார்.



வீரமாமுனிவர்



சி.வை.தாமோதரம் பிள்ளை



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் பதிப்பாசிரியத் திலகங்களான சி.வை.தா.வும் உ.வே.சா.வும் இப்படிக் கூறி இருப்பதற்குச் சரியாக நூறு வருடங்களுக்கு முன் (17.04.1785) தமிழ் மொழியின் மிகப் பெரும் ஆளுமையாளரான சிவ ஞான முனிவர் மரணமடைகிறார். இவர் தன்னுடைய விவாத நூல்களான,'சிவஞான போதச் சிற்றுரை', 'சிவஞானபோதப் பேருரை', 'தொல்காப்பியச் சூத்திரவிருத்தி' போன்றவற்றில் தொல்காப்பியத்தை முழுமையான ஆதார நூலாகக் காட்டுவதுடன் சூத்திர விருத்தியில் தொல்காப்பியம் முழுமையையும் அலசி ஆராய்ந்து விவாதிக்கிறார். இந்த ஆராய்ச்சிக்கு ஆதாரமாகப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்களைப் பெயர்களுடன் மேற்கோள் காட்டுவதுடன் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களின் பல பகுதிகளை, தன் கூற்றுக்களை நிறுவுவதற்கு எடுத்துக்காட்டாகத் தருகின்றார்.

சிவஞான முனிவரின் முன்தலைமுறையினரும் 17, 18ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களுமான 'இலக்கண விளக்கம்' ஆசிரியர் வைத்தியநாத தேசிகர், 'இலக்கணக் கொத்து' எழுதிய சாமிநாத தேசிகர், 'பிரயோக விவேக' ஆசிரியர் சுப்பிரமணிய தீட்சிதர், நன்னூல் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் போன்றவர்கள் தொல்காப்பியத்தையும் சங்க நூல்களையும் ஐம்பெரும் காப்பியங்களையும் மற்றும் பல பழைமையான தமிழ் நூல்களையும் மிகச் சாதாரணமாக விளக்கி எழுதுவதுடன், ஏராளமான பகுதிகளை மேற்கோளாகவும் குறிப்பிட்டு எழுதுகின்றனர். தவிரவும் இத்தாலி நாட்டிலிருந்து இங்கு வந்த பெஸ்கி என்ற வீரமாமுனிவர் தன்னுடைய 'செந்தமிழ்' நூலில் பழந்தமிழ் நூல்கள் பலவற்றின் பாடல்களை மேற்கோள் காட்டுவதுடன் சீவக சிந்தாமணிப் பாடல்களைச் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் எடுத்துக்காட்டாகத் தருகின்றார். இவ்வாறாக, 18ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் பரவலாகப் படிக்கப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வந்துள்ள இந்நூல்கள் திடீரென்று 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் மறைந்து போனது என்று சொன்னால் அதில் என்ன நியாயம் இருக்க முடியும். கிடைக்கும் தகவல்களைச் சரியான முறையில் ஆராய்ந்து பார்க்கையில் பழந்தமிழ் நூல்கள் மறைந்து விடவில்லை என்பதும் அவை இது காலம் வரையில் படிக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வந்த உயர்சாதியினரால் புறக்கணிக்கப்பட்டதாகத்தான் தெரிகின்றது. அவர்கள் இந்நூல்களைப் புறக்கணித்தது ஏன்?

கி.பி. 1800, தென்னிந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையான காலம். திப்பு சுல்தான் கொல்லப்பட்டு மைசூர்ப் பகுதிகளும்; வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், ஊமைத்துரை, திண்டுக்கல் பகுதியில் ஆண்டு வந்த ஜமீன்தார்கள் வெற்றி கொள்ளப்பட்டு கொல்லப்பட்டு விட்டதனால் இவர்களது பகுதிகளும் என தென்னிந்தியா முழுமையும் கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுகைக்குள் வந்துவிட்டது. எனவே, முன்பு நிலவி வந்த நிர்வாக அமைப்புக்கள் மாற்றி அமைக்கப்பட்டு ஆங்கிலேயர்களின் நிர்வாக அமைப்பிற்குள் கொண்டு வரப்பட்டன. இதற்கான நிர்வாகத்தின் இரண்டாம், மூன்றாம் நிலை அதிகாரிகளாகவும் ஊழியர்களாகவும் பணி அமர்த்துவதற்காக உள்நாட்டு மக்களிடமிருந்து ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தகையவர்களுக்கான பயிற்றுமொழி என்பது ஆங்கிலமாக இருந்தது. எனவே, இத்தகைய பயிற்சியைத் தருவதற்காக ஆங்கிலேயர்களாலும் கிறித்துவ மிஷினரிமார்களாலும் பள்ளிகளும் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. "1837ஆம் ஆண்டு அந்தர்சன் என்ற பாதிரியாரால் தொடங்கப்பட்ட 'அந்தர்சன் பள்ளிக் கூடம்'தான் இன்று சென்னையிலுள்ள 'கிறித்துவக் கல்லூரி". (1)

இதேபோன்று, "1841ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் சென்னையில் மாநில ஆட்சித் தலைவருடைய தலைமையில் செல்வந்தர்களும் அறிஞர்களும் ஆட்சிப் பகுதி நீதிப் பகுதிகளின் தலைவர்களும் கூடிய ஆயிரத்தைந்நூறுவர்க்கு மேற்பட்ட ஒரு சிறந்த கூட்டத்தில் உயர்நிலைக் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு கல்வி நிலையம் நிறுவப் பெற்றது. இது முன்னரே அமைந்திருந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை அடிப்படையாகக் கொண்டது. சென்னை மாநிலக் கல்லூரிக்கும் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் அடிப்படையாக உள்ளது." (2)

"அமெரிக்க சமய சங்கத்தாரால் 1842ஆம் ஆண்டு திருமங்கலத்தில் தொடங்கப்பெற்ற கல்வி நிலையம், நாளடைவில் வளர்ந்து இப்போதைய 'அமெரிக்கன் கல்லூரி'யாக மதுரையில் புகழ்பெற்று நிலவுகின்றது." (3)

இத்தகைய கல்விக் கூடங்களில் தங்கள் குழந்தைகளைக் கல்வி பயில அனுப்பிய உயர்சாதியினர் தலைமுறை தலைமுறையாகத் தாங்கள் கற்று வந்த தமிழ்க் கல்வியைப் புறந்தள்ளினர். இதன்விளைவாகப் பழந்தமிழ் நூல்கள் பல ஓரங்கட்டப்பட்டன.

கி.பி. 1815ஆம் ஆண்டு கண்டி அரசு வீழ்த்தப்பட்டவுடன் இலங்கை முழுமையும் ஆங்கிலேயர்களின் ஆட்சியுள் வந்துவிட்டது. இந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதிகளில் வெஸ்லியன் மிசன், சர்ச் மிசன், அமெரிக்கன் மிசன் போன்ற கிறித்துவ நிறுவனங்கள் ஆங்கிலவழிக் கல்விக் கூடங்களை நிறுவின. (4) யாழ்ப்பாணப் பகுதிகளில் கிறித்துவ மதத்தினராக மாற்றப்பட்ட பல் வேறு தமிழ்பேசும் சாதியினரும் இக்கல் விச் சாலைகளில் பயின்று அரசு அதிகாரி களாக உயர்நிலை



ஆறுமுக நாவலர்



உ.வே.சாமிநாத ஐயர்

**அமெரிக்க சமய சங்கத்தாரால் 1842ஆம் ஆண்டு திருமங்கலத்தில் தொடங்கப்பெற்ற கல்வி நிலையம், நாளடைவில் வளர்ந்து இப்போதைய அமெரிக்கன் கல்லூரியாக மதுரையில் புகழ்பெற்று நிலவுகின்றது**



படிப்பகம்

www.padippakam.com


பெறுவதைக் கண்ட உயர் சாதியினரான யாழ்ப்பாணத்து வெள்ளாளர்களில் பலர் மதம் மாறியதுடன் தங்கள் குழந்தைகளையும் பாரம்பரியமான தமிழ்க் கல்வி பயிற்றுவிப்பதிலிருந்து விலக்கி இத்தகைய ஆங்கிலப் பள்ளிகளில் சேர்த்தனர். தமிழ்நாட்டைப் போலவே ஈழத்திலும் பாரம்பரியமான தமிழ்க்கல்வி புறந்தள்ளப்பட்டது. இதன்விளைவாகப் பழந்தமிழ் நூல்கள் பல செல்லுக்கு இரையாகி அழிவைநோக்கித் தள்ளப்பட்டன. (5)

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் சுதேசிகளான உயர்சாதியினரால் பதவிகளுக்காகவும் பிழைப்பிற்காகவும் புறந்தள்ளப்பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாகப் போன 'செந்தமிழைச் சாகவிடாமல் காத்தவர்கள் விதேசிகளான, எல்லிஸ் (1812) முதலான அதிகாரிகளும்; துறு (1840 – 1852), சார்லஸ் கிரால் (1855), கால்டுவெல் (1856), ஜான் மொர்டாக் (1865), பவார் (1868) முதலான பாதிரிமார்களும்; சாமுவேல் பிள்ளை (1858), சைமன் காசிச்செட்டி (1859) முதலான கிறித்துவர்களாக மாறிப் போன தமிழர்களும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

தமிழ்மொழியின் கவிதைச் சிறப்பை அழகாக வெளிப்படுத்திய சீவக சிந்தாமணியை 'கவிதை இளவரசன்' என்று 18ஆம் நூற்றாண்டிலேயே வீரமாமுனிவர் என்னும் பெஸ்கி பாதிரியார் போற்றினார். இதனை உணர்ந்து மகிழ்ந்த 19ஆம் நூற்றாண்டு அயலக கிறித்துவத் துறவிகள் தங்களுடைய புனித நூலான விவிலியத்தின் வாசகங்கள் திருக்குறளில் தமிழ்க் கவிதைகளாக மலர்ந்திருப்பதைக் கண்டு வியந்து நின்றனர். இத்தகைய உற்சாகம் கொடுத்த தூண்டுதல் கால்டுவெல்லை உலகின் பழைமையான செம்மொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழி விளங்குவதை உலகிற்கு உணர்த்த ஒப்பிலக்கணம் எழுத வைத்தது. இத்தகைய தொடர் நிகழ்வுகளின் தாக்கத்தினால் ஆங்கில அரசாங்கம் சீவக சிந்தாமணியில் 397 பாடல்களையும் சிலப்பதிகாரத்தின் சில பகுதிகளையும் திருக்குறளின் பல அதிகாரங்களையும் அன்றைய பி.ஏ. பாடத் திட்டத்தில் சேர்க்க வைத்தது.

1821இல் சரபோசி மன்னன் ஆங்கிலேய உயர் அதிகாரி ஒருவரை காசியில் சந்திக்கிறார். தமிழ்நாட்டின் ஒரு பகுதியின் அரசர் என்பதால் அந்த அதிகாரி திருக்குறளைப் பற்றிக் கேட்கின்றார். (லத்தீன், செர்மன், ஆங்கில மொழிகளில் திருக்குறள் வெளிவந்துவிட்ட காலம் அது. எந்த மொழியில் அந்த ஆங்கில அதிகாரி திருக்குறளைப் படித்திருந்தார் என்பதை நம்மால் அறியமுடியவில்லை.) சரபோசிக்கு அவர் என்ன கேட்கிறார் என்பதே புரியவில்லை. இருந்தாலும் சமாளித்து 'எங்கள் நூலகத்தில் பல நூல்கள் உள்ளன. பார்த்துச் சொல்லுகிறேன்'

கால்டுவெல்





மறைமலை அடிகள்

**தமிழ்மொழியின் கவிதைச் சிறப்பை அழகாக வெளிப்படுத்திய சீவக சிந்தாமணியைக் 'கவிதை இளவரசன்' என்று 18ஆம் நூற்றாண்டிலேயே வீரமாமுனிவர் என்னும் பெஸ்கி பாதிரியார் போற்றினார். கிறித்துவத் துறவிகள் தங்களுடைய புனித நூலான விவிலியத்தின் வாசகங்கள் திருக்குறளில் தமிழ்க் கவிதைகளாக மலர்ந்திருப்பதைக் கண்டு வியந்து நின்றனர்.**

என்று கூறிவிடுகின்றார். தமிழ்நாடு திரும்பியவுடன் இவ்வளவு நாட்கள் தான் தமிழ் நூல்களில் கவனம் செலுத்தாதது சரியில்லை என்று கருதி அதன்பின்னர் 'சரஸ்வதி மகால்' நூலகத்தில் தமிழ்ச் சுவடிகளையும் நூல்களையும் சேர்த்தார் என்றும், அந்த ஆங்கில அதிகாரிக்கும் தக்கவர்கள் மூலம் திருக்குறளை அனுப்பி வைத்தார் என்றும் உ.வே.சா. தன்னுடைய கட்டுரை ஒன்றில் எழுதி இருக்கிறார்.

ஆறுமுக நாவலரின் உடன்பிறந்தவர்கள் எல்லாம் ஆங்கிலம் படித்து உயர் பதவிகளுக்குப் போனவர்கள். நாவலர் மட்டும் புறக்கணிக்கப்பட்ட தமிழையும் சைவத்தையும் மீட்டெடுக்க உறுதிகொண்டு பதவிகளுக்கு ஆசைப்படாமலும் திருமணம் செய்து கொள்ளாமலும் வாழ்ந்தார். இதே போன்று உ.வே.சா.வின் தந்தையாரிடம் அவருடைய உறவினர்களும் நண்பர்களும் உ.வே.சா. தமிழ் படிப்பதை விரும்பாமல் ஆங்கிலம் படிப்பதுதான் வாழ்வில் ஏற்றத்தைக் கொடுக்கும் என்று வற்புறுத்தியதாகவும் உ.வே.சா. என் சரித்திரத்தில் எழுதுகிறார்.

இலங்கையில் அரசியல் அதிகாரம் ஆங்கிலேயர்களிடம் சென்றுவிட்டது. பண்பாட்டு மேலாண்மை மட்டும்தான் வெள்ளாளர்களிடம் இருந்தது. இந்தப் பண்பாட்டு மேலாண்மையும் கிறித்துவ மதப் பரவலால் கேள்விக்குள்ளாகும் நிலை ஏற்பட்டது. இதனைத் தக்கவைக்க வேண்டுமானால், அதற்கு சைவ சமயத்தைத் தக்கவைக்க மக்களிடம் பிரசாரம் மேற்கொள்ள வேண்டும். சைவம் சார்ந்த நூல்கள் ஆதாரமாக இருப்பதால் அந்த நூல்களை அச்சிட்டு மக்களிடம் பரப்ப வேண்டும். ஆறுமுக நாவலர் தங்கள் சாதியினரின் மேலாண்மையை நிலைநிறுத்தும் பணியில் தன்னையே ஒப்படைத்துக் கொண்டார். இதன் விளைபொருளாக சைவ சமயத்திற்கு வலுவூட்டும் நூல்கள் நாவலரால் பதிப்பிக்கப்பட்டன. ஆனால், சங்க இலக்கியங்கள் பலவும் நாவலரால் விரைவில் வெளியிடப்படும் என்று திருக்கோவையார் நூலின் கடைசிப் பக்கத்தில் விளம்பரப் படுத்தப்பட்டிருந்தும் சங்க நூல்கள் மதம் சாராதவைகளாக இருந்தமையால் கடைசி வரை அவர் அந்நூல்களை வெளியிடவில்லை. அவருடைய திருக்குறள் பரிமேலழகர் உரைக்குப் பின்னர் வெளியிடப்பட்ட மூன்றாம் பதிப்பிலும் சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், தொல்காப்பியம் போன்ற நூல்கள் பல பக்கங்களில் அடிக் குறிப்புகளாக நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் குறிப்புகள் இடம் பெற்ற காலத்தில் முற்கூறப்பட்ட எந்த நூலும் இன்னும் அச்சில் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இதே காலகட்டத்தில் இலங்கையில் கிறித்துவர்களான சி.வை.தாமோ



படிப்பகம்


www.padippakam.com


தரம்பிள்ளை, சைமன் காசிச் செட்டி, அ.சதாசிவம்பிள்ளை என்ற ஜே.ஆர்.அர்னால்டு போன்றவர்கள் வேறுவிதமான சிந்தனை கொண்டவர்களாக உருவாயினர். இவர்கள் ஐரோப்பிய வரலாறு, கிரேக்கத் தத்துவம், நவீன அறிவியல் போன்ற பாடங்களை ஆங்கிலம் வழியாகப் பயின்றவர்கள். அத்துடன் 1856இல் வெளியான கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூலின் தாக்கத்தினால் தமிழ்மொழியின் சிறப்பையும்; மொழியும் கலாசாரமும்தான் ஒரு இனத்தை அடையாளம் காட்டும் கூறுகள் என்பதையும் உணர்ந்தவர்களாயினர். தமிழர்களின் வரலாற்றை உருவாக்கிப் புலவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை காசிச் செட்டியும் சதாசிவம்பிள்ளையும் தொகுத்தனர். தமிழ்மொழியின் தொன்மையையும் இலக்கணச் சிறப்பையும் வெளிப்படுத்தும் தொல்காப்பியத்தை வெளியிடுவதில் சி.வை. தா. தன் கவனத்தைச் செலுத்தினார். கலித்தொகைப் பதிப்புரையில், "சீமான்களே! இவ்வாறு இறந்து ஒழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கினும் மனம் தளம்புகின்றதே! தமிழ்மாது நும் தாய் அல்லவா! இவள் அழிய நமக்கேன் என்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம் மாதாபிமானம் பாஷாபிமானம் என்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையா! இதனை தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக" என்று கூறுவதன் மூலம் மதம் சாராத தொல்காப்பியம் சங்க இலக்கியங்களை தமிழ் இனத்தின் அடையாளமாகக் காட்டுகின்றார் சி.வை.தா.

இதே காலத்தில் தமிழ் நாட்டின் நிலைமை வேறாகக் காட்சியளிக்கின்றது. கலித்தொகை தவிர்த்து சங்க நூல்கள் அனைத்தையும்; சிலம்பு, மணிமேகலை, சிந்தாமணி ஆகிய காப்பியங்கள் எல்லாம்; உ.வே.சா, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், அரங்கசாமி ஐயங்கார், ராஜகோபாலாச்சாரியார், ரா.ராகவையங்கார் போன்ற பார்ப்பனத் தமிழ் அறிஞர்களால்தான் அச்சில் வெளிவருகின்றன. சமஸ்கிருதத்தை சடங்கு மொழியாகக் கொண்டிருந்த பார்ப்பனர்கள் தங்கள் தாய்மொழியாகத் தமிழ்மொழியைத்தான் கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயரின் ஆட்சியும் ஆங்கிலக் கல்வியும் இந்தியச் சமுதாயத்தில் பெருமளவிலான மாற்றங்களை ஏற்படுத்தியது. நீதிபதிகள், போலீஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், பொறியாளர்கள், தபால் ஊழியர்கள், இரயில்வே ஊழியர்கள், பள்ளி கல்லூரி ஆசிரியர்கள், ஆலைத் தொழிலாளர்கள், நகர் சார்ந்த வணிகர்கள் என்ற ஒரு மத்தியதர வர்க்கத்தை உருவாக்கியது. இந்த வகையான மக்கள் பெரும்பாலும் நகர் சார்ந்தும் மாத ஊதியம் பெறுவோராகவும் இருந்தனர். அரசு அதிகாரத்தின் ஒரு பகுதியையும் சமூக அதிகாரத்தையும் புதிதாகப் பெற்றுக்கொண்ட இந்த சாதிகள் தனக்கான பாரம்பரியத்தையும் தத்துவப் பின்புலத்தையும் தேடியது. நிர்வாக அறிவும் இலக்கியப் பாரம்பரியமும் வரலாறும் இல்லாத அடிமை மக்கள் இந்தியர்கள் என்று ஆளும் வெள்ளையர்கள் சொன்னதற்குப் பதில் சொல்லத் துடித்தது. இதன் விளைவாக இந்தியா முழுமையும் பல செயல்பாடுகள் உருவாகத் தொடங்கின. ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், தினசரி பத்திரிகைகள், நாவல்கள் போன்றவை இந்த வர்க்கத்தினரால் உருவாக்கப்பட்டன. இதன் ஒரு பகுதியாக பழம்பெருமை கொண்ட

வையாபுரிப் பிள்ளை





பெரியார்

**சமஸ்கிருதத்தைச் சடங்கு மொழியாகக் கொண்டிருந்த பார்ப்பனர்கள் தங்கள் தாய்மொழியாகத் தமிழ்மொழியைத்தான் கொண்டிருந்தனர்.**

நூல்களும் அச்சிட்டு வெளியிடப்பட்டன. தமிழ்நாட்டில் 1876இல் முதல் நாவல் வெளிவந்ததும்; ஹிந்து, சுதேசமித்திரன் பத்திரிகைகள் வெளியிடப்பட்டதும்;தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் அச்சில் வெளிவந்த காலத்தை அடுத்தே இருப்பதை கவனிக்க வேண்டும். ஒரே சிந்தனையின் பல்வேறு வெளிப்பாடுகள் இவை. இதனைச் செயல்படுத்திய மனிதர்கள் உயர்சாதிகளைச் சேர்ந்தவர்கள்தான் என்றாலும் மிட்டாமிராசுகள் என்னும் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதும் கவனிக்கத்தக்கது. சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே.சா., பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், சௌரிப் பெருமாள் அரங்கனார், ரா.ராகவையங்கார், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (அகநானூறு), பவானந்தம் பிள்ளை போன்றவர்கள் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து அதிகாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் உருவானவர்கள். தங்கள் பாரம்பரியத்தை மீட்டெடுப்பது என்ற குறிக்கோள் மட்டும்தான் இவர்களிடம் இருந்தது. தங்களது கல்வியறிவைப் பயன்படுத்தி 1880களிலிருந்து 1920 காலகட்டத்தில் அதனை இவர்கள் செய்து முடித்தார்கள். 1920க்குப் பின்னர் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் வெளியிட்டவர்கள் இந்த நூல்களைத் தங்களுடைய அதிகாரத்திற்கான அரசியல் ஆதாயமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். (கைலாசபதி)

(இந்த இடத்தில் தோழர்கள் ஒரு விசயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழக வரலாற்றில் இந்த ஆதிக்க சாதிகளின் செயல்பாடுகள் எவ்விதம் அமைந்திருந்தன என்று காட்டுவதுதான் நமது பணியாக இருக்க முடியும். இந்த சாதிகளில் எவை நல்லவை எவை கெட்டவை என்று பிரிப்பது நமது வேலையில்லை. அவ்வாறு பிரிக்க முயன்றால் அது, "எரியும் கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி" என்று கூறுவதாகத்தான் அமையும். அத்துடன் கல்வியையும் சடங்கையும் கைக்கொண்டு பார்ப்பனர்கள் ஆதிக்கம் செலுத்தினாரென்றால்; அதிகாரத்தையும் அதன் வழியாக சுருட்டப்பட்ட செல்வத்தையும் கொண்டு பார்ப்பனரல்லாத சாதிகள் சிலவும், வணிகத்தையும் வங்கிகளையும் கைக்கொண்டு பெருஞ் செல்வம் திரட்டிய சாதிகள் சிலவும், குறிப்பிட்ட நிலப்பரப்பில் பெரும்பான்மையினராக வசிப்பதால் இன்றைய அரசியல் அமைப்பில் அதிகாரத்தை கைக்கொள்ளவும் அல்லது அதிகாரத்தில் உள்ள சாதிகளுடன் பேரம்பேசுவதில் வல்லமை பெற்ற சாதிகளும் இன்று அரசியல் அதிகாரம் பெற்று பெரும்பான்மையினரான தமிழ்ச் சாதிகளை ஒடுக்கியும் சுரண்டியும் வருவதுதான் எதார்த்தமான நிலைமையாக உள்ளது.)

1920இல் ஆங்கிலேயர்களால் இந்தியாவில் பெரும் அரசியல் மாற்றம் ஏற்படுத்



படிப்பகம்

www.padippakam.com

தப்பட்டது. அது தேர்தலின் மூலமாக இந்தியர்களுக்கு அரசியல் அதிகாரத்தில் குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்கித் தருவது. அது வரைக்குமான காலத்தில் சோழர்களோ பாண்டியர்களோ நாயக்கர்களோ மராட்டியர்களோ (ஆங்கிலேயர்களோ) தமிழ்நாட்டின் அரசர்களாக இருப்பார்கள். ஆனால், குடிமைச் சமுதாய (சிவில் நிர்வாகம்) நிர்வாகம் என்பது உயர் சாதியினர் கையில்தான் இருந்தது. அதிலும் இரண்டு வகை செயல்பாடுகள் நடைமுறையில் இருந்தன. சனாதன தர்மத்தைக் காப்பவர்கள் என்ற நிலையில் நீதி நிர்வாகம் என்பது பார்ப்பனர்கள் கையிலும், அதனை செயல்படுத்தித் தருபவர்களாக உயர்சாதி சூத்திரர்களும் இருந்தனர். இன்றைய மொழியில் கூறுவதனால் நீதிமன்றம், நீதிபதி என்பவர்கள் பார்ப்பனர்கள், அதனை செயல்படுத்தும் காவல்துறை போன்றவர்கள் உயர்சாதி சூத்திரர்கள். ஆங்கிலேயர்களின் நுழைவுக்குப் பின்னர் இத்தகைய நடைமுறைகள் மாற்றமடையத் துவங்கினாலும் அந்த அமைப்புமுறை முற்றிலுமாகக் கலைந்து விடவில்லை. இந்த உரிமைகள் என்பன பரம்பரையாக வந்ததினால் இதில் போட்டியாளர்களும் இல்லை. ஆனால், தேர்தல் முறையிலான அதிகாரம் என்பது போட்டியாளர்களை உருவாக்கியது. உயர்சாதிகள், பாரம்பரியம் என்பது கலைக்கப்படவில்லை என்றாலும் முன்காலங்களைப் போன்று நோகாமல் அதிகாரத்தை அடைய முடியாது என்ற நிலை ஏற்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை அதுவரையில் அதிகாரத்தை அனுபவித்து வந்த கூட்டாளிகளான பார்ப்பனர்களுக்கும் உயர்சாதி சூத்திரர்களுக்கும் போட்டி மனப்பான்மை ஏற்பட்டது. எனவே, வரலாற்றுக் காலம்பூராவும் கூட்டாளிகளாக இருந்து வந்த பார்ப்பனர்களுக்கும் உயர்சாதி சூத்திரர்களுக்கும் இடையே போட்டி மனப்பான்மை பல வழிகளில் வெளிப்பட்டது. பொதுமக்கள் பார்வையில் இருசாதியினரும் பகைவர்களோ என்ற எண்ணத்தைக் கூட சில காலங்களில் தோற்றுவித்தது. தங்களுடைய போட்டியாளர்களைத் தோற்கடிக்க பல செயல்கள் அக்காலங்களில் நடந்தேறின. கருத்தியல் தளத்தில் நடந்த இத்தகைய போட்டி என்பது இலக்கியம், வரலாறு, சமயம் போன்றவற்றில் பிரதிபலித்தன.


இத்தகைய செயல்பாடுகளில் அக்காலத்தில் முன்னணியில் நின்றவர்கள் இருவர். ஒருவர் நாகை வேதாசலம் பிள்ளை என்ற மறைமலையடிகள், மற்றவர் கா.சுப்ரமணிய பிள்ளை. 1920 வரையில் தொல்காப்பியத்தையோ சங்க இலக்கியங்களையோ தங்கள் கவனத்தில்கூட கொள்ளாமல் சைவ சிந்தாந்த நூல்களையும் சைவம் சார்ந்த பிரபந்த நூல்களையும் பதிப்பித்தும் பாராட்டியும் வந்தனர். தொல் காப்பியத்திற்கும் சங்க நூல்களுக்கும் காப் பியங்களுக்கும்; தமிழ்நாட்டில் பரவலான ஏற்பும் அதனால் இந்நூல்களுக்கு சந்தை யில் ஒரு மதிப்பும் ஏற்பட்டதை புரிந்து கொண்ட இவர்கள் மெல்ல மெல்ல சைவநூல்கள் போன்று இந்நூல்களை யும் தங்களுடைய மதத்திற்கு மட்டுமே சொந்தமானது என்று சொல்வதற்கான கதைகளைப் புனைந்தனர். சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்ற வணிக நிறுவனங்களைத் தொடங்கி இச்சூழ்நிலை களை தங்கள் வணிக லாபத்திற்கும் பயன் படுத்திக் கொண்டனர். இத்தகைய வணிக நோக்கம் சற்றும் இல்லாமல் தமிழ்த்தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட மதுரை தமிழ்ச் சங்கத்தை 10.10.1926 குடிஅரசு இதழில் தாக்கியும் எழுதியுள்ளார். 31.1.1926 குடியரசில் இத்தகைய செயல்பாடுகளுக்கு, "கடவுள் அனுகிரகம் புரியட்டும்" என்று ஈ.வே.ரா பெரியார் எழுதியதாகவும் குறிப்பு உள்ளது கவனிக்கத்தக்கது.

இவர்களுடைய இத்தகைய கருத்தியல் நடவடிக்கைகளுக்கு பழைய இலக்கியங்களிலும் அந்த நூல்களுக்கான உரைகளிலும் பல இடங்களில் இடையூறு விளைவிக்கும் செய்திகள் பல நிறைந்திருந்தன. பாரம்பரியமான இந்தச் செய்திகளை மறுப் பதோ மறைப்பதோ அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. எனவே, இத்தகைய செய்திகள் தமிழுக்கு எதிரிகளானவர்களால்தான் உருவாக்கப்பட்டது என்று எழுத ஆரம்பித்தனர். அத்தகையவர்களாக முதுகுடுமிப் பெருவழுதிக் காலம் முதல் வேதங்களுடனும் வேள்விகளுடனும் இவர்களுக்குத் துணையாக நின்று, சைவ சிந்தாந்தம் என்ற கருத்தியல் உருவாக துணையாக நின்று, சூத்திரர்களான இவர்களுக்கு குருநாதர் அந்தஸ்தும் கிடைக்க வழி வகுத்த பார்ப்பனர்களையே எதிரிகளாக்கினர். (ஆனால், சைவ சிந்தாந்தத்தின் விளைபொருளாக உருவான தருமபுரம் திருவாவடுதுறை போன்ற மடங்கள் பார்ப்பனர்களை ஒதுக்கி எதிரிகளாக்குவதை இன்றுவரை ஏற்கவில்லை என்பதும் குறிப்படத்தக்கது.)

தொல்காப்பியத்தைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் வரலாறு கூறுகின்ற செய்திகள், தொல்காப்பியரின் இயற்பெயர் திரணதுமாக்கினி என்பது, தொல்காப்பியத்துள் வருகின்ற வேதங்கள் பற்றிய குறிப்புக்கள், நால்வகை வருணங்கள் பற்றிய செய்திகள் அகத்தியர் பற்றிய கதைகள் போன்றவை இவர்களை இடையூறு செய்தன. இத்தகையவற்றிற்கு மாற்றுக் கதைகளை புனைந்து பரப்புவதற்கு முனைந்தனர். 1923இல் சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் த.கனகசுந்தரம் பிள்ளையைக் கொண்டு தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரையை வெளியிட்டனர். அதற்கு அணிந்துரை ஒன்று கா.சுப்பிரமணிய பிள்ளை எழுதினார். அதில் முன் கூறப்பட்டுள்ள கதைகளை

ராஜாஜி





வ.உ.சி.

**தொல்காப்பியத்தைப் பொறுத்த வரையில் தொல்காப்பியர் வரலாறு கூறுகின்ற செய்திகள், தொல்காப்பியரின் இயற்பெயர் திரணதுமாக்கினி என்பது, தொல்காப்பியத்துள் வருகின்ற வேதங்கள் பற்றிய குறிப்புக்கள், நால்வகை வருணங்கள் பற்றிய செய்திகள் அகத்தியர் பற்றிய கதைகள் போன்றவை இவர்களை இடையூறு செய்தன.**



படிப்பகம்


www.padippakam.com

மறுத்து புதிய கதைகளைப் புனையும் வேலையை செய்கின்றார். தங்களுடைய கருத்துக்களுக்கு சாதகமான கருத்துக்களை பழைய உரையாசிரியர்கள் கூறும்போது சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் கூறுவதை எடுத்துக்கொண்டு, "அவர் கூறியுள்ளதற்குச் சான்று காட்டாத போதினும் அவர் அதனைப் புனைந்துரையாகக் கூறினார் என்று கருத இடமில்லை. பெரும்பான்மையும் பண்டையத் தமிழ் உரையாசிரியர்கள் நூல் பிரமாணம் இல்லாமல் யாதும் கூறுவதில்லை. சரித்திர ஆராய்ச்சியும் இல்லாத அக்காலத்தில் கால முறையைக் கருதாமல் முன்நடந்ததைப் பின்னாகவும் பின் நடந்ததை முன்னாகவும் அவர்கள் தொகுத்துக் கூறியிருத்தல் கூடுமே அன்றிப் புதுவதாக புனைதல் கிடையாது" என்று; தனக்கு சாதகமாக கருத்து இருந்தால் சான்று காட்டத் தேவையில்லை என்று எழுதுகின்ற அவரே, அதே கட்டுரையில் அடுத்த சில பக்கம் சென்றவுடன் தான் விரும்பாத கருத்தை அதே உரையாசிரியர்கள் கூறுகையில், "ஆசிரியர் காப்பியக் குடியைச் சேர்ந்தவர் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றார்கள். ஜமதக்கினியார் புதல்வர் ஆசிரியர் என்பதற்கு நச்சினார்க்கினியர் பிரமாணம் (சான்று) யாதும் காட்டவில்லை. தொல்காப்பியரது இயற்பெயர் திரணதுமாக்கினி என்தற்கும் உரையானவை (சான்று) இன்னும் வெளிப்படவில்லை ஜமதக்கினி புதல்வர் என்று கொண்டால் தொல்காப்பியர் ஆரியரென்று வலியுறும். அதற்கு பிரமாணம் இன்னையின் அதனை வலியுறுத்தவும் இடமில்லை".

தங்கள் புதுப்புனைவுகளுக்கு ஆதரவான செய்திகளை உரையாசிரியர்கள் கூறினால், அதற்கு ஆதாரம் இல்லை என்றாலும், அதனை ஏற்பதும்; தங்கள் கருத்திற்கு மாறான செய்திகள் இருந்தால், அதற்கு ஆதாரம் இல்லை என்று இரட்டை வேடம் போடுவதையும்; கவனிக்கவேண்டுகின்றேன். அடுத்தவந்த காலங்களில் நாவலர் சோம சுந்தர பாரதியார், பேராசிரியர் வெள்ளை வாரணன் போன்றவர்கள் தொல்காப்பியம் தொடர்பாக தங்களுக்குத் தோதான புனைவுகளை உருவாக்கிச் சென்றதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களைப் போன்றவர்களில் ஒருவரேனும் தொல்காப்பியப் பதிப்புப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் இல்லை. அத்தகைய பணிகளை அதே காலத்தில் முழுமையாக செய்தவர்கள் அறிஞர் வையாபுரிப் பிள்ளை, தேசத் தொண்டர் வ.உ.சிதம்பரம் பிள்ளை, யாழ்பாணம் கணேசய்யர் போன்றவர்கள்தான். இந்த அறிஞர்களின் பணிகளை பெயர் குறிப்பிடாமல் களவாடிக் கொண்ட தொல்காப்பியப் பதிப்புகள்தான் மறைமலையடிகள் போன்றவர்களின் கருத்துகளை ஏற்றுக்கொண்டவர்கள் செய்த பணி. (7) பேராசிரியர் வையாபுரிப்

**பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் தொல்காப்பிய பதிப்புப்ப ணிக்கு பின்னரும் தொல்காப்பிய மூலத் திலும் இளம்பூரணர் உரை போன்ற வற்றிலும் ஒழுங்கு செய்யப்பட வேண்டிய பல பகுதிகள் இருந்தன. இத்தகைய பணிகளை, 'அடிகளாசிரியர்' போன்ற சிலர் செம்மையாக செய்து முடித்தனர்**




பிள்ளையின் தொல்காப்பியப் பதிப்புப் பணிக்கு பின்னரும் தொல்காப்பிய மூலத்திலும் இளம்பூரணர் உரை போன்றவற்றிலும் ஒழுங்கு செய்யப்பட வேண்டிய பல பகுதிகள் இருந்தன. இத்தகைய பணிகளை, 'அடிகளாசிரியர்' போன்ற சிலர் செம்மையாக செய்து முடித்தனர் என்பதை 1960க்குப் பின்னரான தொல்காப்பியப் பதிப்புகள் நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின் றன.

இத்தகைய பல்வேறு சிந்தனைகளை உருவாக்கக்கூடிய தொல்காப்பியப் பதிப்புரைகளை தொகுத்தளித்த இளம் ஆய்வறிஞர் ஜெய் கணேசை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. 21ஆம் நூற்றாண்டில் இளமைத் துடிப்புள்ள மாணவர்கள் பலர் இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு அண்மைக் காலத்தில் வந்துள்ள பல நூல்கள் சாட்சிகளாக உள்ளன. அரசியல்வாதிகள் பிழைப்புவாதிகள் போன்றவர்கள் கையில் இருந்த 'தமிழை' இளம் தலைமுறையினர் மீட்டு எடுக்கின்றனர் என்று நாம் நம்பிக்கை கொள்ளலாம் அல்லவா?

குறிப்புகள்:

1. ஈராறு இயற்றமிழ்க் கட்டுரைகள், பக். 120, தொகுப்பாசிரியர்: சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரன், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், ஆண்டு 2009.

2. மேற்படி நூல், பக். 121.

3. மேற்படி நூல், பக். 123

4. தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள், ஆண்டு 1970, பக். 49, ஆசிரியர்: பொ.பூலோகசிங்கம், கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

5. மேற்படி நூல், பக். 51

6. அ) எல்லிஸ், திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது, தமிழ்மொழிதான் திராவிட மொழிகளின் அடிப்படை என்ற ஆய்வு போன்றவற்றால் தமிழ்மொழியின் சிறப்பை உலகறியச் செய்தது.

ஆ) துறு (drew) பாதிரியார், திருக்குறள் பரிமேலழகர் உரையை ஏட்டுச் சுவடியிலிருந்து (63 அதிகாரங்கள்) அச்சில் கொண்டு வந்தது (1840 – 1852) மற்றும் பிற பணிகள்.

இ) கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856) மற்றும் பிற பணிகள்.

ஈ) சாமுவேல்பிள்ளை, முதன்முதலாக தொல்காப்பியம் முழுமையும் அச்சில் கொண்டு வந்தார் (1858).

உ) சைமன் காசிச்செட்டி தமிழ் புளுடார்க் என்ற பெயரில் முதன்முதலாக தமிழ் இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார் (1859).

ஊ) ஜான் மொர்டாக் அச்சில் வந்த தமிழ் நூல்களுக்கு முதன்முதலாக அகராதி தயாரித்து விளக்கங்களும் எழுதி வெளியிட்டார் (1865).

மேலே குறிப்பிடப்படுகின்ற பட்டியல் மிகவும் சுருக்கமானது. தமிழ்மொழிக்கு தொண்டாற்றிய அயல்நாட்டு அறிஞர்கள் கிறித்துவ தமிழ் அறிஞர்கள் போன்ற இன்னும் பலரைப் பற்றிய தகவல்களை முழுமையாக வெளிப்படுத்த வேண்டுமானால் அது ஒரு தனிநூலாக விரிவடையும் பணியாக அமையும் என்பது குறிப்படத்தக்கது.

7. தமிழ் இலக்கிய வரலாறு: பதினோராம் நூற்றாண்டு, ஆசிரியர்: மு.அருணாசலம், பதிப்பு: தி பார்க்கர், ஆண்டு 2005, பக். 174, 175, 176.



படிப்பகம்

www.padippakam.com






### ஆதி கிரேக்க வரலாற்றறிஞர் எரொடொட்டஸ் சித்தரிக்கும்

# பொலிகுதிரை ஈந்த அரியணை

**மணி வேலுப்பிள்ளை**

கிரேக்கப் பொருளாதாரம் நொடித்துப் போய்விட்ட நிலையில், கிரேக்க மக்களின் வயிற்றை இறுக்கிக் கட்டும்படி கிரேக்க அரசிடம் ஐரோப்பிய வலயம் அறிவுறுத்தியது. அதற்கு கிரேக்க மக்களிடம் ஒப்பம் பெற கிரேக்க அரசு முன்வந்தது. ஒப்பங்கோடல் பற்றிய செய்தி வெளியானதும், ஐரோப்பிய வலயம் அதற்கு வெருண்டடித்து விசனம் தெரிவித்தது. தாங்கள் அறிவுறுத்தியவாறு, வயிற்றை இறுக்கிக் கட்டும் யோசனைக்கு, கிரேக்க மக்கள் ஒப்பம் கொடுக்கமாட்டார்கள் என்பதே அதற்கான காரணம்!

கிரேக்கம், மக்களாட்சியின் தாயகம். ஒப்பங்கோடல், மக்களாட்சி நெறிக்கு உட்பட்ட பொறிமுறை. அப்படி இருக்கையில், மக்களாட்சியின் தாயகமாகிய கிரேக்கத்துடன், கிரேக்க மக்களாட்சியின் ஒட்டுக்கன்று எனத்தக்க ஐரோப்பிய வலயம் முரண்பட்டுள்ளது. மக்களாட்சி நெறிப்படி ஒழுகுவதில் இங்கே ஓர் உடன்பாடும் ஒரு முரண்பாடும் தெரிகின்றன.

ஹிட்லரும் முசோலினியும் மக்களாட்சி நெறிப்படி தேர்தலில் வென்று, ஆட்சிக்கு வந்து, அதே மக்களாட்சி நெறியை ஒழித்துக்கட்டிய சர்வாதிகாரிகள். அத்தகைய சர்வாதிகாரிகள் பல்லாண்டுகளாக மக்களைக் கட்டியாண்ட பின்னரும்கூட, உலக ஒப்பனைக்காவது, மக்களாட்சி நெறிப்படி தேர்தலில் நிற்கத் துணிந்ததில்லை. ஆதலால் சர்வாதிகாரத்துக்கு இயற்கைச் சாவோ, அவச் சாவோ, ஆட்சிப் புரட்டோ தான் முடிவுகட்ட நேர்கிறது.

முடியாட்சிக்கு உட்பட்டிருந்த கீழ்நாடுகளை அடிப்படுத்தி, தமது நலன் கருதி ஆள்புலங்களை ஒன்றுசேர்த்து அல்லது கூறுபோட்டுக் கட்டியாண்ட மேல்நாட்டார் தத்தம் தாயகங்களுக்கு மீளுந் தறுவாயில் தமது மக்களாட்சிக் கட்டுக்கோப்புகளை ஆங்காங்கே நிலைநிறுத்தியதுண்டு. தலைக்கொரு வாக்கு என்னும் அடிப்படையில் அமைந்த மக்களாட்சி நெறிகொண்டு, மேற்கண்டவாறு ஒன்று சேர்க்கப்பட்ட அல்லது கூறுபோடப்பட்ட ஆள்புலங்களில், அதே மக்களாட்சி நெறிக்கு மாறான அநீதிகளும், அநியாயங்களும், அடாவடிகளும் இழைக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய ஆள்புலங்களில் தலைக்கொரு வாக்குப்பலம் பேரினவாதத்தை நிலைநிறுத்தி, இனக்குழுமங்களை ஒழித்துக்கட்டி வருகிறது.




படிப்பகம்

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் பலரும் மக்களாட்சியில் நம்பிக்கை இழத்தல் இயற்கை. மக்களாட்சி நிலவும் வெளிநாடுகளில் வாழ்ந்து, அங்கெல்லாம் நடைபெறும் தேர்தல்களில் வாக்களித்து, தமிழ் பேசும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் எங்கள் மக்கள் பலர் சர்வாதி காரத்தையும், சர்வாதிகாரிகளையும் நயப் பதும் உவப்பதும் உண்டு.

மக்களாட்சி குறித்த இந்த உடன்பாடும் முரண்பாடும் மானுட வரலாற்றில் அருக ருகே இழையோடியுள்ளன ஏறத்தாழ கி.மு. 7ஆம் நூற்றாண்டிலிருந்து இற்றை வரை கிரேக்கத்தில் மக்களாட்சி ஓங்கி வந்துள்ளது. அத்தகைய மக்களாட்சி, பாம ரத்தனமான ஆட்சிக்கு வழிவகுக்கும் என்று அஞ்சி, அதனை ஏற்கப் பின்னடித்தவர் களின் நிரலில் மாபெரும் கிரேக்க மெய் யியலாளர்கள் இடம் பெற்றுள்ளார்கள். அவர்களுள் சாக்கிரட்டீஸ் (கி.மு. 469 - 399), பிளேட்டோ (கி.மு. 427 - 347) இருவரும் தலையாயவர்கள். மக்களாட்சி ஓங்கிய அதென்ஸ் மாநகரத்தில் வாழ்ந்து, மக்களாட்சியைத் துய்த்த இம்மாபெரும் மெய்யியலாளர்களைப் பெரிதும் ஈர்த்தது சர்வாதிகாரமே.பிரித்தானிய குடியாட்சியுள் வேரூன்றிய எச்.ஜி.வெல்ஸ், பேர்னாட்சோ, மார்க்ஸ், ஏங்கெல்ஸ் உட்பட்ட மேதைகள் பலரும் சர்வாதிகாரத்தால் பெரிதும் ஆட் கொள்ளப்பட்டவர்கள்.

ஏறத்தாழ 2533 ஆண்டுகளுக்கு முன்னர், மக்களாட்சி என்றால் என்ன நிறம் என்று வினவும் நிலையில் வெளியுலகம் இருந்த வேளையில், திட்டவட்டமாகச் சொல்வ தாயின் கி.மு. 522 செப்டெம்பர் 29ம் திகதி பாரசீகத்தின் அன்றைய தலைநகர் சூசாவில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் மக்களாட்சி, சில்லோராட்சி, முடியாட்சி... பற்றி எல்லாம் ஆராயப்பட்ட விதத்தை ஆதிகிரேக்க வர லாற்றறிஞரும், மேல்நாட்டு வரலாற்றின் பிதாமகருமாகிய எரொடொட்டஸ் (கி.மு. 484 - 425) வியக்கத்தக்க முறையில் எடுத் துரைத்துள்ளார்.

அன்றும் இன்றும் என்றும் எதிரொ லிக்கும் வண்ணம் மேற்படி மாநாட்டில் ஆற்றப்பட்ட உரைகளை, அவற்றுக்கு இட் டுச்சென்ற நிகழ்வுகளுடன், அவர் எடுத்து ரைக்கும் பாங்கு நயந்துவக்கத்தக்கது. எத் தகைய ஆட்சியும் அதற்கு உட்பட்ட வெகுளிகளாலும், புரளிகளாலும் அபத்தத் துக்கு உள்ளாவதை எரொடொட்டஸ் மிகுந்த சுவைபடப் பிழிந்து கொடுத்துள் ளார். அதற்கு நாம் இடும் தலைப்பு: பொலிகுதிரை ஈந்த அரியணை.





**பொலிகுதிரை ஈந்த அரியணை**
**எரொடொட்டஸ்**

பாரசீக மாமன்னன் சைரஸ் (கி.மு. 600 - 529), அவனுடைய மூத்த மகன் கம்பைசஸ் (கி.மு. 530 - 523) அடுத்தடுத்து ஆட்சி புரிந்த காலத்தில் தமது பேரரசை மேன்மேலும் அகட்டும் நோக்குடன் அதன் எல்லைப்புறத்தில் நிலைகொண்டு, அதற்கு அப்பால் ஓங்கிய நாடுகளைக் கைப்பற்றுவதில் புலனைச் செலுத்தி வந் தார்கள்.

மாமன்னன் சைரஸ் பபிலோனியாவைக் கைப்பற்றிய பின்னர் அங்கேயே மாண்டான். மன்னன் கம்பைசஸ் எகிப்தைக் கைப்பற்றி, அங்கேயே நிலைகொண்டிருந்தான். அப் பொழுது அவன் இம்மியும் எதிர்பாராத உளவுச்செய்தி ஒன்று அவன் காதில் விழுந்தது. அது கேட்டு வெகுண்டெழுந்த கம்பைசஸ் தன் தலைநகர் சூசா நோக்கிப் புறப்பட்டான். இடைவழியில் அவன் விபத்துக்குள்ளாகி, நோய்வாய்ப்பட்டு மடி யுந் தறுவாயில் தன் பரிவாரத்துக்கு ஆற் றிய உரை:

"பாரசீக மக்களே, எனது அலுவல்கள் அனைத்துள்ளும் மிகவும் இரகசியமான சங்கதியை உங்களிடம் தெரிவிக்க வேண்டிய கட்டத்தை நான் நெருங்கிவிட்டேன். நான் எகிப்தில் வாழ்ந்த காலத்தில் ஒரு நாள், உறக்கத்தில் ஓர் ஆவி எனக்குத் தென்பட்டது ஐயோ, என்றுமே அதை நான் கண்டிருக்கக் கூடாது என்று எவ் வளவு தூரம் நான் இறைஞ்சுகிறேன் தெரி யுமா! தாயகத்திலிருந்து ஒரு தூதுவன் வர நான் கனவு கண்டேன். தம்பி சிமேடிஸ் அரியணையில் வீற்றிருப்பதாகவும், அவன் தலை விண்ணைத் தொட்டிருப்பதாகவும் தூதுவன் என்னிடம் தெரிவித்தான். சிமே டிஸ் என் ஆட்சியை அபகரிப்பான் என்று அஞ்சி, நான் அவசரப்பட்டு, மதிகெட்டுச் செயற்பட்டேன். மனித வாழ்வில் விதியைத் தடுக்க முடியாது என்றே தோன்றுகிறது. நான் ஒரு மடையன் ஆனேன். சிமேடிசைக் கொல்ல பிரெக்சாஸ்பெசை நான் அனுப்பி வைத்தேன்.


"அந்தப் பாவம் இழைக்கப்பட்ட பின் னர், நான் அச்சமின்றி வாழ்ந்தேன். சிமே டிஸ் உயிருடன் இல்லை என்றால், வேறெ வனும் என்னை எதிர்த்துக் கிளம்புவான் என்று நான் எண்ணியதே இல்லை. நடக்கப்போவதைப் பற்றி எல்லாம் நான் தவறாக எண்ணியபடியால், தகுந்த நியாயம் எதுவுமின்றி, என் சொந்தத் தம்பியையே நான் கொன்றுவிட்டேன்.

www.padippakam.com

கொன்றும் கூட, என் அரியணையை நான் பறிகொடுத்து நிற்கிறேன். தானே சிமேடிசிஸ் என்று ஆள்மாறாட்டம் செய்யும் ஒரு குருத்துவன் என்னை எதிர்த்துக் கிளம்புவான் என்றுதான் எனது கனவில் அந்த இறையாற்றல் ஆரூடம் கூறியது (அதை இப்பொழுதுதான் நான் புரிந்துகொண்டேன்). ஆகவே, என் தம்பி சிமேடிசை நான் கொன்றது குற்றமே. மிகவும் கேவலமான முறையில் நடந்துகொண்ட அந்தக் குருத்துவனை எதிர்த்து என்னைக் காக்கும் கடப்பாடு மிகுந்த சிமேடிஸ், (என் தந்தை) மாமன்னர் சைரசின் மகன் சிமேடிஸ், என் தம்பி சிமேடிஸ், அவனுடைய உடன்பிறப்பாகிய என்னால் மிகவும் இழிவான முறையில் கொல்லப்பட்டுவிட்டான். அவன் இப்பொழுது உயிருடன் இல்லை. எனது அரண்மனையின் முகாமையாளனாக நான் அமர்த்திய அந்தக் குருத்துவன், அவனுடைய தம்பியாகிய அந்த போலி சிமேடிஸ் ஆகிய இருவருமே உங்கள் அரசை இப்பொழுது கட்டி ஆள்கிறார்கள். உண்மையான சிமேடிஸ் ஆகிய என் தம்பி இப்பொழுது உயிருடன் இல்லை. பாரசீக மக்களே, எனது வாழ்வு முடிவடையும் இத்தறுவாயில், உங்களுக்காகவும், உங்கள் எதிர்காலத்துக்காகவும், எனது இறுதி விருப்பை உங்களிடம் தெரிவிக்க நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். உங்களிடம் உங்கள் அனைவரிடமும், குறிப்பாக இங்கு வீற்றிருக்கும் எங்கள் அரச பரம்பரையினரிடமும் இக்கோரிக்கையை நான் முன்வைக்கும் இந்த வேளையில், எங்கள் அரச பரம்பரையின் குலதெய்வங்களிடமும் அவ்வண்ணமே நான் வேண்டிக் கொள்கிறேன்:

"முன்னொருகால் நிகழ்ந்தது போல் திரும்பவும் எங்கள் அரசிறைமை அக்குருத்துவர்களிடம் சென்றடைய அனுமதிக்காதீர். அவர்கள் சூழ்ச்சியால் அதனை ஈட்டிக் கொண்டுள்ளார்கள் என்றால், நீங்களும் சூழ்ச்சியால் அதனை மீட்டுக் கொள்ள வேண்டும். அவர்கள் ஏதேனும் முரட்டு வலு கொண்டு அதனை ஈட்டிக் கொண்டுள்ளார்கள் என்றால், நீங்களும் முரட்டு வலு கொண்டு அதனை மீட்டுக் கொள்ள வேண்டும். உங்கள் முழுப்பலத்தையும் கொண்டு அதனை மீட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் அதனை மீட்டுக் கொண்டால், இந்த நிலம் நலம் பயக்குமாக! உங்கள் மனைவியரும் பாட்டிகளும் குலக்கொழுந்துகளை ஈன்றெடுப்பார்களாக! நீங்கள் என்றென்றும் சுதந்திரமாக வாழ்வீர்களாக! ஆனால், எங்கள் ஆட்சியை நீங்கள் மீட்கத் தவறினால், அல்லது அதனை மீட்க முயலவே தவறினால், நான் கூறியதற்கு நேரெதிர் மாறான கதிக்கு நீங்கள் ஆளாகுவீர்களாக என்றும், பாரசீகர் ஒவ்வொருவரின் வாழ்வும் என்னுடைய வாழ்வினைப் போல் முடிவடையுமாக என்றும் நான் சபிக்கிறேன்."





கம்பைசஸ் மடிந்த பின்னர் அமைக்கப்பட்ட எழுவரைக் கொண்ட ஆட்சி மீட்புக் குழுவில் இடம்பெற்றோர்: ஒட்டேனஸ், அஸ்பதைன்ஸ், கோபிறையஸ், இந்தபிரீனஸ், மெகபைசஸ், ஐடானஸ், டேரியஸ்.

அடாவழியில் ஆள்மாறாட்டம் செய்து ஆட்சி புரியும் குருத்துவ உடன்பிறப்புகள் இருவரும் மேற்படி ஆட்சிமீட்புக் குழுவினால் ஓர் அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர், எத்தகைய ஆட்சி முறையை வகுத்துக்கொள்வது என்பது பற்றி ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட மாநாட்டில் ஆற்றப்பட்ட உரைகள்:

ஒட்டேனஸ்: "இனிமேல் எங்களுள் ஒருவர் எங்களை ஒரு மன்னரைப் போல் கட்டியாளாமல் விடுவதே சிறந்தது என்று நான் கருதுகிறேன். முடியாட்சி நல்லதுமல்ல, அது இன்பம் தருவதுமல்ல. மன்னன் கம்பைசஸ் இறுமாந்து புரிந்த அட்டூழியங்களுக்கு நீங்கள் உள்ளானதுண்டு. சூழ்ச்சியால் அரசைக் கைப்பற்றிய குருத்துவன் செருக்குண்டு புரிந்த கொடுமையை நீங்கள் அனைவரும் பட்டறிந்ததுண்டு. ஆட்சியாளர் தாம் விரும்பிய எதையும் செய்வதற்கும், அதனைக் குறித்து எவர்க்கும் அவர்கள் மறுமொழி கூறாமல் இருப்பதற்கும் அனுமதிக்கும் முடியாட்சி என்பது எப்படி ஓர் ஏர்சீரான, இன்னிசைவான ஆட்சிமுறையாய் அமைய முடியும்? அத்தகைய அதிகாரம் படைத்த பதவியில் அமர்த்தப்படுபவர் ஒரு தலைசிறந்த ஆளாக விளங்கினாலும் கூட, அவர் தனக்குக் கைகூடும் இன்பங்கள் அனைத்தையும் துய்க்குந்தோறும், அவர்தம் உள்ளத்துள் இறுமாப்பும், மானுட இயல்பின் அடிப்படைக் கூறு எனத்தக்க பொறாமையும் தலைதூக்கி, தனது இயல்பான மனநீதியை அவர் இழந்து விடுவார். அத்




படிப்பகம்

www.padippakam.com

தகைய ஆட்சியாளரில் பொறாமையும் இறுமாப்பும் வெளிப்பட்டே தீரும். இவ்விரு தன்மைகளுமே தீமை முழுவதற்கும் அடிப்படை. அவர் பொறாமையால் உந்தப்பட்டு, இறுமாந்து வெறிகொண்டு, தறிகெட்டுச் செயற்பட்டு, மேன்மேலும் அட்டூழியம் புரிதல் திண்ணம். மன்னர் அரும்பேறுகள் அனைத்தும் படைத்தவர். ஆனபடியால் அவர் பொறாமைக்கு உள்ளாகாமல் இருக்கக் கடமைப்பட்டவர். ஆனால், அதற்கு எதிர்மாறாகவே அவர் மக்களை நடத்துவார். நாட்டில் உள்ள கேடுகெட்ட ஆட்களுடன் கூடி இன்பம் துய்க்கும் அதேவேளை, தன்னைச் சூழ்ந்து உயிர் வாழும் தலைசிறந்த ஆட்கள் மீது அவர் பொறாமை கொள்ளுவார். அவர் தன்னைத் தானே தலைசிறந்த ஆள் என்றே கொண்டாடுவார். ஆனபடியால் அநீதி எதற்கும் அவர் பழி ஏற்கப் போவதில்லை. நீங்கள் அவரைப் பருமட்டாக நயந்தால், நீங்கள் தன் மீது போதிய பற்றுறுதி கொள்ளவில்லை என்று அவர் விசனப்படுவார். மாறாக, நீங்கள் அவருக்கு அடிபணிந்து நடந்தால், உங்கள் அடிவருடித்தனம் அவருக்கு எரிச்சலூட்டும். அத்தகைய குணம் அவருடைய முன்பின் முரண்பட்ட தன்மையையே புலப்படுத்தும். எங்கள் முன்னோரின் வழமைகளைத் தலைகீழாக்குவதே அவருடைய செய்கைகள் எல்லாவாற்றுள்ளும் படுமோசமானது. மிருக பலம் கொண்டு பெண்களை இரை கொள்வதும், கேள்வியின்றி ஆண்களைக் கொல்வதும் அதற்குள் அடங்கும். மாறாக, பெரும்பான்மை ஆட்சியோ பெருவிறலும் பேரழகும் வாய்ந்த சமத்துவம் என்னும் பெயர்பெற்றது. அது மட்டுமல்ல, பெரும்பான்மை ஆட்சி என்றுமே ஒரு முடியாட்சியைப் போல் நடந்து கொள்வதில்லை. அத்தகைய ஆட்சியில் பெரும்பான்மைத் தரப்பினரே திருவுளச் சீட்டு மூலம் நீதிவான்களைத் தேர்ந்தெடுப்பர். அத்தகைய அதிகாரிகள் அனைவரும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவர். தீர்மானங்கள் அனைத்தும் பொதுமக்களின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு பெரும்பான்மை என்பது முழுமையுள் அடங்குவதால், நாங்கள் முடியாட்சியைக் கைவிட்டு, பெரும்பான்மைத் தரப்பை ஆட்சி அதிகாரத்தில் அமர்த்துவதே சாலச் சிறந்தது என்று நான் முன்மொழிகிறேன்."

மெகபைசோஸ்: "கொடுங்கோன்மைக்கு முடிவுகட்டும் நோக்கில் ஒட்டேனஸ் கூறும் சங்கதிகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ஆட்சியதிகாரத்தைப் பெரும்பான்மைத் தரப்பிடம் ஒப்படைக்கும்படி அவர் கேட்டுக்கொள்கையில், அவர் நல்நிதானம் தப்பி நெடுந்தூரம் போய்விடுகிறார். ஓர் உதவாக்கரையான, கையாலாகாத கும்பலைவிட மதிகெட்ட, இறுமாந்த தரப்பு வேறு எதுவுமே இல்லை. நாங்கள் ஒரு கொடுங்கோலரின் இறுமாப்புக்கு இரையாகாது தப்பவேண்டும் என்பதற்காக, கட்டுப்பாடற்ற பொது மக்களின் இறுமாப்புக்கு இரையாக வேண்டும் என்று கூறுவதை எள்ளளவும் ஏற்க முடியாது. ஒரு கொடுங்கோலர் என்னதான் செய்தாலும், தான் என்ன செய்கிறார் என்பதாவது அவருக்குத் தெரியும். ஆனால், பொதுமக்களுக்கோ தாங்கள் என்ன செய்கிறோம் என்பதே புரிவதில்லை. கல்வி கற்காத, நலமான எதையும் கண்டறியாத, சிறப்பான எதையும் கேட்டறியாத எவரும் எந்த விடயத்தைப் பற்றியும் அறிவுடையவராக விளங்குவது எங்ஙனம்? சீறிப்பாயும் வெள்ளம் போல் அவர் ஆட்சியலுவல்களுள் நிதானமிழந்து, ஆட்களை இழுத்துத் தள்ளி, தடுக்கி விழுவதுண்டு. ஆகவே, பாரசீகத்தின் பகைவர்களையே அவர்களுடைய மக்கள் ஆளட்டும்! நாங்களோ ஒரு கூட்டாட்சி அணியாக அமைத்தக்க தலைசிறந்த ஆட்களைத் தேர்ந்தெடுத்து, அந்த அணியிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைப்போம். நாங்கள் இந்தக் கூட்டணியில் இடம்பெறுவது இயல்பான ஒன்றே. தலைசிறந்தவர்கள் பெரிதும் தலைசிறந்த முடிபுகளை எடுக்கவே வாய்ப்புள்ளது."



டேரியஸ்: "பெரும்பான்மை ஆட்சி பற்றி மெகபைசோஸ் தெரிவித்த சங்கதி எனக்குச் சரி என்றே படுகிறது. ஆனால், சில்லோராட்சி பற்றி அவர் கூறிய சங்கதி எனக்குப் பிழையாகவே தெரிகிறது. சிறந்த மக்களாட்சி, சிறந்த சில்லோராட்சி, சிறந்த முடியாட்சி ஆகிய ஆட்சி வகைகள் மூன்றினதும் சிறந்த எடுத்துக்காட்டுகளைக் கோட்பாட்டுவாரியாக ஒப்பிடுவோமாயின் முடியாட்சியே மற்றிரு ஆட்சிவகைகளையும் விடத் தலைசிறந்தது என்று நான் முழங்குவேன். தலைசிறந்த ஒருவரைவிட வேறு தரப்பு எதுவும் சிறந்ததாக அமையமுடியாது என்பது வெளிப்படை. அவர் நிதானத்தில் சிறந்தவர் என்றபடியால், அவர் பெரும்பான்மையோரைப் பிசகின்றிப் பரிபாலிப்பார். பகைவர்களுக்கு எதிரான தனது திட்டங்களின் இரகசியத்தை அவரால் சிறந்த முறையில் காக்கவும் முடியும். மாறாக, சில்லோராட்சி புரிவோருள் பலரும் மேன்மை எய்தப் பாடுபடுவதுண்டு. அவர்களுக்கு இடையேயான அந்தரங்கமான போட்டி பகிரங்கமான பகையாக மாறுவதுண்டு. அவர்களுள் ஒவ்வொருவரும் ஆட்சியலுவல்களில் தலைமை வகிக்க ஆசைப்பட்டு, தத்தம் கருத்துக்கள் மேலோங்குவதையே விரும்புவதுண்டு. ஈற்றில் அவர்கள் ஒருவரை ஒருவர் அறவே பகைப்பர். உட்பகை ஓங்கும். குருதி சிந்தும்... அது முடியாட்சிக்கு இட்டுச்செல்லும். ஏனைய ஆட்சிவகைகளை விட முடியாட்சி எத்துணை சிறந்தது என்பதையே மேற்படி வரலாற்றுக் கட்டங்கள் உணர்த்துகின்றன. பொதுமக்கள் புரியும் ஆட்சியில் என்றுமே திறமையீனம் நேர்தல் திண்ணம். தேர்ச்சியற்ற பொதுமக்கள் ஒருவரை ஒருவர் பகிரங்கமாக எதிர்ப்பதை விடுத்து, ஒருவருடன் ஒருவர் ஆழ்ந்த நட்புக் கொண்டு, திறமையற்ற முறையில் சமூகத்தைப் பரிபாலிப்பர். அவர்களுள் ஒருவர் மக்களின் தலைவராக முன்வந்து, அத்தகைய செய்கைகளை மற்றவர்கள் தொடர்ந்து மேற்கொள்ளாவாறு தடுக்கும்வரை அந்த நிலவரம் நீடிக்கும். அதன் பிறகு பொது மக்கள் இவரை நயப்பார்கள். பொது மக்கள் இவரை நயப்பதால், இவர் செயலளவில் ஒரு மன்னர் என்றே முழங்கப்படும். இம்மூவகை ஆட்சிகளுள் முடியாட்சியே தலைசிறந்தது என்பதை இதுவும் மெய்ப்பிக்கிறது. எவ்வாறாயினும், ஒரே கூற்றில் எனது வாதத்தை என்னால் சுருக்கி உரைக்க முடியும்: எங்கள் சுதந்திரம் எங்கிருந்து வந்தது? அதை எங்களுக்கு யார் தந்தது? அது பொதுமக்களிடமிருந்தா, ஒரு சிலரிடமிருந்தா, ஒரு மன்னரிடமிருந்தா வந்தது? சரி, இதுவே எனது கருத்து: எங்களை விடுவித்தது ஒருவரே. அத்தகைய ஒருவரின் ஆட்சியையே நாங்கள் பேணிக்கொள்ள வேண்டும். அத்துடன், எங்கள் முன்னோரின் மரபுகள் என்றென்றும் நேர்த்தியானவை. அவற்றை நாங்கள் உதறித்தள்ளக் கூடாது. உதறித்தள்ளுவது நல்லதல்ல."

மேற்படி மூவரும் உரையாற்றிய பின்னர், எஞ்சிய நால்வரும் டேரியசின் வாதத்தை



படிப்பகம்




ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்கள். தனது வாதம் தோல்வி அடைந்ததை அடுத்து, ஒட்டேனஸ் மீண்டும் ஆற்றிய உரை.

ஒட்டேனஸ்: என்னருமைத் தோழர்களே! எங்களுள் ஒருவன் அரசனாக வேண்டும் என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. இனி, அரசாட்சியில் அமர்த்தப்படவுள்ளவனைத் திருவுளச் சீட்டுக் கொண்டா, பாரசீக மக்களின் பெரும்பான்மையைக் கொண்டா, வேறொரு முறையைக் கொண்டா தேர்ந்தெடுப்பது? எதிலுமே உங்களுடன் நான் போட்டியிடப் போவதில்லை. ஏனென்றால், நான் ஆளவோ ஆளப்படவோ விரும்பவில்லை. ஆதலால், பின்வரும் நிபந்தனையின்படி, இந்தப் போட்டியிலிருந்து நான் விலகிக் கொள்கிறேன்: அதாவது நானோ எனது வழித் தோன்றல்களோ உங்கள் குடிமைகள் அல்லர்!"

மேற்படி நிபந்தனையை ஏனைய அறுவரும் ஏற்றுக்கொண்டனர். எனவே, ஒட்டேனஸ் போட்டியில் கலந்துகொள்ளவில்லை. அவன் எவரையும் ஆதரிக்காது, நடுநிலை வகித்து, ஒதுங்கிக்கொண்டான். தம்முள் ஒருவரை மிகவும் செவ்விய முறையில் அரியணையில் அமர்த்துவது பற்றி எஞ்சிய அறுவரும் கூடி ஆராய்ந்தார்கள். அவர்களிடையே ஏற்பட்ட இணக்கங்கள்:

ஆட்சி மீட்புத் திட்டத்தை வகுத்தவனும், ஆட்சி மீட்புக் குழுவை அமைத்தவனும் ஒட்டேனசே என்பதால், தம்முள் எவன் அரசன் ஆகினாலும், ஆண்டுதோறும் ஒட்டேனசுக்கும் அவன் வழித்தோன்றல்களுக்கும் மீதியா (Media) புலத்து ஆடைகளும் பாரசீகத்தின் தலைசிறந்த கொடைகளும் வழங்கப்பட வேண்டும்.

அரசன் ஒரு பெண்ணுடன் படுத்திருக்கும் வேளை தவிர வேறெந்த வேளையிலும் ஒட்டேனஸ் உட்பட எழுவருள் எவரேனும் வாயில் காப்போர் ஊடாக அறிவித்தல் கொடுக்காமலேயே அரண்மனைக்குள் புகலாம்.

**தமது குடும்பங்களைச் சேராத வேறொரு குடும்பத்தில் அரசன் மணம் முடிக்கக் கூடாது.**

தமது குடும்பங்களைச் சேராத வேறொரு குடும்பத்தில் அரசன் மணம் முடிக்கக் கூடாது.

காலையில் அறுவரும் தத்தம் குதிரைகளில் ஏறி நகரத்துக்கு வெளியே செல்ல வேண்டும். அப்பொழுது யாருடைய குதிரை முதலில் கனைக்கிறதோ, அவனே அரசனாக வேண்டும்.

அன்றிரவு டேரியசுக்கும், ஒரு விண்ணன் என்று பெயர்பெற்ற அவனுடைய குதிரைப் பாகனாகிய ஒய்பறசுக்கும் இடையே இடம் பெற்ற இரகசிய உரையாடல்:

டேரியஸ்: "ஒய்பறஸ், அரசபதவி பற்றி நாங்கள் இப்படித்தான் முடிவெடுத்தோம்: காலையில் நாங்கள் அறுவரும் எங்கள் குதிரைகளில் ஏறிப் புறப்படப் போகிறோம். அப்பொழுது எவனுடைய குதிரை முதலில் கனைக்கிறதோ, அவனே அரசனாவான். இனி, குதிரைச் சங்கதியில் உனக்கு ஏதாவது கெட்டித்தனம் உண்டானால், மற்றவர்களை விடுத்து நாங்களே பரிசைத் தட்டிக்கொள்வதற்கு உடனடியாக ஓர் உபாயத்தை வகுத்துக்கொள்.

ஒய்பறஸ்: "எசமான், தாங்கள் அரசன் ஆகுவீர்களா அல்லவா என்பது இப்படித்தான் தீர்மானிக்கப்படும் என்றால், தாங்கள் கலவரம் அடைய வேண்டிய தில்லை. வேறெவரும் அல்ல, தாங்களே அரசனாதல் திண்ணம். இந்த நிலைவரத்துக்கு வேண்டிய பரிகாரம் எனக்குத் தெரியும்."

டேரியஸ்: "சரி, அப்படி ஓர் உபாயம் உனக்குத் தெரியும் என்றால், அதற்கு வேறொரு நாளைக் காத்திருக்க வேண்டாம். இப்பொழுதே அதனைப் பயன்படுத்த வேண்டும். காலை விடிந்தவுடன் எங்கள் போட்டி இடம்பெறும்."

அன்றிரவு, நன்கு இருட்டிய பிறகு, ஒய்பறஸ் தனது எசமானுக்கு மிகவும் உவப்பான பெண்குதிரையை நகரத்துக்கு வெளியே கொண்டுபோய் ஓரிடத்தில் பத்திரமாய்க் கட்டிவைத்தான். பிறகு எசமானின் பொலிகுதிரையைக் கொண்டு போய், திரும்பத் திரும்ப அந்தப் பெண் குதிரையைச் சுற்றுவித்தான். சுற்றுவிக்கும் பொழுது, பெண்குதிரையுடன் அதனை உரசுவித்தான். ஈற்றில் பொலிகுதிரையைப் பெண்குதிரைமீது ஏற விட்டான்.

வைகறையில் எழுந்த அறுவரும், தாங்கள் இணங்கிக்கொண்டபடி, தத்தம் குதிரைகளில் ஏறி நகருக்கு வெளியே புறப்பட்டார்கள். இராத்திரி பெண் குதிரை கட்டப்பட்ட இடத்தை அவர்கள் அணுகியதும், டேரியசின் பொலி குதிரை அந்த இடத்துக்குப் பாய்ந்து சென்று கனைத்தது! ஏனைய ஐவரும் உடனடியாகத் தத்தம் குதிரைகளை விட்டிறங்கி, டேரியசின் முன்னே நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்தார்கள்.

டேரியஸ் அரியணையில் அமர்ந்து, முதன்முதல் பிறப்பித்த ஆணையின்படி, குதிரையில் அமர்ந்த ஒருவனின் உருவம் ஒரு பாறையில் செதுக்கப்பட்டு, அதன் கீழ், "ஹிஸ்தாபெசின் மகன் டேரியஸ், (... என்னும் பெயர்கொண்ட) தன் குதிரையின் திறமையாலும் தனது குதிரைப் பாகன் ஒய்பறசின் திறமையாலும் பாரசீகர்களின் அரியணையை ஈட்டிக்கொண்டான்" என்று பொறிக்கப்பட்டது! (Herodotus, The Histories, Edited by Robert B. Strassler, Pantheon Books, New York, 2007, p. 239-250).

முடியாட்சி ஓங்கிய அன்றைய காலகட்டத்தில் குதிரையைக் கனைக்க வைத்து குதிரையில் அமர்ந்த அதே தரப்புகளின் வழித்தோன்றல்கள், குடியாட்சி ஓங்கிய இன்றைய காலகட்டத்தில் மக்களை இளிக்க வைத்து ஆட்சியை அபகரித்து வருகிறார்கள் மக்களை ஒரு கும்பலாக்கி, இளிக்க வைத்து ஆட்சியை அபகரித்து வருகிறார்கள்.

"ஒரு கும்பலை மகிழ்விப்பது ஓர் எளிதான, ஆனால் இழிவான செயல். அவர்களை வியக்க வைப்பது அத்துணை கடினமல்லை. அவர்களுக்கு நன்மை புரிந்து, அவர்களை மேம்படுத்தும் பணியே தொந்தரவும் ஆபத்தும் மிகுந்தது" (Caleb Colton).

www.padippakam.com

# மு.புஷ்பராஜன் கவிதைகள்

ஓவியம்: புகழேந்தி


## 1. புதுநாள்

ஒன்றாய் கூடி மகிழ
வகுக்கப்பட்டது
இப் புதுநாள்

பனியும் குளிரும்
மண்டிய காற்றில்
அலையும் இலைகளாய்
வாழ்க்கை

நடுச்சாமப் பூசையின்
மின்னொளி விரிவுக்குள்
பீடத்தில் எரியும் மெழுகுத்திரிகள்
இவற்றோடு
நிறைந்திருக்கும் நம்பிக்கை மனங்களுக்குள்
துப்பட்டி மூடிய முகத்தில்
கண்ணீர் துளிர்த்திருக்க

அத்திலாந்தின் இப்பால் ஒரு தீவில்
ஓரறையுள்
துணைபிரிந்த மைனாவின் குரலோடு
இன்னொரு முகம்



## 2. பெருமூச்சைத் தவிர

பிரிவாகிப்போன
வாழ்வின் துயரை
பிறரறியாது புதைத்து
பெருமூச்சைத் தவிர
வேறெதை நாம்
பரிமாறிக்கொண்டோம்

மணலின் விதைகள்
நீரில் துளிர்கொள்ள
மனதின் விதைகள்
நீயின்றி உயிர்கொள்ள

மோகம் துறந்த
முனிவனாயன்றி
மோகம் நிறைந்த
தனியனாக
அணைக்க விரியுமுன்
கரங்களுள்
இருபுறக் கனிவின் சிறுவெளியுள்
ஒடுங்க விழையும்
மனம்

கானலும் நாமுமாய்
மனவெளி நினைவுகள்
கனவினில் கழிகையில்

பெருமூச்சைத் தவிர
வேறெதை நாம்
பறிமாறிக் கொண்டோம்

## 3. கைவிடப்பட்ட நாட்கள்

நினைவிழந்து வீழ்ந்தது
வாழ்வின் துணை
எண்ணப் படுகின்றதோ
எனக்காய்
தன்னைக் கரைத்தவள்
எடுத்துச் செல்லப்படும் நாட்கள்

பூவென்று ஊத
ஒளி அணைந்து போகும்
மெழுகுத் திரியாகவோ
வாழ்வு அமைந்தது

நம்பிக்கையின் நீர்வற்றி
நிர்க்கதியாய் உலர்ந்த மனம்
துயர் கவிந்த நாட்களின்
முற்றுகையுள்ளே

முன்னகர முடியா வண்ணம்
உள்ளும் வெளியும்
இறங்கி இருந்ததுவே
இருள் இருள் இருள்

அறிவால் அரணமைத்த
சித்தாந்தக் கோட்டைக்கு
அவ்வேளையில்
வாசலும் இல்லை
கூரையும் இல்லை

'கண்ணீர்க் கனவாயுள்'
கைவிடப்பட்ட நாட்களில்
இறங்கி இருந்த இருள்நடுவே
புலர்ந்த தெல்லாம்...

சிலுவையில்
ஆணிகள் அறையப்பட்ட
இருபாதங்கள்
மட்டும்தான்.




படிப்பகம்

www.padippakam.com



# ஸ்லவோய் ஜிஜெக்
# இடதுசாரி மெய்யியலின் தற்காலக் கதாநாயகன்

**ரஃபேல்**



மெய்யியலில் ஓர் அடையாள ஆளுமை வெளியே உலகிற்குத் தெரிவதற்கு முன்னர் பல ஆண்டுகள் பிடித்தது. இப்போதைய தகவல் தொடர்பியல் வேக வலைப்பின்னல் அதை ஓர் அன்றாட நிகழ்வு என்ற நிலைக்கு மாற்றி வைத்துவிட்டது.

சோவியத் ஒன்றியத்தின் மற்றும் அதன் கூட்டாளி நாடுகளின் நிலை மாற்றத்திற்குப் பிறகு மார்க்சியத்தையும் அதன் வழியான சமூகத்தையும் முன்வைத்துப் பேசுவது அறி வுச் சமூகத்தில் அருகிவிட்டது.

இந்நிலையில், பெரும்மாற்றத்தை ஒரு பேரடிவைப்பை நிகழ்த்தியிருப்பவர்தான் ஸ்லவேனிய திறனாய்வு மெய்யியலாளரான ஸ்ல வோய் ஜிஜெக் (Slavoj ŽiŽek).

எவ்வாறு வத்திக்கானின் ஒரு போப் அய்ரோப்பாவுக்கும் இத்தாலிக்கும் வெளியே இருந்து உருவாகி வர முடியாதவாறு இருக்கிறதோ அந்தக் கணக்கில் எடுத்துக் கொண்டால், இதுவரைக்கும் இல்லாதவாறு, முதல் முறையாக பிரான்ஸ், பிரித்தானியா, ஜெர்மனி, அமெரிக்காவுக்கு வெளியே இருந்து மெய்யியலில் இவ்வளவு தாக்கத்தையும் அதே அளவு பிரபலத்தையும் ஏற்படுத்தும் ஓர் மெய்யியலாளராக ஸ்லவோய் ஜிஜெக் இருக்கிறார். ஜிஜெக்கின் இந்த பாரிய பிரபலத்திற்குப் பல காரணங்கள் உள்ளன.

வழக்கமாக, இறுக்கமான உலகாக இருக்கும் மெய்யியலுக்கு உயிரோட்டம் தரும் வகையில் ஜிஜெக்கினுடைய அணுகுமுறைகள் இருக்கின்றன. ஹாலிவூட் திரைப்படம், கிறித்துவம், அதன் மறுதலை விழுமியம்; மார்க்சியத்துக்குத் தரும் பயன், மெல்கிப்சன், வயாக்ரா, அய்ரோப்பிய அரசியல், தற்போதைய உலகப் 'புரட்சிகள்', வறுமை – பட்டினி, தொண்டு நிறுவனங்கள், உளப்பகுப்பாய்வு, ஸ்ராலினிசம், சூழலியல், கம்யூனிசம், அல்கைதா – அமெரிக்கா, கோப்பிக் கடை எனப் பலதரப்பிலும் விரிகிறது அவரது தொடுகைகள்.

ஆனால், அனைத்தையும் மிகத் தீவிரத் தன்மையுடன் திறனாய் அணுகுமுறையில் சிதறு தேங்காயாக்குகிறார். உண்மையில் சொன்னால் மிகப் பவ்வியமான முறையியல் அணுகுமுறைகளுடன் மெய்யியல் மெய்யியல் என்று பிசத்தும் மேற்கத்தியச் சூழலில் ஜிஜெக் ஓர் அதிரடி மன்னனாக விளங்குகிறார்.

'எம்முன்னால் தரப்பட்டு இருக்கின்ற ஒன்றை அப்படியே (அது அப்படித்தான், அதுதான் சட்டம் என்று...) ஏற்றுக்கொள்ளாமல் நாம் (நமது மூளை) மறுக்கத் தொடங்கும்போது மெய்யியல் தொடங்கி விடுகிறது' என்கிறார் ஜிஜெக்! நாம் எதிர்கொள்ளும் தரப்பட்டிருக்கின்றவற்றினை நோக்கி எப்படி என்னும் கேள்வியை எழுப்புவதும் இதில் அடங்கும் என்கிறார். இவ்வளவுக்கு தரைமட்டத்தில் வைத்து மெய்யியலைக் கையாள்வதும் வெளிப்படுத்துவதும் மரபானவர்களுக்குச் சிக்கலாக இருக்கிறது. ஜிஜெக்ஐ ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இளவட்டத்தில் இவர் ஓர் மீமனிதர்.

'மிகவும் தாக்கமேற்படுத்தும் வகையில் கெட்டிக்காரத்தனமான உளப்பகுப்பாய்வைச் செய்பவராகவும் பண்பாட்டுக் கோட்பாட்டாக்கத்தைப் பொறுத்தவரை சாதாரண அளவிலும் அய்ரோப்பில் கடந்த சில பத்தாண்டுகளுக்குள் ஜிஜெக் உருவாகி இருக்கிறார்' என பிரித்தானிய இடதுசாரித் திறனாய்வாளரான ரெரிஈகிள்ரன் (Terry Eagleton 1943-) கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. (Eagleton, 'enjoy'. London Review of books. 1997. Nov 27)

வாழ்க்கைச் சருக்கம்:

மார்ல் ரிற்ரோவின் (Marshal Tito 1892-1980) கீழ் யூகோஸ்லாவியாகவும் 'லிபரல்' கம்யூனிஸ நிலையிலும் இருந்த நாட்டில், அதன் சிலவேனியப் பகுதியில், 1949 மார்ச் 21 இல் ஜிஜெக் பிறந்தார். ஜிஜெக்கின் ஊர் போர்ட்டோரோஜ் என்ற ஓர் கடலோரக் கிராமமாகும். ஒரு மத்திய வகுப்புக் குடும்பத்தில் பிறந்தவர். தந்தையைப்போல ஒரு பொருளாதார வல்லுனனாக அல்



படிப்பகம்

www.padippakam.com

லது கணக்காளனாக வருவார் என்ற எதிர்பார்ப்பைப் பொய்யாக்கிவிட்டு மெய்யியலின்பால் ஜிஜெக்குக்கு ஆர்வம் வந்தது.

லுப்ளியானா (Ljubljana) பல்கலைக்கழகத்தில் மெய்யலும் சமூகவியலும் அவருடைய இளங்கலைப் (1967 - 1971) படிப்பாக இருந்தது. மெய்யியலில் முதுகலையை (1975) நிறைவு செய்தார். 'பிரஞ்சு அமைப்பியலின் கோட்பாட்டு நடைமுறைக்கிடையான தொடர்புடைமை' என்பது அவருடைய முதுகலை ஆய்வேடு. இதனால், அவருக்கிருக்கும் பிரெஞ்சு சிந்தனையாளரின் மீதான ஈர்ப்பு வெளிப்படையானது. ழாக் லக்கான், ழாக் தெரிதா, யூலியா கிறிஸ்தவா, கிளாட் லெவிஸ்ராஸ், கில் டெலூஸ் என அவரது ஆர்வம் விரிகிறது.

ஜிஜெக் தனது ஆய்வுப் பட்டத்திற்கு 'ஜெர்மனிய கருத்தியல்வாதம்' என்பதையே எடுத்துக்கொண்டார். 1981 இது நிறைவு செய்யப்பெற்றது. அந்தக் காலப்பகுதியில் ஸ்லோவானிய கலக இதழ்களில் எழுதி வந்தார். அந்த நேரத்தில் சோர்ந்திருந்த மார்க்சியர்களிடை புத்தார்வம் ஏற்படுத்தும் வகையில் அவரது எழுத்துக்கள் இருந்தன. உளப்பகுப்பாய்வையும் மார்க்சியத்தையும் சேர்த்து அவர் பயன்படுத்தியமையும் தனது மெய்யியல் கருத்துக்களை விவரிக்க பொதுப் பண்பாட்டிலிருந்து அவர் உதாரணங்கள் எடுத்துக்காட்டியதும் பலருக்கும் ஈர்ப்புடையதாயிருந்தது.

இந்தக் காலப்பகுதியில் அவருக்கு லுப்ளியானா பல்கலைக்கழகத்தில் வேலை கிடைப்பதாக இருந்தது. ஆனால், அவர் 'போதுமான அளவு' மார்க்சியராக இல்லாதபடியால் அவருக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. பிற்காலத்தில் ஒரு பேட்டியில் ஜிஜெக் அதற்காக நன்றி சொல்லியிருக்கிறார். 'அந்த கம்யூனிச ஒடுக்குமுறை இல்லாவிட்டால் லுப்ளியானாவில் இன்று நான் ஒரு முட்டாள் பேராசிரியராக இருந்திருப்பேன்' என்கிறார். ஏறக்குறைய, அவரைக் கட்சியின் உறுப்பினராக இல்லாத நிலைக்காகவே அவ்வாறு தள்ளிவைத்தனர் என்பது தெரிகின்றது. இடதுசாரிக் கட்சிகள் என்பன கோட்பாட்டைப் போல அனைத்து இடங்களிலும் உலகப் பொதுவான நடைமுறைக் குணாம்சங்கள் கொண்டிருப்பனபோல!

1985 வரைக்கும் பரிஸ் நகரில் லக்கானிய உளப்பகுப்பாய்வாளரான ழாக் அலன் மில்லரிடம் (Jacques-Alin Miller) கற்கைக்காகச் சென்றார். பாரிசில் பிரெஞ்சு பத்திரிகை, இதழ்களிலும் எழுதினார். இந்த மில்லர் ழாக் லக்கானின் மருமகன்.

1989இல் அவரது 'The Sublime Object of Ideology' முதல் ஆங்கில நூல் வெளி வந்தது. இது அவருக்கு உலகப் புகழைப் பெற்றுத் தந்தது.

1990இல் அவருடைய இடதுசாரி நண்பர்களின் தூண்டுதலால் ஸ்லவோனியாவின் அதிபர் தேர்தலில் நின்றார். அதில் அவர் தேர்வாகவில்லை என்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஆனால், அப்படித் தேர்தலில் குதித்ததை 'அது தடுமாற்றமான முடிவு. அது என்னை பாதித்தது' என்றும் சொல்லியிருக்கிறார். பின்னர் 2000 ஆண்டளவில் தனது கருத்தை வலியுறுத்த இரு ஆவணப்படங்களையும் எடுத்திருக்கிறார்.

## சீனா ஒரு புதிய முதலாளித்துவத்தைக் கட்டி எழுப்புகிறது. அதைப் பற்றிக் கேள்வி கேட்டால் முறைக்கிறார்கள். மரபான மார்க்சியர்களுக்கு இது பிரச்சினை.

இளமை நாட்களில் ஏராளமான அமெரிக்க, அய்ரோப்பிய திரைப்படங்களைப் பார்த்துத் தள்ளியிருக்கிறார். அரசுக் கட்டுப்பாட்டில் யுகோஸ்லாவியாவின் திரையரங்குகள் இருந்த காலத்தில் இவருக்கு எப்படி அந்த வாய்ப்பு வந்தது? அரசின் அனுமதியைப் பெறுவதற்கு அனைத்து திரைப்படங்களும் பார்வைக்காக / தணிக்கைக்காக வழங்கப்படும். அப்படி தணிக்கைகாகத் திரையிட்டுப் பார்க்குமிடத்தில் அனைத்தையும் பார்த்துத் தள்ளினார் ஜிஜெக். அதனால்தான் இன்றுவரை மேற்குலகின் வெகுமக்கள் பண்பாட்டின் மீது, திரைப்படம் மீது தனது தடாலடியான, அதிரடியான மெய்யியல் பார்வைகளை அவரால் வைக்க முடிகிறது.

ஆர்ஜென்ரீனியப் பெண்ணையும் காதலித்துத் திருமணம் செய்தார். அவர் ஓர் லக்கானிய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜிஜெக்குக்கு இரண்டு திருமணம். இரண்டு குழந்தைகள். 30இல் ஒன்றும் மூன்று வயதில் ஒன்றுமாக இரண்டு ஆண் குழந்தைகள். இப்போது குழந்தைகள் மட்டுமே. 'மனைவிகள்' இல்லை!

எண்பதுகளில் எப்படி இளம் இடதுசாரி அறிவு வட்டத்தில் தெரிதா கொடிகட்டிப் பறந்தாரோ அப்படியே இன்று ஜிஜெக் இருக்கிறார். ஆனால், ஓர் இடதுசாரியாக. தெரிதாவை ஒரு வகையில் இடதுசாரிகளின் 'எதிர்' முகாம் எனலாம்.

உரைகள் கருத்துகள்:

ஜிஜெக் இன்று பரவலாக அறியப்படுவது அவரது நூல்களைப் போலவே உரைகளாலும்தான். அவரைப் பற்றி எழுதப்பெற்று அறிமுக நூல்களாக இருப்பவை பல அவருடைய உரைகளின் தொகுப்பாகவே உள்ளன. இந்தக் கட்டுரையும் அவரது உரைகள் வழியாகவே பெரும்பாலும் செல்கிறது.

ஜிஜெக் தனக்கிருக்கும் இன்றைக்கான பிரபலத்தைப் பற்றிக் குறிப்பிடுவது வேடிக்கையானது அல்லது அதுதான் ஜிஜெக். 'என் கடவுளே... ஏன் நான் இவ்வளவு பிரபலமாயிருக்கிறேன் என்பதற்கான காரணம் எனக்குத்தான் கடைசியாகத் தெரிய வரும் என்று நினைக்கிறேன். நான் ஒரு சிந்தனையாளன். ஆனால், மக்கள் என்னை புத்தகம், உரை, உரையாடல் என்ற இந்த ஊதத்தையான அரசியலுக்குள் இழுக்கிறார்கள். நான் அதிலிருந்து விலகி வரத்தான் நினைக்கிறேன்.' (இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் என் கடவுளே (my god) என்பது அவது பாணிப் பயன்பாடு. அடிக்கடி இப்படிச் சொல்கிறார். நேர்காணல்களிலும் உரைகளிலும்கூட இப்படிக் குறிப்பிடுகிறார். இது ஏறக்குறைய 'உஸ்... அப்பாடா' என்று சொல்வதைப் போன்றளவுக்கே விழுமிய வலுவுள்ளது. ஆனால், அங்கதமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.)

தனது ஒரு புத்தகத்தில் 'அவதார்' திரைப்படத்தைப் பற்றி எழுதியதை அவர், 'இது வழக்கம் போல என்னுடைய ஒரு உளறல்தான். இதை எழுதும்போது நான் அந்தப் படத்தைப் பார்த்திருக்க வில்லை. ஆனால் நல்லாவே எழுதியிருக்கிறேன். ஆனால் பாருங்கள்... நான் ஒரு நல்ல ஹெகலியன். எனக்கு சரியான கோட் பாடு மட்டும் போதுமானது. இயல்பு நிலையைப் பற்றிக் கவலையில்லை' என்கிறார். (நூல்: Living in the End Times)

'நான் ஒரு எதிர் முதலாளித்துவவாதி. எனக்கு இந்த மரபான மார்க்சியர்களையும் பிடிக்காது. எப்போதும் அமெரிக்காவை எதிர்த்துக் கொண்டிருப்பார்கள். இப்போது சீனா என்ன செய்கிறது. சீனா ஒரு புதிய முதலாளித்துவத்தைக் கட்டி எழுப்புகிறது. அதைப் பற்றிக் கேள்வி கேட்டால் முறைக்கிறார்கள். மரபான மார்க்சியர்களுக்கு இது பிரச்சினை. ஆனால், ஓர் மெய்யியலாளர் என்ற வகையில் அது எனக்குத் தேவை. நாம் பல முனைகளில் இந்த உலகை எதிர்கொள்கிறோம். கேள்விகளை எழுப்புகிறோம், அதில் மரபான மார்க்சியர்களை நோக்கிய கசப்பான கேள்விகளும் உள்ளன' என்கிறார்.

சிட்னியில் நிகழ்த்திய உரையில், "ஒரு காலத்தில், 40 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவை முதலாளித்துவ நாடுகள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பு இருந்தது. ஆனால், இன்றோ சீனாதான் முதலாளித்துவ நாடுகளைக் காப்பாற்றி வருகிறது" என்றார். சிரிப்பலை எழுகிறது.

ஜிஜெக்கைப் பற்றி எழுதுவதற்கு, அவரது குறிப்பிட்ட கருத்து எது என்று எழுதுவதற்கு ஒரு வகையில் ஒன்றுமேயில்லை எனலாம். அல்லது அவர் அனைத்தையும் பற்றிக் கதைக்கிறார் எனலாம்.

ஜிஜெக் ஒரு திறனாய்வுச் சிந்தனையாளர். பண்பாட்டு விமர்சகர். அதனால் அனைத்தையும் பேசுவார். ஆனால், அது மரபுக்குப் புறம்பான வழியில் இருக்கும். இருக்கிறது. ஆதனால்தான் இவ்வளவு பிரபலமாயும் பாரிய அளவிலும் பேசப்பட்டாலும்



படிப்பகம்

இன்னும் ஓர் 'ஜிஜெக் பள்ளியோ' அல்லது அவரைப் பின்தொடர்ந்து அவரது எழுத் துக்களில் பணிகளில் இரண்டாம் நிலை காண்பவர்களோ இன்னும் தோன்றவில்லை. அது ஒன்றும் இலகுவானதும் இல்லை.

ஜிஜெக் 'கிறித்துவத்தின் காமப் பிறழ்வு அடிப்படை' என்னும் தலைப்பில் ஓர் உரையாற்றினார். அதன்பிறகு அது தொடர்பாக, கிறித்தவம் பற்றி நிறையவே எழுதியிருக்கிறார். இந்நிலையில், ஜெர்மனியில் உள்ள பாதிரியார்களுக்கான செய்தி மடல் ஒன்றில்எழுதும்படி ஜிஜெக்கோரப்பட்டார். பாதிரியார்கள் பிரசங்கிப்பதற்கு உரிய கருப்பொருள்களுக்கான சிந்தனைகளை வழங்கும் வகையில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இது 'சிறுமிகளுக்கு கற்பித்துக் கொடுக்கும்படி ஓர் காமப்பிறள்வாளனைக் கேட்பது போலுள்ளது' என்று ஜிஜெக் சொன்னார். இதுதான் ஜிஜெக். தன்னைத்தானேயே, தனது கருத்துக்களையே அவர் பலமுறை மீண்டும் எள்ளலுடன் நையாண்டி செய்து மாற்றிப் போட்டிருக்கிறார்.

மதம் பற்றிய உரையாடல் நடந்தது. 'ஜிஜெக் உறுதியான மனமுடையவரல்ல. அதனால்தான் கடவுள் மறுப்பை சார்ந்து நிற்கிறார்' என்று ஓர் கிறித்தவர் சொல்கிறார்.

'நான் கிறித்துவத்தைப் பற்றி விமரிசிக்கையில், எனக்கு எப்படி மதம் பற்றித் தெரியும்? என்று கேட்கிறார்கள். எப்படி மதவாதிகளுக்கு கடவுள் மறுப்பு மனோநிலை புரியும்? என் கடவுளே, கடவுள் மறுப்பாளனாக இருப்பது எவ்வளவு கடினம்' என்றார் ஜிஜெக்.

'இன்றைக்கான சமூக ஒழுங்கில் சிறந்தது எது என்று நினைக்கிறீர்கள்?'

'கம்யூனிசம்' - ஜிஜெக். இது நடப்பது அமெரிக்காவில். கேட்டவர் ஓர் நடு வயதாளர்.

'ஏன் அந்த சர்வாதிகாரத்தைவிட மக்களாட்சி நல்லதில்லையா?'

"நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மக்களாட்சி என்ற பெயரில் என்ன இருக்கிறது இங்கே? அதற்காக கிழக்கு அய்ரோப்பாவில் இருந்த மொத்தத்துவ சோசலிசம் நல்லது என்று நான் சொல்லமாட்டேன். என் கடவுளே நான் அங்கே இருந்திருக்கிறேன்.." இப்படிப் போகும் உரையாடல் முடியும் இடைத்தைப் பாருங்கள்... "நாம் இன்று உலகம் முடிந்து விடும். அழிந்துவிடும் என்பது பற்றிப் பேசுகிறோம். எங்களால் எப்போது உலகம் அழிந்துவிடும் என்பதை கற்பனை செய்ய முடிந்தாலும் அரசியல் ஒழுங்கில் ஒரு சிறு மாற்றம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்ய முடியாது. உலகத்தின் உயிர்கள் அழிந்தே போகலாம். ஆனால், முதலாளித்துவம் எப்படியும் பிழைத்திருக்கும்."

இன்றுவரை லுப்ளியானாவில் கற்பிக்கும் பணியில் இருக்கும் ஜிஜெக் தொடர்ந்து அங்கிருப்பதில்லை. மூன்றில் இரண்டு பங்கை உலகத்தைச் சுற்றிவருவதிலேயே அவர் செலவழிக்கிறார் என்கிறார்கள். அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் அவரைக் கேட்காமல் இருக்குமா? ஆனால், அவர் ஒத்துக்கொள்ளவில்லை. 'உங்கள் பல் கலைக்கழகங்களில் பணிக்கான நேரம் ஒன்றும் மாணவர்களும் எப்போதும் பின்தொடர்ந்து கொண்டேயிருக்கும். அது பைத்தியக்காரத்தனம். அமெரிக்காவில் ஒரு வேலை எடுப்பதற்கு எனக்கு விருப்பமேயில்லை.' நல்லவேளையாக அவருடைய ஆதரவாளர்களின், அவர் ஆற்றும் உரைகளின் வரும்படி அவருக்கிருக்கிறது.

செப்ரம்பர் 11ஐயும் ஜிஜெக் விட்டு வைக்கவில்லை. அவருடைய பிந்தைய புத்தகம் அதைப் பற்றிய ஆறு கட்டுரைகளுடன் உள்ளது. "நான் ஓர் பாலஸ்தீன ஆதரவாளன். ஆனால், நான் யூதர்களை நேசிக்கிறேன். யூதர்கள் பாவம். அவர்களையறியாமல் அவர் முகாமிற்குள் அவர்களுக்கான எதிரிகள் உருவாகிவிடுவார்கள்..." இதற்கு அவர் சொல்லும் எடுத்துக்காட்டுக்களில் ஒன்று ஃபொக்ஸ் 20 தொலைக்காட்சி. இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் பிற்போக்குவாத கிறித்தவர்களால் தொடங்கப் பட்டதுதான் இந்தத் தொலைக்காட்சி. ஆனால் அண்மையில் அதன் முதன்மைச் செய்தியாளர் அதிகமாக யூத எதிர் நிலைப்பாட்டுக்குள் சென்றுவிட்டார் என்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.



ஜிஜெக் ஒரு தீவிர வாசகர். வாசிப்பதற்கு மூன்று புத்தகங்களை ஒரே நேரத்தில் வைத்திருப்பாராம். ஏனென்றால், ஒன்று சலிப்பைத்தருகையில் மற்றதுக்கு மாறிவிடலாம் என்ற யோசனைதான்.

மலைப் பகுதிகளில் ஏறிப் பனிச்சறுக்கும் விளையாட்டு லுப்ளியானா வில் இருக்கிறது. ஏன் நீங்கள் அதற்குப் போகவில்லை என்ற கேள்விக்கு 'இந்த மலைச் சறுக்குப் பற்றி எனக்கு மிகவும் ஆணித்தரமான பகுத்தறிவுள்ள சிந்தனை உள்ளது. ஏன் மலையில் ஏறிப் போய், கீழே சறுக்கி வருகிறீர்கள். இதற்கு ஏறிப் போகாமல் கீழேயே இருந்து விடலாம்தானே! அந்த நேரத்தில் ஏதாவது புத்தகத்தைப் படித்துவிடலாம்' என்பது அவரது பதில்.

ஜிஜெக் புகைப்பதோ குடிப்பதோ இல்லை. 'எனக்கு அதற்கெல்லாம் ஆசைதான். ஆனால் அவற்றின் சுவை நல்லாயிருக்க வேண்டும்' என்பார். செக்ஸ் பற்றி அவருக்கு 'நல்ல' கருத்து.

செக்ஸ் என்பது ஓர்மையின்மை நிலைக்குள் பயணிக்கும் பயணம் என்கிறார்களே! "உங்களுக்கு பைத்தியமா?... அது ஓர்மையின்மையா? அது ஒருவர் தன் சுயத்தைக் கட்டுப்படுத்தும் இடம். செக்ஸ் ஒரு கடமை.. என் கடவுளே செக்ஸ் மகிழ்ச்சியல்ல."

ஒளிநாடாக்கள், தட்டுக்களால் நிறைந்திருக்கும் அவரது அறை. 'நான் படங்களை வாங்குகிறேன். வாங்குவதால் அவை என்னிடம் சொந்தமாக வந்துவிடுகின்றன. பின்னர் எதற்காக அவற்றைப் பார்க்க வேண்டும்?'

எல்லாவற்றுக்கும் எதிர்நிலையில் பதில் வைத்திருப்பார். செர்பியா தொடர்பான சிக்கலில் உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று நிலைப்பாட்டை எடுக்க மற்ற சிலவேனியர் முனையும்போது, "வேண்டாம், பிறகு செர்பிய தொலைக்காட்சியில் ஸ்லவேனியத் தடியர்கள் எல்லாம் உடல் மெலிவதற்கு முயற்சிக்கிறார்கள் என்று சொல்வார்கள்' என்று சொல்லியிருக்கிறார்.

'நீங்கள் எதையாவது ஒவ்வொரு நாளும் செய்து கொண்டேயிருக்க வேண்டும்' என்ற லெனினுடைய வரிகளை மேற்கோள் காட்டுவதில் ஜிஜெக்கிற்கு விருப்பம். ஆதனால் தானோ என்னவோ எழுதிக் குவித்திருக்கிறார். கட்டுரைகள், ஏறக்குறைய ஆண்டுக்கு ஒரு புத்தகம். நூல் மதிப்புரைகள்,



படிப்பகம்

www.padippakam.com

உரைகள், நேர்காணல்கள் என்று குவிந்திருக்கின்றன.

அவருடைய உரைகளில், நேர்காணல்களில் திரும்பத் திரும்ப வரும் செய்திகள் இருக்கின்றன ஆனாலும், அவை சுவையாகச் சொல்லப்பட்டும் தீவிரத்துடன் வாதிடப்பட்டும் இருப்பதைக் காணலாம். பல நகைச்சுவைகளை அவர் தனது உரைகளில் திரும்பவும் திரும்பவும் பயன்படுத்தியிருக்கிறார்.

'வாசலில் இருக்கும் புரட்சி' என்னும் தலைப்பில் லெனினின் பணிகளை மீள் தொகுப்புச் செய்திருக்கிறார். 'லெனின் மிகவும் கொடூரமாக இருந்திருக்கலாம் என்பதும் இன்ன பிறவும் (என் கடவுளே! என்பதைப்போல and so on and on என்பதையும் ஜிஜெக் அடிக்கடி பயன்படுத்துகிறார்.) எனக்குத் தெரியும். ஆனால், நான் சொல்ல வருவது, புதிதாகச் செய்து பார்ப்போமே என்பதுதான்.'

தன்னுடைய ஒரு புத்தகத்தைப் பற்றிச் சொல்லி முடிக்கும் வகையைப் பாருங்கள்: "இந்தப் புத்தகத்தில் எப்படி வாழ்வது, எப்படி மகிழ்வாக இருப்பது என்பது பற்றி ஏதாவது இருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாம். ஒரு மெய்யிலாளராக இந்தவகையில் நல்ல செய்தியை வழங்க முடியாது. ஒரு மெய்யியலாளரின் தலையாய பணி 'எவ்வளவு மோசமான அசிங்கத்தில் நீங்கள் புதைந்திருக்கிறீர்கள் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துவதுதான்' என நம்புகிறேன்."

ஒரு நேர்காணல் முடிவை இப்படிச் சொல்கிறார். "இவ்வளவுதானா? என் கடவுளே! நல்லது. நல்லது. பார்ப்போம்."

தற்போது ஹெகலைப் பற்றிய ஒரு மிகப் பெரிய புத்தகத்தை எழுதுவதில் ஈடுபட்டிருக்கிறார்.

"நேரம் போய்க்கொண்டிருக்கிறது. எனக்கு 61 வயது. நீரிழிவும் இருக்கிறது."

'நாங்கள் மெய்யியல்வாதிகள், வாழ்வை மகிழ்வாக வைத்திருப்பதில்லை. என்னுடைய வேலை செய்யும் ஆர்வத்தில் வாழ்வின் இன்பங்களைத் தொலைத்து விட்டேன். ஒரு நாள் வாக்னரைத் (Richard Wagner) கேட்கலாம் என்று போட்டுவிட்டு படுக்கச் சரிந்தேன். நடந்தது என்னவென்றால் அந்த இசை தந்த உற்சாகத்தில் பாதி இரவில் எழுந்து இன்னொரு எழுத்து வேலையைச் செய்து கொண்டிருந்தேன்.'

எழுதுவது வாசிப்பது சிந்திப்பது என்பதே வாழ்க்கையாக உலகத்தின் இளசுகளை ஈர்த்திருக்கும் ஸ்லவோய் ஜிஜெக்!

தன்னைப் பற்றியே திறனாய்வு, விமரிசனம் செய்து கொள்வது, தனது கருத்துக்களுக்கே மாற்று நிலை எடுப்பது என அனைத்தும் அவரிடம் உள்ளன.

ஜிஜெக்கின் உருவமும் நடையுடை பாவனைகளும் சற்று வேடிக்கையானவை. எப்போதும் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் அவர் உரையாற்றும் போதும்



வகுப்பெடுக்கும் போதும் இயங்கிக் கொண்டிருப்பது உண்மையாகவே வேடிக்கையாகவிருக்கும். அவர் கலகக்கார நடைமுறையில் மிகவும் சிறப்பாக ஈடுபாடுள்ளவர். ஆனால், அது நோக்கத்துடன் ஏற்பட்டதல்ல. அவரது வாழ்க்கையில் இயல்பாக அமைந்துவிட்ட ஒன்று. தெரிதாவைப் பொறுத்தவரை மிகவும் சீரான உடைகளும் உருவமும் உடையவர் என்றார் இவர் மறுதலை. அண்மையில் லுப்ளியானாவில் இருந்து ஒருவர் மற்றொருவருக்குச் சொன்ன முகநூல் செய்தி: 'ஜிஜெக் 'I am Beatiful' என்ற வாசகத்துடன் ஓர் பனியன் அணிந்தபடி நகரில் திரிகிறார். வேறு யாராவது மெய்யியலாளர் இப்படியிருப்பார்களா?'

கருத்துக்களை தடாலடியாகச் சொல்கிறார். போட்டு உடைக்கிறார். எதையாவது மாற்றி சொல்லிவிட்டு 'மன்னிக்க வேண்டும்' என்பதும் பின்னர் அதன் சரியான வடிவத்தை உச்சரிப்பதும் சொல்வதும் அடிக்கடி 'என் கடவுளே' என்பதும் ஒரு மெய்யியலாளர் செய்யும் வேலை அல்ல. அல்லது அரசியல் வகையில் சரியானது அல்ல. ஆனால்அவர் அதைத் தொடர்ந்து செய்கிறார்.

எழுத்துக்கள்:

ஜிஜெக் உடைய எழுத்துக்கள் மெய்யியல், உளப்பகுப்பாய்வு, அரசியல் ஆகிய பிரிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால், ஜிஜெக் உடைய சிந்தனையில் பெருமளவில் தாக்கம் ஏற்படுத்தியிருப்பது மூன்று ஆளுமைகள் என்கிறார்கள். மற்றொருவகையில் ஜிஜெக் பெருமளவில் தனக்கான சிந்தனைத்தளத்தை இந்த மூன்று ஆளுமைகளின் எழுத்துக்களின் வழி உருவாக்கியிருக்கிறார்.

உளப் பகுப்பாய்வைப் பொறுத்தவரை ழாக் லக்கானும் அரசியலைப் பொறுத்தவரை கார்ல் மார்க்ஸும் மெய்யியலைப் பொறுத்தவரை ஜோர்ஜ் ஹெகலும் இருக்கின்றனர். இந்த மூவருடைய அணுகுமுறைகளும் ஜிஜெக்கின் எழுத்துக்களில் இருந்தாலும் மூவரது சிந்தனைகளும் பல தளங்களிலும் ஜிஜெக்கின் சிந்தனையில் ஊடாடியிருக்கின்றன.

இன்னொரு வகையில் சொன்னால் ஹெகலின் மெய்யியல் அணுகுமுறையும் மார்க்ஸின் சமூக நோக்கமுடைமையும் லக்கானின் சொல்லாக்கங்களும் கருத்து நிலையாக்கங்களும் பலவகைளிலும் ஜிஜெக்கிடம் இருக்கின்றன எனலாம். ஹெகலியம், மார்க்சியம், பிற்கால அமைப்பியலின் உளப் பகுப்பாய்வு ஆகியவை ஜிஜெக்கிடம் தாக்கம் செலுத்துகின்றன எனலாம்.

ஜிஜெக்கினுடைய நூல்களிலிருந்து சாறு பிழிவது கடினம் என்பது பொதுக்கருத்து. இதுவரை ஜிஜெக்கைக் குறித்து நூற்களை எழுதியவர்கள் சொல்வது இதான்.

அவருடைய நூலைப் புரட்டிவிட்டு திடீரெனக் கடைசி அத்தியாயத்துக்குத் தாவ முடியாது. ஒவ்வொரு இடத்திலும் அத் தியாயத்திலும் ஏதாவது கருத்துத் திறனாய் வுகளை தனது தீவிரத்துடன் நடத்திக் கொண்டிருப்பார். அதை விட்டுவிட்டு கடைசிப் பக்கத்தில் எப்படிப் போய்க் குதிக்க முடியும்?

இதுவரை எழுதியவைகளை சில பிரிவுகளாக எளிதில் பிரித்து விடலாமே தவிர, அவற்றின் சாரங்களைக் கொண்டு வருவது கடினம். தன்னைத் தானே மீண்டும் மீண்டும் கேள்விக்குள்ளாக்கி, கேலிக்குள்ளாக்கி அடுத்தகட்டத்துக்குத் தாவிச் செல்லும் ஜிஜெக்கின் எண்ணங்கள் இவை மட்டும்தான் என்று சுட்டிச் சொல்வதில் பேரிடர் இருப்பதை மறுக்கவே முடியாது.

ஜிஜெக் 1989 இலிருந்து தொடர்ந்து குறைந்தது ஆண்டுக்கு ஒரு நூலாவது எழுதி வருகிறார். இதுவரைக்கும் 44 நூல்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். கட்டுரைகள் நூற்றுக்கு மேற்பட்டவை. முதலாவது ஆங்கில நூல், 'The Sublime Object of Ideology' (1989) என்பது.

ஒவ்வொரு கருத்தியல் சிந்தனைகளுக்கும் மேலான பாரியதோர் நோக்கம் இருக்கிறது. ஒருவர் ஓர் அரசியல் கருத்தியல் நிலையை விரும்புகிறாராயின் அதை வைத்துக்கொண்டு அந்த மேலான நோக்கத்தையும் அவர் புரிந்து கொண்டிருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது. சமூகத்தில் வர்க்கப் போராட்டம் முடிவடைந்து விடவில்லை. ஸ்ராலினியத்தின் பரப்புரையை மீறியும் அது இன்னும் இருக்கிறது. ஆனால், இரண்டு வர்க்கங்களுக்கு இடையில் வர்க்கப் போராட்டம் இருந்த நிலை மாறி, அது இடம் மாறியிருக்கிறது. தற்போது மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லும் "கட்சிக்கும்" அல்லது அந்த "மொத்தத் துக்கும்" அதனோடு முரண்படுபவர்களுக்கும் அல்லது கருத்தியல் வகையில் "காட்டிக்கொடுப்போர்' ஆக அல்லது "மக்களின் எதிரிகளாக" வைக்கப்பட்டவர்களுக்கும் இடையில் நடக்கிறது. இப்படியான கருத்தியலின் மேலான நோக்கமும் அதற்கும் அரசியல் கருத்தியல்களுக்கும் கட்சிக்



படிப்பகம்

www.padippakam.com

கும் அல்லது மேலான நோக்கத்தின் அடையாளமும் என இந்த நூலின் சொல்லாடல் செல்கிறது. அரசியல், உளப் பகுப்பாய்வு என்பவற்றை ஹெகலின் கருத்துக்களோடு சேர்த்து முன்வைத்த நூல் என்று கூறுவர்.

ஜிஜெக்கின் பிந்தைய நூல் ' Living in the End Times' என்பது 2010இல் வெளிவந்தது. இந்த நூல் பலத்த அடி வாங்கியுள்ளது என்றே சுட்டவேண்டும். வழக்கம்போல மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் பல விமர்சகர்கள் தெளிவாக ஒன்றையும் முன் வைக்கவில்லை என்கிறார்கள்.

பிரான்சிஸ் புக்குயாமாவை (Francis Fukuyama 1952-) எப்போதும் அவரது 'வர லாற்றின் முடிவு'க் கருத்துக்காக ஆதரிக்கும் அல்லது மேற்கோள்காட்டும் ஜிஜெக், இந்த நூலில் ஏறக்குறைய தலைப்பையே அதை ஒட்டி வைத்திருப்பதை கவனிக்கலாம். உலகளாவிய முதலாளித்துவம் தனது இறு திச் சிக்கலை எதிர்கொண்டிருக்கிறது என் கிறார். சூழலியல் சிக்கல்கள், பொருளா தார ஒழுங்கமைவுகளுக்குள் ஏற்பட் டுள்ள சமநிலையின்மை, மரபணு உயிரிய லில் ஏற்பட்டுள்ள பாய்ச்சல், சமூகப் பிரிவினைகளுக்குள் ஏற்பட்டுள்ள வெடிப்பு நிலையும் உடைவும் போன்ற காரணிகள் இந்த நிலையை முதலாளித்துவத்துக்குத் தந்திருக்கின்றன என்கிறார்.

முதலாளித்துவத்தின் முடிவு என்பது ஏறக்குறைய உலகத்தின் முடிவாகத்தானே மேற்குலகு பார்க்க முனைகிறது. பொரு ளாதாரத்தின் பாரிய அழிவை நோக்கிய நிலையில் எமது கூட்டு நனவிலி பல துயரம் செறிந்த நிலைகளுடன் தொடர் புடையதாகிறது என்கிறார். கருத்தியல் புறக்கணிப்புக்கள், கோபத்தின் வெளிப்பா டுகள், பேச்சுவார்த்தைகளுக்கான முயற் சிகள், சமூக உள அழுத்தம், பின் வாங் குதல் போன்றன பரவலாக சமூகக் கூட்டு நனவிலியில் இடம் பிடித்திருக்கின்றன.

மாவோவின் வரிகளை மேற்கோள் காட்டுகிறார். 'சொர்க்கத்தின் கீழே பெரி யளவு சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. அந்தச் சந்தர்ப்பம் மிகநல்லது.' மார்க்சிய பொரு ளாதார அரசில் ஆய்வுமுறையை வைத்து சமூகத்தைப் பார்க்கும் ஜிஜெக் தற்போதைய சூழலில் கம்யூனிசப் பண்பாட்டை நோக்கி ஓர் ஊற்றுக்கண் திறந்திருப்பதாகக் கருது கிறார்.

இப்படியெல்லாம் எழுதினால் இந்தப் புத்தகத்தையும் கருத்தையும் எந்த மேற்க த்தைய விமர்சகர் நன்றாக இருக்கிறது என்று தலையில் வைத்து ஆடுவார் என்று எதிர்பார்க்க முடியும்?

ஜிஜெக்கினுடையது குறுகிய கால புகழ் என்றும் சொல்லலாம் அல்லது இந்த வகைச் சிந்தனையின் மெய்யியல் சார்ந்து தாக்கத்தை எடைபோட இன் னும் நிறைய நாட்கள் இருக்கின்றன என்றும் சொல்லாம். ஒரு சிந்தனையின் தாக்கத்தை அளவிடுவதற்கான கால எல் லையை தற்போதைய ஊடக வலைப் பின் னல் முறியடித்திருக்கலாம். ஆனாலும், நின்று நிதானித்து வாசித்து ஆய்வதற்கு இன்னும் நாட்களாகலாம். அதுவரைக்கும் இன்றைக்கான மெய்யியலின் உலகில் 'படு பயங்கர மெய்யியலாளராக' ஜிஜெக்கின் இடம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதுவும் குறிப்பாக இளவட்டத்தினரிடம்!

குறிப்பு:

ஏறக்குறைய ஜிஜெக்கின் அனைத்து நூல்களும் கையில் இருப்பினும் குறிப்பாக Slavoj Zizek: a critical Introduction, Ian Parker, Pluto. 2004; Slavoj Zizek, Tony Myers, Routledge. 2003 மற்றும் Introducing Slavoj Zizek : a Graphic Guide Icon, 2011 போன்றவற்றை அடியொற்றியே இந்தக் கட்டுரை எழுதப்பெற்றது. கீழே தரப்பட்டுள்ள இணைப்பு (Let us be realists and Demand the impossible: Communism.

Video: Festival of Dangerous Ideas. 1-2 October 2001, Sydny opera House Program.) ஆர்வமுடையவர்கள் பார்ப்பதற்கு குறிப் பான ஒளிப்பதிவு உள்ளது. அவர் பேசும் பல கருத்துக்கள் அதில் சுருக்கமாகவும் திரும்பவும் சொல்லப் படுகின்றன. http:// www.lacan.com/ziny.htmஇல் மேலும் பல பய னுள்ள இணைப்புக்கள் உள்ளன. இது வும் http://www.iep.utm.edu/zizek/#H5 பயனுள்ள இணைப்பு.

# கடிதம்




**கா**லம் இதழ் 38 படிக்கக் கிடைத்தது. காலம் கடந்த இரண்டு மூன்று இதழ்களாக கனதியாகவும் சிறப்பாகவும் வடிவமைக்கப்பட்டு வெளிவருகிறது. படைப்புகளும் அவ்வாறே. பாராட்டுக்கள்.

அசோகமித்திரன் சிறப்பிதழில் நண்பர் ஷோபாசக்தி, 'கப்டன்' கதையில், சிறுகதைக்கான அனைத்து நுட்பங்களையும் தவிடுபொடியாக்கி விட்டு, பின்னர் அந்தத் துண்டுகளை அழகாகக் கோர்த்து கதையை ஒரு காவியமாக்கியிருக்கிறார். மிகப் பரந்துபட்ட கதைக்களம். ஒரு அசலான தமிழ் நாவலுக்கு சாத்தியமான அனைத்து அம்சங்களும் அந்தக் கதைக்குள் குடிகொண்டிருக்கிறது. அதை ஒரு நாவலாக்கினால் அவரின் எழுத்துக்களின் உச்சமாக அது திகழும் என்று நம்புகிறேன். யாழ்ப்பாணம் சுருவில்லில் தொடங்கிய கதை கனடா திபோ ஆற்றில் முடிகிறது. அற்புதம். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

காலம் இதழை கவிஞர் அனார் அம்மையாரிடம் இரவல் பெற்றே நானும் அரபாத்தும் வேறு சில நண்பர்களும் படிக்கிறோம். சென்னையில் இருந்து ஒரு இதழை இலவசமாக அனுப்புவதன் பொருளாதார சுமை நாம் அறிந்ததே. நன்றி.

**–எஸ்.எல்.எம். ஹனீபா,** இலங்கை

**ப**ஷீரின் பூவன் பழம் படித்தபோது, அடடா நம்மிடமும் செல்மா லாகர்லெவின் 'தேவமலர்' போல இப்படி ஒன்றா என்று உள்ளம் விம்மியது. இப்போது ஷோபாசக்தியின் கப்டன் கதையைப் படித்து முடித்ததும் தவறிப்போய் பேர்லாகெர் குவிஸ்டின் பாரபாஸைப் படித்துவிட்டோமா என்கிற சந்தேகம் தோன்றியது.

காலத்தால் பழசாகிப்போச்சு என்கிற ஒரே காரணத்தால் கண்டதையெல்லாம் கிளாசிக் என்று குறிப்பிடுவது, தெருவுக்கு ரெண்டிருக்கும் சாராயக் கடைகள் போல சகஜமாகிவிட்டது.

தம்பட்டம் அடித்துக்கொள்வதாலோ மாலைக்கு செலவுசெய்து அடுத்தவர் கையில்கொடுத்து தலையை நுழைத்துக்கொள்வதாலோ ஒருபோதும் உலகத்தரம் வசப்படாது. கப்டன் போல அதுவாக நிகழ்ந்தால்தான் உண்டு.

கும்பிடுகிறேன் ஷோபாசக்தி.

**–விமலாதித்த மாமல்லன்,** இந்தியா
(முகப்புத்தகத்தில்)

**கா**லம் 38, அசோகமித்திரன் சிறப்பிதழ் அட்டையில் இடம்பெற்றுள்ள அசோகமித்திரன் புகைப்படம் நண்பரும் புகைப்படக் கலைஞருமான ஸ்நேகிதன் எடுத்தது. சென்ற இதழில் அவரது பெயர் விடுபட்டுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

**செல்வம் அருளாணந்தம்,** ஆசிரியர், காலம்



படிப்பகம்

# N.K.S.

**Drapery & Blinds Fabric Ltd**

**Ketha Nadarajah**

**President**



210 Silver Star Blvd, Unit # 825

Scarborough, ON, M1V 5J9

Telephone (416) 321 - 6420 Fax (416) 321 - 2217

Email : info@nksdrapery.ca Web: www.nksdrapery.ca

www.padippakam.com



# கல்வியும் சமூகமும்

## பேராசிரியர் மா.சின்னத்தம்பி

இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்விப் பேராசிரியராகப் பணி யாற்றும் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் கனடா, ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் 'இடைவரவுப் புலமையாளர்' (visiting scholar) என்ற நியமனத்தின் நிமித்தம் கல்வி மற்றும் ஆய்வு முயற்சிகளில் ஈடு படுவதற்காக 2011ஆம் ஆண்டில் கனடா வந் திருந்தார். கனடா, ரொறண்ரோவில் அவ ருடன் நேர்காணல் ஒன்று இடம் பெற்றது. அதனை இங்கு தருகிறோம்.



**காலம்: கனடாவின் இலங்கைத் தமிழர்களில் கல்வி தொடர்பாக எத்தகைய மாற்றங்களைக் காண்கிறீர்கள்? அவை பற்றிய உங்கள் கருத்து யாது?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** இதனை இரு நிலைகளில் நான் அவதானிக்கிறேன். முதலாவது உத்தியோகம் பார்த்து நாட்டின் பிரச்சினைகளினால் அவற்றை விட்டு விட்டு வந்தவர்கள். அவர்கள் இரண்டாவது தொழில் வாழ்வை வடி வமைக்க வேண்டியிருந்தது. சிறிது மன அழுத்தத்துடன் அவற்றை மறக்க முயன்று கொண்டு குறுகிய காலத்தில் இங்கு கிடைக்கக் கூடிய புதிய தொழில் வாய்ப்பு ஒன்றுக்குத் தயார் செய்து இப் புதிய தொழிலில் செயற்படுகின்றனர். பல சமயங்களில் இவை அகதிகள், புனர்வாழ்வு, பன்மைக் கலாசார வாழ்வு என்பவற்றுடன் பிணைக்கப்பட்டிருந்தன. வேறு சிலர் இலங்கையில் கற்றதையும், பெற்றதையும் மறந்துவிட்டு புதிய வணிக முயற்சிகளில் ஈடுபட்டு வளர்ந்துள்ளனர்.

இரண்டாவது பிரிவினர் இங்கே பிறந்து வளர்ந்த பிள்ளைகள். இவர்கள் புதிய வாழ்க்கை விழுமியங்களுடன் புதிய கல்வி நிறுவனங்களில், நவீன கற்கை நெறிகளில் புதிய கற்றல் மாதிரிகளில் கல்வி கற்கின்றனர். பலருக்கு தமிழ் எழுதத் தெரியாது. ஆனால் உன்னதமான உயர்கல்லூரிகளிலும், உலகின் மிகவும் சிறந்த பல்கலைக்கழகங்களிலும் கற்கின்றனர். அறிவுப் பொருளாதாரம் நோக்கிய உலகமயமாதல் செல் நெறியில் இவர்கள் சிறப்பாக பொருந்துகின்றனர். எதிர்காலத்தில் விஞ்ஞானிகளையும், கோட்பாட்டாளர்களையும், சிந்தனை யாளர்களையும் இவர்களிலிருந்து நிச்சய மாக நாம் பெற்றுக் கொள்வோம்.

இவற்றுக்கு புறம்பாக தமிழர்களின் பண்பாட்டுக் கல்வி மற்றும் அழகியல் கல்வி இங்கு புதிய உத்வேகத்துடன் செழித்து வளர்கின்றது. தமிழ்மொழி, நடனம், இசை, வாத்தியக்கருவிகள், திரைப் படம், புனைவு இலக்கியம் போன்ற துறைகளில் பரந்துபட்ட முன்னேற்றம் தென்படுகின்றது.

மேலதிகமாக, இந்தியப் பல்கலைக்கழகங் களின் கடல்கடந்த வளாகங்களை நிறுவி பட்டப் படிப்பையும், பட்ட மேற் படிப்புக்களையும் ஆர்வத்துடன் கற்று வருகின்றனர்.

இத்தகைய பல்நிலை முன்னேற்றங்கள் மிகவும் பெருமைப்படத்தக்கன; பாரிய முன்னேற்றங்களைக் கொண்டு வருவன.

**காலம்: இலங்கையின் பாடசாலைக் கல்வியின் போக்கு மற்றும் நோக்கு தொடர்பாக கனடா வந்த பின்பு என்ன உணர்கிறீர்கள்?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** இலங்கையில் பதினைந்து வயது வரை கட்டாயக் கல்வி யுண்டு. இப்போது சிறுவர் பாதுகாப்பு காரணங்களுக்காக சிறுவர்களை பதி னெட்டு வயது வரை தொழிலில் அமர்த்த முடியாது. இதனால் அதுவரை படிக்க வேண்டும் என்பது போன்ற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது. பெண் பிள்ளைகள் நிறையப் படிக்கிறார்கள். ஒவ்வொரு ஆறு கிலோ மீற்றருக்கும் (சராசரியாக) ஒரு பாடசாலை இயங்குகின் றது. ஏறக்குறைய 10000 பாடசாலைகளும் இரண்டு லட்சம் ஆசிரியர்களும் 40 லட்சம் மாணவரும் கொண்ட பாடசாலை கட்டமைப்பு சிறப்பானது.


ஆனால் அறிவை அதிகரிப்பது, சான் றிதழ்களை முன்னிலைப்படுத்துவது கடன் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் மதி யுரைகளை அப்படியே பின்பற்றுவது என்பன பாடசாலைக் கல்வியின் பலவீனங் களாகும்.

திறன் மேம்படுத்துவது தொடர்பாக அக்கறையின்மை நிலவுகிறது. கன டாவில் நிலவுவதுபோல் மாணவருக்கு



படிப்பகம்

www.padippakam.com



சமூகத் தொடர்பும்; சமூக பொறுப்பும் வலியுறுத்தப்படுவதில்லை. இலங்கையில் வேலை உலகுடன் மாணவப்பருவத்தில் மாணவர்கள் தொடர்புபடுத்தப்படுவதில்லை. கனடாவில் கூட்டுறவுக்கல்வி, சமூக மட்டத்திலான தன்னார்வப்பணிகளில் ஈடுபடல், உடல் உழைப்பை மதித்தல் என்பவற்றின் மூலம் மாணவர்களிடம் சிறந்த குடிமக்கள் பண்பாடு வளர்க்கப்படுகிறது. 'தமது காலில் நிற்றல்' என்பது கல்வியினால் வளர்க்கப்படுகிறது.

இலங்கையில் பாடசாலைக்கல்வி கற்பவர்களிடம் இப்போதும் குடியேற்றவாத உணர்வும் கண்ணோட்டமும் காணப் படுகிறது. உடை நலுங்காத உயர் தொழிலில் மாத்திரம் நாட்டம் கொள்ளுதல், உடல் உழைப்பை வெறுத்தல், தொழிலாளர்களை கீழ்நிலையில் நோக்குதல், மற்றவர் உழைப்பில் (பெற்றோர் உழைப்பு அல்லது சீதனம்) குதூகலமாயிருத்தல் போன்ற நாட்டங்களுடன் கற்றல் அத்தகைய மாதிரி களில் பாடசாலைகளையும் கற்பித்தலையும் ஒழுங்குபடுத்தல் என்பன பாடசாலைக் கல்வி முறையின் பலவீனங்களாயுள்ளன.

**காலம்: கனடா பாடசாலை முறைமையை எந்த விடயங்களில் இலங்கைப் பின்பற்றுவது அவசரமான தேவையென கருதுகிறீர்கள்?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** ஒரு நாட் டின் மனிதவள விருத்திக்கான தேசிய ஏற்பாடாகவே கல்வி முறைமை கருதப் படுகின்றது. முறைமையான கல்வி மற்றும் பயிற்சியை வழங்கினால் அரசாங்கத்தின் செலவினங்களுக்குரிய உத்தம பயன்பாட்டை உறுதிப்படுத்த முடியும்.

இலங்கை அரசாங்கம் மூவாயிரம் கோடி ரூபாவை கல்விக்கெனச் செலவிடு கின்றது. இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி, அனைவருக்கும் கல்வி என்ற கோட் பாடுகளின் படி கல்வி முறையை நிர்வகிக் கும் போது கல்வி விரயங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நீர் இறைப்பது மாத்திரமா முக் கியம்? நீர்வாய்க்காலின் வழியாக ஓடு வதையுமல்லவா உறுதிப்படுத்த வேண்டும்!

கனடாவில், கற்கும் போதே தொழில் உலகுக்குரிய, சிறந்த பொருத்தமான கற்கை நெறியைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள் சிறப்பாக வழங்கப் படுகின்றன. பாடசாலைகளில் வழி காட்டும் அலுவலர்கள் சிறப்பாக பணியாற்றுகின்றனர். பெற்றோருடனும் தொழில் நிறுவனங்களுடன் மாணவர் தேவைகள், செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த தொடர்புகளைப் பேணுகின்றனர். இத்தகைய முயற்சிகள் இலங்கையில் பாடசாலைக் கல்வியில் ஒழுங்காக வடி வமைக்கப்பட வில்லை. இவற்றில் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும். அல்லது கல்வியுலகில் முதலிடப்படும் மூலதனம் விரயமாகிவிடும்.

உயர்கல்வி தொடர்பாக பாட சாலை மட்டத்திலும் சமூக மட் டத்திலும் திட்டவட்டமான ஆலோ சனைகள், கலந்துரையாடல்கள், மேற் கொள்ளப்படவேண்டும். சமூக புகழுக்காக ஏதாவதொரு பட்டம் பெறுதற்கென காலம், நிதி, உழைப்பு என்பவற்றை பாரியளவில் விரயமாக்குதல் தவிர்க்கப்படவேண்டும்.

எல்லா வகுப்பினருக்கும் எல்லா வகை யான கல்வியையும் இலவசமாக வழங்கும் தற்போதைய கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும். வசதி குறைந்தோருக்கு இலவச கல்வியும் செல்வந்தர்களுக்கு ஒரு பகுதி செலவை மாத்திரம் அரசாங்கம் பொறுப்பேற்கும் மாதிரியிலான கல்வி ஏற்பாட்டையும் வழங்க வேண்டும்.

குறைந்த மட்ட கற்கும் திறன் கொண்ட வர்கள் மீண்டும் மீண்டும் தேசிய பரீட்சை களுக்கு தோற்றும் நடைமுறை தனி நபருக்கும் சமூகத்துக்கும் பலமாதிரி விரயங்களை ஏற்படுத்துகின்றது. இவர்களை



படிப்பகம்

www.padippakam.com

வேறு தொழில் நுட்பவியல் அல்லது தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு திசை திருப்புதல் வேண்டும். இதற்கான இணை ஏற்பாடுகள் உருவாக்கப்படுதல் அவசியம்.

**காலம்: கனடாவில் பாடசாலைகளில் கல்வி கற்கும் இளவயதினர் ஆசிரியர்களுடன் சமமாக – நட்புரிமையுடன் பழகுகின்றனர். 'குருபக்தி' இல்லை என்கிறார்களே! இதை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** எனது தொழில் வாழ்வு கடந்த நான்கு தசாப்தகாலமாக மாணவர்களுடனும் கற்பித்தலுடனும்தான் பின்னிப் பிணைந்துள்ளது. இக்காலப்பகுதியில் மாணவர்கள் எங்களைக் கண்டால் எழுந்து நிற்பர்; வணக்கம் சொல்வர்; பெயர் சொல்லி ஒருபோதும் எங்களை அழைக்கமாட்டார்கள்; எதிர்வார்த்தை பேசமாட்டார்கள்; சமாந்தரமாக நெருங்கி உட்காரத் துணிய மாட்டார்கள். இத்தகைய நீண்டகால அவதானிப்பு என்பது இயல்பாகவே கீழ்ப்படிவான மாணவர்கள் தொடர்பான எதிர்பார்ப்பை எம்மிடையே ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் எந்த நாட்டிலும் காண முடியாத சுதந்திரப் பெருவெளி காணப் படுகின்றது. பெண்கள், குழந்தைகள், முதியோர், அனைவருக்கும் உயரிய மதிப்பும் பாதுகாப்பும் உண்டு. மாணவர்களுக்கும் இதே சுதந்திரம் உண்டு. ஆசிரியரோ, பெற்றோரோ அவர்கள் மீது எத்தகைய ஆதிக்கத்தையும் செலுத்தமுடியாது. கருத் தேற்றமும் செய்ய முடியாது. உடை, நட்பு, படிப்பு, நடமாட்டம் எல்லாவற்றிலும் பூரண சுதந்திரம் உண்டு. இந்த அமைப்புமுறைதான் ஆசிரிய மாணவர் உறவை அவ்வாறு வடிவமைத்துள்ளது.

கனடாவில் உள்ள ஆசிரியர்கள் மாணவர்கள் தமது மனதில் மரியாதை தந்தால் போதும் என்கின்றனர். பல சமயங்களில் மாணவர்கள் மூலம் தமது தொழிலுக்கு அபாயம் ஏற்பட்டு விடுமோ என்று அச்சமடையும் ஆசிரியர்களையும் இங்கே கண்டிருக்கிறேன்.

தனியாசிரியர் தனி மாணவன், ஆசிரியர் தீர்மானித்தவற்றை உள்ளடக்கம், கற்பித்தல் முறை போன்றவற்றை நடைமுறைப் படுத்தும் ஏற்பாடு என்றிருந்தபோது 'குரு பக்தி' அடிப்படையாயிருந்தது. இப்போது பரந்துபட்ட கல்வி முறைமையில் அரசாங்கம் அல்லது கல்வி நிறுவன முதலாளி சொல்வதன்படி, அரசினால் தீர்மானித்த உள்ளடக்கத்தை அவர்களது அறிவுறுத்தலுக்கு அமைவாக கற்பிக்கும் பணியாளர்தான் ஆசிரியர். இந்த மாற்றங்களுக்குள் குருபக்தி இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்.

இங்கெல்லாம் பலசமயங்களில் ஆசிரியன் எதிர்பார்ப்பது நல்ல வேதனம், நிரந்தர வேலை வாய்ப்பு, பாதுகாப்பான தொழிற்சூழல் என்பன மாத்திரமே.

**காலம்: பாடசாலைக் கல்வி தொடர்பான மதிப்பீட்டு முறைகளில் இலங்கை நிலைமைகளிலிருந்து கனடா நிலைமைகளை எவ்வாறு வேறுபடுத்துகிறீர்கள் ?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** எல்லா நாடுகளிலும் பாடசாலைக் கல்வி தொடர்பான மதிப்பீடுகள் மிகவும் முக்கியமானவைதான். பாடசாலைக் கல்வியின் குறிக்கோள்கள் சரியாக நிறைவேற்றப்படுகின்றதா? அதில் முடக்கப்படும் வளங்களுக்குரிய பயன்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றதா? உற்பத்தித் துறைகளிலிருந்து விலக்கப்பட்டுள்ள மாணவர் படிப்பு வினைத்திறன் கொண்ட மனிதவளமாக மேம்படுத்தப்படுகின்றதா? என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறுவதாகவே பாடசாலை மட்டத்திலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்தளவுக்கு வகைகூறல் பொறுப்பு செயற்படுத்தப்படுகின்றது என்பதை அது வெளிப்படுத்த வேண்டும்.

சோதனைகள், ஒப்படைகள், செயற்திட்டங்கள், சமர்ப்பணங்கள் (Presentations), குழுவேலைகள், போன்ற பலவற்றின் மூலம் மாணவர் அடைவு நிலைகள், அவற்றிலான தரவேறுபாடுகள் கண்டறியப்படுகின்றன.

கனடா நாட்டில் அறிவு சார்ந்தவை மட்டு மன்றி, திறன்கள், மற்றும் ஆளுமைகள், மனப்பாங்குகள் போன்ற பலவும் நுட்பமாக அளவிடப்படுகின்றன. பலவீன மானவர்களை முன்னேற்றுவதற்காக போன்ற பலவழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது வினைத்திறன, விளைதிறன் என்பதோடு சரிநிகர், சமத்துவம் என்பவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இலங்கையில் புத்திசாலிகளுக்கு மாத்திரம் சார்பான முறைகளே இப்போதும் உள்ளன. திறமையானவர்களுக்கு முதலில் எல்லாவற்றையும் ஒதுக்குதல் என்ற முறை இப்போதும் உள்ளது. சமூக, பொருளாதார, தொழில்நுட்ப வேறுபாடுகள் கொண்ட நாட்டில் ஆற்றல் வேறுபாடுகளும் ஏற்படும் என்பது சரியாக உணரப்படவில்லை.

> **இலங்கையில் புத்திசாலிகளுக்கு மாத்திரம் சார்பான முறைகளே இப்போதும் உள்ளன. திறமையானவர்களுக்கு முதலில் எல்லாவற்றையும் ஒதுக்குதல் என்ற முறை இப்போதும் உள்ளது. சமூக, பொருளாதார, தொழில்நுட்ப வேறுபாடுகள் கொண்ட நாட்டில் ஆற்றல் வேறுபாடுகளும் ஏற்படும் என்பது சரியாக உணரப்படவில்லை.**

மாற்றுத்திறன் கொண்டவர்கள், மெல்லக் கற்போர், எல்லை நிலை சமூகத்தினரின் பிள்ளைகள் போன்றவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்படவுமில்லை. அதற்கேற்ப மதிப்பீட்டு அளவு கோள்களும் சிறப்பாக வடிவமைக்கப்படவுமில்லை. ஏற்றத்தாழ்வை அகற்றுதற்கான மதிப்பீட்டு முறைகளில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும்.

**காலம்: கனடாவில் மழலைப்பள்ளிகள் மற்றும் முன்பள்ளிகள் நன்கு வளர்ந்துள்ளன. இலங்கையில் இத்தகைய ஏற்பாடுகளுக்கான தேவைகள் வளர்ந்துள்ளனவா? அத்தகைய பள்ளிகளின் வளர்ச்சி எத்தகையது?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** கனடாவின் சிறப்பான சமூக ஏற்பாடுகளில் இத்தகைய மழலைகள் பள்ளிகள் மிக முக்கியமானவை. குறைகுடித்தொகையை தனது வளர்ச்சியை தாமதப்படுத்துகின்ற காரணியாக நோக்குவதன் அடிப்படையில் குழந்தைகளின் பாதுகாப்பு, உரிமை, நலவாழ்வு, கல்வி, பராமரிப்பு தொடர்பாக அதிக முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

செல்வந்த நாடாக இருப்பது மாத்திர மன்றி எல்லோரையும் உழைப்பை நோக்கி எந்நேரமும் நகர்த்துவதற்கான கட்டமைப்பையும் கொண்டிருப்பதால் பெண்களையும் தொழில் உலகிற்காக விட்டுக் கொடுக்கும் செயலமைப்பு தேவைப்படுகின்றது.

எமது நாடுகளில் பெண்களை சமையல், வீட்டு வேலைகள், குழந்தைப் பராமரிப்பு, குடும்ப மருத்துவம் என்பவற்றோடு இணைத்து விடுவதாலும் "இல்லத்தரசி" என பொய்யான புகழுரை கூறி வீட்டில் அடைத்து விடுவதாலும் மழலைப் பள்ளிகளை ஒழுங்கமைக்கவில்லை.

இங்கு பெண்கள் செய்யும் எல்லா வேலைகளுக்கும் தனித்தனியாக நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கம் அவற்றை நன்கு பராமரிக்கின்றது. இதனால் பெண்களும் சுதந்திரமான உழைப்பாளராகிவிட்டனர். இந்த அடிப்படையில் மழலைப் பள்ளிகள் தனியார் துறையில் நன்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

பிள்ளைகள் இயல்பான சுதந்திரத்தை அனுபவிக்கவும், தம் ஒத்த வயதினருடன் வளர்ந்து சமூக மயப்படவும் இப்பள்ளிகள் பெரிதும் உதவுகின்றன. இப்பள்ளிகளைக் கண்காணிக்கும் பொதுமுறை மிகவும் மெச்சத்தக்கது. மழலைகளின் சார்பில் வழங்கப்படும் அரச மானியங்கள் இந்தப் பள்ளிகளை கவனமாக பராமரிப்பதற்கான ஊக்கத்தை வழங்குகின்றன.

இலங்கையில் நகரங்களிலும், அவற்றுக்கு அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் கணவனும் மனைவியும் உழைக்கின்ற படித்து உயர் தொழில் பார்க்கும் குடும்பத்தவர் இத்தகைய பள்ளிகளுக்கான சமுதாயத் தேவையை உருவாக்கியுள்ளனர். இதனால்



படிப்பகம்

www.padippakam.com

வணிக நோக்குடன் தனியார் இத்தகைய பள்ளிகளை தொடக்கி நடாத்துவதில் பல தனியாரும் நிறுவனங்களும் அக்கறை கொண்டியங்குகின்றன. அங்கு மூன்று வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இத்தகைய பள்ளிகள் உள்ளன. ஆனால் கனடாவில் மூன்று மாதக் குழந்தைகளிலிருந்து பராமரிப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையில் இத்தகைய பள்ளிகளுக்கான அரச உதவி மானியங்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அத்துடன் இத்தகைய பள்ளிகளில் கனடாவில் இருப்பதைப் போல் மருந்து மற்றும் நோய்ப் பாதுகாப்பு ஏற்பாடுகளோ, பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஏற்பாடுகளோ அரசினால் மேற்கொள்ளப்படுவதில்லை. இது வறிய நாடு என்ற பொருளாதாரப் பலவீனத்துடன் இணைந்ததாகவே நோக்கப்பட வேண்டும்.

பெண்களுக்கான வேலைவாய்ப்பு என்பது தோட்டத்துறை தவிர ஏனைய துறைகளில் பெரிதும் திருமணம் செய்வதற்கு முந்திய வயதுடையவர்களுக்கேற்ற மாதிரியிலேயே பெரிதும் உருவாக்கப்பட்டுள்ளன. அல்லது முதியவர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் வேலைக்குச் செல்லாது வீட்டில் இருப்பதாலும் மழலைப் பள்ளிகளுக்கான தேவைகள் எல்லா இடங்களிலும் பரவலாக ஏற்படவில்லை.

கனடாவில் குடும்பங்கள் என்பன மிகவும் சிறியனவாகவும் உறுதியற்றனவாகவும், அவற்றின் உறுப்பினர்களில் பல மாறுதல்கள் ஏற்படும் நிலைமைகளும் மிகவும் பொதுவாக காணப்படுவதாலும் மழலைப் பள்ளிகளும், முன்பள்ளிகளும் கட்டாயமாகிவிட்டது.

இலங்கையில் பெரும்பாலான பெண்களுக்கு பரந்துபட்ட தொழில் வாய்ப்பும் ஏற்பட்டு, முதியோர் இல்லங்களும் வளர்ந்து சென்றால் நிச்சயமாக முன்பள்ளிகளும், மழலைப் பள்ளிகளும் வளர்ந்து செல்வது தவிர்க்க முடியாத தேவையாகிவிடும்.

**காலம்: உங்கள் பாடசாலைக் கல்வி பின்னணி பற்றிக் கூறுங்கள்?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** நான் பிறந்ததில் இருந்து இன்றுவரை யாழ்ப்பாண நகரில் வாழ்ந்து வருபவன் எனது ஆரம்பக்கல்வி யாழ்ப்பாண நகர மையத்தில் இருந்த பாரதி பாஷிய வித்தியாசாலியில் தொடங்கியது. ஐந்தாம் வகுப்பு அங்கு கல்வி கற்றேன். அப்பாடசாலை இப்போது இல்லை. மாணவர் எண்ணிக்கை குறைந்ததால் அதனை மூடிவிட்டார்கள். பாடசாலைக் கட்டிடம் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. காங்கேசன் துறை வீதியில் பிரதானமான நகரமத்தியில் இருப்பதால் அதனை பலரும் பயன்படுத்தவிரும்புகிறார்கள் . திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கம் அதில் இயங்கி வந்தது. வடமாகான சபை அதை வேறு தேவைக்கு பொருப்பேற்க இருப்பதாக பத்திரிகைச் செய்திகள் வெளிவந்துள்ளன,.



அதன் பின்பு கொட்டடி நமசிவாய வித்தியாசாலையிலும், யாழ்ப்பாண வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பதினோராம் வகுப்புவரை கற்றேன். நான் கற்ற மூன்று பாடசாலைகளுமே நகர்ப்புற வறிய பிள்ளைகள் (urban poor children) கற்கும் பாடசாலைகள்தான்.

வைத்தீஸ்வராக் கல்லூரி முன்பு வைத்தீஸ்வர வித்தியாலயம் என்றே அழைக்கப்பட்டது. இராமகிருஷ்ண மிஷனரியினரின் பாடசாலை என்பதால் வாய்ப்புக்கள் மறுக்கப்படும் பல மதத்துப் பிள்ளைகளும், பல வர்க்கத்துப் பிள்ளைகளும் படித்தார்கள். இங்கு படித்த மூன்றாண்டுப் படிப்பு என்னில் பல மாறுதல்களை உருவாக்கியிருந்தது. இங்கிருந்துதான் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றேன்.

அப்போது வட இந்தியர்கள் பிடவை வியாபார நிலையங்களை நடாத்துவதற்காக யாழ்நகரில் வசித்து வந்தார்கள். தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழர்களும் அதிகளவில் வியாபார மற்றும் தொழில் நிறுவங்களை நடாத்தி வந்தனர். அப்போது பெனாரஸ்சிலிருந்து வந்த ஹிந்தி மொழி பேசும் பல சிறுவர்கள் (தமிழ் தெரியாமல்) படிப்பதற்காக எமது வகுப்பில் சேர்ந்தார்கள். பஜரங் லால், பாபுடா, சத்தியநாராயன், ஓம் பிரகாஷ் போன்றவர்கள் படித்தார்கள். இவர்களது வருகை எமக்கிடையே மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தமிழையும் ஆங்கிலத்தையும் ஊக்கத்துடன் அவர்கள் படித்தார்கள். எண்கணிதத்தையும் (அப்போது கணிதம் விஞ்ஞானப்பிரிவு மாணவருக்கு மாத்திரமே கற்பிக்கப்பட்டது) மிகவும் சிறப்பாகக் கற்றார்கள். கல்விபால் இவர்கள் செலுத்திய நாட்டமும், ஊக்கமும் “படிக்க வேண்டும்“ என்ற உள்ளுணர்வை எங்களிடையே ஏற்படுத்தியது. அந்த வகுப்பில் படித்த பலரில் அதிக மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. குருவாசல் பிரிந்து போட்டி போட்டுக் கொண்டு படிக்கத் தொடங்கினோம். அவ்வாறு படித்ததனால் பலர் பல்கலைக்கழகம் சென்று பின்பு கல்விப்பணிப்யாளர்களாகவும், கமத் தொழில் ஆணையாளராகவும் வந்தனர். இந்த மறுமலர்ச்சி என்னிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் அப்போது மிகவும் கட்டையாக இருந்தேன். நல்ல கறுப்பாகவும் இருந்தேன். அவர்கள் உயரமானவர்களாகவும், அழகானவர்களாகவும், சிவந்த மேனியராகவும் இருந்தனர். புதிய சைக்கிள்களில் வருவார்கள். அழகான இந்திய பாதணிகளுடன் வருவார்கள். நான் வெறுங்காலுடன் நடந்துதான் வருவேன். பிடவை வியாபாரிகள் என்பதால் அழகாக உடுத்திக் கொண்டும் வருவார்கள். அவர்களில் சத்தியநாராயன் எனது நெருங்கிய நண்பரானார். அவர்தான் எப்போதும் நன்கு படிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருப்பார். நான் சில பாடங்களில் மிகவும் சிறப்பாக செய்வேன். சத்தியநாராயனும் சில பாடங்களில் மிகவும் சிறப்பாக செய்வார். நிறைய ஹிந்திப் படங்களுக்கு அழைத்துச் செல்வார். அவரது நட்புதான் கற்பதிலான எனது முன்னேற்றத்தின் திருப்பு முனை என்று இப்போது உணர்கிறேன்.

பின்பு உயர்கல்விக்கென இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர். நாட்டின் அரசியல் குழப்பங்களினால் அவர்களது குடும்பத்தினரும் தொழில்களை மூடிவிட்டு



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவுக்குப் போய்விட்டனர்.

நண்பர் சத்தியநாராயனுடன் பதினைந்து வயதில் ஏற்பட்ட உண்மை நட்புக்குப்பின் நான் நல்ல நண்பர்களை சந்திக்க முடியவில்லை. அவர் பம்பாயில் பெரிய தொழிலதிபராக இருப்பதாக கேள்விப்பட்டேன். ஆனால் பாடசாலை நாட்களுக்குப் பிறகு சந்திக்க முடியவில்லை.


ஒரே தடவையில் க.பொ.த தேரிய பரீட்சையில் சித்தியடைந்தபோதிலும் குடும்பத்தின் பொருளாதார நிலைமை காரணமாக படிப்பைக் கைவிட்டு உடல் உழைப்புக்குச் சென்று விட்டேன். நாளொன்றுக்கு நான்கு ரூபாய் சம்பளம். வீட்டிற்கு பெரிதும் உதவியாக இருந்தது.

**காலம்: பின்பு எப்படி உயர்கல்வியில் இணைந்தீர்கள்?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** படிக்கவில்லையே என்ற ஏக்கம் தணலாக என் உள்ளே கனன்று கொண்டே இருந்தது. என்னுடன் படித்த பலர் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று விடுமுறைக்கு வந்து நிற்கும்போது பார்த்து ஒளிந்து ஒதுங்கிப் போவேன். ஆனால் அவர்கள் அதே நட்புடன் இனிமையாக உரையாடுவார்கள். அவர்கள் போனபின்பு என்மீதே எனக்கு கோபமும், எரிச்சலும் ஏற்படும்.

இதனால் ஒருநாள் எல்லா சான்றிதழ்களையும் எடுத்துக் கொண்டு நானாகவே வெறுங்காலுடனும் அரைக் காற்சட்டையுடனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அலுவலகத்துக்குச் சென்றேன். எவருடைய உதவியுமின்றி அப்போதைய அதிபர் திரு. சி.சபாரட்ணம் அவர்களிடம் நேரடியாக சென்று சான்றிதழ்களைக் காட்டி க.பொ.த உயர்தர வகுப்பில் படிப்பதற்கு அனுமதி கேட்டேன்.

அவர் ஆச்சரியத்தோடு ஆனால் மிகுந்த பாசத்தோடு கேட்டார். "யாருடன் வந்தீர்?". நான் பதில் கூறினேன் "தனியாகத்தான் சேர் வந்தேன்." அவர் கண்களிலும், பேச்சிலும் அன்பும், கனிவும், உயர்ந்த கல்விமானுக்குரிய பண்பாடும் தெரிந்தன. "அதில் அமர்ந்து கொள்ளும்'' என்று ஒரு கதிரையைக் காட்டினார். பயத்துடன் இருந்தேன். கதிரையில் சாய்ந்திருக்க பயமாயிருந்தது. கால்கள் நிலத்தில் படவில்லை. அவ்வளவு உயரம் குறைந்தவனாயிருந்தேன். உயர் வகுப்பில் கற்பிக்கும் ஒரு ஆசிரியரை அழைத்து எனக்கு, முன்னால் இருவரும் சம்பாஷித்தனர். "இவர் வரலாறு பாடம் படிக்கவில்லை இங்கு அந்தப்பாடம் தான் நான்காவது பாடமாக கற்பிக்கின்றோம். இவரால் படிக்க முடியுமா? இது அதிபரது கேள்வி. அழைக்கப்பட்டு வந்திருந்தவர் வரலாறு கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர் திரு.தி.சிறீனிவாசன் அவர்கள். அவர் என்னை உற்றுப்பார்த்தார். நான் அவரது முகத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அவரது பதிலில்தான் எனது



எதிர்காலக்கல்வி தங்கியிருப்பதாக (பயத்துடன்) நம்பினேன். அவர் "இவரைப் பார்த்தால் படிப்பார் போல் தானிருக்கிறது. அட்மிஷன் கொடுங்கள்'' என்றார். பிற்காலத்தில் திரு.தி.சிறீனிவாசனின் அதீத மதிப்புக்குரியவனாக நான் மாறினேன் என்பதும் முக்கியமானது. நான் எழுதிய பொருளாதார நூல் ஒன்றை அவருக்கு காணிக்கையாக சமர்ப்பித்திருந்தேன் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

அதிபர் சி.சபாரட்ணம் அவர்கள் ஆங்கிலப் புலமை மிக்கவர். புலமைக்கர்வம் கொண்டவர்; கருத்துத் தெரிவிப்பதில் அச்சமற்றவர். மனிதாபிமானத்தில் பெரிய மகான். ஓய்வு பெற்றபின் ஆரம்பகால ஈழநாடு பத்திரிகையின் கருத்தாக பல அரசியல் சிந்தனைகளை எழுதியிருந்தார். எமது போதாத காலம் அவற்றை நாம் உள் வாங்கவுமில்லை; உணரவுமில்லை; அறிவாளிகள் பலவீனமானவர்கள் என்று ஆழமாக செயற்பட்டிருந்தோம்., அதனால், இந்த அதிபர் மற்றும் ஆசிரியர் இருவரும் எனது கல்விப்பாதைக்கான கதவுகளைத் திறந்து வெளிச்சம் பாய்ச்சி அதில் ஓடிப் போகச் சொன்னார்கள்.

ஆசிரியர் பதிலில் நம்பிக்கை கொண்ட அதிபர் ஒரு சிட்டையில் ஏதோ எழுதி ஒப்பமிட்டு சற்றுத் தொலைவிலிருந்த எழுதுவினைஞர் சிவக்கொழுந்து என்பவரிடம் அனுப்பினார். அவர் சான்றிதழ்களை வாங்கிக் கொண்டு வசதிக்கட்டணம் எட்டு ரூபாவைக் கேட்டார். நான் "கொண்டு வரவில்லை'' என்றேன். "நாளைக்குக் கொண்டு வருவீரா?''என்றார். வீட்டில் நிலவும் நிலைமையை எண்ணினேன். காசு கேட்டால் படிக்கப் போக வேண்டாம் என்பார்கள். கல்வி பற்றிய அவர்களது கண்ணோட்டமும் அவர்களது பொருளாதார வசதியும் அவர்களை அந்த முடிவுக்குத்தான் அழைத்துச் செல்லும். நான் மௌனமாக தலைகுனிந்தபடி நின்றேன். இதை அவதானித்துக் கொண்டிருந்த அதிபர் தனது நாஷனல் சட்டையில் பக்கவாட்டிலிருந்த பொக்கற்றிலிருந்து பத்து ரூபாய்த்தாளை எடுத்து எழுதுவினைஞரைப் பார்த்து "சிவக்கொழுந்து இதில அந்தக் காசை எடும். அவரை வகுப்புக்கு பியோனோடை அனுப்பிவிடும்" என்று சொல்லிக் காசைக் கொடுத்து விட்டு சலனமில்லாமல் அலுவலகத்துக்கு வெளியே போனார். அந்தக் காசை நான் இன்றுவரை அவரிடம் திருப்பிக் கொடுக்கவேயில்லை. அவர் அமரராகி விட்டார். ஆனால் என்னுள் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்.

பின்பு அந்த வகுப்பில் படித்த இருபத்திரண்டு மாணவர்களில் நான்கு மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்று கொழும்பு பல்கலைக்கழகம் நுழைந்தோம். மிகச் சிறந்த விரிவுரையாளராக தற்போது பணியாற்றும் நண்பர் சிறீகாந்தனும் நானும் சிறந்த பெறுபேறு பெற்றிருந்தோம்.

பின்பு பொருளியல் சிறப்புப் பட்டதாரியாக இருபத்து மூன்று வயதில் வெளியேறினேன்.



படிப்பகம்

www.padippakam.com

**காலம்: உங்களது வாழ்வில் முன்னுதாரணங்களாக அல்லது உங்கள் நடத்தை மற்றும் விழுமியங்களில் செல்வாக்குச் செலுத்தியவர்கள் யார்?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** மூன்று பேர் முக்கியமானவர்கள். எனது சுயநம்பிக்கை, உழைப்பின் மீதான பற்றுதல், முன்னேற்றத்தில் நாட்டம் என்பவற்றை உணரச் செய்தவர் எனது அன்னை கோமதி அம்மாள். அவர் இப்போது உயிருடன் இல்லை. அவர் கையெழுத்துப் போடமாட்டார். படிக்கவில்லை; நான் பட்டம் பெற்ற பின்பு பெயரை எழுதப் பழக்கினேன். பின்பு கைநாட்டு போடுவதில்லை. முதலில் அவரது கையைப் பிடித்து எழுதச் செய்தேன். பின்பு படிப்படியாக எழுதப் பழகிக் கொண்டார். "கோமதி" என்ற சிறிய பெயரை எழுதுவது பின்பு அவருக்கு சுலபமாயிற்று.

இரண்டாவது முக்கியமான நபர் எனது மனைவி செல்வி. உண்மையானவள்; சிந்தனைக்கும் செயலுக்கும் எள்ளளவு வேறுபாடும் இல்லாதவள். எனது தொடர் கல்வி, தொழில், உயர்ச்சி, அறிவியல் எச்சங்களான 24 நூல்களின் வெளியீடு எல்லாவற்றுக்கும் பின்னால் அவளது கடினமான விசுவாசமான உழைப்பும் தியாகமும் உள்ளது. முப்பது ஆண்டுகால யுத்த சூழ்நிலையிலும் எனது மூன்று பெண் பிள்ளைகளையும் முதுமாணிப்பட்டம் வரை படிப்பிப்பதில் அவளது அர்ப்பணிப்பு உன்னதமானது.

மூன்றாவது நபர் திரு. ராவ் அவர்கள். அவரை நான் கண்டதில்லை; பேசியதில்லை. அவர் இந்தியாவில் ஓர் ஆசிரியராக இருந்து படித்து விரிவுரையாளராகி, பேராசிரியராகி, இந்தியாவின் திட்டக் கமிஷனின் தலைவராக இருந்து மனிதவள அமைச்சராக வாழ்வில் உயர்ந்தவர்.

1966 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அநேகமாக வகுப்பில் பாடங்கள் இல்லாதபோது நூலகத்திலிருந்து படித்துக் கொண்டிருப்பேன். அப்போது ஒருநாள் மனிதவளத் திட்டமிடலும் கல்வியும் (நூலின் பெயர் சரியாக நினைவில் இல்லை. திரு.ராவ் அவர்களின் முதல் எழுத்துக்கள் மூன்றும் கூட நினைவில் இல்லை.) என்ற நூலை வாசிப்பதற்காக கையில் எடுத்து நூலாசிரியர் எழுதிய முகவுரையை வாசித்தேன். அதில் அவர் எவ்வாறு படிப்படியாக படித்து, பட்டம் பெற்று கிராமத்து ஆசிரியராக இருந்து தேசிய மதிநுட்பவல்லுனராக யூனியன் அரசின் கல்வி மந்திரியாக வந்தார் என எழுதியிருந்தார். 'ஒரு மனிதன் எங்கிருந்தும் எந்த இடத்திற்கும் உயர முடியும், உண்மையும், இடையறாத விசுவாசமான உழைப்பும் இருந்தால்.' என்ற உண்மை என்னை அதிகம் பாதித்தது. மனதில் உள்ளே ஆழமாக இருத்திக் கொண்டேன், அதனால் தான் பள்ளிக்கூட பொருளாதார ஆசிரியனாக இருந்த என்னால் வளர முடிந்தது என்று எண்ணுகிறேன்.

**இராமகிருஷ்ண மிஷனரியினரின் பாடசாலை என்பதால் வாய்ப்புக்கள் மறுக்கப்படும் பல மதத்துப் பிள்ளைகளும், பல வர்க்கத்துப் பிள்ளைகளும் படித்தார்கள்.**

**காலம்: இயல்பாகவே நீங்கள் நிறைய வாசிப்பீர்கள் என்று பலர் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றுவதால் மாத்திரம் வந்ததா? வேறு காரணங்கள் உண்டா?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** இது என்னைப் பொறுத்தவரை மிக முக்கியமான கேள்வி, இளமையிலிருந்து எனக்கு எல்லாமே வாசிப்புத்தான். நான் சுவாசிப்பது போல் தான் எனக்கு வாசிப்பும்; என்னால் சும்மா இருக்க முடியாது; எதையாவது வாசிப்பேன்; வாசித்துக் கொண்டுதானிருப்பேன்.

சிறுவனாக இருந்தபோது தனியாக வேயிருப்பேன். எங்கள் வீட்டில் அப்போது வானொலிப் பெட்டி இருக்கவில்லை. நான் படித்துப் பட்டம் பெற்று வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி திணைக்களத்திற்கு பொருளாதார விரிவுரையாளராக நியமனம் பெற்று முதல் மாத சம்பளம் பெற்றபோதுதான் வானொலிப் பெட்டி வாங்கினேன். அதுவரை எங்கள் வீட்டில் வானொலிப் பெட்டி இருக்கவில்லை.

எங்கள் வீட்டிற்கு அயலில் ஒரு வீட்டில் மாத்திரம் பெரிய 'குருண்டிக்' ரேடியோ இருந்தது. அவர்கள் வீட்டிற்கு அயலில் போய் நின்று சிலசமயம் சினிமாப்பாடல்கள் கேட்பேன். மற்ற வேளைகளில் தனியே இருப்பேன். எனது தனிமையைப் போக்குவதற்கு வாசிப்பு உதவியது. வானொலிப் பெட்டி வைத்திருந்த வீட்டுக்காரர் கந்தசாமி ரெட்டியார். அவர் ஒரு கடையின் கணக்குப்பிள்ளை. அக் காலத்தில் கணக்காளர் என்று சொல்லும் மரபு இருக்கவில்லை. அவரது மனைவி மிகவும் நல்லவர். அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. அவர் வசதியாயிருந்தபடியால் கல்கி, ஆனந்த விகடன் சஞ்சிகைகளை வாரம் தவறாம ஒழுங்காக எடுப்பார். அவரிடம் கடன் வாங்கிப் படிப்பேன். பின்பு பாடசாலை நூலகத்திலிருந்து எல்லாவற்றையும் படிப் பேன். ஜெயகாந்தனின் படைப்புக்கள், மு.வரதராசனின் படைப்புக்கள், வி. எஸ்.காண்டேகரின் படைப்புக்கள் (ஏறக் குறைய) எல்லாவற்றையும் படித்திருக்கிறேன். என்னிடம் சமூக கோபத்தையும், மாற்றுச் சிந்தனையையும் உருவாக்கியவை ஜெய காந்தனின் படைப்புக்கள் தான். அவரது "ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் "நூலில் விரித்த பல விடயங்களை போராட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் கண்டிருக்கிறேன். தமிழ்வாணனின் கல்கண்டு, சிரஞ்சீவியின் துப்பறியும் நாவல்கள், அம்புலி மாமா போன்ற எல்லாவற்றையும் படித்திருக்கிறேன்.

இரண்டாவது பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது, யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியின் இரண்டாம் குறுக்குத் தெருவில் இருந்த அமெரிக்க தகவல் நிலையத்தின் நூலகமாகும். அந்தக் கட்டிடம் அதே வடிவில் இப்போதும் அதே இடத்தில் இருக்கிறது. நூலகம் இல்லை. அக்கட்டிடத்தில்தான் புதிய நீதிமன்றக்கட்டிடம் திறக்கப்படும் வரை யாழ்ப்பாண நீதிமன்றம் இயங்கி வந்தது. எனது வீட்டிலிருந்து கிட்டத்தட்ட மூன்று மைல் தொலைவில் இருந்த அந்த நூலகத்துக்கு வாரத்தில் குறைந்தது மூன்று நாட்கள் நடந்து போவேன். பலவழி களில் அந்த அமெரிக்காவில் வளரும் பைன் மரங்களினால் செய்யப்பட்ட மிக அழகான தளபாடங்கள். பார்ப்பதற்கும் தொடுவதற்கும் ஆசையாக இருக்கும். அப்போது எனக்கு பதின்மூன்று அல்லது பதினான்கு வயதிருக்கும். மிகச் சிறுவனாகவே தோற்றமளிப்பேன். ஆசையில் எல்லா நூல்களையும் மாறி மாறி எடுத்துப் பார்ப்பேன். இரவல் தரு வார்கள். அங்கு 'பிரபஞ்சகானம்' என்ற





**வானத்தைப் பிளந்த கதை**

(ஈழப் போராட்ட நாட்குறிப்புகள்)

**செழியன்**

விலை: இந்திய ரூபாய் 140

***Vaazhum Tamil***
MIG 329 - 5th Cross St
3rd Main Road
Mugappair Eri Scheme
Chennai - 600037, India
Phone: 95436 16642
Email: vaazhumtamil@gmail.com




படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்பு நூல் அநேக பிரதிகளில் இருக்கும். ஐன்ஸ்டின் எழுதியதன் தமிழாக்கம் என்றுதான் எண்ணுகிறேன். பலதடவை வாசித்திருக்கிறேன். எதுவுமே விளங்கியிருக்கவில்லை.



வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல்கள் தருவார்கள்; மேசையில் அடுக்கி வைத்திருப்பார்கள். ஒவ்வொன்று எடுத்துக் கொண்டு வருவேன். அழகான படங்கள் வரைந்திருக்கும். எளிய ஆங்கிலத்தில் வரலாறுகள் எழுதியிருப்பார்கள். தோமஸ் ஆல்வா எடிசன் பற்றி அத்தகைய சித்திரக் கதையில்தான் முதலில் படித்தேன். வீட்டில் நிறைய சண்டை பிடித்து அப்போது மூன்று ரூபாவுக்கு "லிப்கோ" டிசன்றியை வாங்கி ஆங்கிலச் சொற்களுக்கு கருத்துப் படிப்பேன். இதனால் ஆங்கிலத்தின் மீதிருந்த பயம் தொலைந்திருந்தது. ஆனால் வீட்டின் பொருளாதார பலவீனங்களினால் தனிப்பட்ட ரீதியில் சிறப்பாக ஆங்கிலம் படிக்க முடியவில்லை.

யாழ்ப்பாண பொது நூலகத்தின் கெடு பிடிகளினால் சிறுவயதில் அந்த நூலகத்திற்குச் செல்வதில்லை. இப்போது அதன் மதியுரைக் குழுவின் அங்கத்தவராக இருப்பதால் அடிக்கடி போக வேண்டியதாகி விட்டது.

இளம் வயதில் என்னை அதிகம் பாதித்த நூல்கள் ஒன்று, ஜெர்மனியின் சுரங்கத் தொழிலாளரின் வாழ்வு பற்றிய 'ஜேர்மினல்' என்ற மொழிபெயர்ப்பு நாவல், இரண்டாவது ஜெயகாந்தனின் 'அக்கினிப் பரீட்சை' மூன்றாவது கா.ஸ்ரீ.ஸ்ரீ மொழி பெயர்த்த வி.எஸ்.காண்டேகரின் 'எரிநட்சத்திரம்'.

**காலம்: அண்மைக்கால ஆக்கங்கள் மற்றும் இலக்கியங்கள் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. இதற்கு என்ன காரணம்?**

**பேரா.மா.சின்னத்தம்பி:** 1983களின் பின் நான் வாழ்ந்த யாழ்ப்பாண நகர நிலைமைகள் அசாதாரணமாக மாறின; பெரிதும் அவநம்பிக்கையும் அச்சமும் சமூக வாழ்வில் இழையோடத் தொடங்கி விட்டன. இதனால் பொதுவாகவே வெளி உலகிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் துண்டிக்கப்பட்ட வாழ்வு அறிமுகமாகி, பரவி நிலை பெற்று விட்டது. பின் வரும் நிலைமைகள் ஆக்க இலக்கியம் தொடர்பான வாசிப்பு நாட்டத்தையும், வாய்ப்புக்களையும் வெகுவாகப் பாதிக்கலாயின.

இந்தியாவிலிருந்து சஞ்சிகைகள் வருவது படிப்படியாக தடைப்பட்டது. இலக்கிய படைப்புத் துறையில் இருந்தவர்கள் ஏதோ வழிகளில் பெற்று தொடர்ந்து வாசித்தனர். எனக்குரிய வாய்ப்பு குறைந்து சென்றது.

அரசியல் இயக்கங்கள் இந்திய சஞ்சிகைகள் தமது சுயப் படைப்புக்கள் மற்றும் வாசகர்கள் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக கருதி கடுமையான தடை விதித்தார்கள். இதனாலும் இந்திய சஞ்சிகைகளை வாசிக்க முடியவில்லை.

இந்திய சஞ்சிகைகளில் தமது ஆக்கங்கள் வெளிவந்தமையையும், அவை நடாத்திய போட்டிகளில் பரிசில்கள் பெற்றமையையும் தமக்குரிய இலக்கிய உலக அங்கீகாரமாக பிரகடனம் செய்து கொண்டே இந்திய படைப்புக்கள் மற்றும் சஞ்சிகைகளை கோபாவேசத்துடன் மேடைகளில் விமர்சிப்பவர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். இந்த முரண்பட்ட நிலைமை இன்றுவரை உயிர்ப்புடன் தான் உள்ளது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

இலக்கியங்களைப் படைத்தல் என்பதற்கும் சந்தைகளைக் கைப்பற்றல் என்பவற்றுக்குமிடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் எமது படைப்பாளிகள் பலர் இப்போதுமுள்ளனர். முதலாளிகளின் விளம்பரப்பணத்தில் சமவுடைமைப் படைப்பாளர்கள் முதலாளிகளுக்கு எதிரான கவிதைகள் கட்டுரைகள் கொண்ட சஞ்சிகைகளை வெளியிடுவதை சிறுவயதிலிருந்தே நான் அவதானித்துள்ளேன்.

இதுபோன்ற முரண்பாடுதான் முன்பு குறிப்பிட்டதும், கருத்தியல் மீதான உணர்வு மிகுந்த வேட்கைக்கும், நடப்பியலுக்கும் இடையில் தொடரும் முரண்பாடுகளே இதற்குக் காரணம், என்று நம்புகிறேன்.

எனது தொழில் தொடர்பாக கற்பித்தல் கற்றல் தேவை சார்ந்த கல்வி, பொருளாதாரம் சார்ந்த வாசிப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய தேவை அதிகரித்தபோது பயன்பாட்டுக்குரிய மனித மணித்தியாலங்களும் நாட்களும் ஒடுங்கத் தொடங்கின.

மின்சார வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்துத் தடைகள், ஊரடங்குச்சட்டம், நுகர்பொருட்கள் தேடி அலையும் வாழ்வு, அச்ச உணர்வை தினம் தினம் திணிக்கும் புறச்சம்பவங்கள் என்பன அதிக பாதிப்பை எங்களில் ஏற்படுத்தின. உணவு, பாதுகாப்பு என்ற இரண்டு எல்லைக் கோடுகளுக்குள் எங்கள் வாழ்வு நகர்ந்து கொண்டிருந்தது. எங்கள் இரவுகள் வாசிப்பதற்கு உதவுவனவாயில்லாமல் அச்ச மூட்டுவனவாகவே இருந்தன.

இந்த துன்பியல் நிறைந்த வாழ்வுச்சூழல் புதிய படைப்புக்களிலிருந்து அதிக தொலைவில் நான் வாழ்ந்தமைக்கு காரணமாயிற்று.

இப்போதைய புதிய நிலைமைகள் மீண்டும் இழந்ததை கற்க உதவும் என்று வலுவாக நம்புகிறேன். மாற்றுச் சிந்தனைகளை ஊக்குவிப்பதும், மாற்று வாய்ப்புக்களை அகலப்படுத்துவதும் உலகுடன் ஒட்டிய முன்னேற்றங்களில் நான் கலந்து கொள்ள உதவும் என்று எண்ணுகிறேன்; அதனை வலுவாக நம்புகிறேன்.

அடுத்த இதழ்
காலம்
20ஆவது ஆண்டு
40ஆவது இதழ்
சிறப்பிதழாக
வெளிவரும்




படிப்பகம்

www.padippakam.com

# ஜெயபிரபா கவிதைகள்

ஓவியம் : கீதா



## 1. கனவுண்டு உறக்கத்தில்

இமைகுவியும் இருளிலெல்லாம்
கவ்வியிழுக்கும்
எத்திசை துயிலினும் ஒளியூட்டி மதிமயக்கும்
செம்பொன் காய்ச்சி எங்கோ எரியும் ஸ்வர்ண வீதிகளின்
பொழிலிடை சூழ் இவ்வண்ணக் கனவு.
மருமங்கள் விலகா மாந்திரீகனின் விரலசைப்பில்
கிறக்கத்துட னுலாவும்
சூட்சும விதிகளில்லா கள்ள விளையாட்டில்
காய் நகர்த்தும்
சமிஞ்யே யில்லா சாகச ஓட்டத்தில்
வேகமூட்டும்
சீறியடிக்கும் திறனிலா மாயவேட்கையில்
மூழ்கவிடும்
நிர்ச்சலனமில்லா அகப்புறக் காதலையெலாம்
மீட்கொணரும்
பொங்கியெழும் இவ்வனைத்தும்
விழித்ததும் விலகிவிடும்.
உறக்கமே பாதி இறப்பென்பர்..
உறக்கமதில் கனவு பலவுண்டு.
இறத்தலிலுமது உண்டா?

## 2. விலகல்

தொட முயலுமுன் கூசிய கையும்
ஸ்பரிசம் உணர காதலுற்றது
எல்லாத் தடவலும் நீள அகலமுணர்த்தின
பூப்பொழியும் பனி மழைக்கு
வெம்மை வேண்டுமென நினைத்து
ஓவியமொன்றை
கம்பளியின் இறுதிவரை விடாது பின்னியும்
இழைகள் இறுகி கனத்து,
பிடியும் தளர்ந்து
தையலறுந்து பிரிந்தன.
பிரிந்த எல்லா வண்ணயிழைகளும் என்றோ ஒருநாள்
மீண்டும் உருவெடுக்கும் ஓவியமாய்
அது வரை இழைகளும் விரல்களும் இணையாதிருந்தன

## 3. கலவையுணர் கள்வன்

அற்றை நாள் தொடரும் கதைகளில்
அவனுக்கோர் யிடமுண்டு
சட்டென வந்த மழை போல்
சந்தமிகு கவிபோல்
ரசிக்கும் சுடர் போல
பரவசமூட்டும் இசைபோல்
ஓடியொளியும் சேய்போல்
கலவையுணர் கொடுத்த கள்வனான்
தன்னையறியா உள்ளுணர்வில்
மனமெனும் மாயப்பேயடக்கி
அவள்விழி படா மறைந்து
மருகிப்பின் வலிந்தே மொழிவான்
தெளிந்தொருநாள் பின் சித்தந்தவறியொருநாள்
நித்தமும் கலவை சூழ் சிந்தை புரி சித்தனவன்
வித்தகனெங்கிலும் பித்தே தெளியா சிறுவனவன்
சொல்லினுக்கெளிதாக சுக வாழ்வு வாழ
விட்டே விலகாத் தாய் போலவனை
வலிந்தே காக்கும் வரம் கேட்டாள்



படிப்பகம்

www.padippakam.com



# எம்.ஜி.ஆர். எனும் மாபெரும் விருட்சம்

**யமுனா ராஜேந்திரன்**

தமிழ்ப் பண்பாட்டில் சினிமா. ஆசிரியர்: கா.சிவத்தம்பி; வெளியீடு: என்.சி.பி.எச்., 41 பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600098, இந்தியா; தொலைபேசி: 044 26258410; மின்னஞ்சல்: ncbhbook@yahoo.co.in; பக்கங்கள்: 208; விலை: இந்திய ரூபாய் 100.



எம்.ஜி.ஆர்.

தமிழ் சினிமா வரலாறு எழுதுதலில் இருவிதமான சிந்தனைப் பள்ளிகள் இருக்கின்றன. முதல் சிந்தனைப் பள்ளி தியடோர் பாஸ்கரனுடையது. தியடோர் பாஸ்கரன் தமிழ் சினிமா வரலாறு எழுதுதலில் முன்னோடி ஆளுமை. அவரது பார்வை, தமிழ் சினிமா காட்சிரூப ஊடகமாக வளராமல் போனதற்கான தமிழ் சமூகக் கலை வரலாற்றுக் காரணங்களையும் அரசியல் காரணங்களையும் விரித்துச் சொல்வதாகவே இருக்கிறது. வரலாற்று ரீதியில் தமிழ் சினிமாவில் பேச்சு, இசை போன்றவை பெறும் இடம், அதனோடு வேறு வேறு காலங்களில் தமிழ் சினிமா மொழியில் நேர்ந்து வந்திருக்கும் வடிவ மாற்றங்களையும் நுட்பங்களையும் அவர் அவதானித்துப் பதிவு செய்கிறார். தியடோர் பாஸ்கரன் முன்வைக்கிற காட்சிரூப சினிமாவை உருவாக்குவது எனும் தேடல், தமிழ் மொழியில் பிரசாரம் தவிர்த்த யதார்த்த மொழி கொண்ட ஐரோப்பிய பாணி சினிமாவை, சமூக விமர்சன சினி மாவை, தமிழ் சூழலுக்கு ஏற்ற நவ யதார்த்த சினிமாவை உருவாக்குவது எனும் தேடலுடன் தொடர்புபட்டது. வங்கத்திலும் கேரளத்திலும் எழுந்த சத்யஜித்ரே, அடூர் கோபாலகிருஷ்ணன் போன்றவர்கள் முன்வைத்த புதிய சினிமாவை தமிழிலும் விளைவது தொடர்பான தேடல் இது.

இன்னொரு சிந்தனைப் பள்ளியும் தமிழில் உண்டு. அது திராவிட இயக்கத்தவரின் பிரசார சினிமா என்பது அசலான மண்ணின் விளைச்சல் என்றும், அது காலத்தின் தேவை என்றும், அதற்கு இன்னும் பொருத்தம் இருக்கிறது என்றும், அனைத்து சினிமாவும் வியாபாரம்தான் என்றும், பார்க்கும் பார்வை. அதனோடு, வங்கத்திலும் கேரளத்திலும் உருவான திரைப்படங்கள் வாழ்க்கையைச் சொல்லாத, தத்துவக் காவிகள் என்று சொல்லும் பார்வை இவர்களுடையது. திரைப்படத்திலும் திராவிட, பார்ப்பனக் கூறுகளைப் பார்ப்பதுதோடு, ஜெயகாந்தனது திரைப் படங்களை பார்ப்பனியப் படங்களாகப் பார்த்தும், காட்சிமொழி சார்ந்து அல்லாது இதுவரைத்திய எழுத்துப் பிரதி



படிப்பகம்

www.padippakam.com



சிவத்தம்பி

சார்ந்து, இவர்கள் பிரதி சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவார்கள். எம்.எஸ்.எஸ். பாண்டியன், சுபகுணராஜன் போன்றோர் இந்தச் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த வர்கள்.

தமிழ் சினிமா குறித்த இதுவரையிலான மேற்கத்திய ஆய்வுகளும் சரி, ஆங்கிலத்தில் வந்திருக்கும் ஆய்வுகளும் சரி; இருவகையி லுமாகப் பெரும்பாலுமானவை திராவிட இயக்கப் பிரசாரத்துக்கும் தமிழ் சினிமா வுக்குமான உறவு குறித்ததாகவே இருக்கி றது. எம்.எஸ்.எஸ்.பாண்டியன், எம்.ஜி.ரா மச்சந்திரன் குறித்து, அவரது புனித பிம் பம் குறித்து ஆய்வு செய்திருக்கிறார். எம். ஜி.ஆர்., தான் விரும்பியவாறு, தன்னை முன் னிறுத்திக்கொள்ள, தனக்கான தமிழ் சினி மாவை உருவாக்கினார் என்பது அவரது பார்வை. திராவிட இயக்கத்தின் பிரசார பாணியைச் சுவீரித்துக்கொண்ட எம்.ஜி.ரா மச்சந்திரன், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்களின் திராவிட இலட்சியவாதத்தை முன்வைத்தவராக இல் லாமல், தன்னை புனித பிம்பமாக முன்னி றுத்திக் கொண்டதொரு சினிமாவை உரு வாக்கினார் என இப்பார்வையை விரித் துக்கொண்டு போகலாம்.

மார்க்சியரான கா.சிவத்தம்பி, தமிழ் சினிமா வரலாறு எழுதுதலில் இருக்கும் இந்த இருவேறு சிந்தனை வெளியில்தான் தனது கருத்துக்களை முன்வைக்கிறார். தமிழ் சினிமா காட்சிரூப ஊடகமாக ஏன் புரிந்துகொள்ளப் படவில்லை என்பதனை தியடோர் பாஸ்கரன் வழியிலேயே, தமிழ் நாடகத்திற்கும் தமிழ் திரைப்படத்திற்கு மான தொடர்ச்சியை முன்வைத்து, சிவத் தம்பி விளக்குகிறார். மொழிவழிப்பட்ட வகையில், ஆங்கிலத்தில் அசையும் படம் (moving image) என அர்த்தம் தரும் சினிமா, தமிழில் திரைப்படம், அதாவது அசையாத படச் சட்டகம் (still photo) எனவே புரிந்து கொள்ளப்பட்டது என்பதனையும் சிவத் தம்பி குறிப்பிடுகிறார்.

காட்சிரூப சினிமா, திராவிட இயக் கப் பிரசார சினிமா என்ற விவாத வெளியில் ஒரு மார்க்சியராக சிவத்தம்பி நுழைகிறபோது, அவர் பல்வேறு விடயங் களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அவரது, கல்விப்புலம் சார்ந்த தொழில் முறையிலான நாடகம் குறித்த அறிவுடன், தமிழ் சினிமாவின் வளர்ச்சியைக் காட்சி ரூப ஊடகம் எனும் அளவையுடன் அவர் ஒப்பிட்டு விவரிக்கிறார். 'பராசக்தி' கால நாடக பாணி நடிப்பின் துவக்கம் முதல், 'முதல் மரியாதை' படத்தில் காட் சிரூபத்திற்கு ஒப்புக்கொடுத்து, தன்னை மாற்றிக்கொண்ட சிவாஜிகணேசனின் பிற் கால நடிப்பு வரையிலுமாக, சிவத்தம்பி இதனை அவதானிக்கிறார்.

தமிழ் சினிமாவின் விசேஷமான பகு தியாக திரை இசைப் பாடல்களைக் குறிப் பிட்டு, தமிழ்க் கவிதை மரபுடன் அதனை சிவத்தம்பி இணைக்கிறார்.

தமிழ் சினிமாவின் வடிவம் தொடர் பான பிரச்சினையை அவர் திராவிட இயக் கத்தின் பிரசார நோக்குடன் இணைத்துப் பார்க்கிறார்.

தமிழ்ப் பண்பாட்டில் சினிமா என்ப தனை, திராவிட இயக்கத்தவரால் வரை யறை செய்யப்பட்ட தமிழ்ப் பண்பாடு எனும் பகுத்தறிவு மற்றும் நாத்திக, எதிர் பார்ப்பனிய மரபின் பின்னணியில் ஆய்வு செய்கிறார், சிவத்தம்பி. பகுத்தறிவு மரபு, பக்தி மரபு என்பதற்கு இடையிலான முரண்; சிறுதெய்வ வழிபாடாக பக்தி மரபு ஆனது; பகுத்தறிவு மரபுக்கு விரோதமானது அல்ல, அது தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதியாக நோக்கப்பட வேண்டும் என் கிறார் கா.சிவத்தம்பி. திராவிட இயக்க பிரசார சினிமா முன்வைத்ததே தமிழ்ப் பண்பாடாக ஆகியிருந்த நிலைமையை கா.சிவத்தம்பி விளக்குகிறார்.

வங்கத்திலும் கேரளத்திலும் நடந்த மாற் றங்களுக்கு மாறாக, கம்யூனிஸ்ட்டுகள் அல் லாமல் தமிழகத்தில் திராவிட இயக்கத் தவர் எவ்வாறு தமிழ் சினிமாவைக் கைப் பற்றினார்கள் என்கிற பிரச்சினை குறித்தும் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுப் பேசுகிறார்.

தமிழ் சினிமா வரலாறு குறித்த சிவத் தம்பியின் கட்டுரைகளில் மிகப் பரப ரப்பாகப் பேசப்பட்ட கட்டுரை, எம்.ஜி. ராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்து தமிழகத்தில் நடத்திய உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது, சிவத்தம்பி வாசிக்கவிருந்து தடுக்கப்பட்ட கட்டுரை. எம்.ஜி.ராமச்சந்திரனின் வளர்ச்சியையும் எழுச்சியையும்; அவர் தமிழ் சினிமாவில் உருவாக்கிய புனித பிம்பத்தையும் பற்றியது அக்கட்டுரை.

தமிழ் சினிமா குறித்த இறுதிக் கட்டு ரையாக இருப்பது மணிரத்னத்தின் சினி மாக்களை முன்வைத்து அவர் எழுதிய கட்டுரையாகும். 1981 முதல் 2004 வரை யிலும் எழுதப்பட்ட சிவத்தம்பியின் தமிழ்த் திரைப்படம் குறித்த கட்டுரைகளின் இந்



படிப்பகம்

www.padippakam.com

தத் தொகுப்பில், திராவிட இயக்கக் கருத்தியலின் பின்னணி கொண்டு, தமிழ் சமூகத்தின் மீதான தமிழ் சினிமாவின் பண்பாட்டுத் தாக்கத்தினை மதிப்பிடத் துவங்கிய கா.சிவத்தம்பியின் திரைப்பட விமர்சனப் பயணம், மணிரத்னத்தின் படங்களின் அரசியலையும் அழகியலையும் அவதானிப்பதுடன் (Film Maker maniratnam on Ethnic war: Being a Tamil and sri Lankan: arivaham: Colombo: 2005) தனது பயணத்தை நிறுத்திக் கொண்டு விடுகிறது.

சிவத்தம்பி தமிழ் சினிமா ஆய்வுக்குச் செய்த பங்களிப்பு எனத் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவது எம்.ஜி.ராமச்சந்திரன் குறித்த அவரது பார்வையாகும். எம்.ஜி.ராமச்சந்திரன் குறித்த சிவத்தம்பியின் பார்வை, கருணாநிதி சார்பு அல்லது பின்னாளைய திராவிட முன்னேற்றக் கழகச் சார்பு சினிமா விமர்சகர்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் விமர்சகர்களுக்கும் மிக உவப்பானதாக இருந்தது.

திராவிட அரசியலின் மிகப்பெரும் பங்களிப்பாக, பகுத்தறிவு வழிப்பட்ட நாத்திகத்திற்கு மாற்றான நம்பிக்கையில் பயணித்தபடி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பெயரில் திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியெனத் தமது அரசியல் கட்சியை எம்.ஜி.ஆர். முன்னிலைப் படுத்திக் கொண்டது, மரபான திராவிட இயக்கத்தவரின் சிந்தனைப் போக்கிற்கு ஒரு மிகப் பெரும் சவாலாகவும் அமைந்திருந்துது. தி.மு.க. சார்பாளர்கள், மார்க்சியர்கள், பெரியாரியர்கள் என அனைவரும் எம்.ஜி.ராமச்சந்திரன் குறித்த சிவத்தம்பியின் பார்வையினை ஏற்பதிலுள்ள சமூகவியல் அரசியல் நிஜம் இதுதான்.


எம்.ஜி.ஆரை அடியொற்றி, பின்னாளைய அரசியல் பிரவேசத்தின் தற்கால அமைப்பாக ரசிகர் மன்றங்களை உருவாக்க முனையும் தமிழ் சினிமா கதாநாயகர்களைக் குறித்த சமூகவியல் ஆய்வுக்கும் எம்.ஜி.ஆர். நிச்சயமாகவே ஒரு துவக்கப் புள்ளியாகவே அமைகிறார். இந்த வகையிலும் எம்.ஜி.ராமச்சந்திரன் குறித்த சிவத்தம்பியின் பார்வை முக்கியமானதாக இருக்கிறது.

எம்.ஜி.ராமச்சந்திரன் குறித்த சிவத்தம்பியின் குறிப்பிட்ட கட்டுரை மிகப்பரவலாக அறிய வந்ததற்கான அரசியல் காரணங்கள் அன்றும் இன்றும் என்றும் வலுவாகவே இருக்கின்றன. 1981ஆம் ஆண்டு மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் சமர்ப்பிக்க சிவத்தம்பி எழுதிய ஆங்கிலக் கட்டுரை (The Tamil Film as a Medium of Political Communication: 1981), பின்னாளில் 'அரசியல் தொடர்பாடல் ஊடகமாகத் தமிழ் சினிமா' என தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியானது. இக்கட்டுரை எம்.ஜி.ஆர். குறித்த ஒரு விமர்சனமாக ஆகிவிடும் எனும் பயம் காரணமாக மாநாட்டில் இக்கட்டுரையை வாசிக்க மாநாட்டு அமைப்பாளர்கள் மறுத்துவிட்டனர். எம்.ஜி.ஆர்., தன்னைப் பற்றிய எந்தக் குறிப்பும், அது பாராட்டாக

கருணாநிதி



**மரபான திராவிட இயக்கத்தவரின் சிந்தனைப் போக்கிற்கு ஒரு மிகப் பெரும் சவாலாகவும் அமைந்திருந்துது. தி.மு.க. சார்பாளர்கள், மார்க்சியர்கள், பெரியாரியர்கள் என அனைவரும் எம்.ஜி.ராமச்சந்திரன் குறித்த சிவத்தம்பியின் பார்வையினை ஏற்பதிலுள்ள சமூகவியல் அர சியல் நிஜம் இதுதான்.**




இருந்தால் கூட அதனை விரும்பவில்லை என மாநாட்டுக் குழுவைச் சார்ந்த அருணாசலம் என்பவர் தன்னிடம் தெரிவித்ததாக சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இக்கட்டுரை அதனது ஆங்கில வடிவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பு அமைப்பான என்.சி.பி.எச். பதிப்பகத் தனிநூலாக அப்போது வெளியானது. இப்பிரதியைப் படித்து கருத்துச் சொன்னவர்களில் ஈழ மார்க்சியரான ஏ.ஜே.கனகரத்னாவும் ஒருவர் என்பதனையும் சிவத்தம்பி பதிவு செய்கிறார்.

இக்கட்டுரையில் பேசப்பட்ட எம்.ஜி.ஆர். குறித்த பல்வேறு விடயங்கள், பிற்பாடு பற்பல கல்வித்துறைசார் நூல்களில் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகிறது. எம்.எஸ்.எஸ்.பாண்டியனது நூல் முதல் (The Image Trap : 1992), செல்வராஜ் வேலாயுதம் பதிப்பித்த 'Tamil Cinema: the Cultural Politics of India's Other Film Industry: 2008' நூலிலுள்ள ஹார்ட் கிரேவ் மற்றும் ஸாரா டிக்கி கட்டுரைகள் வரை சிவத்தம்பியின் பாதிப்புக்களை நாம் காணவியலும்.

'எம்.ஜி.ஆரின் படங்களில், சமூகத் தளைகளை மீறி தனிமனிதன் மேல்நிலைப் பாட்டை எய்தமுடியும் என்ற கருத்து மிகச் செப்பமாகப் பதிய வைக்கப் பெற்றது. அவர் சித்திரித்த பாத்திரங்களின் குணாம்சங்களைக் கொண்ட ஒருவராகவே அவர் போற்றப்பட்டார். இதனால், தமிழ் நாட்டின் நடுமட்டத்திற்குக் கீழ்வந்த சமூகப் படிநிலையினர் இடையே அவர் ஒரு உதாரண புருஷராகவே போற்றப்பட்டார். தம் நிலையிலுள்ள ஒருவர் மேல்நிலை அடைந்ததாகவே, அவர் உயர்ச்சியையும் புகழையும் அச்சமூக மட்டங்களைச் சேர்ந்தோர் நம்பினார்கள். இதனால் தன்னம்பிக்கையும் சுயவளர்ச்சி பற்றிய பிரக்ஞையுமுள்ள ஓர் இளைஞர்குழாம் தமிழ்நாட்டில் வளரத் தொடங்கியது. எம்.ஜி. ஆர். தனது கவர்ச்சியின் தளமாக, தமிழ் பற்றிய நிலைப்பாட்டினைக் கொள்ளவில்லை. இன்றும்கூட கலைஞர் கருணாநிதியோடு தொடர்புறுத்தப்படும் தமிழ்த் தன்மை எம்.ஜி.ஆரோடு பொறுத்திப் பார்க்கப்படுவதில்லை. அவருடைய அறைகூவல், நல்ல நேர்மையான மனிதன் பற்றியதாவே இருந்தது. இன்று அவர் இல்லாத நிலையிற் பார்க்கும் பொழுது, அவரின் தொடர்பாற்றல் திறனால், அவர் தன்னைப் பற்றிய மதிப்பீட்டினை உயர்த்துவதற்கு ஏற்றவகையில் நடந்துகொண்ட ஒருவர் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. எம்.ஜி. ஆரை, உண்மையில் திராவிட இயக்கச் சினிமாத்துறைச் செயற்பாட்டுச் சாதனைகளிலிருந்து நோக்காது, அதனைத் தளமாகக் கொண்டு வளர்ந்து, தனக்கென ஓரிடத்தினை வகுத்துக்கொண்டார் என்றே கூறல் வேண்டும். மேலும், அண்ணா, கலைஞர் ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து வேறுபட்ட ஒரு சமூகத் தாக்கத்தையே இவர் ஏற்படுத்தினார் என்று கொள்ளல் வேண்டும்' என 2004ஆம் ஆண்டு வெளி



படிப்பகம்

யான தமது நூலின் முதல் பதிப்பில், (பக்கம் 13), தமது எம்.ஜி.ஆர். குறித்த ஆதாரமான கட்டுரை எழுதப்பட்டு 24 ஆண்டுகளின் பின் அவரது பார்வையை மீளுறுதி செய்கிறார் சிவத்தம்பி.

இக்கட்டுரை குறித்து, தமிழகத்தின் முக்கியமான தமிழ்த் திரைப்பட ஆய்வாளரும் கல்வியாளருமான சுந்தர் காளி, மதுரை பாபுவோடு சேர்ந்து எழுதும்போது (திரைப்பட ஆய்வுகளுக்குப் பேராசிரியர் சிவத்தம்பியின் பங்களிப்பு: மதுரை பாபு, சுந்தர் காளி: காட்சிப் பிழை திரை: ஆகஸ்ட் 2011); 'தமிழ்த் திரைப்பட ஆய்வுகளுக்கான சிவத்தம்பியின் பெரும் பங்களிப்பு என்பது திராவிட இயக்கத் திரைப்படங்கள் பற்றிப் பொதுவாகவும் எம்.ஜி.ஆர். பற்றிக் குறிப்பாகவும் அவர் எழுதியுள்ளதேயாகும்' எனக் குறிப்பிடுகிறார்கள்.

திராவிட இயக்கத் திரைப்படங்களும் எம்.ஜி.ஆரும் குறித்த ஆய்வுக்கு ஊடகச் சமூகவியல் (Media Sociology) பார்வையைப் பயன்படுத்தியிருப்பதாக சிவத்தம்பி குறிப்பிடுகிறார். திராவிட இயக்கப் படங்களோடு, குறிப்பாக எம்.ஜி.ஆர். எனும் ஆளுமை குறித்துப் புரிந்துகொள்வதற்கு, சிவத்தம்பி தேர்ந்து கொண்டிருந்த இப்பார்வை மிகுந்த அளவில் மட்டுப்படுத்தப்பட்டதும் குறையானதும் ஆகும் என்றே என்னால் கருத முடிகிறது.

சினிமாவையும் வரலாற்றையும் ( அதனை உலக அளவில் என்று கூட விரித்துக்கொள்ளலாம்) முன்வைத்து, அரசியல் அதிகாரத்திற்கும் குறிப்பிட்டதொரு திரை ஆளுமைக்கும் உள்ள உறவை, நாம் எம்.ஜி. ஆரை முன்வைத்துப் பேசுகிறோம். எம்.ஜி. ஆர். போன்றதொரு ஆளுமையை நாம் அவருக்கு முன்னும் காண முடியாது, பின்னும் காண முடியாது. எம்.ஜி.ஆர். எனும் ஆளுமையை பெரும் விருட்சமாகக் கொள்வோமானால், அந்த விருட்சத்தின் வேறு வேறு கிளைப் பண்புகள் கொண்டிருந்தவர்களை; திரைப்படத் திருஉருக்கள் எனச் சொல்லப்படுகிற கிளின்ட ஈஸ்ட்வுட் முதல், கறுப்பு எம்.ஜி.ஆர். எனத் தன்னைத் தானே கோரிக்கொள்கிற விஜயகாந்த் வரை, நாம் மதிப்பிட முடியும் என நினைக்கிறேன்.

எம்.ஜி.ஆர். எனும் ஆளுமையைப் புரிந்துகொள்வதற்கு, நாம் ஊடகச் சமூகவியலோடு, பிரசாரமும் சமூக உளவியலும் (Propaganda and Social Psychology) குறித்த அணுகுமுறையையும், ஸ்டாலின் முதல் சதாம் குசைன், மாவோ வரையிலுமான வரலாறும் தனிநபர் வழிபாடும் (History and Personality Cult) போன்றன குறித்து அணுகுவதற்கான உளவியல் பார்வையையும் கொண்டிருக்க வேண்டும். எனவே நான் நினைக்கிறேன்; சிவத்தம்பியும், சிவத்தம்பியை ஏற்று எம்.ஜி.ஆர். குறித்த அவர் பார்வையை வழிமொழிகிறவர்களும் சொல்கிற, 'இன்று அவர் இல்லாத நிலையிற் பார்க்கும்பொழுது அவரின் தொடர் பாற்றல் திறனால் அவர் தன்னைப் பற்றிய மதிப்பீட்டினை உயர்த்துவதற்கு


எம்.எஸ்.எஸ். பாண்டியன்


தியடோர் பாஸ்கரன்

ஏற்ற வகையில் நடந்துகொண்ட ஒருவர் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது' எனும் பார்வை எந்தவிதத்திலும் சமநிலை கொண்ட பார்வையாக இருக்க முடியாது.

இந்த எனது ஆட்சேபத்திற்கான வலுவான காரணங்களாக நான் கருதுவது: முதலாவதாக, ஒரு ஆளுமையை ஏற்கும் மக்கள் கூட்டத்தின் மனநிலையில் செயல்படும் சமூக உளவியலை இங்கு நாம் குறைத்து மதிப்பிடுகிறோம்; இரண்டாவதாக, அந்தக் குறிப்பிட்ட ஆளுமையின் உளவியல் உருவாக்கத்திற்கும் அவரது நடத்தைக்குமான உறவை வைத்து மதிப்பீடுகளுக்கு வந்து சேரும் வெகுமக்களையும் நாம் குறைத்து மதிப்பிடுகிறோம். மூன்றாவதாக, அனைத்துக்கும் மேலாக வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம் என்பதனை, தனிநபர் உளவியலாக்கம் நீங்கிய புறநிலைப் பண்பு என மட்டுமே நாம் வரையறை செய்கிறோம்.

எம்.ஜி.ஆரைப் பொறுத்து, 'தன்னைப் பற்றிய மதிப்பீட்டினை உயர்த்துவதற்கு ஏற்ற வகையில் நடந்துகொண்ட ஒருவர்' என்கிற மதிப்பீடு, அவரைக் குறித்த கொச்சையான பார்வை என்றே நினைக்கிறேன்.

சிவத்தம்பியினது இந்தப் பார்வையினை, திராவிட முன்னேற்றக் கழகச் சார்பு திரைப்பட விமர்சகர்களும் தமிழகத்தின் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாளர்களும் தத்தமது அரசியல் நோக்குகளுக்குச் சார்பாக இதனைக் கையாள்கிறார்கள்.

எனவே, நான் கருதுகிறேன்: 'பிறந்த நாட்டிலிருந்து வெளியேறிய ஒரு குடும்பத்தில், அயலகத்தில் பிறந்த ஒருவர்; தமது ஏழாவது வயதில் மூன்றாம் நிலை படித்துக் கொண்டிருந்த வேளையில் கல்வி கற்க வசதியற்று படிப்பை நிறுத்தியவர்; பட்டினி என்ன என்பதையறிந்த வறுமையில் வாடிய ஒருவர்; தாயினால் வளர்க்கப்பெற்று, அதனால் அவர்மீது அபரிமிதமான பரிவுகொண்ட ஒருவர்; இரு மனைவியரையும் நோய்க்குப் பலி கொடுத்தவர்; குடும்ப மரபுக்கு மாறாக பிறிதொருவர் மனைவியை மணந்து கொண்டவர்; மரபு மீறிய பெண் உறவுகளை மேற்கொண்டவர்; கருத்தியலினாலோ ஆழ்ந்த தத்துவப் பார்வைகளினாலோ வழி நடத்தப்படாத ஒருவர்; என்பதுதான் எம்.ஜி.ஆர். குறித்த சித்திரம்.

எழுத்தாளர் க.நா.சு.வின் பார்வையில் சொல்வதானால்; 'அவர் ஆரிய பழமை வாதத்திற்கு மாற்றாக திராவிடப் பழமை வாதத்தை முன்வைத்தவர்.' (Quoted in M.G Ramachandran: My Blood Brother: Attar Chand: 1988).

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண்கள் குறித்த பார்வைக்கும் எம்.ஜி.ஆரின் பெண்கள் குறித்த பார்வைக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. எந்த நிலப் பிரபுத்துவ அணுகுமுறையில் இருந்து வெளியேறுவதாக அவர்கள் கோரிக்கொண்டார்களோ அதே நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளில்தான், பெண்களைப் பொறுத்து அவர்கள் சரணடைந்தார்கள்.

எம்.ஜி.ஆரின் வறிய மற்றும் விளிம்பு நிலை மக்கள் மீதான பாசம் மற்றும் பரிவு என்பது வறுமையும் பட்டிணியும் குறித்துப் பட்டறிந்து பெற்ற அவர் அனுபவத்தில் இருந்துதான் உருவாகியது. அது அவரது வெள்ளந்தியான அரசியலிலும் திரைப் படங்களிலும் அவரது ஆட்சியின் கீழான சமூகத் திட்டங்களிலும் பிரதிபலித்தது. அவர் தயாரித்து இயக்கிய 'நாடோடி மன்னன்' திரைப்படம் முன்வைத்த சமூகத் திட்டங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை ஒத்ததாக இருப்பதை எவரும் இன்று அவதானிக்க முடியும். இதனை அவர் தேர்ந்த கருத்தியல் அடிப்படையிலிருந்தல்ல, தனது இயல்பான தேர்வுகளில் இருந்துதான் செய்கிறார். திரும்பத் திரும்ப பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் அவரும் இணைந்தது தற்செயலானது இல்லை. அது திட்டமிட்ட நடவடிக்கை. தனிமனித வாழ்வில் தன்னல மறுப்பையும்

www.padippakam.com

தியாகத்தையும் போற்றிய தமிழக கம்யூனிஸ்ட், காங்கிரஸ், திராவிடத் தலைவர்கள் மீது பேரன்பு கொண்டவர் அவர். அண்ணாதுரை, காமராஜர், ஜீவா மற்றும் கல்யாணசுந்தரம் போன்ற தலைவர்கள் மீதான அவரது பேரன்பு அவரது நடத்தைகளில் வெளிப்பட்டது. அவரது ஈகைக் குணம் என்பது வெறுமனே ஐதீகம் இல்லை. இன்று அனைத்தும் வெளிப்படையாகவும் ஸ்தூலமாகவும் இருக்கிறது. திரைப்படப் புகழை குடும்பச் சொத் தாக மாற்றுபவர்களாக ரஜினிகாந்த் முதல், விஜயகாந்த், விஜய் வரை இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அப்படியானவராக இருக்கவில்லை.

வறிய மக்களிடம் அவர் அன்பு காட்டினார். தாம் நம்பியவற்றுக்கென அவர் அள்ளிக் கொடுத்தார். மரபான பழமையான பெண்மையைப் போற்றினார். அவரது திரைப்படம் வாழ்வு, நடத்தை என்பதற்கு இடையிலான இடைவெளி. அவர் காலத்திய பிற அரசியல் தலைவர்களோடும் நடிகர்களோடும், ஏன் இன்றைய அரசியல் தலைவர்களோடும் நடிகர்களோடும் ஒப்பிட முன்னுதாரணம் இல்லாதது. அவரது திரைப்படங்கள் வெற்றிபெற்றதிலும், அவர் மக்கள் மனங்களில் கோலோச்சியதிலும் இவையனைத்தும் மிகப்பெரும் பங்காற்றின.

சிவத்தம்பி மிகச் சரியாக மதிப்பிடுவது போல, மார்க்சியர்கள் மாதிரி திராவிட மரபினருக்கு பொருளாதாரச் சுரண்டல் குறித்த அரசியல் பார்வை இல்லை. என்றாலும், இதிலிருந்து வெளிப்பட்ட கருணாநிதி குழுமம் வந்து அடைந்திருக்கும் அவல இடமும் எம்.ஜி.ஆர். பெற்ற இடமும் ஒன்றேயானது இல்லை.

ஈழவிடுதலைப் போராட்டத்திலும் ஈழ விடுதலையிலும் எம்.ஜி.ஆர். கொண்டிருந்த ஈடுபாடு எவரும் அறியாதது. அவரது கடப்பாடும் ஈகைக் குணமும் வெளிப்பட்ட தருணம் குறித்து, தனது நூலில் அன்டன் பாலசிங்கம் (விடுதலை: எம்.ஜி. ஆரும் புலிகளும்: விடுதலைக்குதவிட்ட மாமனிதர்: அன்டன் பாலசிங்கம்: 2003) விரிவாக எழுதுகிறார். விடுதலைப்புலிகளுக்குத் தமிழக அரசின் சார்பாக நிதி கொடுப்பது தொடர்பான செய்தி வெளியானபோது ஜெயரத்தனவும் அவரது தூண்டுதலின் பேரில் ராஜீவ்காந்தியும் அதனைத் தடுக்கிறார்கள். ராஜீவ்காந்தியையும் மீறி ஆறு கோடி ரூபாய் வரையிலான உதவியை எம்.ஜி.ஆர். தனது சொந்தப் பணத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்குத் தருகிறார். அன்றிருந்த இந்திய அரசியல் சூழலில் இந்தச் செயலின் பின் விளைவுகளின் பாரதூரத் தன்மையை எவரும் அறிய முடியும்.

விடுதலைப் புலிகள், விடுதலைப்புலிகள் அல்லாதவர்கள் எனும் அரசியல் நிலைப்பாட்டில் இருந்து பார்க்கிறவர்கள் எம்.ஜி. ஆரின் இந்தச் செயல்பாட்டை எவ்வாறும் விமர்சிக்கலாம். ஆனால், ஈழ மக்களின் விடுதலையிலும், விடுதலையில் விடுதலைப் புலிகளின் ஈடுபாட்டையும் நம்பி; அவர் அள்ளிக் கொடுத்த ஈகத்தின் பின்னிருந்த தனிமனித தார்மீக அறத்தை எவரும் சந்தேகிக்க முடியாது.

எம்.ஜி.ஆர்., உலக விடுதலைப் போராட்டங்களைக் கரைத்துக் குடித்தவர் இல்லை. ஆனால், தனது மனதுக்கு அருகிலான ஈழ மக்கள் மீட்சி பெற வேண்டும் என விரும்பிய மனிதர் அவர். இன்று அவர் இல்லாத நிலையிற் பார்க்கும்பொழுது, 'அவரின் தொடர்பாற்றல் திறனால் அவர் தன்னைப் பற்றிய மதிப்பீட்டினை உயர்த்துவதற்கு ஏற்றவகையில் நடந்துகொண்ட ஒருவர் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது' என்று, பாலசிங்கத்தின் நூல் வெளியாகிய 2003ஆம் ஆண்டின் பின்பாக, 2004ஆம் ஆண்டிலும் சிவத்தம்பி எழுதுவாரானால், அவரது பார்வை முழுமையான ஆய்வுப் பார்வை இல்லை என்றுதான் நாம் முடிவுக்கு வரமுடியும்.

தமிழக கலாசார வரலாற்றிலும் திரை வரலாற்றிலும் எம்.ஜி.ஆர். என்பது ஒரு தனித்த நிகழ்வு. திரைப்படம் - வாழ்வு - தனிநபர் உளவியல் - பிரசாரம் - விடுதலை உணர்வு - அரசியல் அதிகாரம் - சமூக உளவியல் என அனைத்தும் தழுவி விவாதிக்க வேண்டிய ஒரு நிகழ்வு இது. ரசிகர் மன்றங்கள் - திரைப்படத்தின் வழி கதாநாயகன் விதைக்கும் பிரமைகள் - கதாநாயகனின் எதிர்கால அரசியல் ஆசைகள் என்பனவற்றுக்கான உறவுகள் குறித்த ஆய்வுக்கு எம்.ஜி.ஆர் குறித்த சமூகவியல் ஆய்வு ஒரு கருவியாக இருக்கலாம்; இருக்கிறது; இனி மேலும் இருக்கும். ஆனால், எம்.ஜி.ஆர். எனும் தன்னேரில்லாத நிகழ்வைப் புரிந்துகொள்ள இந்த ஆய்வுக் கருவி போதாது. குறிப்பாக, சிவத்தம்பி முன்வைத்த ஊடகச் சமூகவியல் பார்வை நிச்சயமாகப் போதுமானது இல்லை.

ஒரு ஆளுமையாக எம்.ஜி.ஆரின் தனிநபர் உளவியல் உருவாக்கமும், அவரை ஏற்றவர்களாக குறிப்பிட்ட வெகுமக்கள் சமூக உளவியலாக்கமும் குறித்த பன்மைத் துவக் கருவியே மிகச் சிறந்த கருவியாக இருக்க முடியும். அதற்கான அடிப்படையை மார்க்சிய உளவியல் அணுகுமுறை தருகிறது. எனவே, நான் கருதுகிறேன்; எம்.ஜி.ராமச்சந்திரன் குறித்த சமநிலையிலான ஆய்வு என்பது, நவீன ஆய்வுக் கருவிகளின் அடிப்படையில் தமிழ் மொழியில் இதுவரை இல்லை என்பதனை என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். மிகச் சமீப எதிர்காலத்தில் அதற்கான சாத்தியம் இருக்கிறது என்றும் என்னால் சொல்ல முடியும். அதற்கான முயற்சிகளும் நடந்து வருகின்றன என்பதனையும் நான் இங்கு ஒரு செய்தியாகப் பதிய விரும்புகிறேன். ஒன்று மட்டும் நிச்சயமாக இருக்கும், எம்.ஜி.ஆர். குறித்த எத்தகைய ஆய்வுகளுக்குமான துவக்கப் புள்ளியாக சிவத்தம்பியே இருப்பார் என்பதனை மட்டும் எவரும் மறுக்க முடியாது.



வி.எம்.சுபகுணராஜன்

**எம்.ஜி.ஆரின் வறிய மற்றும் விளிம்பு நிலை மக்கள் மீதான பாசம் மற்றும் பரிவு என்பது வறுமையும் பட்டினியும் குறித்துப் பட்டறிந்து பெற்ற அவர் அனுபவத்தில் இருந்துதான் உருவாகியது. அது அவரது வெள்ளந்தியான அரசியலிலும் திரைப் படங்களிலும் அவரது ஆட்சியின் கீழான சமூகத் திட்டங்களிலும் பிரதிபலித்தது.**

ஆண்டன் பாலசிங்கம்





படிப்பகம்

www.padippakam.com



# நாம் கட்டமைக்க வேண்டிய தமிழ் அடையாள இலக்கிய விமரிசனம்

தமிழவன்

அண்ணா, பெரியார்



பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையப் பகுதியிலிருந்து காலனிய பொருளாதாரத்தோடு இணைந்த ஒரு மக்கள் அசைவு இயக்கம் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டது. அது 1930- 60களில் சென்னையை மையங்கொண்டு தமிழடையாள அரசியலானது. பெரியார், அண்ணா, ம.பொ.சி, நேசமணி போன்றவர்களால் தென்னிந்தியாவிலும் ஈழத்தில் தந்தை செல்வா போன்றவர்களாலும் சிங்கப்பூர்- மலேசியாவில் சாரங்கபாணி போன்றவர்களாலும் தமிழடையாளத்தின் பல்வேறு தன்மைகள் வலியுறுத்தப்பட்டன. இதில் தென்னிந்தியாவில் பூகோள ரீதியாக பெரியார் தமிழடையாளத்தை இணைத்தாலும் ம.பொ.சி. மற்றும் நேசமணி போன்றோர் இன்றைய தமிழ் பேசும் பூகோள எல்லைகளைக் காப்பதில் அதிக கவனம் செலுத்தியது போல் ஈழத்தில் செல்வா போன்றோர் பங்களிப்பை மறக்க முடியாது. 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் மூலம் ஈழர்களுக்குத் தனிநாடு என ஈழத்தமிழ் மக்கள் தீர்ப்பளித்தனர்.

பெரியார், அண்ணா போன்றோர் தோற்றுவித்த தமிழடையாளம் "திராவிட" என்ற நாமகரணத்திலிருந்து அச்சுமாறித் தமிழடையாளமானது. இதன் தொடர்ச்சியாக ஈழத்தில் தமிழடையாளம் ஓர் தனிநாட்டுக் கோரிக்கையாக வடிவம் பெற்று சுமார் 30 ஆண்டுகள் தனித்தமிழ் சேனை ஒன்றை உருவாக்கி பிரபாகரன் போரிட்டு 2009 இல் மரணமடைந்தார். படை சின்னாபின்னாமானது. சின்னாபின்னமாக்க கட்டபொம்மனுக்கு எட்டப்பன் இருந்தது போல் ஈழத்தமிழர்கள் கருணா என்பவரும் டக்ள்ஸ் தேவானந்தாவும் பிரபாகரனுக்கு எட்டப்பன்களாக இருந்தனர் என்று வரலாறு கூறுகிறது. 2009 இல் தமிழ்ப் படை அழிக்கப்பட்டபோது சுமார் 1 இலட்சம் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டனர் என்பதும் தமிழ்மொழி உள்ளளவும் வரலாறாய் மாறிவிட்டது. இது போன்ற நிகழ்வுகள் தமிழர்களின் 2000 ஆண்டு வரலாற்றில் வேறில்லை.

இன்று ஈழத்தில் தமிழர் பலர் இன்றைய சிங்கள மேலாண்மையின் கீழ் அஞ்சி வாழ்ந்துகொண்டிருப்பதால் அங்கு நேரான வரலாற்றுப் பார்வை இருக்கமுடியாது. சிங்கள அரசுக்கு வெளியில் இருப்பவர்கள் மட்டுமே நடுநிலையான பார்வையைப் பெறமுடியும். எனவே இன்றைய வரலாற்று, பண்பாட்டுப் பார்வையைத் தமிழர்கள் தாங்கள் தாங்கள் வாழும் நாட்டு எல்லைகளைத் தாண்டிய முறையிலேயே அமைக்க முடியும். இங்கு சிங்கள மேலாண்மை, இந்தி மேலாண்மை, சீன மேலாண்மை, மலாய் மேலாண்மை என்ற வரன்முறைகளுக்குட்பட்ட தமிழடையாளம் ஒன்றைப் பற்றி விளக்க வேண்டும்.

இது ஒரு அனைத்துலகப் பண்பைத் தமிழ் கலாச்சாரத்துக்கும் இன்றைய தமிழ் வாழ்வுக்கும் நல்கும். இந்தக் கோணத்தில் அனைத்துலகத் தமிழ்ப் பண்பாட்டை வரையறுப்பது எப்படி? அதன்பிறகே இன்றைய தமிழ் மொழியின் உள்ளமைப்பைப் புரிந்து கொள்ள முடியும்.

தொல்காப்பியர் முதன்முதலில் தமிழ் மொழியின் உள்ளமைப்பை மூன்று பிரிவுகளாகப் பிரித்து மிகப்பெரிய ஓர் ஆராய்ச்சியைச் செய்து தொல்காப்பியத்தை எழுதினார். தமிழ்மொழி ஒலியாயும் சொல்லாயும் கவிதையாயும் நுட்பமாக இயங்குகிறது என்றார். இன்று நாம் கோலலம்பூரிலும் சிங்கப்பூரிலும், யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும், பெர்லினிலும், கானடாவிலும் பேசும் தமிழ்மொழியின் உள்ளுயிர்ப்புத் தொல்காப்பியரின் விளக்கம் சார்ந்ததாகும். இந்த நீண்ட காலத் தொடர்ச்சியை மறக்கக்கூடாது. தொல்காப்பியர் அன்று விளக்கிய அதே தமிழின் உயிர் இன்று பேசும் கொச்சைத் தமிழிலும் ஓடுகிறது. இது உண்மை. முதலமைச்சரின் தமிழிலும் வாழவழியில்லாத ஒரு கூலித் தொழிலாளியின் மொழியிலும் உள்ளோடும் மொழித்தனமான உண்மை ஒன்றேயாகும்.

'மொழித்தனமான உண்மை' என்பது என்ன? மொழித்தனமான உண்மை என்பது மொழி என்பது கருவி மட்டுமே என்று அறிவதல்ல. உள்ளே உண்மை இருக்கிறது. மொழி அந்த உண்மையை சுமந்து கொண்டு வருகிறது என்ற பார்வை மொழியை ஒரு கருவிபோல் பார்க்கிற பார்வை ஆகும். இன்றைய அமைப்பியல்வாதிகளிலிருந்து பின்நவீனத்துவவாதிகள் வரை உண்மையை மொழியோடு ஒப்புமைப்படுத்துகிறார்கள் அல்லது உண்மை என்பது மொழிதான் என்கிறார்கள். இந்தப் பார்வையை அன்றே தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிறது தொல்காப்பியம். (இலக்கண அறிவு உள்ளவர்கள் என்னுடைய "பழந்தமிழில்



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்" என்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (சென்னை) வெளியிட்ட நூலை வாசித்து இச்சிந்தனை பற்றி அதிகம் அறியலாம்.)

தமிழ்மொழியை உள்வாங்கிக் கொண்டு வாழ்பவர்கள் அத்தனை பேரும் தமிழின் மொழித்தனமாய் உண்மையை தினசரி வாழ்வில் வாழ்பவர்கள். அமைப்பியல்வாதிகள் இந்த மொழித்தனமான உண்மையை ஒரு குறிப்பிட்ட கலைச்சொல்லால் குறிப்பிடுகிறார்கள். "தன்னிலை" என்று கூறுகிறார்கள். இந்தத் தன்னிலை மாறாதது அல்ல; மாறியும் மாறாமலும் இருப்பதாகும். எழுத்தில், வாசிப்பில் கட்டமைக்கப்படுகிறது. கல்வி இல்லாதவர் களிடமும் இந்தத் தன்னிலை அவர்களின் சமூகத் தொடர்பால் உருவாகிறது. சற்று சலனமுறுகிறது ஒவ்வொரு புதிய "பிரதி"யைச் சந்திக்கையிலும்.

அப்படிப்பார்க்கும்போது தான் இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய தமிழடையாளக் கவிஞனாக பாரதிதாசன் நமக்குக் கிடைக்கிறார். பாரதிதாசனும் இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் பாதியில் கவிஞனாக மலர்ந்த பாரதியும் இரண்டு தமிழ் யுகங்களின் கவிஞர்களாவர். இருவரும் முக்கியமான கவிஞர்கள். ஆனால் 2009-க்குப் பிறகு உலகமெங்கும் பரவியுள்ள தமிழர்கள் தங்கள் தாய் மொழியை அந்தந்த, நாடுகளில் பாது காக்கவும் அதற்கான தமிழ்த்துவம் என்ற மனநிலையை (அல்லது தமிழ்ப் பிரபஞ்சம் என்ற மனநிலையை) பெறவும் பாரதிதாசனே அதிகம் பயன்படுவார். ஒருவகை சகொற்றொடர்பிணைப்பு, இடைவெளி, சாந்தம் போன்ற உத்திவகைகள் வழி கவித்துவக் கட்டமைப்புப்புரிவது பாரதிதாசன் கண்டுபிடித்த கவித்துவ மொழி அமைப்பாகும். சாரத்தை விட வடிவத்திலிருந்து செய்தி பெறப்படும் கவித்துவமாகும் இது. அவைதிகம் வைதிகம் என்று இரண்டாய் பிரிக்கப்படுவதில் அவை தீகத் தரவுகளிலிருந்து பாரதிதாசன் அதிகம் கவிதை எழுதுகிறார். பாரதிதாசனுக்கும் சி.மணிக்கும் ஏற்படுத்தும் தொடர்ச்சியில் 20 ஆம் நூற்றாண்டின் தமிழ்க் கவித்துவம் நவீனப்படும் வரலாறு அமைகிறது. பாரதிக்கும், ந.பிச்சமூர்த்திக்கும் நடுவில் இழுக்கும் தொடர்கோடு வைதீகத்திலிருந்து தரவு எடுத்துக் கவித்துவ பிரபஞ்சம் கட்டும் இன்னொரு மரபு ஆகும். ஒரு சில வகைமயக்கங்கள் இருந்தாலும் இவர்கள். இருவரும் வேறுவேறு இருவகை அறுவுதோற்ற மரபுகளாவர். ஒன்றுக்கு முரண்பட்டதாய்த் தான் இன்னொன்றைக் கூறவேண்டுமே ஒழிய ஒன்றின் தொடர்ச்சியாய் இன்னொன்றைக் கூடக்கூடாது. இந்தியா முழுவதும் இந்த இருவகைச் சட்டகங்களும் திராவிட மரபு ஆரிய மரபு என்று பெயர்கொடுத்து வேறுபடுத்தப்பட்டிருக்கின்றன. திராவிட மரபின் எச்சசொச்சங்கள் வட இந்தியா விலும் கிராமப்புற கலாச்சாரமாய் பரவி

செல்வா



இருக்கின்றன.

2009-இல் ஓர் அதிர்ச்சியுடன் உலகத் தமிழர்கள் தங்கள் இருத்தலைப் புது விதமாய் தங்களை அறியாமலே புரிந்து கொண்டனர். அப்போது பாரதியைவிட (பாரதியை நிராகரித்தல்ல) பாரதிதாசனின் தன்னிலையோடு உலகத்தமிழர்கள் தம்மை அதிகம் இனம் கண்டனர். ஒரு கவிஞனின் பரிமாணத்தைக் கண்டடைவது அவனது காலவாசகர்களின் உள்நிலைப்பாதிப்பின் மூலமே ஒழிய புறக்காரணிகள் மூலமல்ல; பாரதி ஏக இந்திய மாயையை சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழர்கள் பெற்ற அகில இந்திய உந்துதல்மூலம் உருவாக்கியபோது மகாகவி என்ற போலி நாமகரணத்தைப் பெற்றார். போலி காலனியம் தந்த போலி பாரததேசப்பிரமை. 2009 இல் இந்திய உளவுப்பிரிவுகளும் பாரத தேசத் தலைமையும் ஈழப்படையை அழிப்பதற்கு உதவிபுரிந்தபோது பாரதிதாசன் மகாகவியாய், உலகத் தமிழர்களின் மனங்களில் எழுதுயர்ந்தார். தமிழ்த்தேசம் எழுந்தது மனங்களில். எல்லா உயர்வகை அடையாளங்களையும் போல் இதுவும் ஒரு கணச்செயலாகும். இந்தத் தமிழ்க் கணச்செயல்தான் தமிழ்ப் படைப்பிலக்கிய அளவுகோலை உருவாக்கியது. 2009-இல் நெருப்பிட்டுத்தன்னை எரித்த முத்துக் குமாரின் ஜுவாலையில் இந்தப் புதிய சத்தியம் உயிரால் எழுதப்பட்டது. 1965-இல் என்னைப் போன்று அன்றிருந்த இளைஞர்களைத் திராவிட அரசியலுக்கு உந்தித்தள்ளிய உணர்வு வரலாற்றின் தொடர்ச்சி இன்று உயிர்த்தெழுந்துள்ளது.

தமிழ்த்தேசம் உணர்வாகவும் (தன்னிலை) கதையாடலாகவும் வந்து மீண்டும் கருத்துலகை எல்லாம் மறுமதிப்பீட்டுக்கு அவசியப்படுத்துகிறது. தமிழ்த்தன்மையுள்ள படைப்புக்களையும் தமிழ்த்தன்மையற்ற படைப்புக்களையும் வேறுபடுத்தும் தேவை இன்றைய வரலாறு வலியுறுத்துகிறது. எந்தப் படைப்பின் வரைவெல்லை தமிழின் உணர்விலிருந்து எழுகிறதென்ற தமிழ் விமர்சனக்கோட்பாடு இன்று தேவை யாகிறது. 2009-க்குப் பிறகு தமிழுணர்வு புதுவரைபடங்களைப் படைப்பெழுத்தில் தோன்றுவித்துள்ளது. 1965-இந்தி எதிர்ப்பின் போது எழுந்த திராவிட இலக்கியம் தமிழுணர்வின் ஆழத்தை வந்தவர்கள் தமிழ்ப்படைப்பெழுத்தில் தோற்றுப்போனார்கள். 2009-க்கு பிறகு தமிழுணர்வை வைத்து எழுதுகிறவர்கள் புது எல்லைகளைத் தமிழெழுத்தில் கொண்டு வருகிறார்கள். அதற்குப் புதுக்கவிதையின் யாப்பற்ற தன்மை வழங்கியுள்ள சாத்தியப்பாடுகள் அளப்பரியன.

இந்தத் தமிழ் அளவுகோல் குமரி மாவட்டத்தில் நேசமணி. எதிர்த்த மலையாளப் பண்பாட்டு அம்சங்களைப் புனர் ஆலோசனை செய்யக் கோருகிறது. பட்டம் தாணுபிள்ளை புதுக்கடையில் கொன்ற தமிழர்களைக் கொல்லப் பயன்படுத்தியது வெடிமருந்திட்ட துப்பாக்கிமட்டுமல்ல, மலையாளப் பண்பாட்டுக் கொலைக்கருவியைத் தான். இந்த நஞ்சுகலந்த உயர்சாதித்துவ மலையாளப் பண்பாண்டம் சங்கள் 1970-க்குப் பிறகு தமிழ்ப்படைப்பான ஜேஜேசில குறிப்புக்கள், புளியமரத்தின் கதை ஆண்கள் பெண்கள் குழந்தைகள் மூலம் தமிழுக்குள் புகுந்துள்ளன. தமிழகத்துக்குள்ளும் புகுந் துள்ளன. தமிழகத்தில் 1970-க்குப்பிறகு குமரி மாவட்டம் என்ற அடையாளத்தை அழித்த இலக்கிய அம்சமாய் இந்தத் தமிழடையாள அழிப்பு அம்சம் புகுந்தது. இதனை இடது சாரிகள் வேறு பெயரிட்டு அடையாளம் கண்டு அன்று எதிர்த்துத் தமிழைக் காத்தனர். ஆனால் தமிழ் மாடர்னிசம் சென்னையை மையமிட்டும் க்ரியா பதிப்பகத்தை நிலைக் களனாய் ஆக்கியும் உருவானபோது சுராவின் இந்த மலையாள அம்சம் உள்ளே வந்து தமிழிலக்கியத்தில் கலந்துவிட்டது. இந்த மலையாளக் கலப்பு "ரப்பர்" என்ற தமிழ் எதிர்ப்பு நாவலில் உள் பிரதியாய் (sub - text) அமைந்து மலையாளக் கலப்பின் அடுத்த பரிமாணம் தொடங்கியது. இன்றைய சிங்களத்தமிழ் விரோதம் போன்று அன்றைய மலையாள உயர்சாதித் தமிழ் விரோதம் இந்த நாவல் மூலம் தமிழ் மீது பழிவாங்கும் நடவடிக்கையைத் தொடங்கியது. இங்கு வலியுறுத்தப்படுவது ஒரு வரையறுப்பின் முக்கியத்துவத்தைத்தான். உலகம் முழுதும் நான்கு நாடுகளில் மொழிமூலம் வரை யறுக்கப்படும் தமிழின் உயிர்த்துவம் அவற்றின் தேசிய வரையறைகளைத் தனது அறிவுத் தோற்றவிய (Epistemological) லாகக் கொள்வது இப்படித்தான். இங்கேதான் பாரதிதாசனின் கவித்துவம் இன்றைய 21ஆம் நூற்றாண்டில் தமிழும் தமிழர்களும் எதிர் கொள்ளும் அகில உலகப் பிரச்சனைக்குத் தமிழர்களுக்கு வழிகாட்டுவதாய் அமைகிறது. மலையாளிகள் எதாவது புதுப்பகுதி கூட்டமாய் குடியேறுவதும் தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி இருப்பதும் ஓர் விவரவியல் முதல்வாத



படிப்பகம்

www.padippakam.com

(Empirical) சாட்சியாகும். தமிழ் ஒருங்குணர்வின்மையால் உலகின் பல பகுதிகளில் குடியேறியவர்கள் தமிழை இழந்தனர். மலேசியா குடியேறித் தமிழை இழந்த மலாக்கா செட்டிகள் இதற்கொரு சிறந்த உதாரணம்.

"தமிழ்த்துவம்" என்றால் என்ன என்ற கேள்வியில் இருந்து நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைக்கு நேராகப் பயணப்படலாம். இன்று சில தத்துவவாதிகள் உண்மை என்று ஒன்று இல்லை என்கின்றனர். உளவியல் நிபுணரான லக்கானும், லக்கானை அடிப்படையாய் வைத்து இன்று உலகப் பிரசித்தி பெற்ற ஸ்லவாய் ஷிஷெக்கும் (Slavoj Zizek) "உண்மை" இருக்கிற தென்கிறார்கள். அதாவது இன்மையின் மூலமாய் உண்மை இருக்கிறதென்கிறார்கள். இதுபோல் பல்வேறு சேர்க்கைகள் மூலம் தமிழ்த்துவம் இருக்கிறது. அது ஒரு "சாராய்" இருக்கிறதென்று திராவிடக்கால கட்டத்தில் தமிழ்த்துவத்தை விளக்கினர். 2009-க்குப் பிறகு நாம் தமிழர்கள் தமிழ்த்துவம் என்பது பல்வேறு சேர்க்கைக் கூறுகளின் (associates - அதாவது வாழ்நிலை, வரலாறு, ஞாபகம், ஆதிபுராணிக மூலம், (primary Mythical orgin) போன்றவை ) தொனிப்படுத்தப்படுவது என அறிய வேண்டும். இந்தத் தமிழ்த்துவம் தான் அனைத்துலகமெங்கும் பிற தேசிய இனங்களின் கீழ் அடங்கி வாழ நிர்ப் பந்திக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் விடுதலைத் தாரகமந்திரம். இலக்கிய விமரிசனமென்று இந்த அடிப்படையில் உருவாகி அனைத்து எழுத்துக்களையும் இந்த அடிப்படையில் அணுகி ஆராய வேண்டும். மேற்கத்திய பண்பாட்டுக் கல்வி (Culture Study) கொடுத்த அத்தனை வளங்களையும் நாம் உள்வாங்கித் தமிழ்ப்படைப்பு, தமிழ்த்தன்மையும் தமிழ்மூலஓர்மையும் கொண்டதாய் எழுதப்பட வழிகாட்ட வேண்டும். இதற்குத் தமிழ்க்கல்வி தந்து கொண்டிருக்கும் கல்வி நிலையங்களில் என்ன செய்வதென்று புரியாமல் திணறிக் கொண்டிருக்கும் தமிழ் மாணவர்களை ஒருங்கிணைத்து நாம் செயல்பட வேண்டும். 20ஆம் நூற்றாண்டின் தமிழ்ப் படைப்புக்கள் அந்நிய கலாச்சார அடிமைத்தனத்தில் தான் தமிழ்நாவல், சிறுகதை தமிழ்நாடகம், கவிதை முகிழ்க்கும் என்று மோசடி செய்தது. அதனை 21ஆம் நூற்றாண்டு மாற்ற வேண்டும். தமிழை வலியுறுத்துவதில் தான் தமிழ்ப்படைப்பு இருக்கிறதென்போம்.

தமிழிலக்கியத்திற்கு ஒற்றைதேசமற்ற இன்றைய நிலைமை பல புதிய சிந்தனை களுக்குத் தோது செய்கிறது. 1947-இல் இலங்கையும் தமிழகமும் இரு நாடுகளோடு சேர்க்கப்பட்டன. இலங்கையில் பன் னூறு ஆண்டுகளாக வாழ்ந்த ஈழத் தமிழர்கள் சிங்கள ஆதிபத்தியத்தால் அடிமைகளாகப்பட்டார்கள். மார்க்சியம் மிகுந்த நுட்பத்துடன் இந்த கலாச்சார, வாழ்நிலை அடிமைத்தனத்தைக் கையாண்டு அடிமைப்படுத்தப்படுபவர்களோடு துணை நின்றிருக்க வேண்டும். ஆனால் மார்க்சியம் தமிழர்களுக்குள் பிரிவினைக்கு உதவியது. தமிழக கம்யூனிஸ்டுகள் சிங்கள இனவெறி அரசின் நிலைபாட்டை மேற்கொண்டு சிங்களத் தொழிலாளர்களும் தமிழ்த்தொழிலாளர்களும் ஒன்று என்ற தவறான மார்க்சிய விளக்கத்தை முன் வைத்து வரலாற்றுக்கு வஞ்சகம் புரிந்தார்கள். இது தமிழகத்தில் கம்யூனிஸ்டுகளைத் தவறான திசைக்குத் தள்ளியது. இந்தத் தவறிலிருந்து கட்சி மார்க்சியர்கள் இன்று வரை வெளியேறமுடியவில்லை. இது தமிழர்களுக்குப் பெரிய இழப்பு ஆக தமிழத்துவம் என்பதில் ஒரு பொருளாதார கருத்துருவ (Ideological) வரலாற்று, இயக்கவியல் அசைவுகள் செயல்பட்டதை நாம் மறக்கக்கூடாது. 70களிலும் 80களிலும் தமிழகத்தின் இரண்டு கம்யூனிஸ்ட்


மா.பொ.சி.


நேசமணி

கட்சிகளும் இக்கருத்துக்களை அறிந்து கொண்டாலும் தங்களைக் கருத்து ரீதியில் மாற்றமுடியாத அளவு அனைத்திந்திய மாயைக்குள் சிக்கியுள்ளனர். முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்குத் தூக்குத்தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்ற பிருந்தாகாரத்தின் கூற்று பலரை முகம் சுளிக்க வைத்தது. ஈழப்பிரச் சனையில் மறைமுகமாய் சிங்கள ஆதரவுப் போக்கும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்டது மிகப் பெரிய தவறாகும். இதில் சி.பி.ஐ. என்ற கட்சியினர் பாராட்டக்கூடிய முறையில் நடந்துகொண்டனர். இங்கெல்லாம் தமிழ்த்துவம் மார்க்சியம் பற்றிய தமிழ் மக்கள் சார் நோக்குக்குக் உதவமுடியும்.

தமிழ் என்ற மொழியிலிருந்து தமிழர் களின் வாழ்க்கைக்கான நியாயப்பாடு பிரிக்க முடியாதஒரு நிலைமையைப்பெற்றுள்ளதின் அடையாளக்குறிகளில் ஒன்று தமிழ் மொழியில் உருவான இலக்கியம். 2009 இல் நடைபெற்ற தமிழினப்பகுதி ஒன்றின் அழிவு தமிழிலக்கியத்தைப் புதுஅறிதல் தளமாய் மாற்றியுள்ளது. சாஷா எபெலிங் என்ற ஜெர்மன் நாட்டு தமிழாய்வாளர் புலப்பெயர்வு இலக்கியம் தமிழர்களிடம் பல அலைகளாய் கடந்துள்ளது என்று கூறி பல நாடுகளுக்கும் சென்றுள்ள தமிழர்களைப்பற்றியும் அவர்களின் ஆசை அபிலாசைகள் தமிழிலக்கியமாய் உருவாக்கம் பெற்றுள்ளதையும் கூறுகிறார் (பார்க்க : சிங்கப்பூர் உலகத்தமிழ் எழுத்தாளர் மாநாடு (2011 அக்டோபர்) ஆய்வுக்கட்டுரை) 1918இல் பெனாங்கில் பிரசுரிக்கப்பட்ட புலோலிசுப்பிரமணியம் என்ற இலங்கைத் தமிழரின் நாவலான "ஒஆலசுந்தரம் அல்லது சர்மார்க்க ஜெயம் என்ற நாவலும் 1927இல் கோலாலம்பூரில் பிரசுரிக்கப்பட்ட "சாம்பசிவம் ஞானமிர்தம் அல்லது நன்னெறிக்களஞ்சியம்" என்ற ஈழத்தமிழரான அருணாச்சலம் நாகலிங்கத்தின் நாவலையும் குறிப்பிட்டு விரிவான ஆய்வுகள் செய்ய வேண்டும். அதாவது தமிழகம் - ஈழம் - சிங்கப்பூர் - மலேசியா என்பதான தென் கிழக்காசிய பூமிப்பரப்பு தமிழிலக்கியத்தின் வரையறுப்பில் நுழைகிறது. அதாவது தமிழ் வேர்பிடித்துள்ள பூமிப்பரப்பு இது. வெறும் சென்னையை மையமிட்டுத் தமிழகபூமிப்பரப்பை வேர்ப்பிடிப்பு நிலமாகக் கொண்டு தமிழ் மன இயக்கத்தை அறுதியிட்டுவிளக்கும்பின்னணிதிடீரென்று மறைந்துள்ளது. தமிழ்ப்படைப்பின் பின்னணியில் மறைந்திருந்து மொழிதைர்யம் தந்த நிலம் தென்னிந்தியாவின் தமிழ் பேசும் பகுதிகள் மட்டுமல்ல. இது தமிழிலக்கிய மதிப்பீட்டையும் அளவைமுறையையும் முற்றிலும் வரையறுப்பையும் மாற்றிவிடுகிறது. தமிழிலக்கியத்தன்மை குறுகிய தேசியத்தைப் பின்னணி கதையாடலாய் வைத்திருந்தது பழைய கதை. சுமார் 100 அல்லது 200 ஆண்டுகளின் வேருடன் தமிழிலக்கியம் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதியுடன் உரையாடுகிறது. இன்றுள்ள ஈழத்தமிழிலக்கியம் தமிழக இலக்கியத்துடனும் சிங்கப்பூர், மலேசியா



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியத்துடன் உள்குரலில் ஓர் உரையாடலையும் வெளிக்குரலில் தத்தம் நில எல்லைக்குட்பட்டு ஓர் உரையாடலையும் (இரட்டை உரையாடலையும்) ஒரே நேரத்தில் நடத்துகிறது. இவ்வாறு ஒரே கணத்தில் இரண்டு தளங்களில் பேச ஆரம்பிக்கிற இலக்கியம்தான் இனி நாம் கவனிக்க வேண்டிய இலக்கியம். கணினி மூலம் இந்த உரையாடலை வலைப்பூக்களில் நாம் தொடர்ந்து நிகழ்த்த பெரிய வாய்ப்புள்ளது. கணினி மூலம் மூன்று திசைகளில் இருந்தும் ஏற்படுத்தக்கூடிய கொள்வினை கொடுப்பினை என்ற பரிவர்த்தனைசார் தமிழ் இலக்கியப் பரப்பு பல்வேறு தளங்களை நிலம் சார்ந்தும் நிலம்சாராதும் இயங்க ஆரம்பிக்கிறது. தமிழ் மொழி பன்முக அடையாளங்களையும் மன அழுத்தங்களையும் முரண்பாடுகளையும் உள்ளேற்றுப் பல வர்ணங்களில் அரத்தச் செறிவு பெறுகிறது. எனவே திருச்செங்கோட்டை விட்டு வெளியேறாத தமிழ் எழுத்தாளனும் இந்தியாவையே பார்த்திராத கோலலம்பூர் தமிழ் எழுத்தாளனும் மொழியின் சில வெளிப்படுத்த முடியா ஒலி நுட்பத்திலும் பொருள் நுட்பத்திலும் ஒன்றுபோல் பங்கெடுக்கிறார்கள். தொல்காப்பியர் பொருள் போல் இன்னொரு பொருள் இருக்கிறதென்கிறார்.அதனை"பொருண்மை" என்று பெயர் சூட்டி அறிமுகப்படுத்துகிறார். உலகத்தமிழ் எழுத்தாளன் பிற மொழிகளிலிருந்து வேறுபட்டு தனக்குள் ஒரு மொழி நுட்பக்கேண்மையை பகிர்ந்து கொள்கிறான். இதற்கு அடிப்படையில் தமிழ்த்தாயுணர்வு ஒன்று இருக்க வேண்டும். பிறப்பில் தமிழ் ஒருங்கிணைப்பு நடக்கிறது. சில தமிழக எழுத்தாளர்கள் கன்னடர்களைப் பார்க்கும்போது தங்களை கன்னடர்கள் என்றும் தெலுங்கர்களைச் சந்திக்கும்போது தாங்கள் தெலுங்கர் கள் என்றும் பெருமையுடன் கூறி வருவதைக் கேள்விப்படுகிறோம். இங்கு பிறப்புக்கும் தமிழெழுத்துக்கும் அவ்வுறவின் உள் ரகசியங்களில் சஞ் சரிக்கும் தமிழ் எழுத்தாளனுக்கும் உள்ள பந்தத்தை கவனிப்பது தவறல்ல. சாதி மத பிணைப்புக்களைவிட மொழிப்பிணைப்பின் ஆதிக்குரல் பற்றிச் சிந்திப்பது நல்லது தான்.

சாஷா எபெலிங் 1983க்குப்பிறகு உலகமெங்கும் பரவியுள்ள ஈழத் தமிழெழுத் தாளர்களைத் தனியான வகையெனக் கூறியுள்ளார். அது பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசுவோம்.

இனி ஈழம், தமிழகம், சிங்கப்பூர், மலேசியாவின் அடிப்படை ஒருங்கிணைவில் தமிழிலக்கியம் பெறும் பலம் பற்றிப் பேசலாம். அதற்கு முன்பு படைப்பிலக்கியச் செயல்பாட்டின் சில அதீத தன்மைகள் பற்றிச் சுட்ட வேண்டும். படைப்பிலக்கியம் மட்டும்தான் பௌதீக அபௌதீகத் தன்மைகளோடு ஒரே நேரத்தில் எதார்த்தத்திலும் மீஎதார்த்தத்திலும் செயல்படுகிறது. இத்தகைய அதீத

கோ.சாரங்கபாணி





பாரதிதாசன்

ஆற்றலுக்குப் பெயர் இலக்கியம் என்றாலும் இந்த அதீதம் சில குறிப்பிட்ட எல்லைகளைக் கொண்டுள்ளது என்கிறது மேற்கில் 60களில் கண்டுபிடித்த அமைப்பியல் தத்துவம். எனவே எல்லைக்குட்பட்டதும் எல்லை தாண்டியதுமான ஒரு வேகமே கற்பனையாகும். இந்தக் கற்பனையியல் பல்வேறு உச்சங்களைப் படைப்புக்கணத்தில் சம்பவிக்க வைக்கிறது.

இதன்படி ஈழ இலக்கியத்தில் தற்கால இலக்கியயுலகம் மஹாகவி போன்றவர்களுடன் தோன்றினாலும் 1980 வாக்கில்தான் புதுவித இலக்கிய எழுச்சி இனப்போர்களோடு பிறந்தது. அதுபோல் சிங்கப்பூர், 'மலேசியாவில் இளங்கோவன்', இளஞ்செல்வன் போன்றவர்களோடும் 'காதல்', 'செம்பருத்தி', 'வல்லினம்', என புதுஅசைவு மொழிக்களத்தில் தோன்றி யுள்ளது. பலரைப்போல் மலாய் இனத்தோடு கலந்துமொழியை மறந்துவிடாத இனமக்களிடமிருந்து தமிழிலகியத்தின் புதுத்தோரணை மிகுந்த கவர்ச்சியாய் புத்தெழுச்சி பெறுகிறது. தமிழிலக்கியம், எவ்வளவு தடைகள் இருந்தாலும் புது தமிழ் இலக்கியம் பிறந்தே தீரும்.

எனவே ஊரைவிட்டு எப்பொதோ போனவர்களின் தமிழிலக்கியம் ஒன்று ஏதோ ஒரு நாட்டில் பிறக்கும் போது தமிழ்வாக்கியம் ஒவ்வொன்றும் அசைக்கப் படுகிறது. ஒவ்வொரு சொல்லும் அசைகிறது என்பதுதான் உண்மை. இந்த அசைவில் அடங்கியிருப்பதுதான் அனைத்துலக தமிழ்மொழி. இனி தமிழ்மொழியின் எல்லையானது தமிழ் மனத்தின் எல்லை யாகிறது. தமிழ் படைப்பிலக்கியம் புலம் பெயர் பூமிகளின் தமிழ் எழுத்தையும் உள்வாங்குகிறது. புதுக்கொப்பூள் கொடி உறவு மொழி உறவாகிறது. மொழியிலிருந்தல்ல இலக்கியம் உதிப்பது, இலக்கியத்திலிருந்து கணம் தோறும் கணம் தோறும் புதுத்தமிழ் உற்பத்தியாகிறது.

தமிழ்மொழியின் பெருமை அம்சங் களிலிருந்து நம்முடைய அறிதலியலைக் கட்டும்போது ஒருவித வெறித்தன்மை - ஒருவித பாசிசத்தன்மை உருவாகிறதென்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். அதாவது பிறமொழி வெறுப்பு, பிற வகைமையினர் வெறுப்பு ஏற்படும் என்ற அயலவர் பற்றிய கரிசனம் நியாயம்தான். எனவே இன்றுவரை தமிழ் அடையாளம் ஒரு மையிலிருந்து கட்டப்பட்டது என்றும் இனி தமிழடையாளத்தைப் பன்மையிலிருந்தும் Hybridity (கலவையியலில்) இருந்து கட்ட மைக்க வேண்டும் என்றும் கூறவேண்டும்.

இங்குச் சில விளக்கங்களை முன்வைப்பது தேவையாகிறது. சமீபத்தில் க.நா.சு.வின் விமரிசனக் கலை (நர்மதா வெளியீடு) என்ற நூலை மீண்டும் படித்தேன். அந்நூலின் மொழிபெயர்ப்பு பற்றி ஒரு கட்டுரை உள்ளது. இன்று மொழிபெயர்ப்பவர்கள் படிக்க வேண்டிய கட்டுரை. நாம் மொழிபெயர்ப்பைப் பாராட்டும் போது "ஆஹா இந்த மொழி பெயர்ப்புத் தமிழில் மூலநூல், எழுதப்பட்டது போல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன பாராட்டுகிறோம். க.நசு. மொழிபெயர்ப்பு தமிழ் போல் இருக்கக் கூடாதென்கிறார். அந்நிய மொழியின் அந்நியத்தன்மை மொழிபெயர்ப்பில் பிரதிபலிக்க வேண்டும் என்கிறார். அதாவது தமிழுக்குள் அந்நியத் தன்மை வரவேற்கிறார். இதற்கர்த்தம் தமிழில் மலையாளத்தன்மையுடன் மொழி பெயர்க்கப்படும் போது சுயத்தன்மை இது, அந்நியத்தன்மை இது என வேறு படுத்துகிறோம். சுய * அந்நிய என்ற முரணில் தான் சுயத்தன்மைக்குள் ஒரு வேகம் கூடுகிறது. இப்படித்தான் நான் பார்க்கிறேன். ஒரு ஜெர்மன் நாவலை மொழிபெயர்க்கும்போது "ஜெர்மன் மொழியின் வசனத்தின் நெளிவு சுளிவுகள், சில வார்த்தைச் சேர்க்கைகள், சில வாக்கிய சந்தங்கள், சில பதப்பிரயோகங்கள், எல்லாம் தமிழுக்கு வரவேண்டும். அப்போது தான் அந்த மொழிபெயர்ப்பால் தமிழ்மொழிக்கு லாபம் இருக்கும்." இது க.நா.சு.வின் வாக்கியம். அந்நியத்தை வரவேற்கும் போதுதான் தமிழுக்கு லாபம் கிடைக்கும் என்கிறார். இங்குத் தமிழின் பக்கம்தான் சாய்கிறார். எனவே தமிழ் அடையாளம் என்று நாம் கேட்பது 'தூய்மைவாத' மாகாது. ஒற்றைமுக அடையாளமும் ஆகாது. பாசிசமும் ஆகாது.

இதுபோல் ஹோமிபாபா (Homi Bhaba)



படிப்பகம்

www.padippakam.com


என்ற கோட்பாட்டாளரும் கதையாடலும் தேச உருவாக்கமும் ஒரு வித கலவையியல் மூலம் தான் சாத்தியமாகின்றன என்கிறார். அப்படி அவர் கூறும்போது வால்டர் பெஞ் சமின் என்ற ஜெர்மன் நாட்டு மார்க்சியக் கோட்பாட்டாளரின் மொழிபெயர்ப்புப் பற்றிய சிந்தனைகளை எடுத்துக்கொள்கிறார். மூலமொழி ஒரு கப்பல் போன்றது. அந்தக் கப்பல் உடைந்து போனால் ஒவ்வொரு துண்டும் அந்தக் கப்பலுக்குத் தான் சொந்தம். ஆனால் உடைந்த துண்டு வேறொன்று. அதாவது மூலமொழி எப்போதும் இன்னொன்றாகவே இருக்கும். இரட்டையர் போன்று உதாரணம் சொல்லலாம். ஒன்றுபோல் இருந்தாலும் இருவரின் உயிர், ஆன்மா, வாழ்க்கை வேறு வேறானவை. வேறு வேறாக இருந்தாலும் ஓர் உயிர்க்கூறிலிருந்து தோன்றியவர்கள்.

தமிழடையாளம் என்பதும் மூல மொழிக்கும் மொழிபெயர்ப்புக்கும் மத்தியில் உள்ள தொடர்பு போன்ற வேறுபாடுகளை உள்ளடக்கிய ஒற்றுமை அம்சமாகும். எதிரும் புதிருமான அம்சங்கள் என்றால் முரண்பட்டு ஒன்றை இன்னொன்று அழிக்கும். ஈழத்தில் முஸ்லிம்கள் விரட்டப்பட்ட பிழையைக் கூறி தமிழ்ப்பகைவர்கள் ஒருபெரும் வரலாற்றைக் கொச்சைப்படுத்துகிறார்கள். பிரபாகரனோடு தமிழ் வரலாறு அதன் சாதக, பாதகங்களுடன் வாழ்ந்தது. அதுதான் உண்மை. அந்த வரலாற்றை மீண்டும் வளர்த்தெடுக்க இந்த வகைப் பன்மைத்துவ தமிழடையாளம் பற்றிப் பேசவேண்டும். தமிழடையாளம் பன்மைத்துவமானது என்கையில் ஈழ முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஒன்றிணைவார்கள். நீண்ட காலமானாலும் தமிழ்மொழி அடிப் படைதான் உண்மையானது. சாதி, மதம் போன்றவைகள் இரண்டாம் பட்ச மானவையாகும். சிங்கப்பூர் மலேசியா, ஈழம் தமிழகம் எங்கும் இதுதான் உண்மை. இன்றைய உலகில் 'தமிழ் பேசுபவர்கள்' எந்த மதத்தைச் சார்ந்தவர்களாயினும் எந்த சாதியைச் சார்ந்தவர்களாயினும் தமிழர்கள் என்ற அடையாளம்தான் அவர்களை ஒன்றிணைக்கும் அவ் வடையாளத்தை நோக்கியே தெற்காசி யாவில் 21ஆம் நூற்றாண்டு அமையும், அதற்கான சிந்தனைகள் அமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். 20 ஆம் நூற்றாண்டில் மேலெழுந்த முக்கியமான தமிழ்வெளிப்பாடு தற்காலத் தமிழிலக்கியம் பாரதிதாசனுக்குப்பிறகு யாப்பில்லாப் புதுக் கவிதை என்ற புதுஅறிவு பெறுமுறையைத் தமிழர்கள் தம்வயமாக்கிக் கொண்டனர். அதுபோல் மேற்கத்திய இலக்கிய முறைகளையும் உத்திகளையும் தமிழ் மயப்படுத்தினர். இது ஒரு முக்கியமான தமிழ்ச்சிந்தனைச் சரித்திரம். இதனை 21 ஆம் நூற்றாண்டு கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். தமிழக கட்சி அரசியலைப் புறந்தள்ளி சிறு பத்திரிகைகளில் வளர்ந்த இந்தத் தற்கால இலக்கியம் மூலமாக வளர்ந்த தமிழ் அறிவியக்கம் 2000 ஆண்டு பழைய இலக்கியத்தோடும் மேற்கின் பல தத்துவ, இலக்கிய இயக்கங்களோடும் தொடர்பு வைத்தது. தமிழனுக்கு ஆழ்ந்த மரபை அவன் நினைவின்றியே இது கொண்டு வந்தது.

இந்த இலக்கிய விமரிசனசிந்தனை புதுப் புதுசிந்தனைகளைத் தன்னுள்ளே வைத்துள்ளது. மொழியின் ஒலியையும் அர்த்தத்தையும் அடிப்படையாய் வைத்த ஆய்வுமுறையை இது வலியுறுத்தித் தமிழனின் இலக்கண மரபு வழி அவனது அறிவுபெறுமுறைக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்துள்ளது. இதனைத் தொல் காப்பியத்தை முன்வைத்து விளக்கலாம். அதுபோல் மேற்கின் விமரிசன முறையையும் வைத்து விளக்கலாம். உதாரணமாக, 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி டி.எஸ். எலியட்டின் விமரிசனம் அது மாடர்னிச இலக்கிய செல்நெறி சாந்ததாக இருந்தாலும் - கவனத்துக்கு வந்தது. மாடர்னிசத்தைச் சாராத டெர்ரி ஈ கிள்டன் (Terry Eagleton) என்ற இங்கிலாந்தின் ஆங்கிலப் பேராசிரியர் இதனைக் கொண்டுவந்தார். டன் (Donne) என்ற கவிஞருக்கும் மில்டனுக்கும் உள்ள வேறுபாடு எது என்று எலியட் விளக்கினார். அதாவது டன் பேச்சு ஆங்கிலத்தோடு கவிதை எழுதுகிறார். அதனால் அர்த்தத்துக் காகக் கவிதை எழுதுகிறார் என்றார். இந்த இடத்தில் பேரா. ஈகிள்டன் விமர்சனா சிந்தனை மூலம் இடையீடு செய்கிறார். அதாவது ஈகிள்டன் மார்க்சிஸ்ட் இலக்கிய விமர்சகரான வால்டர் பெஞ்சமினை இந்த இடத்தில் பொருத்துகிறார். பெஞ்சமின் துன்பியல் (Tragady) பற்றி விரிவாய் ஆய்ந்தபோது பொருள் முதல்வாதத் தன்மைக்கும் அர்த்தத்துக்கும் உள்ள இடைவெளியில் துன்பியல் பிறக்கிறதென்றார். அதாவது பெஞ்சமினுக்குத் துன்பியலின் அர்த்தன மான முழுமைப் பிரக்ஞைக்கும் இடையில் ஏற்படும் முரண் தெரிகிறது. ஒன்று அர்த்தம் (சாவு); இன்னொன்று சொல்லின் ஒலி போன்றது; அதாவது பொருள்தன்மை; முழுமைப்பிரக்ஞை இங்கும் பெஞ்சமின் ஜெர்மன் துன்பியலை அணுகுவதையும் எலியட் மில்டனை அணுகுவதையும் பேரா சிரியர் ஈ.கிள்டன் ஒப்புமை செய்கிறார்.

அதாவது என் நோக்கம் இந்த இடத்தில் இலக்கியத்தில் (ஒலி) மற்றும் பொருள் என்ற இரண்டு முக்கியமான விசயங்கள் என்ற கருத்தாகும். என் தமிழ் முதன்மைக் கோட்பாடு இந்த இடத்தில் அழுத்தம் பெறுகிறது. தமிழ்ப் படைப்பு, தமிழ் ஒலியாலும் தமிழ் அர்த்தத்தாலும் உருக் கொண்டது. இந்தக் கோட்பாட்டைத் தொல்காப்பியம் மிக நன்றாக வலியுறுத்து கிறது. தமிழ்ப்படைப்புகள் முதலில் தமிழுணர்வுடையதாக இருக்கவேண்டும். அழகியல் விமர்சனம் இருக்கிறது; மார்க்சியர் களாலும் பிறராலும் சமூக மதிப்பை வலியுறுத்தும் சமூகவியல் விமரிசனம் இருக்கிறது; வரலாற்று விமரிசனம் கூட இருக்கிறது. 2009 இல் குறிப்பிட்ட தேசத் தமிழடையாளத்துக்காக சுமார் ஒரு இலட்சம் மக்கள் ஒரு நவநாகரிக உலகில் கொன்றொழிக்கப்பட்டபோது தமிழர்களால் ஏதும் செய்யமுடியாமல் இருந்தனர் என்று


க.நா.சு.


முத்துக்குமார்

வரலாறு எங்கும் பதிவு செய்யப்படும்போது நமக்குவேண்டிய விமர்சனம் தமிழ் முதன்மை இலக்கிய விமரிசனம். அவ்விமரிசனம் தமிழ்த்துவம் என்ற உயிராற்றலை இலக்கியப் பிரதிகளில் காணும் கடமை கொண்டதாகும். அவ்வொரு கவிதையின் - நாவலின் -சிறுகதையின் மொழித்தளத்தில் நுழைந்து தமிழ்ச்சொல்லின் சப்தத்திற்கும் தமிழ்ச்சொல்லின் அர்த்தத்துக்கும் இடையில் கட்டப்படும் இலக்கியம் எது என்று வரையறை செய்வதே இனி நம் கடமை இலக்கியம் இங்கு முக்கியம்.

ஏனென்றால் தமிழர்கள் சினிமா மாயைக்காட்டப்பட்டு நாசமாகிவிட்டார்கள்; கட்சி மாயைக்காட்டப்பட்டு ஒரு இலட்சம் தமிழனைக் கொல்வதற்குத் துணை போனார்கள். எனினும் முற்றிலும் அவர்கள் அழிந்துபோகவில்லை. கொஞ்சம் பேருக்குத் தமிழுணர்வு இருக்கிறது. அதனால் அவர்களை அழியாமல் இனிகாக்கப்போவது இலக்கியம். தமிழிலக்கியம் இன்று உயிருடன் ஈழத்தில், சிங்கப்பூரில் மலேசியாவில், தமிழகத்தில், இன்னும் பல்வேறு உலக நாடுகளில் வளர்கிறது; வளரும். தமிழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கங்கு அது தமிழர்களைக் காக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



# நதி வழி நடந்தேன்

**எஸ்.ராமகிருஷ்ணன்**

ஜீவன் லீலா: அருவிகளின் லீலைகள்; ஆசிரியர்: காகா காலேல்கர்; தமிழாக்கம்: பி.எம். கிருஷ்ணசாமி; வெளியீடு: சாகித்திய அக்காதெமி, 2ஆவது தளம், குணா பில்டிங், 443 அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600018; தொலைபேசி: 044 24 311741; மின்னஞ்சல்: sahityaakademichennai@yahoo.co.in

'நடந்தாய் வாழி காவேரி' என்று தி.ஜானகிராமன், காவேரி ஆற்றின் பாதையெங்கும் நதியின் புகழ் பாடியபடியே பயணித்த அனுபவ நூல் ஒன்றை வாசித்திருக்கிறேன்,. இது தந்த உத்வேகத்தில் தமிழ்நாட்டில் ஓடக் கூடிய ஏழு நதிகளையும் முழுமையாகப் பயணம் செய்து பார்த்திருக்கிறேன். நான்கு ஆண்டுகள் ஏரி, குளம், கண்மாய், அணைகள் என்று தமிழக நீர்நிலைகளை நேரடியாக அறிந்துகொள்வதற்காகப் பயணித்திருக்கிறேன். இந்தப் பயணத்திற்குப் பின்னால் தமிழ்நாட்டைப் பற்றி நான் கொண்டிருந்த மனச் சித்திரமே மாறிவிட்டது. தமிழ்நாடு வறுமையானது என்ற எண்ணம் அடியோடு போய்விட்டது.

ஆற்றின் கரைகளில் வாழ்வது அல்லது ஆற்றைத் தேடிச்சென்று காண்பது என்பது மனித மனதின் ஆதார வேட்கைளில் ஒன்று. அதனால்தான் இன்றும், பிழைப்பிற்காக அமெரிக்கா போன பிறகும், நினைவில் ஓடும் தாமிரபரணியை, காவேரியை பற்றி பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுக்கு தாமிரபரணி என்பது நதியில்லை; வாழ்வின் பிரிக்க முடியாத பகுதி. அதன் நீரோட்டத்திற்குள் தான் பால்யமும் பதின் வயதும் இளமைக் காலமும் கலந்து ஓடுகின்றது. ஆறு எப்போதும் வாழ்வின் இனிமையான பொழுதுகளின் ஞாபக வடிவம் போலிருக்கிறது.

இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் ஒருமுறையாவது இந்திய நதிகளை நேரில் பார்த்து வரவேண்டும். அப்போதுதான் இந்தியா எவ்வளவு வளமையானது, எவ்வளவு பாரம்பரியமிக்கது என்பது புரியும்.

இந்தியா, நதிகளால் ஒன்றிணைக்கப்பட்ட நாடு. நதியை ஒட்டியே நகரங்கள் இருக்கின்றன; நதியை ஒட்டியே கலைகள், கலாசார மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தியாவின் ஆன்மாவைத் தேடும் ஒரு பயணி நதி வழி செல்பவனாகவே இருப்பான். இதைத்தான் தீர்த்த யாத்திரை என்று சொல்வார்கள். அது வெறும் மத வழிபாடு மட்டுமில்லை; வேறுவேறு ஆறுகளை, குளங்களை, நீர்நிலைகளைத் தேடிப் போய் தரிசனம் செய்வது என்பது அக சந்தோஷத்தை உருவாக்க கூடியது. நதியைப் பார்த்த மாத்திரம் ஒருவனது சொந்தக் கவலைகள், துயரங்கள் ஒன்றுமில்லாமல் போய்விடுகின்றன.

ஆற்றின் பிரவாகத்தை ரசிப்பதற்கு யாரும் கற்றுத்தர வேண்டியதில்லை. நதியில் நீராடும் மனிதன் பலவேளைகளில் அதனோடு பேசுகிறான்; அதை வணங்குகிறான்; நதியைத் தனது தாயாக, தோழியாக, நண்பனாக, குழந்தையாக, ஞானகுருவாக கொள்வது இந்திய மரபில் எப்போதுமிருக்கிறது. நதியில் நீராட முடியாத நேரங்களில், கண்ணில் ஒரு துளி ஒற்றிக்கொண்டால் போதும், நதியின் அத்தனை உயர் தன்மைகளும் நமக்குள் வந்துவிடும் என்ற நம்பிக்கையிருக்கிறது.

*****

காந்தியவாதியான காகா காலேல்கர் இந்தியாவில் ஓடும் அத்தனை முக்கியமான ஆறுகளையும் பயணம் செய்து பார்த்து குஜராத்தி மொழியில் விரிவான புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார். 'ஜீவன் லீலா' என்ற அந்தப் புத்தகம் தமிழில் பி.எம். கிருஷ்ணசாமி அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. 1971இல் சாகித்ய அக்காதெமி இதை வெளியிட்டிருக்கிறது.

நதியும் அது சார்ந்த மக்களின் வாழ்க்கை




முறையும் கலாசார அடையாளங்களும் குறித்து காகா காலேல்கர் ஆவணப்படம் எடுப்பதை போல துல்லியமாக விவரித்துக் கொண்டே போகிறார். நதிகள் குறித்து இது போல சுவாரஸ்யமாக எழுதப்பட்ட புத்தகம் எதையும் நான் வாசித்ததேயில்லை. ஜீவன் லீலாவைப் படிப்பவர்கள் காகா கலேல்கர் மீது பொறாமை கொள்வது தவிர்க்க முடியாதது. அந்த அளவு அவர் இந்திய தேசத்தின் ஒவ்வொரு நதியையும் தேடிப்போய் பார்த்திருக்கிறார்; ரசித்து உருகியிருக்கிறார்

நதியை அறிவது காலேல்கருக்கு ஒரு கொண்டாட்டம். பிரிந்த குடும்பத்தை மறுபடி காணும் ஒருவனின் மனநிலையே ஆற்றினைக் காணும்போது அவருக்குள் ஏற்படுகிறது. நதியை வியந்து வியந்து போற்றுகிறார். அதன் பூர்வ வரலாற்றை, அதன் புராணீக குறிப்புகளை, கவிஞர்கள் ஆற்றினை பாடிய பாடல்களை நினைவு படுத்துகிறார்; அவ்வகையில் இது ஒரு நதியாஞ்சலி.

காகா காலேல்கர், காந்தியின் நெருங்கிய சீடர். இவர் கையில் வைத்திருந்த கோலை தான், காந்தி உப்பு சத்தியாகிரகத்தின் போது வாங்கி பயன்படுத்திக் கொண்டார். அந்தவகையில் தானொரு காந்தியின் கைத் தடி என்று வேடிக்கையாகச் சொல்லிக் கொள்கிறவர். காந்திய இயக்கத்தை மேம்படுத்தவும் காலேல்கர் இந்தியா முழுவதும் தொடர்ந்து பயணம் செய்திருக்கிறார்.

நதிகளைப் பற்றி அவர் சுட்டிக்காட்டும் விஷயங்கள் வியப்பானவை. பசு, காளை, குதிரை போன்ற விலங்குகளின் குலத்தை வகைப்படுத்த நதிகளையே அடையாளம் சுட்டுகிறார்கள். நல்ல ஜாதிக் குதிரைகள் சிந்து நதிக்கரையில் அதிகம் வளர்க்கப்பட்டன. அதனால், அந்த குதிரைகளுக்கு பெயரே சைந்தவம் என்றானது. பீமா நதிக்கரையில் வளரும் மட்ட குதிரை ரகத்தின் பெயரே பீமாகுதிரை. இப்படி விலங்குகள் நதியின் இயல்பை வைத்தே அழைக்கப்பட்டன. இதுபோலவே விலங்குகளின் பெயரை நதிக்குச் சூட்டி அழைப்பதும் வழக்கம்; கோதா, கோமதி, சர்மண்வதி போன்றவை அப்படிபட்டவைகளே.

இந்தியாவில் கடலுக்கு இன்னொரு பெயரிருக்கிறது. அது, நதியின் கணவன்.



படிப்பகம்


www.padippakam.com

ஆறுகள், நதியை தேடிச் சேர்வதால் அந்த பெயர் ஏற்பட்டிருக்கிறது என்கிறார் காலேல்கர்

ஆற்றை பார்த்தவுடனே எல்லோரது மனதிலும்; அது எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்ற கேள்வி தானாகவே எழுகிறது. இந்தக் கேள்வி மிகப் பழமையானது. நதிமூலம் அறிந்துகொள்ள எப்போதுமே மனிதன் ஆசைப்படுகிறான். ஆனால், மனிதனால் ஒருபோதும் நதியின் ரகசியத்தை முழுமையாக அறிந்துகொள்ள முடியாது. ஒருவேளை அறிந்துகொண்ட ரகசியத்தைக் கூட வெளியே சொல்வது அர்த்தமற்றது என்றே மனிதன் நினைக்கிறான். ஆறு, அவனது நிரந்தரமான தோழன்.

வாழ்க்கையை எப்போதுமே நதியோடு தான் ஒப்பிடுகிறோம். பிரவாகம் தான் வாழ்வின் கதி. இந்த ஒப்புமையைப் பாடாத இந்தியக் கவிகளேயில்லை. உபநிஷதம் துவங்கி இன்றைய கவிஞர்கள் வரை நதிகளைப் பாடிக்கொண்டேயிருக்கிறார்கள். நதியின் முன்னால் நிற்கும் ஒருவன் என்ற படிமமே மனதை கற்பனையில் கொண்டுவிடுகிறது இல்லையா.

நதி ஒருவனின் புறத்தைத் தூய்மை படுத்துவதை போலவே அகத்தையும் தூய்மை செய்யக் கூடியது. அதை ஹெர்மன் ஹெஸ் ஸேயின் 'சித்தார்த்தா' நாவலில் வரும் கோவிந்தன் இறுதிக்காட்சியில் சொல்கிறான். 'நதியில் ஒரு படகோட்டியாக வாழ்வதே உன்னதமான வேலை; அதுவே உயர்ந்த ஞான நிலை' என்கிறான். காரணம், நதி அவனுக்கு வாழ்வின் உயர்வு தாழ்வுகளை, சுக துக்கங்களைக் கற்றுத் தந்திருக்கிறது.



காகா காலேல்கர்

இதைத்தான் இந்த நூல் முழுவதும் காலேல்கரும் வலியுறுத்துகிறார். 'ஜீவன் லீலா' முழுவதும் கவித்துவத் தெறிப்புகள் மிளிருகின்றன. உலகின் முதல் பயணி நதியே என்று நதியைப் பற்றி சொல்லத் துவங்கிய காலேல்கர், நதி ஒரு கண்ணாடி; அதில் இரவின் நட்சத்திரங்கள் ஒளிர்கின்றன என்கிறார்.

'ஆற்றில் உள்ள கூழாங் கற்களில் இறந்தவர்களின் அஸ்தி கரைந்து, அவை அழிக்க முடியாத நினைவின் வடிவம் போலயிருக்கின்றன. இரண்டு நதிகள் ஒன்றாகும் போது ஒரு நதி தன் பெயரை விட்டுக்கொடுத்து மற்றொரு நதியாகி விடுகிறது. ஆறு கடலோடு கலக்கும் போது தன்னை ஒடுக்கிகொண்டு விடுகிறது; அதற்கு காரணம் அது கணவனை தேடிச் சேர்கிறது என்பது தானா' என்று ஒளிரும் வரிகளை கவித்துவ உச்சங்கள் என்றே சொல்லவேண்டும்

ஆறு ஒரு தர்மத்தைக் கடை பிடிக்கிறது. அதனால்தான், அது கரைகளுக்குள் ஒடுங்கி ஓடுகிறது. தனது பெயரை, பெருக்கெடுக்கும் பிரகாவத்தை, தானே கைவிட்டு முடிவில் கடலோடு ஒன்று கலந்து விடுகிறது. அந்த வகையில் மனித வாழ்க்கை மேற்கொள்ள வேண்டிய அத்தனை செயல்களையும் நதி வழிகாட்டிச் செல்கிறது. அதனால் தான் நதியை துணைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார் காலேல்கர்.

காந்திஜியும் தன் பால்யத்தில் விளையாடிய ஆஜீ நதி துவங்கி கங்கை, பிரம்மபுத்ர, கிருஷ்ணா, காவேரி, வைகை, யமுனை, கோமதி, பத்மா, சரயூ, ஐராவதி, கோதாவரி, சிந்து என்று எண்ணிக்கையற்ற நதிகளைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார். இதில் வியப்பு என்னவென்றால் நாம் மறந்து போன சென்னையின் அடையாற்றை பற்றிக் கூட ஆதங்கத்துடன் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார்.

கடலைத் தேடி வரும் அடையாறு, கடலோடு கலந்துவிடாமல் ஒரு மணல் தட்டால் தடுக்கப் படுகிறது. இந்த மண் அணையைத் தாண்டிப் போக முடியாமல் ஆறு நின்றுவிடுகிறது. ஆகவே, அடையாறை கடலுடன் கோவித்துக் கொண்ட ஆறு என்று சுட்டிக்காட்டுகிறார்.

காலேல்கர், ஆற்றினைப் பற்றி மட்டுமில்லை, சில்கா ஏரி துவங்கி கேளரலத்து உப்பங்கழி வரை முக்கிய நீர் நிலைகள் பற்றியும் எழுதியிருக்கிறார். 'இந்திய மக் கள் ஒருவரையொருவர் எளிதாகப் புரிந்துகொள்வதற்கு முக்கிய காரணம் நதிகளே; அதோடு இணைந்து வாழ்வதால் வாழ்க்கை விழுமியங்கள் ஒன்று போலவே இருக்கின்றன' என்று அடையாளம் காட்டுகிறார்; நதியோடு இந்திய பண்பாட்டுச் சூழல் எப்படி இணைந்து வளர்ந்தது என்பதற்கு நிறைய உதாரணங்களையும் வரலாற்று உண்மைகளையும் முன்வைத்து எழுதுகிறார்.

புத்தகம் முழுவதும் நீரோட்ட சப்தம் கேட்டபடியே இருக்கிறது. இப்புத்தகத்தை வாசிப்பது ஒரு அரிய அனுபவம். நூலை முடிக்கும் போது வாசகன் பெருகியோடும் நதியில் குளித்து எழுந்து நிற்பது போன்ற புத்துணர்ச்சியை பெறுவது நிச்சயம். நதி அவனுக்கு முன்பும் பின்பும் தன்னியல்பில் ஓடிக்கொண்டிருப்பது போல உலகம் இயங்கிக் கொண்டேயிருப்பதை அப்போது அவன் மனம் நுட்பமாக உள்வாங்கிக் கொள்ளும், அதுதான் இந்தப் புத்தகத்தின் வெற்றி.



படிப்பகம்

www.padippakam.com



# அரசியல், சமூக எதிர்ப்பு நிலைகளின் இன்னொரு முகாம்

**தேவகாந்தன்**

பண்பாட்டுப் பொற்கனிகள்; ஆசிரியர்: சச்சிதா னந்தன் சுகிர்தராஜா; பக்கம்: 224; விலை: இந்திய ரூபாய் 175; வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோயில் 629001; தொலைபேசி: 04652 278525; மின்னஞ்சல்: kalachuvadu@sabcharnet.in




இந்த நூலில் உள்ள சில கட்டுரைகளை அவை சஞ்சிகைகளில் வெளியாகிய தருணங்களிலேயே நான் வாசித்திருந்தாலும், ஒட்டுமொத்தமான நூல் கொடுத்த பாதிப்பு அதிகம். முழுமையான மதிப்புரையாகவோ விமர்சனமாகவோ அன்றி, நூலின் ஒட்டுமொத்தமான செல்திசை நோக்கிய கருத்தினை அலசும் ஒரு கட்டுரையாகவும் இது அமைய நேர்வது நூல் விளைத்த பல்தளங்களிலான மனப் பாதிப்பின் தீவிரத்தினால்தான்.

இரண்டு விஷயங்களை முதலிலேயே சொல்லி விடுவது நல்லது. ந.முருகேச பாண்டியனின் மொழியில் சொல்வதானால், 'தமிழ் அறிவுலகத்தின் அபிரக்ஞை குளத்தில் வீசப்பட்ட கல்லாக தடமழிந்து போவதற்குத் தோதான தலைப்போடு வெளியிடப்பட்டிருப்பதை' முதலாவதாகச் சொல்லவேண்டும். 'பண்பாட்டுப் பொற்கனிகள்' என்பது; ஏதோ மரபார்ந்த தமிழறிஞர்களது, தமிழினத்தின் பண்பாடு சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பான மயக்கத்தை ஆரம்பத்திலேயே ஏற்படுத்தி விடுகிறது. முக்கியமான செய்தியொன்றை தமிழ்ப் புலத்தில் விதந்துரைக்க வந்த ஒரு நூலின் தலைப்பாக்கத்துக்கு; நூலாசிரியர், பதிப்பாளர் யாராக இருந்தாலும் அவர்கள் அந்த அலட்சிய மனப்போக்கின் பொறுப்பை ஏற்றேயாகவேண்டும்.

இரண்டாவதாக, இதில் வெளிவந்துள்ள எழுத்துப் பிழைகள் கருத்து மயக்கங்களையும், பெயர் மாறுபாட்டினையும் ஏற்படுத்துகிற அளவுக்குச் சென்றிருக்கின்றன. ஈழத் தமிழர் ஒருவரின் நூலைப் பதிப்பிப்பதான எண்ணம் பதிப்பாளருக்குத் துளிகூடத் தோன்றவில்லை. பட்டியலின் விரிவஞ்சி அதை விடுத்து, இடறு கட்டைகள்போல் இடையிடும் இச் சொற்பிழைகளைத் தாண்டிய என் வாசிப்புப் பயணத்தின் அவதானிப்புக்களை இனிச் சொல்வேன்.

ஆய்வுகள் அபிப்பிராயங்கள், பதிவுகள் பார்வைகள், பேசும்படங்கள் புத்தகங்கள், அனுபவங்கள் அவதானிப்புகள் என்ற நான்கு பகுப்புகளில் முப்பத்து நான்கு கட்டுரைகளைக் கொண்டிருக்கும் இந்நூல் குறிவைத்திருக்கும் ஒரே இலக்கு 'பின் காலனியம்'.

பின் அமைப்பியல், பின் நவீனத்துவம், பின் மார்க்சியம் வரிசையில் அண்மைக் காலமாக பிரஸ்தாபமாகியிருக்கும் இந்த நவீன கருதுகோள் பற்றி இதன் முதற் பகுப்பிலுள்ள முதற் கட்டுரை விளக்கமளிக்கிறது.

சிலபல காலமாக தமிழறிவுலகத்துத் தீவிர வாசகப் பரப்பிலும் மேலைத்தேய பல்கலைக்கழக மட்டங்களிலும் அவதானமாகியிருக்கும் இக் கருதுகோள், பொது வாசகப் புலத்தில் கவனம் பெறாமலேயிருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும். தீவிர வாசகர்களிடையேயும் மிகுந்த தெளிவினை இது கொண்டிருப்பதாகச் சொல்லமுடியாது. அதன் காரணமாக, அதற்கான மூல நூல்களினதும் ஆதார நூல்களினதும் தமிழ் மொழியிலான தோற்றம் வெகுவாயிருக்கவில்லை என்பதைச் சொல்வது ஏற்பு. சில கட்டுரைகளோடு அந்த முயற்சிகள் நின்று போயிருக்கின்றன. ஆனால், 'பண்பாட்டுப் பொற்கனிகள்' ஒரு நூலாக, பின்காலனியம் பற்றிய விளக்கம் மற்றும் அக் கருதுகோள் அடிப்படையில் அரசியல் நிகழ்வுகள், நூல் தோற்றங்கள், சினிமாக்கள் குறித்த ஆய்வாக, விமர்சனமாக வெளிவந்திருக்கிறது.

கட்டுரை குறித்து பல்வேறு கேள்விகளும் மாறுபாடுகளும் தோன்ற முடியுமாயினும், இத் துறையில் ஒட்டுமொத்தமாக வெளிவந்த ஒரு நூலாக இதுவே இதுவரை என் கவனத்தில் பட்டிருப்பதால், கட்டுரையின் தாக்கம் குறித்து முதன்மை கவனம் செலுத்துவது பொருத்தமானது.

மார்க்சிய இலக்கியக் கோட்பாடுகள் குறித்தும்; அவ் எடுகோள்கள் மேலான சில முக்கிய நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் குறித்தும்; திறனாய்வு ரீதியிலான ஒரு நூல் வெளிவந்திருப்பின் எப்படி இருந்திருக்குமோ, அந்தளவுக்கு பின் காலனித்துவம் சார்ந்தளவில் பயனுள்ள ஒரு நூலாக இது அமைந்திருக்கிறது என்பது முக்கியமான விஷயம்.

பின் நவீனத்துவ காலம் முற்றாய் ஒழிந்துவிட்டது; அது பல குறைபாடுகளைக் கொண்டிருந்தது என்று முடிவுகொள்கிறது



படிப்பகம்

www.padippakam.com

நூல். அந்த அடிப்படையிலேயே 'Slumdog Millionair' சினிமாவுக்கான கருத்தினையும் அது முன்வைக்கிறது. பல்வேறு மாற்று, தலித்திய சார்பாளர்களதும் ஆதரவை சினிமா பெற்றிருந்த வேளையில், இந்து அடிப்படைவாதிகளான பாரதிய ஜனதா கட்சி சார்பானவர்களதும் மற்றும் இந்திய கலாசாரவாதிகளதும் எதிர்ப்பினைப்போல; தானும் ஒரு கோணத்தில் இந்திய வறுமையை, வறுமையின் அழகின்மையை, அழகின்மையின் ஒழுங்கின்மையைச் சுட்டிக் காட்டி, நூல் தன் கருத்தைத் தெரிவிக்கிறது, 'சேரி நாய் லட்சாதிபதி: ஏழ்மையின் பாலின்பம்' என்ற கட்டுரையில்.

கீழ்த் திசையை, குறிப்பாக ஆசியா மற்றும் மூன்றாம் உலக நாடுகளை மையப்படுத்தும் பின் காலனியக் கருதுகோள், தன் புலத்தின் அழுக்குகள் ஐரோப்பிய அறிவு தளத்தில் பகிரங்கப்படுத்தப்படுவதை ஒரு வகையில் விரும்பாதேயிருக்கிறது எனக் கூறலாம். ஒரு நெரிப்பின், ஒடுக்குதலின் அடையாளமாக நகரக் குடிசை வாழ்க்கையை உள்வாங்கும் மனநிலையின்றி, தன்னை மாற்றாருக்கு அதை அதுவாகக் காட்டிக்கொள்ள விரும்பாத கருதுகோளின் மேல், வாசக சந்தேகம் தோன்றுவது இங்கே தவிர்க்க முடியாததாகிறது.

சில காலத்துக்கு முன்னர் சல்மான் ருஷ்டியின், 'Immaginary Homelands' என்ற நூலை வாசிக்கக் கிடைத்திருந்தது. கென்ய இடதுசாரி எழுத்தாளர் நிகுஜிவா தியாங்கோ போன்றவர்களின் கருத்து நிலையில் நின்று, காமன்வெல்த் ஆங்கில இலக்கியமென ஒன்று இல்லையென அதில் வாதித்திருந்தார், ருஷ்டி. அவருடைய வாதம் விக்ரம் சேத், அனிதா தேசாய், அமிதாவ் கோஷ், சசிதரூர் போன்ற இந்திய எழுத்தாளர்கள்போலவும்; வி.எஸ்.நைய்பால், டொர்க் வொல்காட், பிரெட்த் வைற் ஆகிய மேற்கிந்தியத் தீவு எழுத்தாளர்கள் போலவும்; நிகுஜிவா தியாங்கோ, வொல்லே சோயிங்கா, சினுவா ஆச்செபி போன்ற ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் போலவும் தோற்றமாகிக் கொண்டிருக்கும் ஆசிய, ஆப்பிரிக்க இன எழுத்தாளர்களால் ஆங்கிலம் மேலைத் தேயத்தாருக்கு மட்டுமான மொழியாக தொடர்ந்ததும் இல்லை. மட்டுமின்றி, அது மேலைத்தேயத்தாரினது கலாசார மொழியியற் தன்மைகளைக் கொண்டதாகவுமின்றி தேச வர்த்தமானங்களின் கூறுகளை வரித்ததாக ஆகியிருக்கிறது என்பதாகும். காமன்வெல்த் ஆங்கில இலக்கியமென ஒன்றே இல்லையென்றாகிற போது, காலனியத் தன்மைகள் யாவற்றையும் அறுத்துக் கொண்டு, ஏகாதிபத்திய அழுத்தங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் பின்காலனிய கருதுகோளின் சாத்தியம் யோசிக்கப்பட வேண்டிய ஒன்றாகவே அமைகிறது. ஆனாலும், அது முன்மொழியும் 'எதிர்ப்பிலக்கியம்' என்ற கருதுகோள் அவதானிப்புக் குரியது.

பின் காலனியத்தின் முக்கிய தன்மை என்ன? நூல் விவரிக்கிறது; 'பின் காலனித்துவம் என்பது ஏகாதிபத்திய எதிர்ப்புக் குணம்கொண்ட ஒரு அரசியல் பார்வை. ஒரு எதிர்த்த நிலையுணர்வு' என்பதாக. மேலும், அது பற்றிக் கூறுகையில், 'ஐரோப்பியக் கருத்து நிலையிலிருந்து, அதன் செல் வாக்குப் பிடியிலிருந்து விடுவிக்கவே பின் காலனித்துவம் ஒரு சிந்தனைக் கருவியாகப் பயன்படுகிறது' என்கிறது. பின் காலனித்துவத்தை மார்க்சிய நோக்குநிலையான ஒரு சிந்தனை முறையாகவும் இந் நூல் அடையாளம் காட்டும்.

அதுபோல் பல்லின கலாசாரத்தையும் கேள்விக்குரியதாக ஆக்குகிறது பின் காலனியம். பல்லின கலாசாரம் என்பது சில மத அனுட்டானங்களின் அனுமதிப்பாகச் சுருங்கியிருப்பதை நூல் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பல்லின கலாசாரத்தை மேற்குலகின் மேலாண்மை இருத்தலை நிலை நிறுத்துவதற்கான ராஜதந்திரத்தின் சுலோக வெளிப்பாடாக சரியாகவே இனங்காட்டுகிறது நூல்.

பின் காலனித்துவம் ஏதோவகையில் சிற்சில முரண்களைக் கொண்டிருக்கிறதோ என எண்ணக்கூடிய வகையில் நூலில் சில இடங்கள் தோற்றம் கொடுக்கின்றன. 'இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய திறனாய்வுகளில் நவீனம், பெண்ணியம், அமைப்பியல் எல்லாமே மேற்கத்தைய சமூக அரசியல் கலாசாரக் கேள்விகளுக்கும் முரண்பாடுகளுக்கும் விடைதேடும் முயற்சியாக உருவாகின. இதற்கு மாறாக, பின் காலனித்துவம் மூன்றாம் மண்டல பிரச்சினைகளுக்கு விமோசனம் தேட 60களில் அமெரிக்காவில் குடியேறிய முன்னை நாள் காலனிய பிரஜைகளால் அறிமுகப்படுத்தப்பட்டது' என்கிறது கட்டுரை.

மூன்றாம் மண்டல நாடுகளுக்கும் அமெரிக்காவில் குடியேறிய முன்னை நாள் காலனிய பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பு என்ன என்ற கேள்வியில் நிறைந்த நியாயம் இருக்க முடியும். இந்த முன்னை நாள் காலனிய பிரஜைகள் இன்றைக்கு அமெரிக்காவில் இருந்துகொண்டு தத்தம் நாடுகளுக்கான சிந்தனைப் போக்கினை, ஓர் அறிவுஜீவித் தளத்தில் அமர்ந்து நிர்ணயம் செய்யமுடியுமென்பது, ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் செல்நெறியை புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்கள் நிர்ணயிப்பதற்குச் சமானமானது. பின்நவீனத்துவம் தன் தொடக்க காலத்தில் கொண்டிருந்த வீரியத்தினை இழப்பதற்கு, அது அறிவுத்தளம் சார்ந்த செயற்பாடாக மட்டும் இருந்ததான காரணம் ஒப்புக் கொள்ளப்படக் கூடுமாயின், பின் காலனித்துவம் அதே பாதையிலேயே தன் பயணத்தைத் தொடக்கியிருக்கிறது என்ற முடிபு, அதன் எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையைக் கிளப்ப முடியும். இவ்வாறு வலுவிழந்த சித்தாந்தமாகத் தன்னைக் கட்டமைத்திருக்கின்ற பின் காலனித்துவம், பின் அமைப்பியலுக்கோ, பின் நவீனத்துவத்துக்கோ மாற்றாக நடைபோட முடியுமா என்பது தெளிவான வாசகக் கேள்வி.

இது நூலாசிரியரை நோக்கியதல்ல, பின் காலனித்துவம் என்ற சிந்தனைப் போக்கு அல்லது திறனாய்வுக் கோட்பாடு சார்ந்த கேள்விதான். அதுவும் விவாதத்துக்கான தாய் அன்றி, விளக்கம் கோரி எழுந்த கேள்வியாகத்தான் எழுந்திருக்கிறது. இவ்வாறான கேள்விகள் தோன்றக்கூடிய விதமாக விளக்க சாத்தியமற்ற கூறுகள் பின் காலனியத்தில் இருப்பதும் மெய்யே. நூலின் 17ஆம் பக்கத்திலுள்ள பின்வரும் வரிகளே இதற்குச் சான்று: 'சென்ற நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புத்தாக்கக் கோட்பாடுகளில் இரண்டு மிக ஆவேசமாக அலசப்படாதவை. இரண்டுமே பரபரப்பையும் பலரை எரிச்சலடையவும் செய்தவை. இரண்டுமே காத்திரமான விமர்சிப்புக்குள்ளானவை. இரண்டுமே இலகுவில் புரிந்துகொள்வதில் சிக்கலானவை. ஒன்று பின் நவீனத்துவம்; மற்றது பின் காலனித்துவம்.'



சக்திதானந்தன் சகிர்தராஜா

'அண்மைக் காலத்தில் பின் காலனித்துவ இலக்கியத்தில், பின் காலனித்துவ திறனாய்வில், இந்தத் துறை சார்ந்த அணுகுமுறைகளில் ஏற்பட்ட சில சிக்கல்களில், சில கேள்விகளில் உருவான கட்டுரை இது' என 'பின் காலனித்துவ இலக்கியப் போக்குகள்' என்ற கட்டுரையில் அக் கட்டுரையின் தோற்றத்துக்கான காரணமாக பேராசிரியர் செல்வா கனகநாயகம் கூறுவதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எட்வேட் சேத்தே பின் காலனிய கோட்பாட்டுருவாக்கத்தின் மூலவராகக் கருதப்படுகிறார். அவரது 'Orientalism' என்ற நூல் அதைச் செய்தது. எட்வேட் சேத் உயிரோடிருந்த காலத்திலேயே அதன் கருத்தமைவு மாதிரியில் உள்ள குறைகள் பலரால் சுட்டிக்காட்டப்பட்டன. பின்



படிப்பகம்

www.padippakam.com

காலனித்துவம் ஓரளவு பலம் குறைந்த நிலையை அடைந்தபோது, பின்காலனித்துவ மும்மூர்த்திகள் என்றழைக்கப்படும் ஹிமி பாவா, காயத்ரி ஸ்பிவக், அஜாஸ் அஹமத் போன்றவர்கள் பல புதிய கோணங்களில் பின் காலனியத்தின் பிரச்சினைகளை ஆராய்ந்து விளக்கமளித்தார்கள்.

ஆயினும், இன்னும் விளக்கம் அளிக்கப்படவேண்டியமுனைகள் பின் காலனியத்தில் இருந்துகொண்டே இருக்கின்றன. பின் காலனியம் தோன்றி இற்றைக்கு சுமார் ஐம்பது ஆண்டுகள் எனக் கொண்டால், அது கவனிப்புப் பெறத் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றதாகக் கொள்ளமுடியும். இவ் இருபத்தைந்து வருட காலகட்டம் ஒரு சிந்தனைப்போக்கின் செயற்பாட்டினை முழுமையாக எடைபோடப் போதுமானதல்லவெனினும், அது செயற் களத்தில் சாதித்தவை பிரமாதமாய்ச் சொல்லக்கூடிய அளவில் இல்லையென்றே தெரிகிறது.

இனி வரும் காலங்கள் அதை வீறார்ந்த சிந்தனைப் போக்காக மாற்ற முடியலாம். 'பின் காலனித்துவத்தின் வீச்சும் பரப்பும் அது ஏற்படுத்தும் செய்கையிலும் பயனீட்டிலும்தான் எடை போடப்படும். அறிவு மட்டத்திலிருந்து செயல்முறைக்கு இடம் பெயரத் தவறினால், தயங்கினால், மற்றைய திறனாய்வுகள்போல் பின் காலனித்துவமும் அதன் சக்தி வன்மையையும் விசையையும் இழந்துவிடும்' என்று சச்சிதானந்தன் சுகிர்தராஜா சொல்லும் கருத்தோடு, பின் காலனித்துவ கருதுகோளின் விளக்கம் பற்றிய அலசலை முடித்துக்கொண்டு, விமர்சனம் சார்ந்து அது வியாபகமாகியிருக்கும் கோணத்தைச் சிறிது பார்க்கலாம்.

மொழிகளில் இதுவரை காலத்திலும் தோன்றிய புத்தாக்கக் கோட்பாடுகள் எதுவுமே சமூக மாற்றத்தின் விளைவுதான் என்கின்றன விஞ்ஞானபூர்வமான முடிபுகள். ஏகாதிபத்திய காலகட்டத்தின் புத்தாக்கக் கோட்பாடாக பின் காலனியத்தை எடுத்துக்கொள்வதில் பெரிய சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் சமூக தளங்களில் இதன் தாக்கம் எவ்வாறாயினும், இலக்கியத் தளத்தில் இது முன்வைக்கும் அழகியல் மிக்க கவர்ச்சியானது. எதிர்ப்பினையே ஒரு இலக்கிய அழகியலாக முன்வைக்கும் பின்காலனித்துவத்தின் இத் துறை சார்ந்த ஆக்கங்கள் கணிசமாய், தமிழ் மொழி உட்பட, ஆங்கில மொழியில் ஏற்பட்டிருப்பதை நூல் சுட்டிக் காட்டுகிறது.

நூலின் எழுத்து மொழி பற்றியும் சொல்லியே ஆகவேண்டும். தன் விமர்சன, ஆய்வு வெளிப்பாட்டினுக்கு சச்சிதானந்தன் சுகிர்தராஜா ஒரு தனித்துவமான நடையையே கையாள்வதாகத் தெரிகிறது. வாக்கிய அமைப்புகள் இலக்கண மரபு மீறி உருவாக்கப்பட்டுள்ளன. அது எடுத்துக்கொண்ட எதிர்க் குரல்களின் அடையாளப்படுத்தலுக்கு ஏற்றதான ஒருநடைதான் நிச்சயமாக. பல கட்டுரைகள் ஒரு சம்மட்டி அடிபோன்ற அதிர்வோடு முடிவடைகின்றன. பல கவிதைகளில்கூட காணமுடியாத அழகு இது. வாசிப்பின் சுவாரஸ்யத்தை உறுதிசெய்பவை இக்

பல்வேறு ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொல் உபயோகிப்புகளும் குறிப்பிடப்பட்டாக வேண்டும். 'cliché'க்கு தேய் வழக்கு, 'metaphysics'க்கு இயல்கடந்த மெய் விளக்கவியல், 'paedophilia'க்கு பாலகநேசம், 'department store'க்கு பகுதிவாரிக் கடையென பொருத்தமான சொற்கள் தேடியெடுக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டுள்ளன. மேலுமான விரிவு நூலுள் நுழைந்து செல்வதின் மூலமே வாசக சாத்தியமாகக் கூடியவை.

சில கட்டுரைகள் கட்டமைப்பாலும் கருத்துச் செறிவாலும் வன்மை செறிந்து நிற்கின்றன. உதாரணமாக, 'தற்கொலைப் போராளிகளும் சமயப் பின்னணிகளும்: சில எண்ணங்கள்', 'சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிரதான பிரதியான மஹாவம்சம் பற்றிய ஒரு மறுவிசாரணை', 'புத்தகங்கள் சாம்பலான கதை', 'ஹைத்தி: ஊடகங்கள் சொல்ல மறந்த தகவல்' போன்றவற்றைச் சொல்லலாம். இவற்றுள் மஹாவம்சம் பற்றிய மறுவிசாரணை ஈழத் தமிழருக்கு உவப்பில்லாதபோதும் உள்ளுணர்வில் உறைக்கக்கூடியது. பின்காலனிய சித்தாந்தப்படியான தேடலில் இவ்வாறான முடிவுகள் கண்டடையப்பட முடியுமென்பது அதிர வைக்கிறது. மெய் தேடும் பயணத்தில் இந்த மாதிரியான சாத்தியம் நம்பிக்கையைத் துளிர்க்க வைக்கிறது.

விசாரணை, மறுவாசிப்பு, எதிர்ப்பு ஆகியன மூலங்களாகும் இந்தப் பின்காலனிய சிந்தனைப் போக்கின் வழியான மேற்குறிப்பிடப்பட்ட கட்டுரைகளே இதன் வீச்சுக்கு தக்க சான்றாகுவன.

Supercare Pharmacy
3228 Eglinton Ave. East
Scarborough ON M1J 2H6
Tel : 416 298 3784
Fax : 416 298 3052

PharmaGrace Drug Mart
3850 Finch Ave. East
Scarborough ON M1T 3J6
Tel : 416 267 9900
Fax : 416 267 1800

Contact: RAM, Pharmacist

www.padippakam.com



# பூனையின் மேசை

இளங்கோடிசே

The Cat's Table by Michael Ondaatjee; Pages 288; Price $ 26.00


1

சிறுவர்களாக இருந்த நாம் எந்தக் கணத்தில் பெரியர்வர்களின் உலகினுள் பிரவேசிக்கின்றோம்? உடலில் ஏற்படும் மாற்றங்களைப் போல மனதில் ஏற்படும் மாற்றங்கள் ஸ்தூலமானதுமல்ல; அப்படியெனில் அந்த மாற்றம் பெரியவர்களாக வளர்ந்த நம்மால் நினைவுகொள்ளக் கூடியதாக இருக்கின்றதா? 'யுத்த கால இரவொன்றின் நெருக்குதல் நமது குழந்தைகளை வளர்ந்தவர்களாக்கி விடுகிறது' என போர்ச்சூழலில் குழந்தைகளின் நிலையை சிவரமணி பதிவு செய்திருக்கின்றார். மைக்கல் ஒண்டாச்சியின் 'பூனையின் மேசை' நாவல் மைக்கல் என்கிற பதினொரு வயதுச் சிறுவன் எப்படி பெரியவர்களின் உலகினுள் நுழைகின்றான் என்பதைப் பல்வேறு சம்பவங்களினூடாக விவரிக்கின்றது. மைக்கல் மட்டுமில்லை, அவன் வயதொத்த கஸிசியல், ரமடீன் போன்றவர்களும் மூன்று வாரங்கள் நீளும் கப்பல் பயணத்தினால் வளர்ந்தவர்களின் உலகிற்குள் விரும்பியோ விரும்பாமலோ அடித்துச் செல்லப்படுகின்றார்கள்.

2

மைக்கல் எவரது துணையுமின்றி தனியே இங்கிலாந்திலிருக்கும் தாயை நோக்கி 'Orsonary' எனும் பெயருடைய கப்பலில் பயணிக்கின்றார். மைக்கலுக்கு 'மைனா' என்கின்ற செல்லப்பெயரும் உண்டு. அது அவரின் நண்பர்களுக்கு மட்டுமே தெரிந்த ஒரு பட்டப்பெயர். மைக்கல் கப்பலில் சந்திக்கும் இன்னொரு நண்பரான கஸிசியஸ், மைக்கல் படித்த சென்.தோமஸ் கல்லூரியில் ஒரு வகுப்பு மேலே படித்தவர்; மிகுந்த குழப்படிக்காரர்; பாடசாலை நிர்வாகத்தால் அவ்வப்போது தண்டிக்கப் படுபவர். அதற்கு நேர்மாறான அமைதியான சுபாவமுடையவர் ரமடீன். ஆனால் ஆஸ்துமா நோயால் அவதிப்படுபவர். இம்மூன்று சிறுவர்களும் கப்பலில் நண்பர்களாகின்றார்கள். ஒவ்வொரு நாளும் புதிது புதிதாய் இடங்களையோ சம்பவங்களையோ கண்டுபிடிப்பதே சுவாரசியமானதென கப்பலின் திசைகளெங்கும் அலைந்து திரிபவர்கள். கப்பலும் அறுநூறுக்கு மேற்பட்ட பயணிகளைத் தாங்கக் கூடியவளவுக்கு மிகவும் பெரியது.

அநேக இடங்களில் இருப்பதைப் போன்று கப்பலிலும் அந்தஸ்தில் பல்வேறு நிலையில் உள்ளவர்களுக்கென




பல்வேறு வகுப்புக்கள் இருக்கின்றன. உயர்தர வகுப்பிலிருக்கும் பகுதியிற்கு பிறர் போகமுடியாது. உணவருந்தும் இடத்திலும் இந்த வகுப்புப் பிரிவினைகள் இருக்கின்றன. (கப்பல்) கப்ரனின் உணவு மேசை அந்தஸ்து கூடியது. அந்த மேசையிலிருந்து வசதியில் குறைந்து குறைந்து போக இறுதியில் வருவது 'பூனை மேசை'. அங்கேதான் மைக்கல் உணவருந்துவது. அந்தச் சாப்பாடு மேசை அந்தஸ்தில் குறைந்ததென்றாலும் சுவாரசியமான பல்வேறு வகைப்பட்ட மனிதர்கள் சந்திக்கும் ஓரிடமாக இருக்கின்றது. மைக்கல் எனப்படும் மைனாவும் அவரது நண்பர்களும் அங்கேதான் பியானோ கலைஞரை, புறாக்களை தன் மேலங்கிக்குள் வைத்திருக்கும் பெண்மணியை, மூலிகைத் தாவரங்களை வளர்க்கும் ஆயுர்வேத வைத்தியரை, அவ்வளவு அதிகம் பேசாத தையற்காரரை, பழுதாகிப் போகும் கப்பல்களை நுட்பமாக உடைப்பவரை, இங்கிலாந்திற்கு ஆங்கிலம் கற்பிக்கப்போகும் ஆசிரியரை... எனப் பலரை அந்தப் 'பூனை' மேசையில் சந்திக்கின்றனர். பியானோக் கலைஞரான மாஸப்பா, இச்சிறுவர்களுக்கு பியானோ கற்றுக் கொடுப்பதோடு, 'நீங்கள் உங்கள் விழிகளைத் திறந்து வைத்திருந்தால் இந்தக் கப்பல் பயணம் மிகுந்த வீரதீரச் செயலுடையதாக இருக்கும்' என்கின்றார். பழுதடைந்த கப்பலை உடைப்பவரான நெவில், அந்தக் கப்பலில் பிறர் பார்க்கச் சாத்தியமில்லாத பகுதிகளை எல்லாம் இச்சிறுவர்களுக்கு எப்படிப் பார்ப்பதென வழி காட்டுகின்றார். மூலிகைகள் வளர்க்கும் டானியல் கப்பலின் இருண்ட தளத்தில் தான் வளர்த்த மூலிகைகளை பத்திரமாக இங்கிலாந்திற்குக் கொண்டு செல்வதை மைனாவிற்குக் காட்டுகின்றார்.

கப்பலில் தம் வீரதீரச் செயல்களை மைனாவும் அவரது நண்பர்களும் செய்து கொண்டிருப்பது ஒருபக்கம் என்றால், இன்னொரு பக்கம் பல்வேறு - அவ்வளவு எளிதில் அவிழ்க்க முடியாத - மர்மக் கதைகளும் கப்பலிற்குள் அலைகின்றன. அதில் ஒன்று, மிகப் பயங்கரமான ஒரு கைதியைச் சங்கிலியால் பிணைத்து பலத்த பாதுகாப்புடன் இங்கிலாந்திற்கு இக்கப்பலில் கொண்டு செல்கின்றனர் என்பது. இந்தக் கைதி ஓர் ஆங்கிலேய நீதிபதியைக் கொன்றிருக்கின்றார். இன்னொன்று, சிலோனில் மிகப் பெரும் செல்வந்தரான ஒருவர் (விசர்) நாயால் கடிக்கப்பட்டு, நாய்க்கான குணங்கள் எல்லாம் அவருக்குள் ஏற்பட்டு, இப்போது இங்கிலாந்தில் சிகிச்சை பெறுவதற்காய் கப்பலில் பயணிக்கின்றார். அவரோடு அவரது மனைவி மகள் மட்டுமில்லாது, அவரைக் கப்பலில் பராமரிப்பதற்காய் ஓர் ஆங்கிலேய வைத்தியர், ஓர் உள்ளூர் (ஆயுர் வேத) வைத்தியர் போன்றவர்களும் பயணிக்கின்றனர். இந்தச் செல்வந்தர் ஒருமுறை ஒரு புத்த பிக்குவை அவமதிக்க, அந்த பிக்கு சாபம் போட்டுத்தான் விசர் நாய் இவரை எதிர்பாராத தருணத்தில் கடித்ததென்ற செவி வழிக் கதையும் மைனாவிற்குத் தெரிகிறது.

மைனா இப்பயணத்தின் போது எமிலி என்கின்ற தன் தொலைதூரச் சொந்தக்காரியையும் சந்திக்கின்றார். பதினெட்டு வயதிலிருக்கும் எமிலி மீது மைக்கலுக்கு நேரில் சொல்ல முடியாத 'மெல்லிய காதல்; இருக்கிறது. ஆனால், எமிலி காதல் வயப்பட்டிருப்பதோ, கப்பலிலிருப்பவர்களை மகிழ்விக்க என வந்த சேர்க்கஸ் குழுவிலிருக்கும் ஓர் ஆண் மீது. இந்தச் சேர்க்கஸ் கூட்டத்தோடு வாய்பேச முடியாத சிறுமி ஒருத்தியும் பயணிக்கின்றார். அந்தச் சிறுமிக்கும் இங்கிலாந்து கொண்டு செல்



படிப்பகம்

www.padippakam.com

லப்படும் கைதிக்கும் இடையில் என்ன விதமான உறவிருக்கின்றது என்பது நாவலில் இருக்கும் இன்னொரு சுவாரசியமான முடிச்சு. எல்லோருடனும் தான் தோன்றித்தனமாய் நடந்து கொண்டிருக்கும் கஸிசியஸிற்கு இச்சிறுமி மீது ஒரு சகோதர வாஞ்சை இருப்பதுகூட சற்று வியப்பானதுதான்.

ஒருநாள் கப்பலிலிருந்து அச்சிறுமி கட லினுள் விழும்போது கஸிசியஸ் மிகவும் கலங்குகின்றான். பின்னாளில் பெரியவராக வளர்ந்த மைக்கல் இக்கதையைக் கூறும்போது, கஸிசியஸ் இந்தத் தருணத்தில்தான் குழந்தைமையின் களங்கமின்மையிலிருந்து, வளர்ந்தவர்களின் உலகிற்கு நுழைந்த இடம் என எண்ணிக்கொள்கின்றார். கஸிசியஸ் ஓர் ஓவியனாக மாறியதையும் மைக்கல் பின்பு அறிகின்றார். ஆனால், 50களின் நடுப்பகுதியில் நிகழ்ந்த கப்பல் பயணத்திற்குப் பின், ஒருபோதும் மைக்கல், கஸிசியஸைச் சந்திக்கவில்லை. இப் போது தான் எழுதும் இந்த நூலை ஓர் அறிமுகமாகக் கொண்டு, எங்கிருந்தாலும் கஸிசியஸ் தன்னைச் சந்திக்க வரலாம் என்ற அழைப்பையும் 'பூனையின் மேசை' நாவலினூடு விடுகின்றார். ஆம், பதினொரு வயது மைக்கல் என்னும் மைனா இப்போது ஒரு எழுத்தாளராக மாறியும் விட்டார்.

கப்பல் ஏடன் துறைமுகத்தை அடையும்போது, கப்பலில் இருந்தவர்கள் கரைக்குப் போகின்றார்கள். துறைமுகக் கடைகள் எங்கும் ஓடித் திரியும் மைனாவிற்கும் அவரின் நண்பர்களிற்கும் ஒரு கடைக்காரர் இலவசமாக நாயொன்றைக் கொடுக்கின்றார். ஆனால், நாயைக் கப்பலிற்குள் கொண்டு செல்ல விடமாட்டார்கள் என்பதை அறிந்த மைனா, அதில் அக்கறை காட்டவில்லை. கப்பலில் மீண்டும் எல்லோரும் ஏறும்போது பியானோக் கலைஞர், கப்பல் பயணத்தின் இடை நடுவில் இறங்கிப் போய்விட்டார் என்று தெரிகிறது. நீண்டகாலமாக பல்வேறு கப்பல்களில், பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வந்த மாஸப்பா, ஏன் ஏடனில் இறங்கிப் போனார் என்பதற்குப் பலரும் பல காரணங்களைக் கூறுகின்றார்கள். ஆனால், எவருக்கும் தெளிவான விடை தெரியவில்லை.

கரையிலேயே விட்டு வந்த நாயை, கஸிசியஸ் நுட்பமாக கப்பலிற்குள் எடுத்து வந்ததை மைக்கல் கண்டறிகிறார். வேறு எவருக்குந் தெரியாமல் நாயை கஸிசியஸ் அறையில் வைத்து இம்மூவரும் பராமரிக்கின்றனர். தமக்கு 'பூனையின் மேசை'யில் தரப்படும் உணவுகளை கள்ளமாய்ப் பதுக்கிக்கொண்டு வந்து நாயிற்குக் கொடுக்கவும் செய்கின்றார்கள். ஒருநாள் இவர்கள் அறையை விட்டு வெளியே ஓடிப்போகும் நாயை இவர்கள் துரத்திச் செல்கின்றார்கள். ஒளிந்துபோகும் நாய், ஏற்கெனவே நாய்க்கடியால் பாதிக்கப்பட்டிருந்த செல்வந்தரான சேர் ஹெக்டரைக் கடித்ததைக் கண்டு பதற்றமடைகின்றார்கள். அடுத்த சில மணித்தியாலங்களில் சேர் ஹெக்டர் இறந்துவிட்டார் என்ற செய்தி கப்பலுக்குள் பரவுகின்றது. நாயும் காணாமற் போகின்றது. வேறு எவருக்கும் தம் நாய் தான் சேர் ஹெக்டரைக் கடித்ததென்று தெரியாவிட்டாலும், ஒரு கொலையைச் செய்துவிட்ட குற்றத்துடன் இச்சிறுவர்கள் பதறத் தொடங்குகின்றார்கள். ஒருநாள் குற்றத்தின் குறுகுறுப்புத் தாங்கமுடியாமல் நடந்த கதையை மைக்கல் எமிலியிடம் கூறிவிடுகின்றார். எமிலியும் மைக்கலையும் அரவணைத்து 'அது முடிந்தபோன கதை, இனி கவலைப்பட ஏதுமில்லை. ஆனால், என்னிடம் கூறுவதுபோல வேறு எவருக்கும் கூறிவிடாதே' என அறிவுரை கூறுகின்றார்.

கப்பல் சுயஸ் கால்வாயை அண்மிக்கும்போது இன்னும் திகிலான பல விடயங்கள் நிகழ்கின்றன. கொலைக் கைதியான நிமியார் தப்பிப் போவதற்காய் இரண்டு சிஐடியினர் இருப்பதை மைக்கல் கண்டுபிடிக்கின்றார். அதிலொருவர் ஹிக்ஸ் என்னும் ஒரு பிரித்தானியர்; இன்னொருவர் பெரேரா என்பவர். ஆனால், பெரேரா என்ற பெயரைக் கொண்டவர் யாரென்று தெரியவில்லை. அவர் வேறொரு பெயரோடு கப்பலிற்குள் நடமாடிக் கொண்டிருக்கின்றார் என்பது மட்டும் சிறுவர்களுக்குத் தெரிகிறது. உளவாளிகள் இரண்டு வகையினர்; எல்லோருடனும் இலகுவாய்க் கதைத்து தங்களை ஜோவியலாக் காட்டிக்கொண்டு இரகசியங்களை அறிந்துகொள்பவர்கள். மற்ற வகையினர், மிகவும் அமைதியாக இருந்து தங்கள் அடையாளங்களை மறைத்தபடி எல்லாவற்றையும் நோட்டமிட்டுக் கொண்டிருப்பவர்கள். இதில் பெரேரா எந்த வகையைச் சேர்ந்தவர் எனக் கண்டுபிடிப்பதில் தன் நேரத்தைச் செலவிடுகின்றார் மைக்கல்.

ஒருநாள் கும்மிருட்டில் சில குரல்கள் கதைத்துக் கொண்டிருப்பதை மைக்கல் கேட்கின்றார். அதில் ஒரு குரல் எமிலியினுடையதாக இருக்கின்றது. சிலருடைய உரையாடல்கள் நிகழ்கின்றன. சட்டென்று ஒருவர் நிலத்தில் விழும் சத்தம் கேட்கின்றது. மைக்கலும் கஸிசியசும் நிசப்தமாக உறைந்து இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எல்லாம் முடிந்து எல்லோரும் போனவுடன் சம்பவம் நடந்த இடத்துக்குப் போகும்போது ஒருவர் கழுத்தில் கத்தியால் குத்தப்பட்டு இறந்து கிடப்பதைக் காண்கின்றனர். அதிர்ச்சியடையும் மைக்கலும் கஸிசியசும் தங்கள் அறைக்குள் அடைக்கலம் புகுகின்றனர். தங்களுக்கு எப்போதும் ஆறுதலாக இருக்கும் எமிலியும் இச் சம்பவத்தோடு சம்பந்தப்பட்டதால் மைக்கலுக்கு அவரிடமும் இதுபற்றிக் கதைக்கச் சங்கடமாக இருக்கிறது. இறுதியாய் ரமடீனின் அறிவுரையின்படி எமிலியுடன் கதைக்கும்போது அவருக்கு முதல் நாளிரவு நடந்தவை பற்றிக் குழப்பமான ஒரு சித்திரமே இருக்கின்றது. பின், இரவு இறந்து கிடந்த உடலைக் கண்ட இடத்திற்குச் சென்று பார்த்தபோது உடலைக் காணவில்லை; மட்டுமின்றி சிந்திய இரத்தத் துளிகள் கூட தடயமின்றி அழிக்கப்பட்டிருப்பதை மைக்கல் காண்கின்றார். பின்னாட்களில் தங்கள் பூனை மேசையில், அவ்வளவு அதிகம் பேசாத ரெயிலர் குணசேகராதான் இன்னொரு சிஐடியான பெரெரா என்பதை மைக்கல் கண்டறிகின்றார். இச்சம்பவத்தின் பின் ரெயிலர் குணசேகராவும், பூனை மேசையிலும் கப்பலிலும் இருந்து காணாமற் போய்விடுகின்றார். அவரைத்தான் அந்த நள்ளிரவில் யாரோ கொன்றிருக்கின்றார்கள்.

இதைவிட இன்னும் திகிலான சம்பவம் சுயஸ் கால்வாயைக் கப்பல் கடக்கின்றபோது நிகழ்கின்றது. அந்தச் சம்பவத்தினால் கப்பலில் இருந்த அனைவருமே ஆடிப் போகின்றனர். கைதியான நெமியார் தப்ப முயல்கின்றார். தன் தப்புதலுக்காய் அவர் ஒருவரைப் பயணக் கைதியாக்குகின்றார். துப்பாக்கிகள் பல்வேறு கைகளில் முளைக்கின்றன. யாரை யார் கொல்கின்றனர், என்ன இறுதியில் நடக்கின்றன என்பதை நாவலை வாசிப்பவருக்காய் விட்டுவிடலாம்.

இச்சம்பவம் நடந்த பின், கப்பல் சுயெஸ் கால்வாயைக் கடந்தபின், நாவலில் வளர்ந்த மைக்கலின் பார்வையில் கதை கூறப்படுகின்றது. மைக்கலினதும் நண்பர்களினதும் பிறகான இலண்டன் வாழ்வு கூறப்படுகின்றது. மைக்கலின் நெருக்கமான நண்பர் ரமடீன் நோயால் இறக்கின்றார். மைக்கலும் ரமடீனின் சகோதரியான மாஸியைத் திருமணம் செய்கின்றார். மைக்கல், மாஸி இருவரின் திருமண வாழ்க்கை, எமிலியின் திருமணம் பற்றிய விரிவான சித்திரம் என நாவல் மேலும் நீளும்.

மாஸிதான் மைக்கலைச் சரியாகக் கண்டுபிடிக்கின்றார். இருவரினதும் திருமண உறவு நெருக்கடியாகும்போது,'உனது கப்பல் பயணத்தில் நடந்த எதுவோதான் வளர்ந்த உன்னை மிகவும் பாதித்திருக்கின்றது' என மைக்கலைப் பார்த்து மாஸி கூறுகின்றார். அப்போதுதான், 'எதிர்மறையான விடயங்களைச் சிலர் எங்களுக்குள் ஏற்படுத்தி விட்டுப் போகின்றனர். அவர்கள் கட்டாயமாக எங்களுக்கு நன்கு தெரிந்தவர்களாக இருக்க வேண்டியதில்லை. ஒரு அந்நியராகக் கூட இருக்கலாம். ஆனால், அந்த எதிர்மறை விடயங்கள் எங்கள் வாழ்வை எப்போதும் பாதிக்கக்கூடியதாக இருக்கலாம்' என்கின்ற புரிதலுக்கு மைக்கல் வந்தடைகின்றார். பின்னாட்களில் எமிலியை நீண்ட வருடங்களுக்குப் பின் மைக்கலுக்குச் சந்திக்கும் வாய்ப்பு வருகின்றது. தங்கள் கப்பல் பயணத்தின் போது கண்டுபிடிக்க முடியாது தவறவிட்ட பஸில்களாய் இருந்த துண்டுகளைச் சேர்த்த முழுச் சித்திரத்தை உருவாக்க மைக்கல் முயல்கின்றார். அவர் தேடிய எல்லாக் கேள்விகளுக்குமான பதில் எமிலியிடமிருந்து வந்தனவா?



படிப்பகம்

www.padippakam.com

நாவலின் இறுதிப்பகுதி மைக்கல் தன் தாயை இலண்டலின் சந்திக்கும்போது முடிகின்றது. அவரது தாய் மைக்கல் ஏழு வயதாக இருக்கும்போது இலங்கையிலிருந்து சென்றவர். கப்பல் கரையை அடையும்போது தன்னால் எப்படி தன் தாயை அடையாளங் காண்பதென்ற குழப்பம் ஏற்படுகின்றது. மைக்கல் கரையில் இறங்கிக் குழம்பித் தவிக்கும்போது, தாய் மைக்கலை அடையாளங் கண்டு கொள்கின்றார். எமிலியும் மைக்கலின் தாயோடு தனியே கதைக்கின்றார். மைக்கல், தாயிடம் எமிலி என்ன கூறினார் என்று கேட்கின்றார். எமிலி, 'இனி பாடசாலைக்குப் போவதற்கான நேரம்' என்று சொன்னதாய்த் தாய் கூறுகின்றார்.

3.

மைக்கல் ஒண்டாச்சியின் நாவல்கள் எப்போதும் மிக மெதுவாகவே தொடங்கும். சில பத்துப் பக்கங்களைத் தாண்டினாலே கதையைத் தொடர்ந்து வாசிக்கச் சுவாரசியம் வரும். ஆனால், 'கொழும்பில் இருந்து கப்பல் பயணம் தொடங்குகின்றது' என்று இந் நாவல் ஆரம்பிக்கும்போதே நமக்குத் தெரிந்த சூழலில் கதை நிகழ்கிறது என்பது இன்னும் நெருக்கமாய் உணர வைத்தது. சென்.தோமஸ் கல்லூரி பற்றிய விவரிப்பு, பொரஸ்கமுகவில் மைக்கல் இருக்கின்ற வீட்டுச் சூழ்நிலை; சமையற்காரருடனும், அங்கே வேலைக்கு இருப்பவருடனும் இருக்கும் நெருக்கம், அவர்கள் மைக்கலுக்குக் காட்டும் புறவாழ்வியல்... என மைக்கல் ஒண்டாச்சி அழகாக விவரித்துச் சொல்கின்றார். மைனா என்கின்ற மைக்கலின் பாத்திரம், பதினொரு வயதில் இலங்கையை விட்டுச் சென்றாலும், தனக்கு இன்றும் எந்த நாட்டோடும் ஒட்டாத ஒரு நாடோடி வாழ்வே எஞ்சியிருக்கின்றது என்று கூறுகின்றது. இது தாம் பிறந்து வளர்ந்த நாட்டை விட்டு புலம்பெயர்ந்த பலரும் தங்களுக்குள் பொருத்திப் பார்க்கக்கூடிய ஒரு முக்கிய செய்தியாகவும் இருக்கின்றது.

மைக்கல் ஒண்டாச்சி




இந்நாவலுக்குள் திகிலூட்டும் பல விடயங்கள் நிகழ்ந்தாலும் இஃதொரு துப்பறியும் நாவலல்ல. சிறுவர்கள், எப்படி அவர்கள் அறிந்தோ அறியாமலோ பெரியவர்களின் உலகினுள் நுழைகின்றார்கள் என்பதே முக்கிய அம்சமாக இருக்கின்றது. சிலவேளைகளில் இந்த விடயங்கள் சிறுவர்கள் பார்வையில் இருந்து சொல்லப்படுவதால் 'திகிலூட்டும்' விடயங்களாய்த் தெரிகின்றதோ தெரியவில்லை. இதேவிடயம் வளர்ந்த ஒருவரின் பார்வையில் சொல்லப்பட்டால் அது வேறு மாதிரியாகக் கூட இருந்திருக்கலாம். சிலர் பெரியவர்களாக வளரும்போது அந்த மாற்றம் இயல்பாக நடக்கின்றது. சிலருக்கு அப்படி நிகழ்வதில்லை; அவர்கள் பலவற்றை விலையாகக் கொடுத்துத்தான் வளர்ந்தவர்களாகி விட வேண்டியிருக்கின்றது.

மைக்கல் ஒண்டாச்சி தனது அநேக நாவல்கள், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல்வேறு நாடுகளுக்கு நிலவியல் இடப்பெயர்ச்சி செய்வதைப் பற்றி ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். The English Patient இத்தாலியிலிருந்து பாலைவனத்திற்கும், Divesardo அமெரிக்காவிலிருந்து சட்டென்று பிரான்சிற்கும் இடம் பெயர்ந்து விடுகின்றன. இந்நாவலில் அவ்வாறான துல்லியமான இடப்பெயர்ச்சி சடுதியாக நிகழவில்லையெனினும், இலங்கையில் இருந்து புறப்படும் கப்பலில் நடக்கும் நிகழ்ச்சிகளிலிருந்து; சுயெஸ் கால்வாயைக் கடந்தவுடன் சட்டென்று வளர்ந்தவர்களின் உலகிற்கு, இலண்டனுக்குச் சென்றுவிடுகின்றது. பின்னர் சிறிது காலம் கனடாவின் வன்கூவருக்கும் சென்று விடுகின்றது. இங்கு நிலப்பெயர்வை விட, ஒரு மனிதரின் வாழ்க்கைக் காலப் பெயர்வு சடுதியாக ஏற்படுகின்றது எனக் குறித்தலே சாலப் பொருத்தமாகும்.. Anil's Ghost பிறகு சுவாரசியமாக வாசித்த மைக்கல் ஒண்டாச்சியன் நாவல் The Cats' Table என்பதையும் கூறியாக வேண்டும்.

இக்கதையைப் போன்றே மைக்கல் ஒண்டாச்சியும் தன் பதினோராவது வயதில்தான் இலங்கையில் இருந்து இங்கிலாந்திற்குச் சென்றிருக்கின்றார் என்பது மைக்கல் தன் வாழ்வில் நடந்த கப்பல் கதையைத்தான் கூறுகின்றாரோ என்கின்ற மயக்கத்தை வாசிக்கும் நமக்குத் தரக்கூடும். ஒரு புனைவு நிஜங்களும் கற்பனைகளும் கலந்திருப்பது இயல்பானதே. உண்மைகளைப் பொய்கள் போலவும், நிகழாததை நிகழ்ந்துபோல நம்பும்படியாக எழுதும்போது நாவல் சுவாரசியமாகிவிடுகின்றது. அந்த வித்தை அறிந்த படைப்பாளி மைக்கல் ஒண்டாச்சி என்பது அவரைத் தொடர்ந்து வாசிப்பவர்களுக்கு நன்கு தெரியும்.



படிப்பகம்

www.padippakam.com



# இது என்ன காலம் எனப்பேசும் ஆவணம்

## பா.செயப்பிரகாசம்

வாழ்புலம் இழந்த துயர்; ஆசிரியர்: மு.புஷ்பராசன்; வெளியீடு: சாளரம், 2 / 1758 சாரதி நகர், என்பீல்டு அவின்யு, மடிப்பாக்கம், சென்னை 600 091, இந்தியா; கைபேசி: 9445182142; விலை: இந்தியா ரூபாய் 60.

இக்கட்டுரைகள் எங்கிருந்து தோற்றம் கொள்கின்றன? புதுச்சேரி தமிழ்மண். தமிழ் நாட்டுக்கு என்னென்ன விசேடங்கள் உண்டுமோ, அத்தனை அடையாளங்களும் புதுச்சேரிக்கும் உண்டு. அங்கு வாழ்தலுக்கும் தமிழ் மண்ணில் வாழ்தலுக்கும் வித்தியாசம் இருந்ததில்லை. பிரெஞ்சு என்ற இன்னொரு காலனியாதிக்கத்தின் கீழ் புதுச்சேரி வந்ததன்றி - ஒரு போதும் அயல் மண் அல்ல. ஒரு பத்து ஆண்டுகள் அங்கு தஞ்சம் அடைந்த பாரதி, தாய் மண்ணுக்குத் திரும்பவே துடியாய்த் துடித்தார். அதை நிரந்தர வாழ்விடமாக ஆக்கிக் கொள்ள முடியாது போயிற்று. குடிபெயர்தலும் அற்ற, புலம்பெயர்தலும் அற்ற அந்தர நிலை. சொந்த பூமியின் வேர் கீழே இழுக்க அந்தர நிலையிலேயே எத்தனை நாள் ஆடுவது? அதனால் பிரித்தானிய ஆட்சிக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து தாய் மண்ணில் கால்பதித்தார்.

வீடு கடந்த துயரம் பாரதியை அப்படி உலுக்கியது எனில், ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவராய்ச் சிதறிக் கிடக்கும் நாடு கடந்த துயரம் எத்துணை கொடுமையானது. இன்னொரு நாடு; இனிய, அழகிய நாடாக இருந்தாலும் அது புயலுக்குள் வாழும் எல்லைகளுடையதுதுதான். நாடிழந்த துயரம் பற்றி அமெரிக்க பூர்வீகக் குடிகளின் சிவப்பிந்தியத் தலைவன் சியாட்டில் உதிர்த்த வாசகங்கள் உருக்கமானவை. 'தம் வாழ்விடத்தினை விட்டு வெளியேறிய பின்னர் சோகமும் பட்டினியும் நோயுமாய், அந்த சியாட்டிலின் தலைவன் இறந்து போனான் என்பது துயர் சுமந்த வரலாறு' (பக். 55) என்கிறார் மு.புஷ்பராசன்.

மு.புஷ்பராசன் நாடிழந்த ஒரு தமிழீழர். லண்டனில் வாழ்பவர். அவரும் அவர் போன்றோரும் தூர தூர எல்லைகளுக்குள் தூக்கியெறியப்பட்ட அவலம் எவ்வாறு நிகழ்ந்தது?

'என் இனம் சார்ந்தும் அதன் அரசியல் போராட்டம் சார்ந்தும்; சிங்கள அரசு, இந்திய அரசு, ஏனைய வல்லாதிக்க சர்வதேச நாடுகள் மேற்கொண்ட அநீதியான நிலைப்பாடும், அதைச் சரியென நம்ப வைக்க ஊடகங்கள் மூலம் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், அவர்களது அதிகார ஆவணக் கருத்துக்களும், தம்மைச் சுற்றிக் கட்டமைக்க முனைந்த புனித பிம்பங்களும் ஒளிவட்டங்களும்; என்னுள் ஏற்படுத்திய சினமும் ஆற்றாமையின் வெப்புசாரமும்தான் இந்தக் கட்டுரைகள்' என்கிறார் புஷ்பராசன். (என்னுரை, பக். 3)

இந்நாடுகள் 'காமா சோமா' நாடுகள் அல்ல. ஆக்கலும் அழித்தலுமான சர்வ வல்லமை கொண்டவை. பிற நாடுகளின் மக்களை அழித்தலும் அதன் மீது தனது சிறுபான்மை தேசிய நலன்களுக்கு ஆக்கம் செய்தலுமான வல்லமை அவை.

'தேசிய இனப் போராட்டங்கள்; அந்த மண்ணின் அரசியல், கலாசார முரண்பாடுகள், சுயகௌரவங்கள், பொது நீதி என்பவைகளுக்கு அப்பால்; அம்மண்ணின் மூல வளங்களைச் சுரண்டும் வல்லாதிக்க நாடுகளின் நலன் அடிப்படையிலேயே நோக்கப்படுகிறது. இந்த நலன்களுக்காக வகைதொகையின்றிக் காவு கொள்ளப்படும் மனித உயிர்கள் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை' என்கிறார் புஷ்பராசன். (என்னுரை, பக். 3)

'பொருளாதார வளங்கள் உள்ள நாடுகள் என்றால் அவைகளுக்கு உயிர். அவ்வளங்களை அபகரிக்கையில் இழக்கப்படும் உயிர்களெல்லாம் அவர்களுக்கு மயிர்.'

வலதுசாரி நாடுகளும் இடதுசாரி நாடுகளும் இந்த ஒரே புள்ளியில் இணைந்து கிட்டி போட்டு இறுக்கி உயிர் பறித்த இடம்தான் ஈழம். காந்தி தேச புனிதர்களும் புத்த தேச மகிந்தாக்களும் இந்த உயிர் பறிப்பை உலகுக்குத் தெரியாமல் செய்து முடித்திருக்கிறார்கள். 'இன்று இந்தியா உலகின் புதிய அமெரிக்காவாக மாறி வருகிறது' என தெளிவாக மதிப்பிடுகிறார்.

இலங்கை நடத்திய இனப் படுகொலையை நியாயப்படுத்திய தீர்மானம் ஐ.நா.வின் மனித உரிமை அவையில் 28.5.2009 அன்று நிறைவேறியது. என்றென்றும் கழுவித் துடைத்துக்கொள்ள முடியாத அவமானகரமான ஒரு தீர்மானம். அனைத்து நாடுகளின் பின்னணியில் நிறைவேறியதன் மூலம் மனித குலத்திடம் எஞ்சியுள்ள நம்பிக்கையை அது முற்றாகக் கருக்கிவிட்டது. பலர் தமது மனச்சாட்சியைக் கருக்கிவிட்டு மௌனமாக இருந்தார்கள்.

இந்த அவமானகரமான தீர்மானம் மூலம் ஐநா. எதெதற்கு அனுமதியளித்துள்ளது?

'இனி அரசுகள் தத்தமது மக்கள் மீது தடை செய்யப்பட்ட கொத்தணிக் குண்டுகளை, இரசாயன ஆயுதங்களைத் தாராளமாகப் பாவித்துக் கொள்ளலாம். வைத்திய சாலைகள், கல்விக் கூடங்கள், ஆலயங்கள், அநாதை இல்லங்கள், அத்துடன் பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயங்கள் மீது, வானிலிருந்து குண்டுகளை வீசலாம். உணவு, மருந்து, ஆகியனவற்றைத் தடுத்துச் சிறுபான்மை இனங்களைக் கொல்லலாம். யுத்தத்தில் சரணடைபவர்களைக் கவலையின்றி கொல்லலாம். மேலதிகமாகப் பெண்களைப் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கலாம். அவர்களின் இனம் அதிகரிக்காமலிருக்க கர்ப்பத் தடைசெய்யலாம். கர்ப்பமாய் இருப்பவர்களுக்கு கருச்சிதைவை ஏற்படுத்தலாம். இறந்து கிடக்கும் பெற்றோரின் கால்களைப் பிடித்தபடி அழும் அநாதைச் சிறுவர்களைக் கை நடுக்கமின்றி இயந்திரத் துப்பாக்கியால் சல்லடையாக்கலாம்.' (பக். 60)

இவை அனைத்துக்கும் விடுதலைப் புலிகளே காரணம் என்று மாற்றுக் கருத்தாளர்கள் சொல்லலாம் என்பது மு.புஷ்பராசன் விவரிக்காமல் விட்ட ஒன்று. மாற்றுக் கருத்தாளர்கள் எவை எவைகளைப் பேசினார்கள், எவை எவைகளைப் பேசாமல் ஒளித்தார்கள் என்பதை,'விலங்குப் பண்ணையும் மாற்றுக் கருத்தாளர்களும்' என்ற தனிக் கட்டுரையில் முன் வைக்கிறார். மாற்றுக் கருத்தாளர்கள், ஈழ விடுதலைப் போராட்டத்தில் பிரதானப்படுத்திப் பேசுவது யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்களை விடுதலைப்புலிகள் வெளியேற்றியது பற்றியே.

'விடுதலைப் புலிகள் செய்த மாபெரும் தவறு வடமாகாணத்திலிருந்து முஸ்லிம் சமுதாயத்தை வெளியேற்றியமை; கழுவ முடியாத' கறை அது. அரசியல் ரீதியாகவும் மனிதாபிமான அடிப்படையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. பின்னர், விடுதலைப்புலிகள் மன்னிப்புக் கேட்டுக்கொண்



படிப்பகம்

www.padippakam.com

டாலும் துயரம் செறிந்த இந்த வரலாற்றுப் பதிவு அழிக்க முடியாததுதான். மாற்றுக் கருத்தாளர்கள் இந்தத் தவறை மிகவும் கெட்டியாகவே பிடித்துள்ளனர். உண்மையில் நேர்மையாக இவர்கள் அக்கறை கொண்டிருந்தால் 1995இன் பின்னர் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், முஸ்லிம்கள் மீள்குடியேற்றம் பற்றிப் பேசுதல் வேண்டும். இன்றுவரை விடுதலைப் புலிகள் தோல்வியடைந்த பின்னரும் இவர்கள் பேசுவதாக இல்லை. நோக்கம், முஸ்லிம் பிரச்சினையை விடுதலைப் புலிகளுக்கும் அவர்கள் முன்னெடுத்த விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராகப் பாவிப்பதை அடிப்படையாகக்கொண்டதே தவிர, முஸ்லிம்கள் நலன் சார்ந்த அக்கறையினால் அல்ல.


'இவர்கள் அக்கறை உள்நோக்கம் கொண்டவை என்பதை மேலும் உறுதிப்படுத்த சில கசப்பான தகவல்களை முன்வைக்க வேண்டியுள்ளது. 'தீபகவா'வியில் முஸ்லிம்களது 685 ஏக்கர் காணிகள் 1968 இல் இலங்கை அரசாங்கத்தினால் பலவந்தமாகக் கையகப்படுத்தப்பட்டு, அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டார்கள். பின்னர், 1982இல் அறுகம்ப, உல்ல போன்ற பகுதிகளிலிருந்து துரத்தப்பட்டார்களே இவை பற்றி ஏன் எடுத்துக் கூற யாரும் அக்கறைப்படவில்லை? 1998 கார்த்திகையில் இந்திய ராணுவம் இலங்கையில் இருந்த காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., டெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். இணைந்த டி.என்.ஏ. என்ற தமிழ்த் தேசிய ராணுவம் சம்மாந்துறை, நிந்தாவூர், சாய்ந்த மருது ஆகிய இடங்களைச் சேர்ந்த 40 முஸ்லிம் போலிஸ்காரரை இனம் பிரித்துப் படுகொலை செய்யவில்லையா? சரி, காத்தான்குடியில் விடுதலைப் புலிகளால் பள்ளிவாசலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்களது துயரம் போன்றதுதான், அம்பாறை மாவட்டத்தின் திரியாய்கேணியில் நடந்ததும். 6.8.1989இல் பெரிய தம்பிரான் ஆலயத்துள் தஞ்சமடைந்த தமிழ் மக்களை, முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் கண்டதுண்டமாக வெட்டி, 46 பேரைப் படுகொலை செய்ததுடன் சுற்றியுள்ள வீடுகளுக்குத் தீமூட்டி அந்தத் தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்களே. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் கிராமங்களை அண்டிய தமிழ்க் கிராமங்கள் எவ்வாறு முஸ்லிம் கிராமங்களாக படிப்படியாக மாற்றப்பட்டதென்பதையும்; தமிழ்ப் பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாக மாறினது பற்றியும்; சிங்கள ராணுவத்தின் உதவியுடன் எம்.எஸ்.கரியப்பர், அவர் மருமகன் எம்.சி.அகமது ஆகியோர் முயற்சியால் 1965இலிருந்து அழிக்கப்பட்ட கரவாகு, மீராவோடைக் கிராமம் மற்றும் மீனோடைக் கட்டுக் கிராமம் பற்றியும் இவைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் பற்றியும் பேசியாக வேண்டும்.' (பக். 82 - 83)

பேசாதது ஏன் என்று மு.புஷ்பராஜனுடன் இணைந்து நாமும் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

'விடுதலைப் புலிகள் சக இயக்கங்களை அழித்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் உண்மையோடு, நாம் இன்னொன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் நிர்மூலமாக்கப்பட்டதன் பின், அனைத்தையும் மறுபரிசீலனைக்கு உள்ளாக்கலின் அவசியம் உணரப்படும் இவ்வேளையில்; விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, அனைத்துத் தரப்பினரது செயற்பாடுகளும் பரிசீலனைக்கு உட்பட்டே ஆக வேண்டும்.' (பக். 78)

இந்த மறுபரிசீலனையிலிருந்து தப்பித்து, தமது சொந்த குரோதங்கள் சார்ந்து தமிழினத்தின் விடுதலையில் பகைத்துக் கொள்கிற மாற்றுக் கருத்தாளர் அங்கும் இங்கும் உள்ளார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்வோம்.

இது போன்ற முக்கிய வரலாற்றுக் குறிப்புகளை இக் கட்டுரைகளிலிருந்து மீட்டெடுத்துக்கொள்ள முடிகிறது. இந்திய ராணுவத்தில் மேஜர் ஜெனரலாக இருந்தவர் சதீஷ் நம்பியார். இவர் இலங்கையின் உயர் பாதுகாப்பு வளையங்கள் பற்றி ஆய்வு செய்து இந்தியாவுக்குக் கருத்துச் சொல்வதற்காக 2003இல் அனுப்பப்பட்டார். வடக்கு கிழக்கு மக்களின் மீள் குடியேற்றம், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாக இருந்தால் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதே அவர் அளித்த அறிக்கையின் சாரம். இந்த சதீஷ் நம்பியார்தான் ஓய்வு பெற்ற பின் இலங்கையின் இராணுவ ஆலோசகராகப் பணிபுரிந்தார் என்பதும்; விடுதலைப் புலிகளை அழிக்கும் இந்தியாவின் முன்னேற்பாட்டின் படியே இலங்கையில் மதிநுட்ப சூழ்ச்சியால் அவர் நியமிக்கப்பட்டார் என்பதும்; இந்த சதீஷ் நம்பியாரின் சகோதரர் விஜய் நம்பியார்தான் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கி மூனின் சிறப்புச் செயலாளர் என்பதும்; இரண்டு நம்பியார்களும் இணைந்து முள்ளிவாய்க்கால் படுகொலை நடைபெறவும், நடைபெற்றபின் தடயங்கள் இல்லாமல் அழிப்பதிலும் ஈடுபட்டவர்கள் என்பதும்; நம் நினைவில் மீளெழுகின்றன.


மு.புஷ்பராஜன்



படிப்பகம்

www.padippakam.com

அப்போது 2003இல் இந்தியத் தூதராக இருந்த நிருபன் சென் இலங்கையிலிருந்து வெளியாகும் தமிழ் ஊடகங்களைக் கடுமையாகச் சாடியதுடன் ஒரு எச்சரிக்கையையும் முன்வைத்தார். 'ஒரு குழுவைப் புகழ்ந்தும் அவர்களது நடவடிக்கைகளைப் பாராட்டியுமே குறிப்பிட்ட தமிழ்ப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிடுகின்றன. இதற்கு எழுத்துமூலம் பதிலளித்துக் காலத்தை வீணடிக்க விரும்பவில்லை. விரைவில் இதற்கெதிராகச் செயல் மூலம் பதிலளிப்போம். எந்த தமிழ்ப் பத்திரிகை இந்தியாவுக்கு எதிரான நச்சுத் தன்மையான கருத்துக்களை வெளியிட்டாலும் இலங்கையின் நலன் கருதிய இந்தியாவின் நடவடிக்கைகளை அது தடுத்துவிட முடியாது.' (பக். 28)


2003இல் செயல்மூலம் பதிலளிப்போம் என்று இந்தியத் தூதர் சொன்னது, 2009 மே 19இல் தெளிவாய் நிரூபணமாகியது. இறுதியில் யார் யாருடைய நலன்களுக்காவோ அழிக்கப்படுவதும் பயன்படுத்தப்படுவதுமான ஒரு இனமாக ஈழத் தமிழர்கள் ஆகிப் போனார்கள்.

2

புலம்பெயர் சொற்கள் துயரமானவை; கூர்மையானவை; கருஞ்சாபம் போன்றவை. எதிர்காலம் பற்றிய அறைகூவல் அவைகளுக்குள் பொதிந்துள்ளது.

மீண்டும் தாய் நாட்டை அடைதல் அவர்களின் இலட்சியம். இன்று கனவாகத் தென்படலாம். தாய்நாட்டை தமக்குரியதாக்கிய பின் கால்பதித்தல் அவர்களின் முடிவுறாத் தாகமாக நீடிக்கிறது.

தேசம் பற்றிய இலட்சியம் இவர்களுக்கு கற்பனையல்ல; 'ஓர் இனம் தனது தேசிய அடையாளங்கள் சார்ந்து அடக்கப்படுகின்றபொழுது, அந்த இனம் அடக்குமுறைக்கு எதிராக மேற்கொள்ளும் அனைத்துப் போராட்டங்களின் சாராம்சமும் தேசியத்திலேயே தங்கியுள்ளது. வரலாற்றில் அது முற்போக்குத் தன்மை கொண்டதென்ற எளிய உண்மைக்கு பெனடிக் அண்டர்சனிடம் போகத் தேவையில்லை. நமது சொந்த நெருக்கடிகளே அதை உணர்த்தும். தேசியம் கற்பனை என்றால் அதை சிங்களப் பெருந் தேசியத்திடம் அல்லவா கூற வேண்டும்? அடக்கப்படும் தேசிய இனத்திடம் கூறுதல் எதன் சார்பானது? என்று தர்க்க நியாயமான கேள்விகளுடன் ஜீவிக்கின்றன புலம்பெயர் சொற்கள்.




எந்தப் பொருள் குறித்தும் விவாதத்தை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான முன்மாதிரியான கட்டுரைகள் இவை. திறப்பான மனசிடமிருந்தும் சிந்தனையிலிருந்து மட்டும் இத்தகைய எழுத்துக்கள் பிறக்கும்.

இவை நேரடி அரசியல் விமர்சனக் கட்டுரைகள் ஆயினும்;

'புரட்சிக்கு புரட்சியின் பெயர் சொல்லும் கட்சிகளே தடையாக இருந்தன' என 1968இல் அய்ரோப்பிய ஆசிய நகரங்களில் மாணவ எழுச்சி தொடர்ந்து உலகைக் குலுக்கிய போது மாணவ நீதிக்கான சார்புச் சக்திகளை அங்கீகரிக்கவோ ஆற்றுப் படுத்தவோ முடியாமல் மார்க்சிய இயக்கங்கள் திணறியதைக் குறிப்பிடுகிற போதும்;

'1987இல் இரட்சகனாக வந்து இராட்சதனாக மாறிய இந்தியா' என்று இந்திய ஏகாதிபத்தியத்தின் மீது நச்சென்று வைக்கிற போதும்;

'தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிக்க எந்த சாத்தானுடனும் இணைந்துகொள்ளத் தயார்' என்று ஜெயவர்த்தனாவின் கூற்றைக் குறிப்பிடும் இடத்திலும்'

'உண்மையில் ராஜிவ்காந்தி கொலைக்கு இந்தியா தனது வல்லாதிக்கக் கனவுகளின் பின்னணியிலேயே அழுத்தம் கொடுத்தது. அது விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு தானாக அவர்கள் மடியில் விழுந்த கனி. அக்கொலை நடைபெற்றிருக்காவிடினும் இந்தியா அவர்களை அழித்தே இருக்கும்; வேறு காரணங்களைத் தேடியிருக்கும்' என்று வெளிப்படுதலிலும் தர்க்க பூர்வத்தின் வாசகங்கள் கோர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

புஷ்பராசன் அடிப்படையில் ஒரு இலக்கியவாதி. இலக்கியப் படைப்புக்களால் தான் அவரை நண்பர்கள் அறிந்திருந்தார்கள். 'மீண்டும் வரும் நாட்கள்' கவிதைத் தொகுப்பு அவரை கவிஞராய்க் காட்டும். சில சிறுகதைகளின் ஆசிரியமருமாவார். அவர் பெயர் நவீன கலை இலக்கியங்களோடு அறியப்பட்டிருந்ததே தவிர அரசியலோடு அல்ல. அவரே குறிப்பிடுவது போல் 'புறச் சூழலால் பாதிப்படையாதோர் யார்? ஏடறியாக் காலந்தொட்டு எவருமில்லையே' என்ற வியப்பாகவே முடிகிறது.

ஆனால், எந்தச் சூழலும் அசைக்க முடியாத மரங்களாக தமிழக எழுத்தாளர்களில் பலபேர் இருந்தார்கள். ஈழத்தில் யுத்தம் உச்சத்திலிருந்த போதும்; 2006இலிருந்து இரண்டு லட்சம் உயிர்களை யுத்தம் தின்று துப்பிய போதும்; அதே கொல்லும் ரணவேதனை யுத்த வெற்றிக்குப் பின் தொடர்கிற போதும்; இங்குள்ள கலைஞர்கள், இலக்கியவாதிகள் எத்தனை பேர் குரல் கொடுக்க எழுந்தார்கள்? இப்போதாவது பேசுங்கள் என்று இவர்களை எத்தனை தரம் கூவிக் கூவி அழைப்பது?


'பழங்கால ஞானிகள் போல், எழுத்தாளர்கள் மனச்சாட்சியோடு இயங்குபவர்கள்' என்று கூகிவா தியாங்கோ போல் குறிப்பிட்டிருந்தால் அது அதீத எதிர்பார்ப்பாகவே முடிந்திருக்கும். அவ்வாறில்லாமல் பேராடுபவர்களுக்குத் துணையாக நின்ற எட்வர்ட் சையத், கவிஞன் தார்வீஷ் ஆகியோரை முன்னிறுத்திப் பேசுகிற வேளையில், 'என்னளவில் படைப்பாளிகளும் கலைஞர்களுமே முக்கியமானவர்கள். ஏனெனில் நம்பிக்கையற்ற இவ்வுலகில் மனச்சாட்சியை உரத்து ஒலிப்பவர்கள் சிலர் இவர்களுள் தான் இருக்கிறார்கள்' என்று முபுஷ்பராசன் 'சிலர்' என்ற வார்த்தையில் முடித்துக் கொள்கிற கணிப்பு சரியானதே!

எழுத்தாளர் பலருக்கு மக்களைப் பற்றிய அக்கறையே இருப்பதில்லை. கூடாது என்பது அவர்களின் சங்கற்பம். தம்மை அறிவுலக பிம்பங்களாய் கட்டியமைப்பதிலேயே கவனம் பதிப்பார்கள். இத்தகைய போக்காளர்கள் எத்தனை உக்கிரமமான பிரச்சினை என்றாலும் கால் பெருவிரலால் தெண்ணி எறிந்துவிடும் இழிவாகவே எண்ணுவார்கள். எழுத்துலக பிம்பங்களாக தம்மை முன்னிறுத்திக் கொண்டவர்கள், 'உலோகம்' போன்ற படைப்பு வழி, தம் உதிரித்தனத்தை வெளிப்படுத்தலாம். இவர்கள் போன்றோரை புலம்பெயர் இலக்கிய உலகம் விரும்பி வேண்டி அழைக்கலாம். அதுவும் இவர் கையாலேயே இயல் விருது 2011ஐ வழங்கச் செய்யலாம். விடுதலை உணர்வை பிரதானப்படுத்தி செயல்பாடுகளைக் கட்டமைக்க வேண்டிய புலம்பெயர் இலக்கியத் தளம், எழுத்து celebrities (நட்சத்திர கவர்ச்சி)க்கு ஆளாவதும் புலம்பெயர் அவலங்களுள் ஒன்றே என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இலக்கியத்துக்கு அப்பால் ஒரு அரசியல் முகம் இருப்பதை அறிந்தவர் புஷ்பராசன். இலக்கியத்துக்குள் ஒவ்வொருவருக்கும் ஒரு அரசியல் முகம் உண்டு என்பது இதன் பொருள். இவை நேரடி அரசியல் விமர்சன எழுத்துக்கள் ஒரு படைப்பாளியை உணர்வுபூர்வமாக காலமும் சூழலும் எங்கு அழைத்துச் செல்லும், சென்றிருக்கிறது என்பதற்கு இந்நூல் ஒரு சாட்சி.



படிப்பகம்







www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# உங்களுக்காகவும், உங்கள் அன்புக்கு உரியவர்களுக்காகவும்...



## கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

## வயோதிபர்களுக்கான காப்புறுதி

- மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

- digi Media -

TOPGUN AWARD WINNER 2008, 2009, 2010, MDRT QUALIFIER 2007, 2008, 2009, 2010

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

Direct: **416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-830-0386, 416-300-5496



Life100.ca

**Are you getting Million Dollar advice?**

படிப்பகம்